நாயகத்தின் கலீஃபாக்கள்

ஸையிதினா உதுமான் -கனீ துன்னூரைன் (ரலி)

எம்.எஸ்.முஹம்மது தம்பி

அன்ஸார் பப்ளிஷர்ஸ்

ஸையிதினா உதுமான் - கனீ துன்னூரைன் (ரலி)

எம்.எஸ்.முஹம்மது தம்பி
S.M. முகம்மது அப்துல் காதிர்,
சிராஜி
S/o. S.S.M. சதக்கதுல்லாஹ்
ஜமாலி
அபிராமம் P.O. 623 601.
இராமநாதபுரம் மாவட்டம்.

அன்ஸார் பப்ளிஷர்ஸ்
140, T.P.S. நகர்,
மருத்துவக் கல்லூரி சாலை,
தஞ்சாவூர்—613 007.
தொலைபேசி எண் : 24626
(STD Code No : 04362)

உரிமை பதிவு.

முதல் பதிப்பு : ஜூன் 1987
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1989
மூன்றாம் பதிப்பு : மே 1995

விலை : ரூ. 43-00

எங்களின் மொத்த விற்பனையாளர்கள் :

சென்னையில்

பஷாரத் பப்ளிஷர்ஸ்

83, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை—600 001.
தொலைபேசி எண் : 5225028

★

தஞ்சையில்

காஜியார் புக் டிப்போ

முஸ்லிம் தெரு, M. சாவடி, தஞ்சாவூர்—613 001.
போன் : 21529 ★ த. பெ. எண் : 89

அச்சிட்டோர் :

பிறை பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்

151, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.

தொலைபேசி எண் : 510 152

PDF ISLAM

முன்னுரை

அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் திருப் பெயரால்,

பொருவிலாப் புகழுடையார் பெருமானார் நபி முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கலீஃபாக்களில் மூன்றாமவரான ஸையிதினா உதுமான்-கனீ-துன்னூரைன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் புனித வரலாறு மூன்றாம் பதிப்பாக வெளிவருகிறது.

முந்திய இரு கலீஃபாக்களின் வீரச் சாதனைகளைக் கண்டு வியந்தவர்களின் கரங்களேற்கும் ஒரு கண்ணீர்க் காவியமே இது!

இஸ்லாமிய வரலாற்றில் ஒரு பொற்காலமெனப் போற்றத்தக்க சமயத்தே அதன் பொறுப்பேற்ற கலீஃபா அவர்களின் முடிவை பரிதாபகரமானதாகவே நாம் காண நேரிடுகிறது.

முஸ்லிம்களுக்கிடையே மாச்சரியம் விளைவிக்கப்பட்டுப் பறிக்கப்பட்ட முதல் உயிர் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுடையது. அது அவர்களுக்கு முன்னறிவிக்கப்பட்டஒன்றே.

உதுமான்-கனீ-துன்னூரைன் (ரலி) அவர்கள், தங்களின் மரணம் கொலையின் மூலமே என்பதை முன்னறிந்தேயிருந்தார்கள்.

அவர்களின் சங்கையைப் பறிக்க ஒரு கூட்டம் பாயும் என அவர்கள் முன்னறிவிக்கப்பட்டேயிருந்தார்கள்.

எனினும் அரசியல் நடத்த அமர்ந்த அவ்வாத்ம ஞானி தமக்கென விதிக்கப் பெற்ற அம்முடிவை ஏற்க, நாம்

வெளிப்படுத்திய அழகிய பொறுமையால் நம் கண்களைக் குளமாக்கிச் சங்கமிக்கச் செய்கிறார்கள்.

காலச் சக்கரம் பதினான்கு நூற்றாண்டுகளைக் கடந்து உருண்ட வண்ணமேயுள்ளது. கொல்லப்பட்ட கலீஃபாவின் உயிருக்கு விலை தேட உருவப்பட்ட வாள் இன்னும் தன் உறையினுள் புகவில்லை. அமைதியும் ஆரோக்கியமும் நிறைந்த முந்திய கால கட்டத்தை உலகம் இன்னமும் எட்டியும் பார்க்கவே முடியவில்லை. நாயகத்தின் கலீஃபாவின் உயிரின் புனிதத்தைப் புரிய வைக்க இந்த நிலையே போதும்.

முந்திய பதிப்புகளை முழுமையாகப் படித்தவர்கள் வெளிப்படுத்திய அவர்களின் உள்ளுணர்வுகளே நாயகத்தின் கலீஃபாக்களின் வரலாறுகளை உடனடியாகவே மீண்டும் பதிப்பித்திட எனக்கு ஊக்கமூட்டுபவையாக அமைந்து விட்டன.

அச்சுப் பணியில் எனக்குதவிய சகோதரர் 'பிறை பிரிண்டர்ஸ்' கஸ்ஸாலீ மஹ்மூது ஃபாருக் அவர்களுக்கு என் ஆழிய நன்றி.

வஸ்ஸலாம்.

எம். எஸ். முஹம்மது தம்பி

வரலாற்றைத் தொடருமுன்னர்...

ஹிஜ்ராவின் சகாப்த 24-ம் ஆண்டு பிறந்த அன்று,

பிரளயம் ஏற்பட்டு விடவில்லை;

பெரும் சூறாவளி வீசி மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் சடசடவெனச் சரிந்து விழச் செய்திட வில்லை. ஆனால், அவ்வாறெல்லாம் நிகழ்ந்திருந்தாலும் ஏற்பட்டிருக்கக் கூடியதைவிடப் பெரும் பரபரப்பில் அரபுலகம் ஆழ்ந்திருந்தது!

அன்றைய இஸ்லாமிய உலகின் மிகப் பெரும் மனிதர்-மக்களாட்சியின் காவலர்—பொன்னும் பொருளும் பிரவாக மெடுத்து, மக்களின் வாழ்க்கையில் பூரிப்பும் புளகாங்கிதமும் பொங்கி வழியப் பாட்டை அமைத்தளித்த பூமான் உமர் அல் ஃபாருக் (ரலி) அவர்களின் புனித உடலை மக்கள் மண்ணில் மறைத்து திரும்பி விட்டிருந்தனர் அன்று.

நீதியின் வீர காம்பீரத்தின் மிதியில் சூதுகளும் வாதுகளும் புதையுண்டுக் கிடந்த பொற்காலத்தின் மாலை கருக்கல் அது!

மறு நாளும், மறு நாளும் கழிந்து புலர்ந்தபோது,

'கிலாஃபத்தே ராஷிதா' வெனப்படும் நேரிய வழி காட்டப் பெற்ற சீரிய நல்லாட்சியின் பிந்திய பகுதி ஸையிதினா உதுமான்-கனீ-துன்னூரைன் (ரலி) அவர்களின் தலைமையில் துவங்கியது. அதன் முந்திய பகுதியில் கிலாஃபத் நடத்திய பெரியார்களான ஸையிதினா அபூபக்கர், உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகியவர்களின் வீரமும் விவேகமும் நிறைந்த நடவடிக்கைகளால் வியப்புக் கடலில் மூழ்கி நிற்கும் நம்மை இப்பிந்திய பகுதி திடுக்கங் கொண்டு திகைப்படையச் செய்கிறது.

ஹிஜ்ரி 11-ம் ஆண்டில் பிறந்த ரபீஉல் அவ்வல் மாதத்தின் ஒரு செவ்வாய்க்கிழமையிலிருந்து ஹிஜ்ரி 23-ம் ஆண்டின் இறுதி நாள் வரையிலான பனிரெண்டே முக்கால் ஆண்டு காலமும் நாம் சஞ்சரித்த உலகம் வேறு.

முற்றிலும் அதற்கு மாறான புதியதோர் உலகத்தை இப்போது நாம் காணப் போகிறோம்.

கால் நூற்றாண்டுக்கும் குறைவான முந்திய அக்கால கட்டத்தில் வாழ்ந்த புனிதவான்கள் வீரம் செறிந்த தங்கள் கரங்களால் விவேகம் நிறைந்த ஓர் உலகை உருவாக்கினார்கள். பொன்னும் புதை பொருளும் பொதிகளாய் வந்துக் குவிந்தன அவர்களின் காலடிகளில். எனினும் அவற்றை ஏறெடுத்துப் பார்க்கும் எண்ணமே எந்நாளும் அவர்களுக்குத் தோன்றியதில்லை.

அவர்களைத் தொடர்ந்து வந்த பிந்திய தலைமுறையினர் தங்களுக்கு முன்னவர்கள் எண்ணியும் பாராத ஒரு கலையைப் புதிதாகக் கற்கத் துவங்கினார்கள்.

பொன்னையும் பொருளையும் பெற்றனுபவிப்பதெப்படி? சுகபோகங்களைச் சுகிப்பதெங்ஙனம்? என்பதே அவர்கள் கற்கத் துவங்கிய புதிய கலை!

அதன் விளைவாய் நிகழ்ந்ததே கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் கொலை.

கலீஃபா ஸையிதினா உதுமான்—கனீ—துன்னூரைன் (ரலி) அவர்கள்,

மரணத்தின் படியேறத் துணிந்த தருணத்திலும் இழக்கவே துணியாத தங்களின் அழகிய பொறுமை,

திருமறையை ஓதுவதில் மக்களிடையே பேதங்கள் தோன்றாமல் காத்த தங்களின் ஆழிய சிந்தனை,

ஆகியவற்றின் காரணமாக தமக்கென ஒரு தனிச் சிறப்பை வரலாற்றில் பெற்று விளங்குகிறார்கள். எனினும் முந்திய இரு கலீஃபாக்களுடையவை போன்று கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் வரலாறு எழுது

வதற்கு எளிதான ஒன்றாக எனக்கிருக்கவில்லை. முந்திய இரு கலீஃபாக்களின் காலத்தில் இஸ்லாம் பெற்ற பேறு களை ஜீரணிக்க முடியாதாகி விட்ட வீணர்களின் எழுது கோல்கள் நடத்தி முடித்துள்ள விஷமத்தனங்களே காரணம்.

மெல்வதற்குத் துடித்த அவர்களின் வாய்களுக்கு நல்ல மெது பொருள்கள் இரண்டு கிடைத்து விட்டன.

ஒன்று, அண்ணலெம் பெருமான் [ஸல்] அவர்களின் பிறப்புக்கு முன் ஹாஷிம்—அப்துஷ் ஷம்ஸ் குடும்பத்தின ரிடையே காணப்பட்ட குரோதம்.

மற்றொன்று, பின்னர் தொடர்ந்து உமையா, அப் பாஸியக் கலீஃபாக்கள் நடத்திய படுகொலைகள். அவை இரண்டையும் கொண்டே இஸ்லாமிய வரலாற்றைக் களங் கப்படுத்திடத் துணிந்த அவர்கள், கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் வரலாற்றைக் குதறித் தீர்த்திருக் கிறார்கள்.

வரலாற்றை எழுத வலியவே வரிந்து நின்ற வஞ்சகர் கள் நடத்திய விளையாடல்கள் ஒரு புறம் இருக்க, நுனிப் புல் மேய்ந்த சில நல்லவர்களுக்கும் கூட எழுதுகோலைப் பிடித்த தங்கள் கரங்களுக்கேற்பட்ட தடுமாற்றத்தைத் தட்டி விலக்க முடியாமல் போனதே பெரும் பரிதாப மாகும்!

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் எண்பத்து இரண்டாண்டு கால வாழ்க்கை முழுவதுமாக ஒளிரும் அவர்களின் குணநலச் செழுமை,

நபித்துவ ஞானப் பரிதி தன் உதய முதல் இறுதி வரை அவர்களுக்கு நிழலிட்டுக் காத்திடும் பெருமை,

—இவை இரண்டுமே பொறையனைய பொறுமை கொண்ட அப்பெருமகனின் திருவாழ்வு மறுவிலாத ஒன் றென விளக்கப் போதுமானவையே.

مَنْ تَبَرَّأَ مِنْ دِيْنِ عُثْمَانَ فَقَدْ تَبَرَّأَ مِنَ الْإِيْمَانِ

''உதுமானுடைய வழியை வெறுத்தவன் தன் ஈமானை ஒறுத்தவனாவான்'' எனச் சான்று பெற்ற ஆன்றவரின் அழகில் அழுக்கேற்றத் துணிவது பேதமையே.

ஆனால், வாழையடி வாழையாக வெஞ்சினத்தை தங்கள் நெஞ்சங்களில் சுமந்த வஞ்சகர்கள் அழுக்கேறிய தங்கள் கரங்களால், மகிமையால் சிறந்த அக்கலீஃபாவைத் தொட்டதோடு மட்டுமின்றி மாநபியின் தோழர்கள் பலரையும் விட்டு வைக்கவில்லை.

1.	ஹழ்ரத்	அலீ	இப்னு	அபீதாலிப்	(ரலி)
2.	,,	ஜுபைர்	,,	அவ்வாம்	(,,)
3.	,,	தல்ஹா	,,	உபைதுல்லாஹ்	(,,)
4.	,,	ஸஅத்	,,	அபீவக்காஸ்	(,,)
5.	,,	அப்துர் ரஹ்மான்	இப்னு	அவ்ஃப்	(,,)

ஆகிய சுவனப் பெருந்தோழர்களையும்,

6.	ஹழ்ரத்	அம்ர் இப்னுல் ஆஸ்	(,,)
7.	,,	அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்	(,,)
8.	,,	அபூ மூஸா அஷ்அரீ	(,,)
9.	,,	அபூ தர் கிப்ஃபாரீ	(,,)
10.	,,	முஆவியா	(,,)

போன்ற சுந்தரத் தோழர்களையும் வதைத்திருக்கிறார்கள்.

கலீஃபா அவர்கள் கொல்லப்படக் காரணமானவர்கள் யார்? குழப்பத்தை விளைவித்தவர்கள் யார்? உலை வைத்து அதனை ஊதி எரியச் செய்தவர்கள் எவர்? கலீஃபா அவர்களுக்கு அக்குழப்பத்தில் எந்த அளவு பொறுப்பு? மாநபியின் மற்ற தோழர்கள் மதீனாவில் என்ன செய்துக் கொண்டிருந்தார்கள்?

—என்ற வினாக்களை எழுப்பி விடைகளைச் சோடிக்க முனைந்த அவர்கள், உண்மைக்கு மாறான புன்மைகளைக்

கொண்டு அப்புனிதர்களின் புகழுக்குப் போர்வையிட முனைந்திருக்கிறார்கள்,

—முளையிலேயே கெல்லி எறியப்படாமல் விடப்பட்ட விஷ வித்தின் வேர்கள் வளரும் தலைமுறைகள் முற்றாகப் படர்வதும் தடைபடாமலே இருக்க வேண்டும் என்ற வேட்கை கொண்டு.

மாநபியின் தோழர்கள் எவரும் கலீஃபா அவர்களை மதிக்கவே இல்லை. நேரடியாகச் சந்தித்தபோதெல்லாம் அவர்கள் கலீஃபாவை நிந்தித்தார்கள்; வெறுத்தார்கள்; கடுமையாக விமர்சித்தார்கள். அவர்கள் கலீஃபாவுக்கு உதவவே இல்லை என்பதற்குக் கடைசி வரை கதவுகளைத் தாழிட்டு அவர்கள் தங்கள் இல்லங்களில் அமர்ந்திருந்ததே ஆதாரம் — என்றெல்லாம் ஒருவரைக் கண்டு ஒருவர் தொடர்பியாக எழுதுவதன் மூலம் மாநபியின் தோழமையின் மகிமையைப் பொறுக்க முடியாத தங்கள் மனச் சூட்டை ஆற்றிக் கொள்ளவே அவர்கள் முனைந்திருக்கிறார்கள்.

ஆனால்,

பெருமானார் திரு நபி (ஸல்) அவர்களின் தோழமை உலகம் அதற்கு முன்னரோ பின்னரோ என்றுமே ஒப்புவமை காண முடியாத மாபெரும் 'முஉஜிஸா' (வென்னும் பேரற்புதம்) ஆகும்.

மிருகக் குணங்கொண்ட மனிதர்களைத் திருத்தி, இறுகிய அவர்களின் இதயங்களைப் பற்றி நின்ற துருக்களை அகற்றி, ஒப்பாரும் மிக்காரும் அற்ற புனிதர்களாக அவர்களை மாற்றிய பெருமானார் (ஸல்) அவர்கள்,

உலகமா மன்றத்தில் இலகு மாப்புகழ் படைத்த தம்முடைய அத்தோழர்களை வழிகாட்டும் தாரகைகளெனக் கூறிப் போந்தார்கள்.

அல்லாஹ்வின் அருள் மறையோ 'ரழியல்லாஹு அன்ஹும்-அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொண்டான்' என முத்திரை பதித்து முடித்து விட்டது.

இனி, அவர்களின் நெஞ்சங்கள் சுமந்த 'தக்வா'வென்னும் இறையச்சத்தை காலத்தின் எத்தகைய கோல மாற்றத்தால்தான் பறித்திடவோ குறைத்திடவோ எங்ஙனம் சாலும்?

அத்தகையோர்க்கிடையே குறை காணத் தலைபடுபவர்களின் ஆதாரங்களை கரிக்கப்பட்ட பதர்களாய் ஒதுக்கித் தள்ளுவதேயன்றி மேதைகளாய் எங்ஙனம் நாம் ஏற்க இயலும்?

மாநபியின் தோழர்கள்-ஸஹாபாக்கள் எனப்பட்ட அந்தச் சத்தியவந்தர்களில் எவரும் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்குத் துரோகம் செய்யவே இல்லை. காலச் சூழ்நிலை அவர்களின் கருத்துக்களை மட்டுமே வேறுபடுத்தியது.

கருத்து வேறுபாட்டையும் தம் சமுதாயத்தாருக்கு அல்லாஹ் புரிந்துள்ள ஓர் அருட்கொடையாகவே அண்ணலார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அத்தகைய வேறுபாடுகள் நபித் தோழர்களிடையே உண்டாயிருந்த போதிலும் அவை ஒவ்வொன்றும் நீதியானவை என அவர்கள் கண்ட ஆதாரங்களின் பால் பட்டிருந்தன. அவர்களில் எவரும் உண்மையை ஒளித்து எவருக்கும் துரோகம் செய்யத் துணியவில்லை.

وَنَزَعْنَا مَا فِي صُدُورِهِمْ مِنْ غِلٍّ إِخْوَانًا عَلَىٰ سُرُرٍ مُتَقَابِلِينَ ۝

''அவர்களின் மனங்களில் இருந்த குரோதத்தை நாம் நீக்கி விடுவோம். சகோதரர்களாக ஒருவரையொருவர் முகம் நோக்கிக் கட்டில்களில் அவர்கள் (உல்லாசமாய்ச்

சாய்ந்து) இருப்பார்கள்" எனத் திருக்குர்ஆன் (15 : 47) அவர்களின் மறுமை நிலையைப் பற்றி கூறுகிறது.

سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ سَأَلْتُ رَبِّيْ عَنِ
اخْتِلَافِ أَصْحَابِيْ مِنْ بَعْدِيْ فَأَوْحَى إِلَيَّ يَا مُحَمَّدُ إِنَّ أَصْحَابَكَ عِنْدِيْ
بِمَنْزِلَةِ النُّجُوْمِ فِي السَّمَاءِ بَعْضُهَا أَقْوَى مِنْ بَعْضٍ وَلِكُلٍّ نُوْرٌ
فَمَنْ أَخَذَ بِشَيْءٍ مِمَّا هُمْ عَلَيْهِ مِنِ اخْتِلَافِهِمْ فَهُوَ عِنْدِيْ عَلَى هُدًى

''எனக்குப் பின் என் தோழர்களிடையே விளையக் கூடிய கருத்து வேறுபாடுகளைப் பற்றி என் இறைவனிடம் கேட்டேன். முஹம்மதே! உம் தோழர்கள் என்னிடம் விண்ணின் தாரகைகளைப் போன்றிருக்கிறார்கள். அவற்றுள் சில சிலவற்றை விட வலியவை. ஆயினும் அவை அனைத்துமே ஒளியுடையவையே. மாறுபட்ட அக்கருத்துக்களில் ஏதொன்றை ஏற்றவரும் என்னிடத்தில் நேர்வழி பெற்றவரே என அவன் எனக்கறிவித்தான்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறத் தாம் கேட்டதாக ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அல்லாஹ்வும் அவன் தூதரும் பொருந்தி ஏற்றுக் கொண்ட அப்பெருமக்களை வலியவே இழுத்து தூற்றுவதற்காகவே எழுதப்படத் தேவையுற்றதோ வரலாறு?

அல்ல,

வளருந் தலைமுறைகளுக்கிடையே ஒழுக்கத்தையும் சீர்மையையும் வளர்க்கவே எழுதப்படுவது வரலாறு.

அது உண்மையைக் கொண்டிருக்குமானாலே அந் நோக்கம் நிறைவு பெறும். அவ்வாறின்றி வெறும் உணர்வுகளைத் தடுமாறச் செய்ய மட்டுமே அது புனையப்படுமானால் பொருளையும் காலத்தையும் அது விரயப்

படுத்துவதோடு மட்டுமல்ல பண்பாடுகளையும் அழித்து விடும்.

மிகிமையால் சிறந்த கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் இவ்வரலாற்றை புதிய கண்ணோட்டத்தில் புரிய வைக்க நான் மேற்கொண்ட முயற்சி சற்று விரிவடைந்தே விட்டது. எனினும் அதற்கான காலமும் உழைப்பும் விரையமாக்கப் படவில்லை என்பதே என் உணர்வு. நூலை முழுமையாகப் படித்து முடிக்கும்போது நீங்களும் அவ்வாறே ஏற்பீர்கள் என்பதும் என் துணிபு.

கருணையுள்ள ரஹ்மான் இம்முயற்சியில் நான் இழைத்து விட்டிருக்கக் கூடிய குற்றங்களைப் பொறுத்தருள்வானாக! கற்றோர்களின் கண் கொண்டு குறைகளை நீக்கி நிறைவு படுத்துவானாக!!

இனி வரலாற்றைத் தொடர்வோம்.

ஸைய்யிதினா உதுமான் கனீ துன்னூரைன் (ரலி)

"துன்னூரைன்—இரண்டு ஒளிகளைப் பெற்றவர்"

'ஸாஹிபுல் ஹிஜ்ரத்தைன்—(பிறந்த மண்ணை) இரு முறை துறந்து சென்ற தோழர்' என்னும் சங்கைகளை ஈந்து சரித்திரம் புகழும் ஸைய்யிதினா உதுமான் கனீ [ரலி] அவர்கள், பெருமானார் திரு நபி (ஸல்) அவர்களோடு பாரம்பரியமாகவே பந்தத் தொடர்புடையவராவர்.

உதுமான் இப்னு அஃப்பான் இப்னு அபுல் ஆஸ் இப்னு உமையா இப்னு அப்துஷ் ஷம்ஸ் இப்னு அப்து மனாஃப் என இவர்களின் கொடி வழி, ஆறாம் தலை முறையில் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் தலை முறைப் பாட்டனார் அப்து மனாஃபை அடைகிறது. தாயின் வழியாகவும் இவர்கள் உதுமான் இப்னு உர்வா பின்த் குரைஸ் இப்னு ரபீஃஆ இப்னு அப்துஷ் ஷம்ஸ் இப்னு அப்து மனாஃப் என ஒரே பாரம்பரியத்தை எத்துகிறார்கள். இவர்களின் தாயைப் பெற்ற அன்னையார் உம்முல் ஹக்கீம்—அல்பைழ்லா அவர்களும் நபி பெருமான் [ஸல்] அவர்களின் தந்தையார் அப்துல்லாஹ் அவர்களும் அப்துல் முத்தலிப் அவர்களுக்குப் பிறந்த ஒரே தாய் வயிற்று மக்களாவர். இவ்வாறாக பாரம்பரியமாகத் தொட்டுத் தொடர்ந்த இரத்த பந்தத்துக்கு முத்தாய்ப்பாக ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் பெருமான் நபி [ஸல்] அவர்களின் இரு பெண் மக்களை ஒருவர் பின் ஒருவரையாக மணமுடித்து அம் மாநபியின் மருகராய்ச் சிறந்தார்கள்.

ஒரு நபியின் இரு மக்களை மணம் புரியக் கிடைத்த அப்பேறு, அதற்கு முன்னரோ பின்னரோ—சாமானிய மனிதர்களென்ன, எந்த நபிமார்களுக்கும் கிடைக்கப் பெறாத பேறாகும். அதன் காரணமாகவே ஹழ்லரத் உது

மான் (ரலி) அவர்கள் 'துன்னூரைன் — (பெருமான் நபி (ஸல்) அவர்களின்) இரு (கண்) ஒளிகளை அடையப் பெற்றவர்' எனப் புகழ்ந்து சிறப்பிக்கப்படுகிறார்கள்.

'காமிலுல் ஹயா-இ-வல் ஈமான்-நாணமும் (இறை) நம்பிக்கையும் நிரம்பப் பெற்றவர்' என விண்ணவரும் மண்ணவரும் வியந்து போற்றும் அம் 'மானமிகு மாண்பாளர்' மாநபி (ஸல்) அவர்கள் பிறந்து ஆறாண்டுகள் கழிந்த பின்னர், 'தாயிஃப்' நகரில் பிறந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்த ஹாஷிம் கோத்திரத்தைப் போன்றே ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் பிறந்த 'உமையா' கோத்திரமும் மக்க நகரில் மிக்க செல்வாக்கும் கண்ணியமும் பெற்று விளங்கிய ஒரு கோத்திரமாகும். அவை இரண்டும் தாயாதிக் கோத்திரங்களே.

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் முப்பாட்டனார் ஹாஷிம் அவர்களின் நெற்றியோடு ஒட்டிக் கொண்டு பிறந்த அப்துஷ் ஷம்ஸின் மக்களில் புகழ் மிக்கவரே உமையா. ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்களையடுத்து ஒரு நூறாண்டு காலம் இஸ்லாமிய உலகை ஆண்ட கலீஃபாக்கள் தங்களின் மூதாதையான அவ்வுமையாவின் பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றனர்.

ஒருவரோடொருவர் ஒட்டிக் கொண்டு பிறந்து அறுவையின் மூலம் பிரிக்கப்பட்ட அன்றே ஹாஷிம்-அப்துஷ் ஷம்ஸ் ஜோடிக் குருத்துகளைப் பார்த்து ஒருவர் கருத்தறிவித்தார் — 'இவர்களின் வழிவாறுகளுக்கிடையே விளையும் பிணக்கு வாள் கொண்டே தீர்க்கப்படும்' என்று. அவரின் ஆருடம் பொய்க்கவில்லை. அடுத்த தலை முறையிலேயே பிணக்கு முளை விட்டு வளரலாயிற்று.

பாரம்பரியம்

மக்காவின் ஆட்சி அதிகாரமும், கஅபாவின் பராமரிப்பும் ஒன்றிணைந்து குரைஷி குலத்தைச் சார்ந்த 'குஸை' என்பவரிடமே இருந்தன. 'குஸை'யின் நான்கு மக்களில்

ஒருவரே அப்து மனாஃப். ஆயினும் அந்நால்வரில் அப்துத் தார் என்பவரே தலைமகனாகவும் தந்தைக்கு மிக உவப் பானவராகவும் இருந்தார். அப்து மனாஃப் இளையவராக இருப்பினும் எல்லா மக்களையும் விட அறிவும் திறனும் மிகையப் பெற்றவராக விளங்கினார். அத்துடனன்றி தந்தையார் 'குஸை' முதுமையை எத்தியிருந்த நிலையில் பாரம்பரியமாக தம் குடும்பத்தார் மேற்கொண்டிருந்த கஅ பாவின் பராமரிப்பு, நீர்ப் பங்கீடு, பயணிகளுக்கு உபசரிப்பு போன்ற பணிகளில் கொண்டிருந்த ஈடுபாடுகளின் காரண மாக மக்களிடையே செல்வாக்கு பெற்றவராகவும் விளங் கினார். தந்தை 'குஸை'யோ தம் அந்திம காலத்தில், தம் செல்ல மகன் அப்துத் தார் தமக்குப் பின்னர் செல்லாக் காசாகி விடக் கூடாதே என அக்கறை கொண்டு, கஅபா வின் திறவு கோலை அப்துத் தாரிடம் ஒப்படைத்து தமக்குப் பின் நிர்வாகங்கள் அனைத்தையும் அவரே மேற்கொள்ள வேண்டும் எனப் பணித்தார். தந்தையின் பிரியும் உயிர் நிம்மதி கொள்ளட்டும் என எண்ணங்கொண்டு, அப்து மனாஃபும் அக்கட்டளையை ஏற்று, பொறுப்புகளனைத்தை யும் அப்துத் தாரிடமே ஒப்படைத்து விட்டார். ஆயினும் அவரின் மரணத்துக்குப் பின் அவரின் மக்கள் ஹாஷிமும் அப்துஷ் ஷம்ஸும் அப்துத் தாரின் மக்களோடு வழக்காடி னார்கள். குறைஷிகள் ஒன்று கூடிப் பேசி கஅபாவின் திறவு கோல்-பராமரிப்பை அப்துத் தாரின் மக்களிடமும் மற்ற நிர்வாகங்களை அப்து மனாஃபின் மக்களிடமும் பிரித் தளித்து விட்டனர்.

அப்துமனாஃபின் மக்கள்-இரட்டையர்களான ஹாஷிம், அப்துஷ் ஷம்ஸ் ஆகியோரோடு மற்றும் இருவரான முத்தலிபும், நவ்ஃபலும் கூடி, தங்களுக்குள் திருவுளச் சீட்டின் மூலம் ஹாஷிமையே அப்பணிக்குத் தேர்ந்தெடுத் தனர். எனினும் ஹாஷிம் நீண்ட காலம் உயிர் வாழ வில்லை. வாணிப நிமித்தம் ஒரு முறை பாலஸ்தீனம் சென்ற அவர் அங்கேயே மரித்து விட்டார். அப்துஷ் ஷம்ஸ், நவ்ஃபல் ஆகிய இருவரின் வாணிபத் தொடர்புகள் முறையே யமானிய, இராக்கிய நிலப் பகுதிகளின் பக்கமே அதிகமாக இருந்ததால் அவர்களின் பெரும்பாலான காலங்

கள் அப்பகுதிகளின் பக்கம் பயணம் செய்வதிலேயே கழிந்தன. அந்நிலையில் ஹாஷிம் நிர்வகிந்து வந்த புனிதப் பொறுப்புகள் உள்ளூர்வாசியாக வாழ்ந்த முத்தலிபிடம் ஒப்படைக்கப்பட்டன.

முத்தலிபையும் முதுமை தழுவத் தொடங்கிற்று. இனி தமக்குப் பின் அப்பொறுப்புகளை ஏற்கத் தகுதி படைத்தவர் யார்? என அவர் துழாவலானார். ஹாரிஸ், அப்ஃபாத் என இரு மக்கள் அவருக்கு இருந்தனர். ஹாஷிமுக்கும் வேறுபட்ட மனைவிகளின் மூலம் பல ஆண்மக்கள் பிறந்து வளர்ந்து கொண்டிருந்தனர். எனினும் அவர்களில் எவரையும் முத்தலிபின் உள்ளம் தலைமைத் தனத்துக்குப் பொருத்தமுடையவராய் ஏற்கவில்லை.

மக்காவில் மணவாழ்வுகள் கொண்டதன்றி ஹாஷிம் இன்றைய மதீனாவிலும் 'கஸ்ரஜ்' கோத்திரத்தைச் சார்ந்த 'நஜ்ஜார்' குடும்பத்திலும் 'அம்ரூ' என்பவரின் மகள் 'ஸல்மா'வை மணமுடித்திருந்தார். ஸல்மாவின் வாயிலாகப் பிறந்த ஓர் ஆண்மகன் 'ஷைபா' பதினான்கு வயதுகளைக் கடந்த ஓர் இளைஞராக மிளிர்ந்தபோதே ஹாஷிம் உலகைப் பிரிந்திருந்தார்.

தம் உடன் பிறந்தார் ஹாஷிமின் விதவை மனைவி ஸல்மாவையும் மகன் ஷைபாவையும் பற்றிய செய்திகள் பயணிகள் வாயிலாக அவ்வப்போது முத்தலிபை எத்துவதுண்டு. ஷைபாவைப் பற்றிய செய்திகள் ஒவ்வொன்றையும் புகழத்தக்கனவாகவே செவியுற்று முத்தலிப் வியப்படைந்தார். ஒரு முறை நேரடியாகவே யத்ரிபுக்கு வந்து, தம் உடன் பிறந்தார் மகன் ஷைபாவைச் சந்தித்த முத்தலிப், தம்முடையவும் தம் உடன் பிறந்தவர்களுடையவும் மற்ற மக்கள் அனைவரையும் விட அறிவிலும் யூகத்திலும் ஷைபாவே சிறந்து காணப்பட்ட.தோடல்லாது, பாட்டனார் அப்து மனாஃபின் பேரழகும் காம்பீரமும் ஷைபாவின் பாலே சரியாகச் சாயலிட்டிருக்கவும் கண்டார். தந்தையின் இடத்தைப் பொறுப்பால் நிரப்பத் தகுதி படைத்தவர் அவரே எனக் கணித்தவராக முத்தலிப், ஸல்மாவின் இசைவு பெற்று ஷைபாவைத் தம்முடன்

மக்காவுக்கே அழைத்து வந்தார். நகர வாயிலில் முத்த லிபை வரவேற்க வந்த குரைஷிகள், முத்தலிபின் வாகனத் தில் அவருக்குப் பின்னே தாங்கள் அதற்கு முன் ஒரு போதும் கண்டிராத இளவல் ஒருவர் அமர்ந்திருப்பதைக் கண்டனர். ஒளி வீசிய அவரின் திருமுகமும் பேரழகும் குரைஷியர் அனைவரின் பார்வைகளையும் பற்றி ஈர்த்தன. முற்றிலும் தங்களுக்கு அறிமுகமற்ற அவ்விளவல் முத்தலிபால் பயணத் தின்போது புதிதாக வாங்கப்பட்ட அடிமையாகவே இருக்க லாம் என எண்ணிக் கொண்ட குரைஷிகள் அவ்விளவலை 'அப்துல் முத்தலிபு-முத்தலிபின் அடிமை' என அழைத்த னர். அவர் தம் அடிமையல்லர், குரைஷி ஹாஷிமின் திரு மகனே என முத்தலிபு விளக்கியபோது, குரைஷிகள் தங்கள் குலக் கொழுந்தைத் தாங்களே ஓர் அடிமையாகக் கணித்து விட்ட தங்கள் பேதமையை எண்ணி 'கொல்' எனச் சிரித் தார்கள். அச்செய்தி நகரெங்கும் பெரும் வேடிக்கையாகப் பேசப்பட்டது. ஆயினும் ஹாஷிமின் மகனார்-அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களின் முப்பாட்டனார்-ஷைபாவின் இயற்பெயர் மறைந்தே போனதுதான்; அப்துல் முத்தலிபு என்ற அவரின் இடுகுறிப் பெயரே சரித்திரத்தில் நிலைத்து விட்டது.

தம் உடன் பிறந்தவர் மகனைத் தம்மோடேயே இருத்தி பயிற்றுவித்த முத்தலிபு, தாம் மரணிக்கும்போது தம் பொறுப்புகள் அனைத்தையும் அவரிடமே ஒப்படைத் துப் பிரிந்தார். மக்களுக்குப் பணியாற்றுவதிலும், பயணி களை வரவேற்றுஉபசரிப்பதிலும், மற்ற நிர்வாகங்களனைத் திலும் தந்தை ஹாஷிமையும், சிறிய தந்தை முத்தலிபையும் மிகைத்து விட்ட அப்துல் முத்தலிபின் பாங்கு மக்களி டையே அவரின் செல்வாக்கைச் செழிக்கச் செய்தது. அச் செழிப்பே ஹாஷிமின் உடன் பிறந்தார் அப்துஷ் ஷம்ஸின் மகனார் 'உமையா'வின் உள்ளத்தைப் புழுங்கச் செய்தது. அழுக்காறு கொண்டு அவர் அப்துல் முத்தலிபிடமிருந்த அதி காரங்களைப் பறிக்க முயன்றார். ஆயினும் மக்கள் இறுதி வரை அப்துல் முத்தலிபுக்கு ஆதரவாக நின்று அவரையே அதிகாரத்தில் நிலைக்கச் செய்தனர். அது முதலே ஹாஷிம்

கோத்திரத்தாரும் உமையா கோத்திரத்தாரும் ஒருவரையொருவர் மிகைப்பதில் தீவிரம் காட்டலாயினர்.

கோத்திரமும் சிறப்பும்

தொண்டுள்ளம் கொண்டிருந்த தம் அறவாழ்வின் மூலம் அப்துல் முத்தலிபும் அவர் சார்ந்திருந்த ஹாஷிம் கோத்திரமும் மக்களிடையே பெற்று விளங்கிய செல்வாக்கை மிகைக்க முடியாது போயினும், உமையாக்கள் தாங்கள் கொண்டிருந்த மறவாழ்வின் மூலமும் பொருள் செழிப்பின் மூலமும் மற்றெல்லாக் கோத்திரத்தாரையும் விடத் தனிச் செல்வாக்கு பெற்றே விளங்கினர். பனீ ஹாஷிம்களோடு அவர்களுக்கேற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைத்த மற்ற குரைஷிகள் தங்களின் அரசியல் தலைமையையும் போர்க் கொடியை வைத்திருக்கும் பெருமையையும் உமையாவிடமே ஒப்புவித்திருந்தனர். அதன் காரணமாகவும் உமையாக் கோத்திரம் ஹாஷிம் கோத்திரத்தைத் தவிர்த்த மற்றெல்லாக் கோத்திரங்களையும் பெருமையிலும் செல்வாக்கிலும் மிகைத்தே விளங்கியது.

ஆயினும் உமையாவின் உள்ளத்தில் பிறந்த ஆரம்ப அழுக்காறு மறையவே இல்லை. அது அக்கோத்திரத்தார் அனைவரின் உள்ளங்களையுமே சூழ்ந்து நின்றது; வாழையடி வாழையாக அவர்களின் வழிவாறுகளிலும் தழைத்து வந்தது. புழுக்க நெருப்பு அணையாமல் நெஞ்சங்களில் நீறு பூத்தவாறே ஓரிரு தலை முறைகள் மாறிய நிலையில் தான் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள், ஆண்டவனின் திருத்தூதராய்த் தங்களை அறிவித்து வெளிப்பட்டார்கள். 'ஹிரா' குகையிலிருந்து வெளிப்பட்ட அப்பேரொளி நகரின் அந்தக்காரத்தை அகற்றுவதற்காக ஆண்டாண்டு காலமாக நல்லோர்களால் நாடப்பட்டு வந்த ஒன்றே! என்றாலும், அவ்வொளியை உமிழும் திருவிளக்கு ஹாஷிம்களைச் சார்ந்த அப்துல்லாஹ் விட்டுச் சென்ற ஓர் அனாதையாகவா இருக்க வேண்டும் என்ற ஆதங்கச் சூடு அக்காலை அறிவில் இருள் சூழ்ந்திருந்த அரபுக் கோத்திரங்கள் ஒவ்வொன்றையுமே சுட்டெரிக்கத்தான் செய்தது. அந்த அனாதை முஹம்மத் (ஸல்) தம்

முயற்சியில் வெற்றி கொண்டு விடுவாரேயானால், இருக்கும் தங்கள் அரைகுறைச் செல்வாக்கும் ஹாஷிம் கோத்திரத் தாரிடமே பறி போய் விடும் என்ற அச்சமே அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களை எதிர்க்க, உமையாக்களை மற்ற எல்லாக் கோத்திரங்களையும் விட தீவிரங் கொள் ளச் செய்தது.

புதிய மார்க்கத்துக்கு எதிரான உணர்வுகளை மக்களி டையே கிளறி விட்டு, அதன் மூலமாகவேனும் ஹாஷிம் கோத்திரத்தார் பெற்றிருந்த சிறப்பையும் செல்வாக்கை யும் பறித்திடக் கனவு கண்ட உமையாக்கள், பெருமான் நபி (ஸல்) அவர்களுக்கு இன்னல்களை விளைவிப்பதில் மற்ற எவருக்கும் பின்னடையாமலே இருந்தார்கள். கஅபா வின் வளாகத்தில் அண்ணலார் (ஸல்) அவர்களின் கழுத் தில் தன் மேலாடையை வீசி முறுக்கி, அவர்களைக் கொல்லவே துணிந்த உத்பா இப்னு முஈத் என்பவன் உமையாக்களைச் சார்ந்தவனே. உமையாவின் புதல்வர் ஹர்பின் திருமகனார் அபூ ஸுஃப்யான் (ரலி) அவர்களும் ஆரம்ப காலத்தில் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர் களுக்கும் அவர்களைத் தொடர்ந்தவர்களுக்கும் இழைத்த கொடுமைகளும்தான் கொஞ்சமானவைகளா?

இவ்வாறாகப் பொறாமையும் புழுக்கமும் பேயெனப் பற்றி அலைக்கழித்த உமையாக் கோத்திரத்தில், தெளிந்த சிந்தனையும் பரந்த கண்ணோட்டமும் கொண்டு பிறந்த தனிச் சுடரே ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள். இளமை யில் பெற்ற கல்வியும், இயல்பிலேயே பெற்றிருந்த பண்பு களும் ஒன்று சேர்ந்து அவர்களை ஒரு தகைமைசால் மனித ராக உலவச் செய்தன. வாய்மையும், வாக்கில் நேர்மையும் கலந்து வாணிபத்தில் அவர்களுக்கு வளங் கொழிக்கச் செய் தன. பெருக்கெடுத்த செல்வ வளம் அவர்களுக்கு சமூகத் தில் 'கனீ—எவருடைய தேவையும் அறப்பெற்றவர்' என்ற சிறப்பைத் தேடித் தந்தது. செல்வப் பெருக்கிலும் தருக் கடையாத தன்மை அச்சிறப்புக்கு மெருகூட்டியது. சொல்லில் இனிமையும் பழக்கத்தில் எளிமையும் அவர்களின் அணிகலன்களாய்ப் பளபளத்தன. இஸ்லாத்துக்கு முந் திய அறியாமைக் காலத்திலும், ஹழ்லரத் அபூபக்கர் (ரலி)

அவர்களைப் போன்றே இவர்களும் விபச்சாரத்தை நெருங்கியவர்களல்லர்; மதுவின் வாடையையும் நுகர்ந்தவர்களல்லர். தூய்மையுடன் விளங்கிய தம் மேலான பண்பாடுகளின் காரணமாக, குரைஷியர்களிடையே ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் படித்தரம் எத்தகையதாக இருந்தது எனில், தங்களின் சிறார்களை முத்தமிட்டு அணைத்து மகிழும் அரபுப் பெற்றோர்கள், ''என் கண்மணியே! குரைஷிகள் உதுமானை நேசிப்பது போல் உன்னை நான் நேசிக்கிறேன்'' என்று கூறி கொஞ்சி மகிழ்பவர்களாக இருந்தார்கள்.

மார்க்கம்

பொறாமை, புழுக்கம், வஞ்சகச் சூதுகளை விட்டும் விடுபட்டிருந்த ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் உயர்ந்த சிந்தனையில் மக்க நகரின் அக்கால 'அல் அமீன்' அவர்களுக்கும் மிக்க கண்ணியமான ஓர் இடம் இருந்தது. என்றாலும், அதிகமான பழக்க உறவு அவர்களுக்கு ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களோடேயே இருந்தது. இருவருக்குமிடையே இருந்த வாணிபக் கொடுக்கல் வாங்கல்கள் அதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கலாம். அப்பண்பாளர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வர்; வாணிபப் போக்குவரவுகளைப் பற்றி உரையாடுவர்; மக்களின் வாழ்க்கை நிலை பற்றியும் அளவளாவுவர்.

பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஏற்ற அன்று ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் மக்கநகரினுள் இருக்கவில்லை; வாணிபத்தின் பொருட்டு ஸிரியாவுக்குச் சென்றிருந்தார்கள். அவர்களின் வாணிபம் அதிகமாக ஸிரியாவின் பக்கமே நடைபெற்று வந்தது. தம் வாணிபத்தை முடித்து அவர்கள் திரும்பிக் கொண்டிருக்கையில் ஒரு நாள் இடைத் தங்கி இரவைக் கழித்தபோது உறக்கத்தினூடே ''ஓய், உறக்கத்தில் ஆழ்ந்திருப்பவரே! விழித்தெழும். மக்காவில் அஹ்மது தோன்றி விட்டார்'' என்ற குரல் கேட்டு விழித்தெழுந்தார்கள். எனினும் அஹ்மதென்னும் அப்புகழ் நாமம் எவருக்குரியது என அவர்களின் சிந்தனையில்

உடனடியாகப் புலப்படவில்லை. பயணத்தைத் தொடர்ந்த அவர்கள் வழியில் 'புஸ்ரா' என்ற தலத்தில் ஹழ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைச் சந்தித்தார்கள். அவர்களுக்கும் அதே போன்ற வேறோர் அனுபவம் ஏற்பட்டிருந்தது. இரு வரும் தத்தம் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். தாய் நகர் நோக்கி அவர்களின் பயணம் துரிதமடைந்தது.

இல்லம் வந்தடைந்த ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள், தங்கள் களைப்பைக் களைந்து, உடனடியாக ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களைக் காணச் சென்றார்கள். ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்று, தங்கள் நண்பர்கள் ஒவ்வொருவர் மாட்டும் பெருமான் நபி (ஸல்) அவர்கள் காட்டிய பெருவழியைப் பற்றி விளக்கி அவர்களையும் இஸ்லாத்தின் பால் அழைத்துக் கொண்டிருந்த சமயம் அது. மக்களின் மௌட்டீக நிலை பற்றி அடிக்கடி தம்மோடு ஆய்ந்துக் கொண்டிருந்த உதுமான் (ரலி) அன்றும் தம்மைச் சந்திக்க வந்தபோது, அவர்களிடமும் தாம் ஏற்றுள்ள புதிய மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துரைத்த ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ''அம் மாநபி (ஸல்) அவர்களின் சந்திப்பால் நீர் பெரும் பலன் பெறுவீர்'' என எடுத்துரைத்தார்கள். மறு கணமே, ''அல் அமீன் அவர்களை நிச்சயம் சந்திப்போம்'' எனத் தயக்கமின்றித் துணிந்தார்கள் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களும்.

அச்சமயம் தற்செயலாக அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களே அங்கு வந்துற்றார்கள். மூவரும் ஒருவருக்கொருவர் முகமன் கூறி வாழ்த்திக் கொண்டார்கள். உரையாடல் தொடர்ந்தது. தாங்கள் பேசிக் கொண்டவை அனைத்தையும் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் விவரித்தார்கள். நபி பெருமான் (ஸல்) அவர்களும், ''உதுமானே! சுவனத்தை உரிமை கொள்ள உம்மையும் நான் அழைக்கிறேன். உமக்காகவும் படைப்புகள் அனைத்துக்காவும் சத்தியமாக நான் அல்லாஹ்வின் தூதனாக அனுப்பப்பட்டிருக்கிறேன்'' எனக் கூறினார்கள்.

"அச்சொல்லில் இருந்த ஒரு மந்திர சக்தியால் நான் கட்டுண்டவனானேன். உணர்வு கொண்டு என் வசமிழந்த வனாகவே எழுந்து நின்ற நான், என் ஏந்தலின் கரம் பிடித்து, "வணங்குதற்குரியவன் அல்லாஹ் ஒருவனே என்றும் அண்ணல் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனின் தூதர் என்றும் சாட்சி கூறி உளத்தாலும் ஏற்றேன்" என ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே தாங்கள் இஸ்லாத்தை ஏற்ற சம்பவத்தைப் பற்றி பிற்காலத்தில் கூறினார்கள்.

ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற செய்தி உமையா கோத்திரத்தையே திகைப்பிலாழ்த்தியது. உமையாக்களில் முதலாம் முஸ்லிமாக ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களே இருந்தார்கள். 'இந்த மானக்கேட்டை எவ்விதம் தாங்குவது' எனத் துடித்த சிறிய தந்தை ஹக்கம் இப்னு அபுல் ஆஸ், உதுமான் [ரலி] அவர்களைப் பிடித்து கயிறுகளால் பிணித்து, ஓர் அறையில் தள்ளிப் பூட்டி வைத்தார்; இஸ்லாத்தை விட்டும் வெளியாகாதவரை தாம் அவர்களை விடுவிக்கப் போவதில்லை என்று நிர்ப்பந்தித்தார். இறுதி வரையிலும் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களை எந்த நிர்ப்பந்தங்களாலும் அசைக்கவே முடியவில்லை. மனம் சலித்தவராக ஹக்கம் இப்னு அபுல் ஆஸ் பின்னர் அவர்களை விடுதலை செய்து விட்டார்.

தோற்றப் பொலிவும் குண அழகும்

உமையா கோத்திரத்தின் அவ்வுயர் குணத் தோன்றலின் உறுதி கண்டு பெருமான் நபி (ஸல்) அவர்களின் கண்கள் மிளிர்ந்தன. குடும்பத்தவர்களின் ஏசல்களால் குலையாது, உறுதி கொண்ட உள்ளத்தோடு குரோதங்களனைத்துக்கும் அப்பாற்பட்டு நின்றனர் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள். குணங் குடி கொண்ட அகத்தின் அழகால் அவர்களின் முகமும் பொலிவு கொண்டிலங்கியது. நடுத்தரமான உயரம், சதைப் பிடிப்பான உடல், கோதுமையின் வெளிறிய மஞ்சள் நிறம், உயர்ந்து சற்று வளைந்த நாசி, அதனை அருகிச் சுழன்ற விழிகள், அம்மையின் இலேசான அடையாளங்கள் பதிந்த நிலையிலும் பளபளத்த வாளிப்

பான கன்னங்கள், அக்கன்னங்களுக்குக் கரை கட்டிப் படர்ந்து வளர்ந்திருந்த அழகிய தாடி, சிரிப்பால் ஒளி சிந்திய பற்களின் சீரான வரிசை—ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் தோற்றத்தை ஏறிட்டுப் பார்ப்பதே நெஞ்சத் துயரங்கள் அகலப் போதுமானதாயிருந்தது.

தோற்றப் பொலிவும் குண அழகும் காம்பீரமும் ஒன்றிணைந்த சேர்க்கையே ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள். ''நானும் உதுமானும் எங்கள் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களின் சாயலாக இருக்கிறோம்" எனப் பெருமானார் [ஸல்] அவர்கள் கூறியதாக ஹழ்லரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''குணத்தாலும் உதுமான் என்னையே ஒத்திருக்கிறார்" என அண்ணலார் (ஸல்) அவர்கள் அறிவித்த ஒரு வாக்கை ஹழ்லரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

தம்முடைய அத்தோழரை நபிகளுள் எழிலார் யூஸுஃப் (அலை) அவர்களோடு ஒப்பிட்டுக் காட்டிய அண்ணலார் [ஸல்] அவர்கள், தம் மனங்கவர்ந்த அம்மணாளருக்கு பேரழகின் பெட்டகமாகத் தாம் பெற்று வளர்த்திருந்த திருமகளார் ருக்கையா (ரலி) அவர்களை மணமுடித்து வைத்து, அழகுக்கு அழகேற்றிய அவ்வெழில் மலர்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

''ஒரு நாள் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள், தங்கள் இல்லத்தில் கறி சமைத்து, ஒரு பாத்திரத்தில் என்னிடம் தந்து, ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் வீட்டில் கொடுத்து வர என்னை அனுப்பி வைத்தார்கள். நான் சென்றபோது ருக்கையா நாயகியாரும் அங்கிருந்தனர். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களையும் ருக்கையா நாயகியாரையும் நான் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கிருந்து நான் மீள சற்று தாமதமே ஆகியது. நாயகப் பெருமான் (ஸல்) அவர்கள் என் தாமதத்துக்கான காரணத்தை வினவினார்கள். நான் மவுனித்து நின்றேன். அதன்பின் அண்ணலார் (ஸல்) அவர்கள், ''உஸாமா! நீ வீட்டின் உள்ளே சென்றாயா?'' என்று கேட்டார்கள். ''ஆம் பெருமானே!'' என்றேன். அடுத்து

நபிகளார் (ஸல்) அவர்கள், ''அவர்களை விடப் பேரழகு வாய்ந்த தம்பதிகளை நீ இதற்கு முன் கண்டுள்ளனையா" என்றும் வினவினார்கள். ''பெருமானே! ஒருபோதும் நான் கண்டதே இல்லை'' என்றேன். ''அவர்களின் பேரழகைக் கண்டே நீ திகைத்து நின்று விட்டாய்'' என ஏந்தலார் (ஸல்) அவர்கள் என் தாமதத்திற்கான காரணத்தையும் தாங்களே கூறி விட்டார்கள்—என ஹழ்ரத் உஸாமா இப்னு ஜைத் (ரலி) அவர்கள் விவரிக்கும் ஒரு நிகழ்ச்சி பெருமானார் (ஸல்) அவர்களின் பெருமிதத்துக்கு ஒரு சான்றாகும்.

ஆனால், ருக்கையா நாயகியாரோடு நடைபெற்ற அத் திருமணமே ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களை குரைஷியர்களின் வெறுப்புகளுக்கும் இலக்காக்கி வைத்தது எனக் கூறலும் தகும். நபி பெருமான் (ஸல்) அவர்களின் செல்விகளான ருக்கையா, உம்மு குல்ஸூம் (ரலி) இருவரும் அபூ லஹபின் இரு மக்களான உத்பா, உத்தைபா என்ற இருவருக்கும் முன்னர் மணமுடிக்கப் பெற்றிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் நபித்துவம் பெற்றபோது ருக்கையா நாச்சியாரின் வயது ஏழாகவும், உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் வயது ஐந்தாகவுமே இருந்தன. அரபுகளின் வழக்கப்படி சிறு வயதிலேயே அவர்களுக்கு மணமுடிக்கப் பெற்றிருந்த போதிலும் பருவமடையாத காரணத்தால் அவர்கள் புக்ககம் அனுப்பப்படாமல் நபி பெருமான் (ஸல்) அவர்களிடமே தங்கியிருந்தார்கள்.*

அபூ லஹப், தந்தை அப்துல் முத்தலிபின் மூலம் ஹாஷிமிய்யாகவும் பெருமானார் (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாகவும் இருந்த போதிலும், அவரின் மனைவி உம்மு ஜமீல் உமையா கோத்திரத்தைச் சார்ந்த ஹழ்ரத் அபூ ஸுஃப்யான் (ரலி) அவர்களின் உடன் பிறந்தவளாக இருந்தாள். அவளின் போதனையில் கட்டுண்டு விட்ட அபூ லஹப், அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களை பழிப்பதிலும் இழிப்பதிலும் மற்ற கோத்திரத்தார்களோடு

* மணமுடிக்கப்படவில்லை, நிச்சயிக்கப்பட்டு மட்டுமே இருந்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

முனைந்து நின்றார். அதன் காரணமாக அபூ லஹபையும் அவரின் மனைவி உம்மு ஜமீலையும் சபித்து அல்லாஹ்விட மிருந்து வேத வசனங்கள் இறங்கின. பெருமானார் (ஸல்) அவர்கள் அவற்றை ஓதிக் காட்டக் கேட்ட அபூ லஹபும் உம்மு ஜமீலும் தங்கள் மக்களான உத்பா, உத்தைபா இருவரையும் பலவந்தப்படுத்தி, ருக்கையா, உம்மு குல் ஸூம் (ரலி) இருவரையும் அவர்களின் விவாக பந்தங்களி லிருந்து விலக்கிடச் செய்தனர்.

பெண்களின் வாழ்க்கையே பரிதாபத்துக்குரியதாக விளங்கிய அக்காலத்தில் பெருமான் நபி (ஸல்) அவர்களின் உள்ளம் தம் மக்களுக்கேற்பட்ட இழப்பினால் உழன்றிட வேண்டும் என்பதற்காகவே சூழப்பட்ட சதியாக அச்செயல் இருந்தது. செல்வச் சீமானாக விளங்கிய ஹழ்ரத் உது மான் (ரலி) அவர்கள் ருக்கையா நாயகியைப் பெருமனங் கொண்டு செய்த திருமணத்தால் அச்சதியை முறித்திடக் கண்டு அண்ணலார் (ஸல்) அவர்களின் உள்ளம் பெரு மகிழ்வு கொண்டது.

ஹிஜ்ரத்துகள்

நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு அபிஸீனியாவுக்கு குடிபெயர்ந்து செல்ல வாய்ப்பு கிடைத்த போது ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் ருக்கையா நாச் சியாரோடு முதல் அணியிலேயே ஹிஜ்ரத்துச் செய்து சென்று விட்டார்கள். பிறந்த மண்ணைத் துறந்து அவ்விரு வரும் சென்ற பின்னர் வெகு நாட்கள் வரை அவர்களைப் பற்றிய செய்திகள் எதுவும் கிடைக்கப் பெறாமலே இருந் தன. பின்னர் அபிஸீனியாவிலிருந்து மக்கா வந்த ஒரு பெண்மணி, ருக்கையா நாச்சியார் ஒரு வாகனத்தில் அமர்ந் திருக்க, ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் அவ்வாக னத்தை நடத்திச் செல்ல தாம் கண்டதாகக் கூறக் கேட்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் ஆறுதலடைந்தார்கள். "அல் லாஹ் அவர்களுக்குத் துணை புரியப் போதுமானவன்" என்று வாழ்த்திய அண்ணலார் (ஸல்) அவர்கள், "நபிமார் கள் இப்ராஹீம், லூத் (அலை) ஆகியவர்களை அடுத்து தம் வாழ்க்கைத் துணைவியோடு, பிறந்த மண்ணைத் துறந்த முதல் மனிதர் உதுமானே" என அறிவித்தார்கள்.

அபிஸீனிய வாழ்க்கையிலேயே அத்தம்பதிகள் தங்கள் தலை மகனைப் பெற்றெடுத்து அவருக்கு அப்துல்லாஹ் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். அம்மகனின் பெயரா லேயே ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களும் 'அபூ அப்துல் லாஹ்—அப்துல்லாஹ்வின் தந்தை' என அழைக்கப் பெற் றார்கள். ஆயினும், அம் மகனார் ஆறாண்டுகளுக்கு அதிக மாக உயிர் வாழவில்லை.

இருளினைக் கிழித்து ஆதவன் தன் ஒளிக் கதிர்களை வெளிப்படுத்தி நின்ற உதய காலம். மக்காவின் அரபிகள் தங்கள் குருட்டுக் கண்களைச் சிமிட்டி உதய சூரியனைப் பழித்துக் கொண்டிருந்தார்கள். மருள் களையும் இறை வச னங்கள் மாநபி (ஸல்) அவர்கள் பால் அவ்வப்போது இறங் கியவாறிருந்தன. கொடுமையின் கோரப் புயலுக்கிடை யிலும் மின்னிடும் ஒளியாய் அப்பெருமானின் கரம் பற்றிக் கரை சேர்ந்துக் கொண்டிருந்தனர் கதி பெற்றோர். மர்ம மாகவே பணியாற்றி வந்த மாநபி (ஸல்) அவர்கள் பின்னர்,

فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ وَأَعْرِضْ عَنِ الْمُشْرِكِينَ

''உமக்கு ஏவப்பட்டதைத் தயக்கமின்றி அவர்களுக்கு விவரித்து விட்டு, இணைவைத்து வணங்கும் அவர்களை நீர் புறக்கணித்து விடும்'' [15 : 94] எனப் பணிக்கப்பட்டார் கள். அதன் பின் அப்பெருமான் நபி (ஸல்) அவர்கள் தங்கள் பால் இறங்கிய வேத வசனங்களை அவ்வப்போது பகிரங்க மாகவே மக்களுக்கு ஓதிக் காட்டலானார்கள்.

திருக் குர்ஆனின் 'நஜ்ம்—நட்சத்திரங்கள்' என்னும் 53-ம் அத்தியாயமும் அவ்வாரம்ப காலத்தில் மக்காவில் இறங்கிய அத்தியாயமேயாகும். ஹரமில் நின்று பெரு மானார் [ஸல்] அவர்கள் அதனை ஓதிக் காட்டினார்கள். அது வரை முஸ்லிம்களாகியிருந்த தோழர்களெல்லாம் அருகே நின்று கேட்ட வண்ணமிருந்தனர். இஸ்லாத்தைப் பழித்துக் கொண்டிருந்த குரைஷிக் காஃபிர்களும் கூட சூழ நின்று செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள். அச்ச

மூட்டி எச்சரிக்கை செய்யும் அற்புத வசனங்களை அடுக்கடுக்காக ஓதி வந்த பெருமானார் திரு நபி [ஸல்] அவர்கள் இறுதியாக மறுமை நாளைப் பற்றிய வசனங்களையும் ஓதிக் காட்டினார்கள். ''ஆகவே, அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்து அவனையே வணங்குவீர்களாக" என்ற 62-ம் இறுதி வசனத்தை ஓதியதுமே நபி பெருமான் (ஸல்) அவர்கள், வேதக் கட்டளையைச் செயல்படுத்த, மண்டியிட்டுச் சிரம் பணிந்து இறைவனைத் துதிக்கலானார்கள். திரு நபியின் செயல் கண்டு முஸ்லிம்கள் அனைவருமே தரையில் சிரம் பதித்துத் தங்கள் மாநபியைத் தொடர்ந்தார்கள். அச்சமயம் நிகழ்ந்த பேரற்புதமாக, சூழ நின்றிருந்த குரைஷிகள் அனைவருமே தங்கள் வசமிழந்து தரையில் சிரம் பதித்துக் கிடந்தார்கள்— (உமையா இப்னு கலஃப் என்ற ஒருவனைத் தவிர, அவன் மட்டும் குனிந்து தரை மண்ணைச் சிறிது எடுத்து நெற்றியில் தேய்த்து இது போதுமானது எனக் கூறிக் கொண்டான்.) சிரம் பணிந்து வணங்க மனிதர்கள் ஏவப்பட்ட— திருமறையின் பல வசனங்களில் முதலாவதாக இறங்கிய வசனம் இது.

மக்கத்துக் குரைஷிகளின் அச்செயலை அச்சமயம் அபிஸீனியாவிலிருந்து சுற்றுலா வந்திருந்த பயணிகளின் கூட்டமும் பார்த்துக் கொண்டிருந்தது. சுற்றுலா முடிந்து அபிஸீனியா திரும்பிய அக்கூட்டத்தார் தாங்கள் சந்தித்த மனிதர்களிடம் மக்காவின் குரைஷிகள் அனைவருமே பெருமான் முஹம்மத் [ஸல்] அவர்களைப் பின்பற்றத் துவங்கி விட்டதாகக் கூறி விட்டார்கள். அபிஸீனியா சென்றிருந்த மக்கத்து முஸ்லிம்களுக்கு அச்செய்தி பெரும் ஆறுதலாயிருந்தது. அவர்களில் பெரும்பாலோர் தாங்கள் பிறந்த மண்ணுக்கே ஆவலோடு திரும்பினர். அவர்களோடு ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களும் ருக்கையா நாச்சியாரும் சேர்ந்தே வந்தார்கள். மக்காவை நெருங்கியபோதே தாங்கள் செவியுற்றது வெறும் வதந்தியே என அனைவரும் அறிந்தனர். அவர்களில் பலர் அபிஸீனியாவுக்கே திரும்பி விட்டார்கள். சிலர் மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த தங்கள் உறவினர்களிடம் பாதுகாப்பு பெற்று மக்காவிலேயே தங்கிக் கொண்டார்கள். ஹழ்ரத்

உதுமான்—ருக்கையா (ரலி) தம்பதிகளும் மக்காவிலேயே தங்கிக் கொண்டார்கள்.

மாநபி [ஸல்] அவர்கள் பாலும் மற்ற தோழர்கள் பாலும் மக்காவாசிகளின் கொடுமைகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்தே வந்தன. எனினும் உமையாக்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களைத் தம் போக்கில் செல்லவிட்டு அமைதியடைந்து விட்டனர். ஆனால் முஸ்லிம்கள் மதீனாவுக்குக் குடிபெயர்ந்து செல்லத் துவங்கியபோது ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் ஆரம்ப கட்டத்திலேயே தங்கள் மனைவியார் ருக்கையா அம்மையாரோடு மக்காவைத் துறந்து சென்று விட்டார்கள். பிறந்த மண்ணையும் துறந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் குரைஷிகளின் கொடுமைகளால் மற்ற முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. ஆனால் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் அத்தகைய நிலையை விட்டும் விடுபட்டவர்களாகவே இருந்த நிலையிலும் ஹிஜ்ரத் செய்ய நேர்ந்த இரு சமயங்களிலும் அவர்கள் முந்தக் காரணம் தம் மாநபி (ஸல்) அவர்களின் அருகாமையைத் தேடிக் கொள்ள அவர்கள் கொண்ட ஆர்வமும் முன்னோக்கமுமேயாகும். அப்பேரன்பே அவர்களுக்கு ஸாஹிபுல் ஹிஜ்ரத்தைன் என்ற சிறப்பை ஈட்டித் தந்ததெனலாம்.

மதீனா வந்தடைந்த ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் 'நஜ்ஜார்' குடும்பத்தைச் சார்ந்த ஹழ்லரத் அவ்ஸ் இப்னு ஸாபித் (ரலி) அவர்களின் விருந்தினராகத் தங்கியிருந்தார்கள். பெருமானார் திருநபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின்னர் முஹாஜிர்கள்—அன்ஸார்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட பிணைப்பிலும் அவ்விருவரே சகோதரர்களாகப் பிணைக்கப்பட்டார்கள். அப்பிணைப்பே அவர்களுக்குள் மட்டுமல்லாது அவர்களின் இரு குடும்பங்களின் பிணைப்பாக மலர்ந்தது. பிற்காலத்தில் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கொல்லப்பட்டபோது அச்சோகம் ஹழ்லரத் அவ்ஸ் [ரலி] அவர்களின் உடன் பிறந்தார் ஹழ்லரத் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) அவர்களை நெடுங்காலம் நீங்காது பற்றி நின்றது. உள்ளமுருக பல இரங்கற்பாக்களை யாத்தே அக்கவிஞர் தம் சோகத்தைத் தீர்த்துக் கொண்டிருந்தார்.

மதீனா வாழ்க்கை

மதீனா வாழ்விலேயே ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் இஸ்லாம் வளரவும் தம் அண்ணலார் (ஸல்) அவர்களின் நெஞ்சம் மலரவும் செய்த அர்ப்பணங்களும் ஆற்றிய பணிகளும் அனந்தம். 'பத்ரு'ப் போரில் மட்டும் அவர்கள் பங்கேற்க முடியாமல் ஆகி விட்டது. காரணம் அச்சமயம் அவர்களின் துணைவியார் ருக்கையா நாயகியார் நோயுற்று விட்டனர். மாநபி (ஸல்) அவர்கள் தங்கள் மகளாரின் நலன் பேணப் பணித்து ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை மதீனாவிலேயே தங்கச் செய்தார்கள். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களும் தங்கள் மனைவியாரின் அருகிருந்து தங்கள் பொறுப்பினை நிறைவுபடுத்தினார்கள். என்றாலும் ருக்கையா நாச்சியாருக்கு அந்நோயே மரணத்தின் தூதாக அமைந்து விட்டது. நாயகியார் மரணித்து அவர்களின் திருவுடலை ஹழ்லரத் உஸாமா (ரலி) அவர்களோடு சேர்ந்து அடக்கம் செய்துக் கொண்டிருந்த அதே சமயம் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் செவிகள் தக்பீரின் நாதங்கள் முழங்கப்படுவதைக் கேட்டன.

மதீனா நகரெங்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். பத்ருப் போர்க்களத்திலிருந்து ஹழ்லரத் ஜைத் இப்னு ஹாரிஸ் (ரலி) அவர்களும் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) அவர்களும் கொணர்ந்திருந்த வெற்றிச் செய்தியே நகரைக் களிப்பில் திளைக்க வைத்தது. அந்த ஆரவாரக் களிப்பில் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு என்ன பங்கிருக்க முடியும்? களம் கண்டு மறம் சேர்த்து மற்றவர்கள் பெற்ற மறுமைப் பேறு அவர்களுக்கில்லாமல் ஆனதோடு வாழ்வில் அறம் சேர்த்த அழகிய துணையையுமல்லவா அவர்கள் இழந்து நின்றனர்!

நகர் மீண்ட நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் தங்கள் மருகருக்கு ஆறுதல் கூறினார்கள். பத்ருப் போரில் அடைந்த

வெற்றிப் பொருள்களில் மற்றவர்களுக்களித்ததே போன்ற ஒரு பங்கை நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கும் அளித்தார்கள். போரில் கலந்து கொண்டதற்குண்டான மறுமைப் பலனும் அவர்களுக்குண்டு என நன்மாராயமும் கூறினார்கள்.

'துன்னூரைன்'

மா தங்கள் மூன்றையும் கடந்து நாட்கள் உருண்டோடின. பின்னரும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கவலை சூழ்ந்தவர்களாகவே காணப்பட்டார்கள். 'மதி' என ஒளிர்ந்த அவர்களின் முகம் மலராத நிலை கண்டு மற்ற தோழர்களின் உள்ளங்களும் உளைச்சல் கொண்டன. அலையெனப் பாய்ந்துப் பிறர் அல்லல் களைந்திடும் ஒரு நல்லார் நெஞ்சம் உழன்றிட எவர்தாம் பொறுப்பர். ஒருக்கால், இல்லற வாழ்வைத் தொடர ஒரு துணையை எண்ணியே ஏங்குகிறதோ அவர்களின் உள்ளம் எனக் கணித்தவர்களில் ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களும் ஒருவர்.

அக்காலை ஹழ்லத் உமர் (ரலி) அவர்களின் திருமகளார் ஹஃப்ஸா [ரலி] அவர்களும் போரில் தம் கணவரை இழந்து கைம்பெண்ணாகி இருந்தனர். ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் தம் தோழர் உதுமான் (ரலி) அவர்களை அண்மி, தம் மகளாரை ஏற்று மறுவாழ்வு தொடர வேண்டி நின்றார்கள். தாம் சிந்தித்து முடிவு செய்வதாகக் கூறிய ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் ஓரிரு நாட்கள் கழித்து, 'அப்போதைக்கு மறு மறுமணம் புரியாதிருப்பதே தமக்கு நன்மை'யளிக்கும் போல் தெரிவதாகக் கூறி விட்டார்கள்.

அதற்கு முன்னர் தம் மகளின் மறு வாழ்வுக்காக ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களையும் வேண்டி, அவ்வேண்டுதலில் நிறைவு பெறாதிருந்த ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களிடமும் கிடைத்த மறுப்பு ஒருபுறம் ஏமாற்றம் கலந்த வெறுப்பையே அளித்தாலும் மறுபுறம் வியப்புணர்வையும் அளிக்கத் தவறவில்லை!

''உதுமானே! போரினால் கிடைத்த இம்மையின் உடைமைகளிலும் நீர் பங்கு பெற்றுக் கொண்டீர். மறுமையின் பேற்றுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களின் வாக்கை நீர் பெற்றுக் கொண்டீர். மறுமணம் புரிந்து இல்லறத்தைத் தொடரவும் நீர் மறுத்து விட்டீர். அப்படியானால் உம் உள்ளத்தை உளைக்கும் கவலைதான் என்ன?" என ஹழ்லரத் உமர் [ரலி] அவர்கள் வினவினார்கள். ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கூறினார்கள், ''உமரே! உலகின் மற்றெல்லா உறவுகளும் அற்றுப் போகும் மறுமை நாளில் தம் உறவு மட்டுமே நிலை பெற்றிருக்கும் என அண்ணல் எம் பெருமான் [ஸல்] அவர்கள் கூறியுள்ளார்கள் அல்லவா? ருக்கையாவின் மரணத்தின் மூலம் இழந்து விட்ட அவ்வுறவை எந்தப் பேற்றின் மூலம் நான் ஈடு செய்வேன்?'' என்று.

பெருமானார் [ஸல்] அவர்களை எட்டிய அச்செய்தி அவர்களின் அருளுள்ளத்தை நெகிழச் செய்தது. விரைந்து தங்களின் அடுத்த மகளார் உம்மு குல்ஸூமையும் மண முடித்தளித்து ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களை மனம் மகிழச் செய்தார்கள். பெறுதற்கரிய அப்பேற்றை அடைந்த ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களைத் தோழர்கள் அது முதலே 'துன்னூரைன்-இரு ஒளிகளைப் பெற்றவர்' என அழைக்கத் தொடங்கினார்கள்.

உஹதுப் போர்

ஸையிதினா உதுமான் (ரலி) அவர்களின் இதயம் மென்மை குடி கொண்டது. அதனுள்ளே அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களின் மேன்மையே எந்நாளும் முடி கொண்டது. 'அல்-அமீ'னாக அண்ணலார் மக்காவில் உலவிய ஆரம்ப நாட்களிலேயே அவர்களின் கண்ணியம் கண்டுணர்ந்தவரே ஹழ்லரத் உதுமான் (ரலி). வணங்குவதற்குரியோன் அல்லாஹ் ஒருவனே எனக் கண்டறிவித்த அப்பெரு நபியை 'ஸாதிக்-உண்மையாளர்' என உணர்ந்திருந்தும் புறக்கணித்த மக்காவின் குரைஷிகள் ஆரம்ப நாட்களில் அவர்களுக்கிழைத்த கொடுமைகள் தான் என்னே! 'ஒழியட்டும்' என பொறுத்து, பிறந்த மண்ணைத்

துறந்து வெளிவந்த பின்னரும் தொடர்ந்தே வந்து துயர் படச் செய்யும் குரைஷிகளின் எண்ணக் கேடுகளைத்தான் என்னென்பது?

பத்ருப் போரில் தோற்றோடிய அவர்கள் மீண்டும் பெரும் படை நடத்தி உஹது மலையடிவாரத்தில் வந்து சந்தித்தார்கள். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் இயல்பினால் போர்க் குணம் படைத்தவர்கள் அல்லவாயினும் கோழையுள்ளம் கொண்டிருக்கவில்லை. உஹதுப் போரில் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களும் கலந்து கொண்டார்கள். பத்ரில் கிடைக்காத வாய்ப்பு அவர்களுக்கு உஹதில் கிடைத்து விட்டது. என்றாலும் இடையிலே ஒரு புரளி, பெருமானார் (ஸல்) அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று.

அது வெறும் புரளியேயானாலும் களறியினூடே நபி பெருமான் (ஸல்) அவர்கள் எந்நிலையிலிருக்கிறார்கள் என்பதே ஒருவருக்கும் தெரியாமலாகி விட்டது. அறிவொளி ஏற்றி தமக்கு அருள் வழி காட்டிய அவ்வண்ணலரின் பால் குரைஷியர் வீசிய ஒவ்வொரு சிறு சொல்லையும் முள்ளாய் உணர்ந்து நைந்த உள்ளம், அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற கொடுமையை எங்ஙனம் தாங்கும்? அவர்களே கொல்லப்பட்டபின் இனி எவருக்காகப் போர் புரிய வேண்டும் என விரக்தி கொண்டு ஓய்ந்து விட்டவர்களில் ஒருவராக ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களும் ஆகி விட்டார்கள். மதீனாவுக்கே திரும்ப விரைந்து விட்டவர்களோடு அவர்களையும் சேர்த்து எழுதப்பட்ட வரலாறுகளும் உண்டு! எவ்வாறாயினும் மாநபி (ஸல்) அவர்களின் தோழர்களின் அன்றைய மாறுபட்ட ஒவ்வொரு நிலையும் இறைவனால் பொருந்திக் கொள்ளப்பட்டு விட்டது. ஏனெனில் அவர்களில் எவரும் களம் காண அஞ்சி தடம் புரண்டு திரும்பி விட்ட வஞ்சகர்களோடு சேர்ந்தவர்களல்லர். வாளேந்தி ஒரு புறம் காவலாய் நின்ற வீரர்களில் சிலர் தங்கள் அவசரத்தால் விளைத்திட்ட செயலே அவர்களை அலைக்கழியச் செய்து விட்டது.

إِنَّ الَّذِينَ تَوَلَّوْا مِنكُمْ يَوْمَ الْتَقَى الْجَمْعَانِ إِنَّمَا اسْتَزَلَّهُمُ الشَّيْطَٰنُ
بِبَعْضِ مَا كَسَبُوا ۖ وَلَقَدْ عَفَا اللَّهُ عَنْهُمْ ۗ إِنَّ اللَّهَ غَفُورٌ حَلِيمٌ

''(விசுவாசிகளே!) இரு கூட்டத்தாரும் (யுத்தத்துக்காகச்) சந்தித்துக் கொண்ட நாளில் உங்களில் எவர் [அதிலிருந்து] விரண்டோடினார்களோ [அவர்கள் நிராகரிப்பின் காரணமாக ஓடவில்லை.] அவர்கள் தேடிக் கொண்ட [தீவினைகள்] சிலவற்றின் காரணமாக ஷைத்தான் அவர்(களுடைய கால்க)ளைச் சருகும்படியாகச் செய்தான். எனினும் அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்போனும், பொறுமையுடையோனுமாய் இருக்கிறான்'' என இறங்கிய [3 : 155] வேத வசனம் உஹதுடைய போர்க்களத்தில் பங்கேற்ற எந்த ஒரு நபிமணித் தோழரைப் பற்றியும் குறை காணாதிருக்க நம்பிக்கை கொண்டவர்களின் நாவுகளுக்குத் தடை கட்டி நிற்கின்றது.

ஹுதைபியா

ஹுதைபியாவின் வரலாறோ ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களின் சிரசில் மகிமையின் மகுடத்தையே சூட்டி மகிழ்கிறது. ஹிஜ்ரி 6-ம் ஆண்டு தம் ஆயிரத்து நானூறு தோழர்களுடன் ஹுதைபியாவை வந்தடைந்த நபிகளார் [ஸல்] அவர்கள் மக்காவாசிகளிடம் தூது செல்ல ஹழ்லரத் உதுமான் அவர்களையே அனுப்பி வைத்தார்கள். 'உயிர் கொள்ளக் காத்திருந்த குரைஷி வைரிகளும் தம் வஞ்ச மொழித்து வரவேற்கத்தக்க உயர்வு படைத்தவர் வேறொருவர் இருந்திருப்பாரானால் பெருமான் [ஸல்] அவர்கள் அன்று அவரையே தம் தூதராக அனுப்பியிருப்பார்கள்' என ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு உமர் [ரலி] அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த அப்துஷ் ஷம்ஸ் குடும்பத்தார் தங்களைச் சார்ந்த ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் குரைஷிகளை ஒன்று கூட்டி, 'நபி பெருமான் [ஸல்] அவர்கள் போர் புரிவதற்காக வந்ததில்லை, அவர்கள் புனிதத் திரு வீட்டைத் தரிசிக்கவே தங்கள் தோழர்களோடு வந்திருக்கிறார்கள்' என்ற விவரங்களை எடுத்துரைத்தார்கள். பெருமானார் [ஸல்] அவர்கள் பால் வஞ்சம் தணியாத அக்குரைஷிகளோ ஒருக்காலும் அவர்களில் எவரையும் மக்காவினுள் அனுமதிக்கவே முடியாதென மறுத்து நின்றார்கள்.

''உதுமானே! எங்களிடையே உம் கண்ணியம் என்றும் மதிக்கத்தக்கதாகவே உள்ளது. நீர் வேண்டுமானால் கஅபாவைச் சுற்றி வர நாங்கள் அனுமதிப்போம்" என குரைஷிகள் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களுக்கு மட்டுமே தனிச் சலுகை காட்டினர். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களோ, ''ஆண்டவனின் தூதரைப் பிரிந்து ஒருக்காலும் அவ்வாறு நான் செய்ய மாட்டேன்" என அதனை ஏற்க மறுத்து விட்டார்கள்.

பெருமான் நபி [ஸல்] அவர்கள் பால் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் காட்டிய அப்பேணுதல் குரைஷிகளுக்குச் சற்று எரிச்சலையே ஊட்டியது. தர்க்கத்திலேயே நாட்களைக் கடத்தி ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களைத் திரும்பிச் செல்ல விடாது தாமதிக்கச் செய்தனர் குரைஷிகள். அந்தத் தாமதத்தால் ஒருக்கால் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கொல்லப்பட்டே போனார்களோ என்ற ஐயம் ஹுதைபியாவில் தங்கியிருந்த தோழர்களிடையே எழுந்தது.

உண்மையிலேயே அப்படி கொல்லப்பட்டிருந்தால்....!

அதற்கெனப் பழி தீர்க்க ஹுதைபியாவின் ஸஹாபாக்கள் அனைவரும் நபி பெருமான் [ஸல்] அவர்களின் கரம் பிடித்துப் பிரமாணம் செய்தார்கள். இறுதியாக,

إِنَّ عُثْمَانَ فِي حَاجَةِ اللهِ وَحَاجَةِ رَسُولِهِ

'நிச்சயமாக உதுமான் அல்லாஹ்வுடையவும் அவனின் தூதருடையவும் நாட்டங்களின் பேரிலேயே சென்றிருக்கிறார்' என அறிவித்த பெருமானார் [ஸல்] அவர்கள் தங்கள் இடக்கரத்தை நீட்டி வலக்கரத்தால் அதனைப் பற்றியவர்களாக, ''இறைவா! இதோ ஒன்று உதுமானின் கரம். மற்றொன்று என் கரம். உதுமானுக்குப் பகரமாக நான் பிரமாணம் செய்கிறேன்'' எனப் பிரமாணம் செய்தார்கள். ''பெருமானார் [ஸல்] அவர்களின் கரமே பிணை நின்ற உதுமான் [ரலி] அவர்களின் திருக்கரம் மற்றெல்லா தோழர்களின் கரங்களையும் விட உயர்வு படைத்தது'' என ஹழ்லரத் அனஸ் [ரலி] அவர்கள் புகழ்கிறார்கள்.

பின்னர் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் நலமே திரும்ப வந்தபோது அவர்களைப் பெரும் மகிழ்வோடு வரவேற்றார்கள் ஹுதைபியாவின் தோழர்கள். மக்காவில் தங்கியிருந்த அந்த இடைக்காலத்தில் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களுக்கேனும் வாய்ப்பு கிடைத்து, அவர்கள் கஅபாவை தவாஃப் செய்திருப்பர் எனக் கணித்தனர் நபி மணித் தோழர்கள். அவர்கள் தமக்கு சோபனம் கூறக் கேட்டு ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் திடுக்கிட்டனர்!

'என்ன தவறான கணிப்பு இது! இன்னும் ஓராண்டு காலம் மக்காவில் தங்கியிருக்க நேர்ந்திருந்தாலும் சரியே, அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் வந்து சேராத வரை நான் ஒரு போதும் கஅபாவைச் சுற்றியிருக்கவே மாட்டேன்' என ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கூறிய செய்தி அவர்களின் இதயத் தூய்மையைக் காட்டி அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்களை மகிழச் செய்தது.

சுவன நன்மாராயங்கள்

இவ்வாறாக ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் தம் அண்ணலாரின் மனம் மகிழச் செய்த தருணங்கள் அவர்

களின் மதீனா வாழ்வில் பல உள்ளன. மதீனாவில் குடியேறிய முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட முதற்சிரமம் குடிநீர் தட்டுப்பாடேயாகும். 'பீரெ ரூமா' என்ற ஒரு கிணற்றைத் தவிர்த்து மற்ற கிணறுகளில் உவர்ப்பு நீரே கிடைத்துக் கொண்டிருந்தது. அந்த ஒரு கிணறும் யூதன் ஒருவனுக்கு சொந்தமானதாயிருந்தது. இஸ்லாத்தின் மீது அழுக்காறு கொண்ட அந்த யூதனோ தன் கிணற்றிலிருந்து நீர் அள்ளாதவாறு முஸ்லிம்களைத் தடுத்து நின்றான். குடிப்பதற்கு நல்ல நீர் கிடைக்காமல் தங்கள் தோழர்கள் படும் துயர் கண்டு தாஹா நபி (ஸல்) அவர்களும் துயருற்றார்கள். பள்ளியில் கூடிய தோழர்களிடையே பெருமானார் (ஸல்) அவர்கள், ''பீரெ ரூமாவை விலை பேசிப் பெற்று முஸ்லிம்களுக்கு உடைமையாக்குபவர் உங்களில் எவரோ—நான் அவருக்கு சுவனத்தைப் பற்றி உறுதி கூறுகிறேன்'' என அறிவித்தார்கள்.

அவ்வறிவிப்பைக் கேட்டதுமே ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் எழுந்தார்கள்; அண்ணலார் (ஸல்) அவர்களின் அனுமதி பெற்று விரைந்தார்கள்; யூதனிடம் சென்று கிணற்றை விலை பேசினார்கள். அந்த யூதனோ கிணற்றை விற்க துவக்கத்தில் மறுத்தே விட்டான். எனினும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் நயந்து பேசி அவனிடமிருந்து கிணற்றின் சரிபாதி உரிமையை பன்னீராயிரம் திர்ஹங்களுக்குப் பகரமாக பெற்றார்கள்.

கிணற்றின் ஒரு நாள் வருவாய் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கும், மறு நாள் வருவாய் யூதனுக்கும் சேர வேண்டியதாக முடிவு செய்யப்பட்டது. ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் முறை நாளன்று முஸ்லிம்கள் தங்களின் மறு நாளுக்குத் தேவையான நீரையும் இரைத்துச் சேமித்துக் கொள்ளலானார்கள். அதன் காரணமாக யூதனின் முறை நாளன்று அவனுடைய வருவாய் குறைந்து போயிற்று. பின்னர் யூதன் கைசேதப்பட்டவனாக, கிணற்றின் மறுபாதி உரிமையையும் விற்க முன் வந்தான். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் எண்ணாயிரம் திர்ஹங்களுக்கு கிணற்றின் மறுபாதியையும் விலை பேசிப் பெற்று முழுக் கிணற்றையும் முஸ்லிம்களின் உடமையாக்கி வைத்

தார்கள். இவ்வாறாக முஸ்லிம்களின் காய்ந்த குடல்களைக் குளிரச் செய்த ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள், அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் திருக்கரத்தில் சுவனத்தை விலை பேசிப் பெற்ற மற்றொரு சம்பவமும் உண்டு.

ஹுதைபியா உடன்பாட்டை அடுத்து மக்கள் திரள் திரளாக இஸ்லாத்தின் பால் விரைந்து இணையலானார்கள். மதீனாவின் பள்ளியில் அவர்கள் தொழுவதற்கு இடம் போதாத நிலை ஏற்பட்டு விட்டது. பள்ளியைச் சூழ சில நிலங்களும் இருந்தன. அவற்றை விலை கொடுத்துப் பெற்று அல்லாஹ்வின் பள்ளியை விரிவடையச் செய்து அதற்குப் பகரமாகத் தம் கரத்தில் சுவனத்தைப் பெறத் துணிபவர் யார்? எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் வினவி நின்ற போதும், ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே துணிந்தெழுந்தார்கள். ஏறத்தாழ இருபத்து ஐயாயிரம் திர்ஹங்களுக்கு அந்நிலங்களை விலை பேசிப் பெற்று மதீனாவின் திருப்பள்ளியை விரிவுபடுத்த அர்ப்பணித்தார்கள்.

ஹிஜ்ரி 9-ம் ஆண்டில் பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் போருக்கான ஆயத்தங்களைச் செய்தார்கள். அப்போது ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் பெற்ற பேற்றை ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு கப்பாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : ''நான் சென்றபோது பள்ளியில் நபி பெருமான் (ஸல்) அவர்கள், போருக்குப் பொருள் வேண்டி மக்களுக்கு உணர்வூட்டிக் கொண்டிருந்தார்கள். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, ''பெருமானே! ஒரு நூறு ஒட்டகைகளுக்கான பொறுப்பை அவற்றின் பராமரிப்பு, தளவாடச் செலவுகளோடு நான் ஏற்கிறேன்'' எனக் கூறி அமர்ந்தார்கள். அண்ணலார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து மக்களுக்கு உணர்வூட்டலானார்கள். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் மறுமுறை எழுந்து, ''பெருமானே! இருநூறு ஒட்டகைகளின் பொறுப்பை அவற்றின் பராமரிப்பு, தளவாடங்கள், செலவு உட்பட நான் ஏற்கிறேன்'' எனக் கூறி அமர்ந்தார்கள். அண்ணலார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து மக்களை

அழைகூவிக் கொண்டிருந்தார்கள். மீண்டும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் எழுந்து, ''பெருமானே! முன்னூறு ஒட்டகைகளுக்குண்டான பொறுப்பை அவற்றின் பராமரிப்பு தளவாடங்களுக்குண்டான செலவோடு நான் ஏற்கிறேன்'' என அறிவித்தார்கள். அதனைக் கேட்ட நபி பெருமான் (ஸல்) அவர்கள்,

مَا عَلَىٰ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ مَا عَلَىٰ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ هٰذِهٖ

''இதற்குப்பின் உதுமானின் எந்தச் செயலும் அவருக்கு நட்டத்தை விளைவிக்காது" என இரு முறை கூறிய வண்ணம் மேடையை விட்டும் இறங்கக் கண்டேன்" என்று.

''ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் ஒரு துணியில் ஓராயிரம் தங்கக் காசுகளை வைத்துக் கொணர்ந்து அவற்றை அண்ணலார் [ஸல்] அவர்களின் மடியில் வைத்து விட்டார்கள். புத்தம் புதிய அக்காசுகளைத் தங்கள் கரங்களால் புரட்டிக் கொண்டிருந்த நபி பெருமான் (ஸல்) அவர்கள்,

مَا ضَرَّ عُثْمَانَ مَا عَمِلَ بَعْدَ الْيَوْمِ

''இன்றைக்குப் பின் உதுமானின் எந்தச் செயலும் அவருக்குத் தீங்கு விளைவிக்காது" எனக் கூறிக் கொண்டிருக்க நான் கண்டேன்" என ஹழ்லரத் அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

முப்பதினாயிரம் வீரர்களையும் பதினாயிரம் புரவிக்காரர்களையும் கொண்ட அப்படையில் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் பதினாயிரம் பேர்களுக்கான முழுச் செலவையும் ஏற்றார்கள். சன்னஞ் சன்னமாக எழுநூறு ஒட்டகைகளையும் எழுபது குதிரைகளையும் அவர்கள் தந்ததாக வரலாறு கூறுகிறது.

பொதுவாக நகரை அச்சமயம் பஞ்சமும் சூழ்ந்திருந்தது எனினும் ஸிரியாவிலிருந்து திரும்பிய ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் வாணிபக் குழு பெரும் இலாபத்துடன் திரும்பி இருந்தது. அல்லாஹ்வின் அவ்வருட்

கொடையை அல்லாஹ்வின் பாதையில் அள்ளித் தர எள்ள ளவும் சளைக்கவில்லை அவர்களின் பேருள்ளம். ஆயினும் பெருமான் நபி (ஸல்) அவர்களின் திருப்பொருத்தத்தை விலை பேசிப் பெற்றுக் கொண்டிருந்த அத்தோழருக்குத் தான் எத்தனை சோதனைகள் காத்திருந்தன. தபூக் போரின் பெருஞ் செலவைத் தம் கரமேந்திய அந்நல்லார் தபூக் போரிலிருந்து திரும்பியபோது அவர்களை மதீனாவில் வரவேற்றது மனைவியார் உம்மு குல்ஸூமின் மரணச் செய் தியேயாகும். தம் மருகரை அணைத்து ஆறுதல் வழங்கிய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், ''உதுமானே! என் னிடம் இன்னும் நாற்பது பெண் மக்கள் இருப்பினும் அவர் களை ஒருவர் பின் ஒருவராக உமக்கு மணமுடித்தளிப் பேனே'' என்று கூறினார்கள். ''உங்களில் இயன்றவர்கள் தாராளமாக உதுமானோடு மணத் தொடர்பு கொள்ளுங் கள்'' என அண்ணலார் (ஸல்) தம் தோழர்களுக்கும் அறி வுறுத்தினார்கள். பெருமான் நபி (ஸல்) அவர்களின் பேருள் ளம் அவர்களின் கரம் பற்றி ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற நாள் முதல், அவர்கள் உல கைப் பிரிந்து சென்ற இறுதித் தருணம் வரையிலும் அத் தோழரின் பால் பொருத்தம் மிகக் கொண்டதாகவே விளங் கியது.

لِكُلِّ نَبِيٍّ رَفِيقٌ وَرَفِيقِي يَعْنِي فِي الْجَنَّةِ عُثْمَانُ

''ஒவ்வொரு நபிக்கும் சுவனத்தில் ஒரு துணைவர் இருப்பார். அத்தகைய என் துணைவர் உதுமான்'' எனப் போற்றிய தூதர் பெருந்தகை (ஸல்) அவர்கள், ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் உள்ளம் தாம் குடிகொண்டிலங் கும் இல்லமாகவே விரிந்து விளங்கக் கண்டு பூரித்து, ''இறைவா! உதுமானைக் கொண்டு நான் பொருந்தங் கொண்டுள்ளேன். நீயும் அவர்பால் பொருத்தங் கொள்வா யாக'' என வழுத்தினார்கள்.

மதீனாவை விட்டும் போருக்காக வெளிச் செல்ல நேர்ந்த இரு சந்தர்ப்பங்களில் அண்ணலார் (ஸல்) அவர் கள் ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களை மதீனாவில் தம்

கலீஃபாவாகவும் நியமித்துச் சென்றிருக்கின்றார்கள். அவ்வப்போது விண்ணிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த இறைவசனங்களை உடனுக்குடன் பதிவு செய்யும் எழுத்தர்களில் ஒருவராகவும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் அண்ணலாருக்கு பணியாற்றினார்கள்.

கலீஃபாக்களின் துணைவராக

பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின் பொறுப்பேற்ற இரு கலீஃபாக்களின் ஆரம்ப நாட்களும் சமுதாயத்துக்கு எத்தகைய சோதனைகள் நிறைந்தனவாக இருந்தன என்பதை அக்கலீஃபாக்களின் வரலாறுகள் காட்டுகின்றன. கொள்கைப் பலமற்ற சம்சயவாதிகள், அவர்களைக் குழப்பித் திரிந்த சந்தர்ப்பவாதிகள், பொய்யில் முளைத்தெழுந்த வேடதாரிகள். இவர்கள் அத்தனை பேரையும் சந்தித்தே தீர வேண்டியிருந்த மிகக் கொடூரமான காலகட்டத்தில் அக்கலீஃபாக்களின் நம்பிக்கைகளுக்கு அணுவளவும் பங்கமின்றி பதிமூன்று ஆண்டு காலமும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் அருகிருந்தே அளித்த ஒத்துழைப்பு போற்றுதற்குரியதாகும். மாநபியின் அப்பெருங் கலீஃபாக்களுக்கு ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் சேவை பூரண மன நிறைவைத் தந்தது என்பதோடு, சமுதாயத்தை வழி நடத்தும் பொறுப்பேற்கும் தலைமைக்குத் துணையாக அருகிருக்கும் வாய்ப்பும் தகுதியும் பெற்றவர்கள் ஊசாட்டமற்ற எத்தகைய உறுதி படைத்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு முதன்மையான முன்னுதாரண கர்த்தா என ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களையே கூறுதலும் பொருந்தும்.

மக்க நகர வெற்றிக்குப் பின்னர் நிர்க்கதியாகி விட்ட உமையாக்களின் முழுச் செல்வாக்கும் துருப் பிடித்துத் தொய்ந்தே போனது. அவ்வின்னா செய்தார்க்கும் நன்னயம் பேணி நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தில் அவர்களுக்கு மிகக் கண்ணியமான வாழ்வையே அளித்திருந்தார்கள். அப்போதும் அவர்களின் நெஞ்சைப் பற்றி நின்ற குலப் பெருமையும் கோத்திரப் பொறுமலும் அகன்றிடாது அவர்களிடம் தங்கியே நின்ற உண்மையைப்

பிந்திய வரலாறுகள் காட்டுகின்றன. ஸையிதினா ஹழ்ரத் ஸித்தீக்குல் அக்பர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற போதே, 'அப்து மனாஃபின் கிளையார்கள் இருக்க பனூ தமீமிகளிடமா கிலாஃபத்தின் தலைமை' என வஞ்சகமாக அவர்கள் ஆரம்பித்த விஷமச் செயல்கள் நெஞ்சத் தூய்மை பெற்றிருந்த நபிமணித் தோழர்களிடையே செல்லுபடியாகவில்லை. அதே உமையாக்களிடையே ஓர் உயர்குணச் செம்மலாக விளங்கிய ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள், எத்தகைய உண்மையாளராக உளத் தூய்மையாளராக இருந்து துணை சேர்த்தார்கள் என்பதை கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்களின் வாழ்க்கையின் இறுதியில் நடைபெற்ற சம்பவம் காட்டுகிறது :

கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் மரணத் தறுவாயில் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களை அழைத்து தமக்குப் பின் ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களை கலீஃபாவாக நியமிக்க எண்ணியிருப்பதாகக் கூறி, அது பற்றி அவர்களின் கருத்தைக் கேட்டார்கள். ''அவரின் புறச் சிறப்புகளைவிட மேலானதாகவே அவரின் அகச் சிறப்புகளை நான் காண்கிறேன். எங்களில் எவரும் அவருடைய தகுதியை எத்தவே இயலாது" என ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் அறிவித்தார்கள். பின்னர் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தோழர்கள் பலருடையவும் கருத்துக்களைக் கேட்டறிந்து ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களையே தமக்குப் பின் கலீஃபாவாக நியமிக்க முடிவு செய்தார்கள்; அதனையே ஒரு சாஸனமாக எழுத ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களைப் பணித்தார்கள். கலீஃபா அவர்கள் தம் பிரகடனத்தைக் கூறி வர, ஹழ்ரத் உதுமான் (ரலி) எழுதிக் கொண்டிருந்தார்கள்:

''அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயர் கொண்டு துவக்குகிறேன்.

''எந்த நிராகரிப்பவனும் நம்பிக்கை கொள்ளவும், எத்தகைய வழிகேடனும் பிழை பொறுக்கத் தேடவும் துடிக்கும் ஒரு மகத்தான தருணத்தில், அல்லாஹ்வுடைய தூதருடைய கலீஃபா-அபூ குஹாஃபாவின் மகன் அபூபக்கர்,

உலக வாழ்வின் இறுதிப் படியில் நின்று மறுமை வாழ்வின் முதற்படியைத் தொட்டவனாக இச்சாஸனத்தைப் பிரகடனம் செய்கின்றேன்.

—எனக் கூறி நிறுத்திய கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் மூர்ச்சை அடைந்து விட்டார்கள். அதனைப் பூரணமாக எழுதி முடித்த ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள், உங்கள் மீது உமர் இப்னுல் கத்தாபை எனக்குப் பின் கலீஃபாவாக விட்டுச் செல்கிறேன் என்றும் எழுதி முடித்தார்கள்.

சற்று நேரத்தில் கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்களுக்கு மூர்ச்சை தெளிந்து விட்டது. ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை எழுதிய வரை தமக்குப் படித்துக் காட்டும்படி கூறினார்கள் கலீஃபா. தாம் கூறாத நிலையிலும் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களே ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களின் நியமனம் பற்றி எழுதி விட்டதைப் படிக்கக் கேட்டதுமே ''அல்லாஹு அக்பர்" எனப் பூரித்த வண்ணம் கூறினார்கள் கலீஃபா! அவர்களின் முகம் மலர்ந்தது!

''உதுமானே! ஒருக்கால் இம்மயக்கத்தோடேயே என் உயிர் பிரிந்து விடக் கூடும் என அஞ்சியே துரிதமாக அதனை எழுதி விட்டீரோ?" என கலீஃபா அவர்கள் கேட்க, ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் 'ஆம்' எனத் தலையை அசைத்தார்கள். கலீஃபா அபூபக்கர் [ரலி] அவர்கள், தம் துணைவரின் துரித சிந்தனையையும் தூய நெஞ்சத்தையும் போற்றிச் சிலாகித்தார்கள்.

அடுத்து கிலாஃபத்தை ஏற்ற ஃபாரூக்குல் அஅலம் அவர்களுக்கும் ஹழ்லரத் உதுமான் [ரலி] துணைவராகத் தொடர்ந்து பணியாற்றினார்கள். அவ்விரு கலீஃபாக்களுக்கும் துணைவராகப் பணியாற்றி அவர்களின் மனப் பொருத்தத்தையும் நம்பிக்கையையும் தாம் ஏற்ற பதின் மூன்றாண்டு கால கட்டத்தை ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களே பின்னொரு சமயம் இவ்வாறாகக் கூறிக் காட்டினார்கள்:

''அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்களை அடுத்து, அல்லாஹ், அபூபக்கர் [ரலி] அவர்களை முஸ்லிம்களுக்கு

கலீஃபாவாக்கினான். ஆண்டவன் மீதாணையாக துரோகத்தின் சிறு அடுவும் கூட இல்லாத வகையில் அவர்களுக்கு நான் வழிப்பட்டு நடந்தேன். பின்னர் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவானார்கள். ஆண்டவன் அவர்களையும் தன் பால் அழைத்துக் கொண்ட இறுதித் தருணம் வரையிலும் அவர்களுக்கும் வழிப்பட்டு நான் புரிந்த ஊழியத்தில் குற்றங்களோ குறைகளோ அல்லாதது மட்டுமல்ல, என்பால் அவர்களுக்கு எந்த ஒரு சிறு ஐயமும் எந்நாளும் ஏற்படவே இல்லை என்பதற்கு அல்லாஹ் ஒருவனே சாட்சி."

இஸ்லாத்தின் மூன்றாம் கலீ:.பா

ஹிஜ்ரி 24-ம் ஆண்டு தன் விடியலை மிகுந்த பரபரப்போடு சந்தித்தது.

பிரளயம் ஏற்பட்டு விடவில்லை.

பெருஞ்சூறாவளியொன்று வீசி மாட மாளிகைகளையெல்லாம் சடசடவெனச் சரிந்து விழச் செய்திடவில்லை. ஆனால், அவற்றாலெல்லாம் அலைக் கழிக்கப்படுவதையும் விடப் பெரும் பரபரப்பில் மதீனாவின் மக்கள் ஆழ்ந்து விட நேர்ந்தது உண்மையே! விடிந்து தங்கள் விழிகளைத் திறந்து வீடுகளை விட்டும் வெளி வந்ததுமே தங்களின் வீர மக்கள் வாரிச் சேர்க்கும் புதிய புதிய வெற்றிச் செய்திகளைச் செவி மாந்தி சிந்தை மலர்வதையே வாலாயமாகக் கொண்டிருந்த மக்களிடையே,

அன்றைய மக்களனைவரிலும் தகுதியால் மிக உயர்வு படைத்த மனிதர்—நம்பிக்கையாளர்களின் நல்லறத் தலைவர்—நாயகத்தின் கலீஃபா—தம் நாயகத்திறன் கொண்டு அறம் தழைக்கச் செய்து மண்ணில் ஆண்டவனின் ஆட்சியை ஊன்றி நிமிர்ந்த ஆண்மையாளர், ஸைய்யிதினா உமர்—அல்—ஃபாரூக் (ரலி) அவர்கள்—வேடதாரி வஞ்சகன் ஒருவனின் குறுவாளால் குத்தப்பட்டார்கள் மூன்று நாட்களுக்கு முன்னே! உயிரைப் பிரிந்த அவர்களின் புனித உடலை மண்ணறையில் அடக்கிப் பிரிந்திருந்தனர் மாநபித் தோழர்கள்.

இனி கிலாஃபத்தை ஏற்பவர் யார்? திக்கெட்டும் இறையொலி எழுப்பிய புதிய வரலாற்றைத் தொடரப் பொறுப்பேற்பவர் எவர்? என்பதை அறிய மக்கள் ஆவல் காட்டினர். அப்பொறுப்பினை ஏற்கத் தகுதி பெற்றவர்களாக உதுமான், அலீ, தல்ஹா, ஸுபைர், ஸஅத் இப்னு அபீ வக்காஸ், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) ஆகிய அறுபெரும் நபிமணித் தோழர்களை அறிவித்துப் பிரிந்திருந்தார்கள் முந்திய கலீஃபா.

கலீஃபா உமர் (ரலி) அவர்களால் தேர்வுக்கென அறிவிக்கப் பெற்ற அறுவர் குழுவில் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே முதலிடம் பெற்றிருந்த போதிலும் அவ்வாறு அவர்கள் முதலிடம் பெற, முந்திய கலீஃபாக்களுக்கு அவர்கள் ஆற்றிய சேவை மட்டுமோ, அதனால் மட்டுமே அவர்கள் பால் அக்கலீஃபாக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையும் நல்லெண்ணமும் மட்டுமோ காரணங்களாகும் எனக் கணித்திடல் தகாது. முந்திய கலீஃபாக்களான ஹழ்ரத் அபூபக்கர், உமர் (ரலி) ஆகிய இருவரையுமே பிரிந்து விட்ட மனித சமுதாயத்தில் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே தகுதியால் முன்னிடம் பெற்றவர்கள் என்பது அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் சன்னிதானமே கண்ட ஆரம்ப காலக் கணிப்புமாகும்.

“அண்ணலார் (ஸல்) அவர்களின் காலத்தில் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்குச் சமமாக நாங்கள் எவரையுமே எண்ணிப் பார்த்ததில்லை. அவர்களுக்குப் பின்னர் உமர் (ரலி), அவர்களுக்குப் பின்னர் உதுமான் (ரலி), அவர்களுக்குப் பின்னரே நாங்கள் மற்ற நபி மணித் தோழர்களைச் சம நிலையில் விட்டு விடுவோம்—என மாநபித் தோழர் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறிக் கேட்கப்பட்ட செய்தியை இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மதீனாவில் திருப்பள்ளி எழுப்ப அடித்தளம் அமைத்த போது நபி பெருமான் (ஸல்) அவர்கள் முதன் முதலாகத் தங்கள் திருக்கரத்தால் ஒரு கல் எடுத்து வைத்தார்கள்; பின்னர் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை அழைத்து

ஒரு கல் எடுத்து அதற்கு அருகே வைக்கச் சொன்னார்கள்; அவர்களும் தங்கள் கரத்தால் கல்லொன்றெடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் வைத்த கல்லோடு சேர்த்து வைத்தார்கள். அடுத்து அண்ணலார் (ஸல்) அவர்கள் ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களை அழைத்து இன்னொரு கல் எடுத்து அவற்றுக்குப் பக்கமாக வைக்கக் கூறினார்கள். ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களும் அவ்வாறே ஒரு கல் எடுத்து அவ்விரு கற்களோடு சேர்த்து வைத்தார்கள். நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களையும் அழைத்து மற்றொரு கல்லை எடுத்து அவற்றோடு இணைத்து வைக்கப் பணித்தார்கள். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களும் தங்கள் கரத்தால் ஒரு கல் எடுத்து முந்திய கற்கள் மூன்றன் அருகேயே வைத்து விட்டார்கள். அதன் பின் அண்ணலார் (ஸல்) அவர்கள், 'இவர்கள் எனக்குப் பின் பிரதிநிதித்துவம் ஏற்பார்கள்' என அருளிய ஒரு வாக்கை ஹழ்லரத் ஸஃபீனா (ரலி) அவர்கள் கூறக் கேட்டு ஹழ்லரத் இப்னு ஹப்பான் (ரலி) அவர்கள் அறிவித்த செய்தி இமாம் பைஹக்கீ (ரஹ்) அவர்களால் 'தாயீலுன் னுபுவ்வத்' என்ற நூலின் மூலம் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்வாறாகத் தகுதியால் முன்னின்ற ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு எழுபது வயதுகளை அடைந்த அவர்களின் முதுமையும் கட்டியங் கூறி நின்றது. ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களோ ஏறத்தாழ நாற்பத்து ஐந்தே வயதுகளைக் கடந்த வாலிபத்தில் திளைத்திருந்தார்கள். அவர்களின் பண்பாடுகளும் நடைமுறைகளும் அநேகமாக முந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்களை ஒத்தனவாகவே விளங்கின. நீதியை நிலைப்படுத்துதில், உண்மையை வெளிப்படுத்துவதில் ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட கண்டிப்பும் உறுதியும் ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களிடமே காணப்பட்டன. இத்தகுதிகளோடேயே அன்றி, ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு 'ஹாஷிமி' யாக—இரத்த பந்தத்தால் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்களாகவும் இருந்தார்கள்.

இனி கிலாஃபத்தை ஏற்பவர் யார்? திக்கெட்டும் இறை யொலி எழுப்பிய புதிய வரலாற்றைத் தொடரப் பொறுப் பேற்பவர் எவர்? என்பதை அறிய மக்கள் ஆவல் காட்டி னர். அப்பொறுப்பினை ஏற்கத் தகுதி பெற்றவர்களாக உதுமான், அலீ, தல்ஹா, ஸுபைர், ஸஅத் இப்னு அபீ வக்காஸ், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) ஆகிய அறுபெரும் நபிமணித் தோழர்களை அறிவித்துப் பிரிந்திருந் தார்கள் முந்திய கலீஃபா.

கலீஃபா உமர் (ரலி) அவர்களால் தேர்வுக்கென அறி விக்கப் பெற்ற அறுவர் குழுவில் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே முதலிடம் பெற்றிருந்த போதிலும் அவ்வாறு அவர்கள் முதலிடம் பெற, முந்திய கலீஃபாக்களுக்கு அவர் கள் ஆற்றிய சேவை மட்டுமோ, அதனால் மட்டுமே அவர் கள் பால் அக்கலீஃபாக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையும் நல் லெண்ணமும் மட்டுமோ காரணங்களாகும் எனக் கணித் திடல் தகாது. முந்திய கலீஃபாக்களான ஹழ்ரத் அபூ பக்கர், உமர் (ரலி) ஆகிய இருவரையுமே பிரிந்து விட்ட மனித சமுதாயத்தில் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களே தகுதியால் முன்னிடம் பெற்றவர்கள் என்பது அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் சன்னிதானமே கண்ட ஆரம்ப காலக் கணிப்புமாகும்.

''அண்ணலார் (ஸல்) அவர்களின் காலத்தில் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்குச் சமமாக நாங்கள் எவரை யுமே எண்ணிப் பார்த்ததில்லை. அவர்களுக்குப் பின்னர் உமர் (ரலி), அவர்களுக்குப் பின்னர் உதுமான் (ரலி), அவர்களுக்குப் பின்னரே நாங்கள் மற்ற நபி மணித் தோழர்களைச் சம நிலையில் விட்டு விடுவோம்—என மாநபித் தோழர் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறிக் கேட்கப்பட்ட செய்தியை இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மதீனாவில் திருப்பள்ளி எழுப்ப அடித்தளம் அமைத்த போது நபி பெருமான் (ஸல்) அவர்கள் முதன் முதலாகத் தங்கள் திருக்கரத்தால் ஒரு கல் எடுத்து வைத்தார்கள்; பின்னர் ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை அழைத்து

ஒரு கல் எடுத்து அதற்கு அருகே வைக்கச் சொன்னார்கள். அவர்களும் தங்கள் கரத்தால் கல்லொன்றெடுத்து பெருமானார் (ஸல்) அவர்கள் வைத்த கல்லோடு சேர்த்து வைத்தார்கள். அடுத்து அண்ணலார் (ஸல்) அவர்கள் ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்து இன்னொரு கல் எடுத்து அவற்றுக்குப் பக்கமாக வைக்கக் கூறினார்கள். ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களும் அவ்வாறே ஒரு கல் எடுத்து அவ்விரு கற்களோடு சேர்த்து வைத்தார்கள். நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களையும் அழைத்து மற்றொரு கல்லை எடுத்து அவற்றோடு இணைத்து வைக்கப் பணித்தார்கள். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் தங்கள் கரத்தால் ஒரு கல் எடுத்து முந்திய கற்கள் மூன்றன் அருகேயே வைத்து விட்டார்கள். அதன் பின் அண்ணலார் (ஸல்) அவர்கள், 'இவர்கள் எனக்குப் பின் பிரதிநிதித்துவம் ஏற்பார்கள்' என அருளிய ஒரு வாக்கை ஹழ்ரத் ஸஃபீனா (ரலி) அவர்கள் கூறக் கேட்டு ஹழ்ரத் இப்னு ஹப்பான் (ரலி) அவர்கள் அறிவித்த செய்தி இமாம் பைஹக்கீ (ரஹ்) அவர்களால் 'தாயிலுன் னுபுவ்வத்' என்ற நூலின் மூலம் சுட்டிக் காட்டப்படுகிறது.

இவ்வாறாகத் தகுதியால் முன்னின்ற ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு எழுபது வயதுகளை அடைந்த அவர்களின் முதுமையும் கட்டியங் கூறி நின்றது. ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களோ ஏறத்தாழ நாற்பத்து ஐந்தே வயதுகளைக் கடந்த வாலிபத்தில் திளைத்திருந்தார்கள். அவர்களின் பண்பாடுகளும் நடைமுறைகளும் அநேகமாக முந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்களை ஒத்தனவாகவே விளங்கின. நீதியை நிலைப்படுத்துதில், உண்மையை வெளிப்படுத்துவதில் ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் காணப்பட்ட கண்டிப்பும் உறுதியும் ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களிடமே காணப்பட்டன. இத்தகுதிகளோடேயே அன்றி, ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஒரு 'ஹாஷிமி' யாக—இரத்த பந்தத்தால் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமானவர்களாகவும் இருந்தார்கள்.

அந்த இருவரைத் தவிர்த்த—உமர் (ரலி) அவர்களால் தேர்வுக்கென அறிவிக்கப்பட்ட — மற்ற நால்வரும் கூட மாநபி (ஸல்) அவர்களின் மற்றத் தோழர்கள் அனைவரையும் விட மேலான வரிசையுடையவர்களாயினும், ஹழ்ரத் உதுமான், அலீ [ரலி] ஆகிய இருவருள் ஒருவராயினும் இருக்க வேறொருவர் தலைமை ஏற்பதை மற்ற தோழர்களோ, அவர்களைத் துயர்ந்தவர்களோ மட்டுமின்றி, அந்நால்வரிலும் கூட எவராலும் எண்ணியும் பார்க்க ஒப்பவில்லை. அந்நிலையில் அந்நால்வரும் ஒருவர் பின் ஒருவராக, தங்கள் உரிமையை விட்டுக் கொடுத்தவர்களாக தேர்விலிருந்து விலகிக் கொண்டார்கள். இனி கலீஃபா ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களா அல்லது ஹழ்ரத் அலீ [ரலி] அவர்களா என்பதே தெரிய வேண்டியிருந்தது. முடிவு காணும் பொறுப்பு ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் [ரலி] அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் [ரலி] அவர்கள் மக்கள் கருத்துக்களை ஆய்ந்தறிய பல வழிகளில் முயன்று கொண்டிருந்தார்கள். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களாகட்டும் ஹழ்ரத் அலீ [ரலி] அவர்களாகட்டும் கிலாஃபத்தின் தேவையோ, அதிகாரத்தின் ஆவலோ அற்ற சீலமை பெற்றவர்களாக விளங்கிய நிலையிலும், உமையாக் கோத்திரத்தார் எப்படியும் தங்களைச் சார்ந்த ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களையே கலீஃபாவாக்கி, இழந்த தங்கள் செல்வாக்கை மீட்டிட வேண்டும் என முழு மூச்சுடன் இயங்கினார்கள். அந்நிலையில் ஹாஷிம் குடும்பத்தவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் ஹழ்ரத் அலீ [ரலி] அவர்களையே கலீஃபாவாகத் தேர்ந்தெடுப்பதில் முனைந்து செயல்பட்டதில் வியப்பில்லை.

மூன்று பகல்களும் மூன்று இரவுகளுமாக மக்களிடையே உலவி அவர்களின் மனோபாவங்களை ஆய்ந்த போது ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களுக்கு அதிகமானவர்களின் கவனம் ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களின் புறமே சார்ந்திருப்பது தெரியலாயிற்று. ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்கள் தங்கள் உற்றார் உறவினர்கள் பால் கொண்டிருந்த பாசம், ஊராரின் துயர்

களைய உள்ளத் தாராளம் கொண்டிருந்த அவர்களின் பந்தம் போன்றவற்றோடு, இயல்பிலேயே அவர்களிடமிருந்த மென்மையும் அதற்குக் காரணங்களாக இருந்திருக்கக் கூடும்.

முடிவு காண எக்காரணம்கொண்டும்மூன்றுநாட்களுக்கு மேல் ஆகலாகாதென முந்திய கலீஃபா அவர்கள் கூறிச் சென்றிருந்தார்கள். அதன்படியே ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் [ரலி] அவர்கள் நான்காம் நாள் காலை பள்ளியில் கூடியிருந்த மக்கள் திரள் முன்னே ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களையே கலீஃபாவாக அறிவித்து, தாமே முதலாவதாக அவர்களின் கரம் பற்றி பிரமாணம் செய்தனர். அவ்வறிவிப்பால் ஹழ்ரத் அலீ [ரலி] அவர்கள் சார்ந்திருந்த ஹாஷிம் குடும்பத்தவர்களிடையே ஒரு சலசலப்பு தோன்றவே செய்தது. என்றாலும் விருப்பு, வெறுப்புகளின் எவ்விதச் சலனமுமற்ற அவ்வருள் மனச் செம்மலே விரைந்து ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களின் கரம் பற்றிப் பிரமாணம் செய்து அச்சலசலப்பினை அடங்கி விடச் செய்தார்கள்.

பிரமாணங்கள் முடிந்து மேடையேறிய கலீஃபா அவர்கள் 'அல்ஹம்துலில்லாஹ்' என இறைவனைப் புகழ்ந்ததோடு நின்றார்கள். செயல் முறையில் நன்மைகளைத் தேடுவதிலேயே ஈடுபாடு கொண்டிருந்த அவர்களுக்கு நாவுரையாற்றிப் பழக்கமில்லை, அதனாலேயே தயக்கம் அவர்களைத் தடுத்தது. ''மக்களே! புரவி மீது புதிதாக ஏறுபவன் படக் கூடிய சங்கடம் உங்களுக்குப் புரியாத ஒன்றல்ல. நான் உரையாற்ற பழக்கம் பெற்றவனுமல்லன். விரைவில் அல்லாஹ் எனக்கு அந்த அறிவைத் தருவான். அல்லாஹ் நாடினால் நாளை உங்கள் முன் முறையோடு உரையாற்றுவேன்" எனக் கூறியவர்களாக கலீஃபா அவர்கள் மேடையினின்றும் இறங்கி விட்டார்கள்.

கலீஃபா உதுமான் [ரலி] அவர்கள் கொண்டிருந்த நாண உணர்வே அந்த முதல் நாளன்று அவர்களின் நாவினைக் கட்டுப்படுத்தி விட்டது. மறு நாள் மக்களைச் சந்தித்த அவர்கள் ஞானம் நிறைந்த நல்லதோர் உரை நிகழ்த்தினார்கள்.

அல்லாஹ்வைப் புகழ்ந்து, அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களை வாழ்த்திப் பின்னர்,

''என் மக்களே! என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இப்பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். ஐயமின்றி நான் எனக்கு முன் சென்றவர்களைத் தொடர்பவனேயன்றி சுயமே தனி வழி காண்பவனல்லன். அல்லாஹ்வுக்கே அஞ்சிக் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். அல்லாஹ்வுக்கு அஞ்சுவதே இலாபந் தரக் கூடிய ஒன்றாக இருக்கிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலகம் கை மாறி விடக் கூடிய ஒரு வீடாக இருக்கிறது. நம்முடைய வாழ்நாளோ நிலையற்றதாக இருக்கிறது. மறுமையின் பேறுகளுக்கு இவ்வுலகம் எந்த ஒரு விலையுமே ஆகாது. இதன் சுகபோகங்கள் நிலையானவையும் அல்ல. இதன் சிரமங்களும் சோதனைகளும் நீடித்திருப்பவையுமல்ல. அற்பமான இவ்வுலகின் ஆடம்பரப் பகட்டுகள் உங்களை வஞ்சித்து விடக் கூடாதே என நான் அஞ்சுகிறேன். நிர்மலமான உங்கள் மார்க்கம் எந்த ஊடுருவலுக்கும் இடமளித்து விடக் கூடாதே என நான் கவலையுறுகிறேன்.

மூன்று விஷயங்கள் உங்களிடையே குழப்பங்களையும் வழிகேடுகளையும் தோற்றுவிக்காதிருக்கவே மாட்டா என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டி எச்சரிக்கின்றேன்.

1. செல்வத்தின் பெருக்கமும் சுகபோகங்களின் தேட்டமும்.

2. கட்டுப்பாடற்ற கீழ்த்தரமான பெண்டிர் தொடர்பு.

3. திருமறையை ஓதுவதில் மேற்கொள்ளப்படும் மாறுபாடான உச்சாடன முறைகள் — ஆகியவையே அவை. முஸ்லிம்களாகிய நீங்கள் ஒரு கட்டுப்பாட்டிற்குட்பட்ட சமூகத்தினராவீர்கள். அந்தக் கட்டுப்பாட்டையே மற்றவர்களுக்கும் கற்பிக்க நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். உங்களை நான் வேண்டுவதெல்லாம் மார்க்கத்தை மனத்தூய்மையுடன் பேணுங்கள். அதனை உண்மை

யோடேயே நிலைநிறுத்துங்கள். உங்களிடையே உள்ளன்பும் ஒற்றுமையும் நிலவச் செய்யுங்கள். வரம்புகளைப் பேணிக் காருங்கள். அல்லாஹ்வின் கோபத்திற்காளாகாமல் வாழ வழி தேடுங்கள். மரணம் எந்தக் காலையிலோ மாலையிலோ உங்களை வந்தடையலாம். உங்களை அது வந்தணைக்கு முன்பாக நன்மைகளைத் தேடிக் கொள்வதில் விரைந்து நில்லுங்கள். அறிவுடையோர்களில் மேலானவன் தன் செயல்களைப் பற்றி சிந்திப்பவனே! மறுமைக்கான தேவையை வாழ்நாளில் தேடிக் கொள்பவனே'' என்றார்கள் கலீஃபா.



கலீஃபா வாழ்க்கை

பதவியேற்ற புதிய கலீஃபாவின் முன் முதன் முதலாகச் சோதனையாகவே வந்து நின்றது ஹழ்லரத் உபைதுல் லாஹ் [ரலி] அவர்களின் வழக்கு. ஹழ்லரத் உபைதுல்லாஹ் [ரலி] மரணித்த கலீஃபா ஹழ்லரத் உமர் [ரலி] அவர்களின் இளைய மகன் ஆவார்; மிகச் சிறந்த மல்லராகவும், போர் ஆற்றல் மிக்கவராகவும் திகழ்ந்தார். அன்னவருக்கும் ஹழ்லரத் அப்துர் ரஹ்மான் இப்னு அபூபக்கர் [ரலி] அவர் களுக்குமிடையே நெருக்கமான தோழமை இருந்தது. கலீஃபா உமர் (ரலி) அவர்களின் கொலையில் குற்றவாளியாக வெறியன் ஃபைரோஸ் மட்டுமேயல்லாமல் பாரஸீக ஹர் மூஸானும் கிருஸ்துவ ஜஃபீனாவும் அவனோடு சதி சூழ்ந் தார்கள் என்ற உண்மை ஹழ்லரத் அப்துர் ரஹ்மான் இப்னு அபூபக்கர் [ரலி] அவர்கள் மூலமே வெளிப்பட்டது. கலீஃபா உமர் [ரலி] அவர்களின் உயிர் பிரியும் வரை உள் ளுக்குள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்த ஹழ்லரத் உபை துல்லாஹ் [ரலி] தம் தந்தையரின் உடல் அடக்கம் செய்யப் பட்ட மறுகணமே வாளோடு விரைந்து சென்று ஹர்மூஸா னையும் கொன்று விட்டனர். மேலும் விபரீதங்கள் வளரா மல் ஹழ்லரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் [ரலி] அவர்கள் பாய்ந்து ஹழ்லரத் உபைதுல்லாஹ் [ரலி] அவர்களின் வாளைப் பறித்துக் கொண்டு அவரைச் சிறைப்படுத்தியும் விட்டனர். அச்சம்பவம் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

'கொலைக்குப் பழி தீர்க்க இஸ்லாம் அனுமதித்துள்ள போதிலும் சமூகத்தில் ஓர் அமைப்பு உண்டாயிருக்கையில் சட்டத்தைத் தம் கரமேந்தி விட்ட ஹழ்லரத் உபைதுல் லாஹ் [ரலி] ஒரு குற்றவாளியே'' என அவர்கள் பேசலா யினர்.

''கலீஃபா உமர் [ரலி] அவர்களின் படித்தரம் எவ்வளவு தான் உயர்ந்ததாயினும், அவர்களின் கொலைக்குப் பிரதி யாக எந்த அநீதியும் இழைக்கப்பட்டு விடக் கூடாது. ''கொலை செய்தவன் சுயேச்சை உடையவனாயின்

கூயேச்சையுடைய [அ]வனையே, அடிமையாயின் [அந்த] அடிமையையே, பெண்ணாயின் அந்தப் பெண்ணையே நீங்கள் கொலை செய்து விடுங்கள்'' என்றே திருக் குர்ஆன் [2 : 178] கூறுகிறது. ஹழ்லரத் உபைதுல்லாஹ் தந்தையின் கொலையாளியையும் கொல்லவில்லை. அவரால் கொல்லப்பட்ட ஹர்முஸானும் நேரிடையாகக் கொலையில் சம்பந்தப்படவில்லை. கொலைக்கான சதியில் மற்ற இருவர் ஈடுபட்டிருந்ததாகக் கூறும் ஹழ்லரத் அப்துர் ரஹ்மான் இப்னு அபூபக்கர் (ரலி) மிக உயர்ந்த நபிமணித் தோழரே. ஆயினும் குற்றத்தை நிரூபிக்க சட்டம் கேட்கும் இரண்டாம் சாட்சி எங்கே? விசாரணைக்கு முன் அவசரப் பட்டு விட்ட ஹழ்லரத் உபைதுல்லாஹ் கொல்லப்பட வேண்டியவரே'' என்றெல்லாம் மக்கள் தர்க்கிக்கலாயினர்.

முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் பலரும் திகைத்தனர். மக்களின் நலன் காத்த மேலான கலீஃபா ஸையிதினா உமர்—அல்—ஃபாரூக் (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட சோகம் எந்த ஓர் உள்ளத்திலும் சற்றுமே குறையாத நிலையில் இன்று அவர்களின் மகனும் கொல்லப்படுவதா?—கொல்லப்பட்ட கலீஃபாவின் உயிர் ஒரு தட்டிலும், ஓராயிரம் ஹர்முஸான்களின் உயிர்கள் மறு தட்டிலுமாக வைத்து நிறுக்கப்பட்ட மக்களின் மனத் துலாக்கோல்களில் அழுத்தங்கொண்டு இறங்கி நின்ற கலீஃபா உமர் [ரலி] அவர்களின் உயிரே மக்களின் உள்ளங்களை வினா தொடுத்து கிளறிக் கொண்டிருந்தது.

அதே சமயம், கலீஃபா அவர்கள் சற்றே ஊசலாடும் தங்கள் உயிரோடு இன்று தங்கியிருப்பார்களானால், நீதியைச் சற்றேனும் வளைய விடுவார்களா? என்று சிந்திப்பவர்களும் அவர்களிடையே இருந்தனர். புதிய கலீஃபாவே இதற்கு முடிவு காணட்டும் எனக் காத்திருந்தார்கள் அனைவரும்.

கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் அவை கூடியது. மாநபித் தோழர்களும் வந்து கூடினர். மக்களும் திரண்டிருந்தனர். ஹழ்லரத் உபைதுல்லாஹ் [ரலி] அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். கலீஃபா அவர்கள் முஹா

ஜிர்களுடையவும், அன்ஸார்களுடையவும் கருத்துக்களைக் கேட்டறிந்தார்கள். பல கருத்துக்களிடையே ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் 'சட்டப்படி உபைதுல்லாஹ் (ரலி) கொல்லப்பட வேண்டியவர்களே' எனக் கூறி விட்டார்கள். முஹாஜிர்களிடையிலிருந்து கவலை சூழ்ந்த கருத்துக்கள் வெளியாயின.

''அமீரல் முஉமினீன்! மரணித்த கலீஃபா அவர்களின் கொலை உபைதுல்லாஹ்வின் இதயத்தை எவ்விதம் தாக்கியிருக்கும் என்பதை ஆழ்ந்து உணர்ந்தோமேயானால், சரியான ஒரு தீர்ப்புக்கு வர நமக்குச் சிரமம் ஏற்படாது. சமுதாயத்தின் தலைமகனார் நேற்று கொல்லப்பட்டார்கள். அவரின் திருமகனார்-சட்டத்தின் வருகைக்காக தம் உணர்வுகளுக்குக் கட்டிட்டுக் காத்திருக்கவில்லை என்பதற்காகவே—இன்று கொல்லப்படுவதா?'' என்று ஒரு குரல் ஏக்கத்துடன் கேட்டது.

இடையே எழுந்து நின்ற ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் ''அமீரல் முஉமினீன்! தாங்கள் கிலாஃபத்தை ஏற்பதற்கு முன்பே நடந்து விட்ட இச்சம்பவத்தில் நீதி வழங்கும் பொறுப்பைத் தங்கள் கரமேற்றிருப்பது தங்களுக்கு ஒரு சோதனையே ஆகும். சமுதாயம் தங்களை நிந்திக்காதவாறு தாங்கள் நல்லதொரு தீர்ப்பு காண வேண்டும்'' எனக் கூறி அமர்ந்து விட்டனர்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் கலீஃபா அவர்கள் பேசலானார்கள்.

சட்டத்தின்படி உபைதுல்லாஹ் குற்றவாளியே. ஆயினும் கொலைக்குப் பகரமாக உபைதுல்லாஹ்வின் உயிரைப் பலி கொள்ளவோ அல்லது கொல்லப்பட்ட உயிருக்குப் பகரமாக அவரிடமிருந்து நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளவோ கொல்லப்பட்டவரின் வாரிசுகளுக்கும் இஸ்லாம் உரிமையளிக்கிறது. கொல்லப்பட்ட ஹர்முஸானுடைய வாரிசாக இங்கு எவரும் இல்லாத நிலையில் கிலாஃபத்தின் பொறுப்பேற்றுள்ள நானே அக்குடிமகனின் வாரிசாவேன்.

எனவே நான் உபைதுல்லாஹ்விடமிருந்து அவரால் கொல்லப்பட்ட ஹுர்முஸானின் உயிருக்குப் பகரமாக ஈட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு உபைதுல்லாஹ்வை விடுவிக்கச் சித்தமாக இருக்கிறேன்—எனக் கலீஃபா அவர்கள் வழங்கிய தீர்ப்பை மக்கள் மன்றம் மகிழ்ச்சியோடு ஏற்றது.

அக்காலத்தில் ஓர் உயிருக்குப் பகரமாக ஓராயிரம் தங்கக் காசுகள் அல்லது பன்னீராயிரம் வெள்ளிக் காசுகள் ஈட்டுப் பணமாகச் செலுத்துவது வழக்கமாக இருந்தது. அவ்வாறு செலுத்த ஹழ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் போதிய பொருளாதார வசதியற்றிருந்தனர். அதனால் கலீஃபா அவர்களே தங்கள் உடைமையிலிருந்து ஓராயிரம் தங்கக் காசுகளைக் கருவூலத்தில் சேர்ப்பித்து ஹழ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களை விடுவித்தார்கள். அவ்வாறாகக் கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் தம் ஆழ்ந்த ஞானத்தாலும், இதயத் தயாளத்தாலும் ஒரு கொலையோடேயே துவங்கப்படவிருந்த துர்ப்பேற்றிலிருந்து தம் கிலாஃபத்தைக் காத்துக் கொண்டார்கள்.

அரசியல் நிர்வாகம்

ஈரானியர்களிடமிருந்தும் ரோமானியர்களிடமிருந்தும் வெல்லப்பட்ட நிலப் பரப்புகள் அனைத்தையும் உள்ளடக்கி, பாதுகாப்பான எல்லைகளைக் கொண்ட ஒரு சாம்ராஜ்யத்தையே நிறுவி, கலீஃபா உமர் (ரலி) அவர்கள் நிரந்தரச் சட்டங்களைக் கொண்ட ஓர் அரசியல் அமைப்பையும் உருவான நிர்வாகத்தையும் வகுத்தளித்துச் சென்றிருந்தார்கள். தொடர்ந்து அதனை வழி நடத்திச் செல்ல கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்கு ஆரம்ப காலத்தில் எவ்விதச் சிரமமும் இருக்கவில்லை. ஏறத்தாழ ஓராண்டு காலம் எந்த அரசியல் மாறுதலுமின்றி நிர்வாகங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன—கூஃபாவின் ஆளுநரான ஹழ்ரத் முகைரா இப்னு ஷுஅபா (ரலி) அவர்களுக்குப் பகரமாக ஹழ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அனுப்பப்பட்டதைத் தவிர. அதுவும் முந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தம் அந்திம காலத்

தில் கூறிச் சென்றபடியே அல்லாமல், ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் தம் உத்திப்பாகச் செய்ததுமல்ல.

மதீனாவில் நிர்வாகம் அமைதியாகத் தொடர்ந்த நிலையிலும் பரந்தகன்ற இஸ்லாமிய நிலப் பரப்பில் கலீஃபா உதுமான் [ரலி] அவர்களுக்குப் பெரும் பொறுப்பும் பணி களும் காத்திருந்தன. வெல்லப்பட்ட நிலப் பரப்புகளில் இஸ் லாத்தைப் பூரணமாக ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களும் இருந்தனர். 'ஜிஸ்யா' உடன்பாட்டின் மூலம் தத்தம் மார்க் கங்களிலேயே தொடர்ந்து வாழ அனுமதிக்கப் பெற்றவர் களே அதிகம் இருந்தனர்.

لَآ إِكْرَاهَ فِى ٱلدِّينِ ۖ

''மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை" என மாமறை தந்த [2 : 256] உரிமையை மனித சமுதாயத்துக்கு வழங்குவதில் கலீஃபா உமர் [ரலி] அவர்கள் எள்ளளவும் குறை வைக்க வில்லை. அந்த மரியாதையைப் பேணிக் கொள்ளும் நாகரி கப் பக்குவமற்ற துரோகிகள் தங்கள் வாக்குறுதிகளை மீறி முஸ்லிம்களை இடறி விட எடுத்த முயற்சிகள் கலீஃபா உமர் [ரலி] அவர்களின் காலத்திலேயே பல. எனினும் அக் கலீஃபா அவர்களின் வன்கரங்கள் அவர்களின் மென்னி களைப் பிடித்து அடங்கச் செய்திருந்தன.

ஒரு தலைமையின் மாற்றத்துக்காகவே காத்திருந்த அச் சந்தர்ப்பவாதக் காளான்கள், ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற உடனேயே பூத்துக் கிளம்பத் துவங்கி விட்டன. மூலைக்கொன்றாய் முளைத்தெழுந்த கலகங்கள் அனைத்தையும் அடக்கி, புதிய வெற்றிகளின் மூலம் ஆட்சிகளின் எல்லைகள் மேலும் விரிவடையச் செய்த தோடேயன்றி மக்களின் வாழ்க்கையையும் செப்பனிட்ட கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் ஆற்றலைப் போற் றலே தகுதியாகும்.

கிலாஃபத்தை ஏற்ற கலீஃபா அவர்களுக்குக் கிடைத்த முதற்செய்தி ஹமதான்வாசிகள் கலகக் கொடி தூக்கி விட்டார்கள் என்பதே. கலீஃபா அவர்கள், பஸராவின்

அப்போதைய ஆளுநராக இருந்த ஹழ்லரத் அபூ மூஸா அஷ் அரீ [ரலி] அவர்களுக்கு அக்கலகத்தைச் சென்று அடக்கும் படி எழுதினார்கள். அக்கட்டளையேற்று ஹழ்லரத் அபூ மூஸா [ரலி] அவர்களும் ஒரு படையோடு சென்று ஹமதானின் கலகங்களை அடக்கி விட்டார்கள். இது கிலாஃபத்தின் ஆரம்ப ஆண்டிலேயே நடந்து விட்ட சம்பவமாகும்.

அவ்வாண்டு மதீனாவில் வீசிய கடும் வெயிலின் காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்களின் நாசிகளெல்லாம் புண்ணாகி இரத்தப் பெருக்கெடுத்து ஒழுகலாயின. ஏறத்தாழ மூன்று மாத காலம் அலைக்கழித்த அவ் வேதனையிலிருந்து கலீஃபா அவர்களும் தப்ப முடியவில்லை. அதன் காரணமாகவே அவர்கள் அவ்வாண்டு ஹஜ்ஜுக்கும் செல்ல முடியாதாகி விட்டது. கலீஃபா அவர்கள் தமக்குப் பகரமாக ஹழ்லரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் [ரலி] அவர்களையே ஹஜ்ஜுடைத் தலைவராக்கி அரஃபாவுக்கு அனுப்பி வைத்தார்கள். ஒருவாறாக ஹிஜ்ரி 24-ம் ஆண்டு அமைதியுடன் கழிந்து புத்தாண்டும் பிறந்தது.

எகிப்தில் இஸ்லாம்

முந்தைய கலீஃபா உமர் [ரலி] அவர்களின் மரணத்தையடுத்து, முன்னர் அவர்களிடம் தோற்றோடியிருந்த ஈரானியர்களுக்கும், ரோமானியர்களுக்கும் புதியதொரு துணிவு பிறந்தது. அதனைக் குற்றமெனக் கருதுவதற்கில்லை. முற்றிலும் புதியதாகவே பிறந்த இஸ்லாமியக் குடியரசு இனி கலகலத்து விடும் என அவர்களனைவரும் கண்ட ஆரோக்கியமற்ற கனவுகளுக்கும் நியாயம் இருக்கத்தான் செய்தது. ஏனெனில் எந்த ஒரு தனி மனிதனின் திறனாலும் உருவாக்கப்பட்ட ஆட்சி அத்தலைமுறை புரண்ட பின்னரும் நிலைத்து நின்ற முன்னுதாரணத்தை உலகம் அதற்கு முன் கண்டதேயில்லை. படை நடத்திப் பேரரசுகளை நிறுவிய மாவீரர்கள் மறைந்ததோடேயே அவர்கள் நிறுவிய ஆதிக்கங்களும் மறைந்து போன குறிப்பேடுகளைத்

தான் அதுவரையிலான வரலாறு அவர்களுக்குக் காட்டி நின்றது. ஆனால் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களால் தொடரப்பட்ட அடுத்த தலைமுறையும் ஐயமின்றி வழி காட்டப் பெற்றதே—வளம் அருளப் பெற்றதே என்பதற்குச் சான்று கூறுமாப்போன்று வெற்றிகள் சேர்ந்து இஸ்லாமிய எல்லைகளை விரிவடையச் செய்தன.

பாரஸீக, ஸிரிய நிலப்பரப்புகளில் மட்டுமின்றி நாகரிக வளம் கொண்ட எகிப்தியர்களிடையிலும் இஸ்லாம் சோபிதங் கொண்டிலங்கியது. அதன் ஆளுநராக ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். முந்தைய கலீஃபாக்களின் காலங்களில் நடைபெற்ற போர்களில் ஹழ்ரத் காலித் ஸைஃபுல்லாஹ் (ரலி) அவர்களையடுத்துத் துணிவுக்கு அணிகூட்டிய இரு பெரும் தளநாயகர்களில் ஒருவரே ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள். மற்றொருவர் கூஃபாவின் ஆளுநராக அனுப்பப்பட்ட ஹழ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) ஆவர்.

ஹிஜ்ரி 20-ம் ஆண்டில் எகிப்தின் புறம் சென்ற மகாத் தளபதி ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 22க்குள்ளாகவே எகிப்தையும் அலெக்ஸாண்டிரியாவையும் வென்று திரிப்போலியை அடைந்தார். திரிப்போலியின் மிக உயரமான கோட்டைகளை அடைத்து அதன் பெரும் படைக் கூட்டம் ஒரு மாதத்துக்கும் மேலாக முஸ்லிம்களைக் காத்திருக்க வைத்தது. என்றாலும் போதிய முன்னேற்பாடுகளைச் செய்துக் கொள்ளத் தவறிய திரிப்போலியர்களால் மேற்கொண்டு முற்றுகையைத் தாங்க முடியாதாகி விட்டது. இறுதியில் கடல் மார்க்கமாக அடர்ந்து கோட்டையை வெற்றி கொண்ட ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அதன் மருங்கில் வாழ்ந்த மக்களையும் பணிய வைத்து எகிப்தின் எல்லைக்குத் திரும்பினார்கள்.

அடுத்து ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் தூனிஸியாவையும் தொட்டுப் பார்க்கத் துடித்தாலும் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் அதுவரை வெற்றி கொள்ளப்

பட்ட எல்லையைத் தாண்டிச் செல்ல இஸ்லாமியப் படைகளுக்கு அனுமதி வழங்கவில்லை. புதிய பூமிகளில் அடி எடுத்து வைப்பதற்கு முன்னதாக வெல்லப்பட்ட எல்லைகளுக்குள் முஸ்லிம்கள் தங்கள் வல்லமையை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில் கலீஃபா அவர்கள் கவனம் கொண்டார்கள். ஓர் அளவான படையுடனேயே எகிப்தின் புறம் சென்ற ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் புதிய பகுதிகளின் புறம் விரவிச் செல்வது படையின் வலிமையைக் குன்றச் செய்து விடும் என கலீஃபா அவர்கள் அஞ்சினார்கள். ரோமர்கள் தாங்கள் இழந்து விட்ட வளமிக்க எகிப்தின் ஆதிக்கத்தை மிக எளிதாக மறந்து விட மாட்டார்கள் என்பது கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்குத் தெரிந்தே இருந்தது. எகிப்தைக் கடந்து பாலை நிலப் பகுதிகளின் புறம் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் சென்று விட்ட செய்தியறிந்து மீண்டும் எகிப்துக்குள் நுழைய அதனை விட்டோடிய ரோமர்கள் திட்டமிடுவது பற்றி கலீஃபா அவர்களுக்கு எட்டிய செய்திகளே அவர்களை முன்னெச்சரிக்கை கொள்ளச் செய்தன.

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் கணிப்பின்படியே எகிப்தின் இழப்பை ரோமானிய மன்னரால் எளிதில் ஜீரணிக்க முடியவில்லை. ஸிரியாவை இழந்த துயரமே ஆற்றொணாது வருத்தி வந்த நிலையில் முஸ்லிம்களிடம் அலெக்ஸாண்டிரியாவும் வீழ்ந்த செய்தி பேரிடியாய்த் தாக்கி மன்னர் ஹிராக்குலியஸை பலி கொண்டே விட்டது. அடுத்து முடி சூடிய கான்ஸ்டன்டைனோ கலீஃபா உமர் (ரலி) அவர்களின் மரணத்தால் மீண்டும் எகிப்தின் வாசல் தமக்குத் திறந்து கொண்டது போன்ற கனவுலகில் சஞ்சரித்தாலும் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் திடுக்கம் தந்த தயக்கத்தையும் அவரால் தட்டி விலக்க முடியவில்லை. அந்நிலையில் தேனாய் ஒரு செய்தி அலெக்ஸாண்டிரியாவிலிருந்து அவருக்கு வந்தது-ஹழ்லரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் பதவி நீங்கி எகிப்தை விட்டும் சென்று விட்டதாக.

பதவி நீங்கக் காரணம்

ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற பொழுது ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி] அவர்களே எகிப்தின் ஆளுநராகத் தொடர்ந்து இருந்து வந்தார்கள். 'ஸஈத்' என்ற துறைமுகப் பகுதி மட்டும் அப்துல்லாஹ் இப்னு ஸஅத் அபூ ஸர்ராஹ் என்பவரின் பொறுப்பில் இருந்து வந்தது. அந்த இருவருக்குமிடையே கருத்தொற்றுமை இல்லாதிருந்தது. ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி] அவர்கள் வெல்லப்பட்ட பகுதிகளின் முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தினார்கள். புதிய மக்களிடையே மிகத் தாராளத் தன்மையோடு பழகி அவர்களின் உள்ளங்களை இஸ்லாத்தின் பால் ஈர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் தாராளத் தன்மையால் எகிப்தில் தீர்வை வருவாய் குறைவடைகிறது என்பது அபூ ஸர்ராஹ்வின் குறைபாடு. அபூ ஸர்ராஹ் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை இடுகிறார் என்பது ஹழ்லரத் அம்ரு [ரலி] அவர்களின் குற்றச்சாட்டு. இந்த முறையீடுகள் ஹழ்லரத் உமர் [ரலி] அவர்களின் கிலாஃபத்தின் போதே இருந்து வந்தவை.

ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற மறு ஆண்டில் மதீனாவுக்கு அனுப்பப்படும் எகிப்தின் தீர்வையை அதிகப்படுத்தவும் கவனம் செலுத்தும்படியாக ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி] அவர்களுக்கு எழுதினார்கள். ஹழ்லரத் அம்ரு [ரலி] அவர்கள் 'பசு இதற்கு மேல் அதிகமாக பால் கறக்காது' என்று ஒரே வரியில் கலீஃபா அவர்களுக்கு பதில் எழுதி விட்டார்கள். அப்பதில் கண்டு பொருத்தம் கொள்ளாத கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அம்ரு [ரலி] அவர்களை மதீனாவுக்கு வரும்படி அழைத்துக் கொண்டார்கள். எகிப்தின் முழு நிர்வாகமும் அபூ ஸர்ராஹ்விடம் ஒப்படைக்கப்பட்டது.

மீண்டும் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி)

அபூ ஸர்ராஹ்வும் திறன் மிக்க படை நாயகராகவே இருந்தார். என்றாலும் ஹழ்லரத் அம்ரு [ரலி] அவர்களைப்

போன்ற நிர்வாக அனுபவம் படைத்தவராக அவர் இல்லை. மக்களில் பலதரப்பட்டவர்களையும் பொருத்த முற அணைத்துச் செல்லும் பக்குவம் அவருக்குப் போதா மலே இருந்தது. எகிப்தையும் அலெக்ஸாண்டிரியாவையும் ரோமர்கள் இழந்து சென்று விட்டாலும் அங்கு முஸ்லிம் களின் நடைமுறைகளை ஆய்ந்து அவர்களுக்கு அவ்வப் போது அறிவிக்க ஒரு துரோகக் கூட்டம் இருக்கவே செய் தது. அபூ ஸர்ராஹ்வின் பொறுப்பில் எகிப்து ஒப்படைக் கப்பட்ட பின் மக்களிடையே இலேசான அதிருப்தி வெளிப் படக் கண்ட அந்துரோகிகளே ரோமானிய மன்னர் கான்ஸ் டன்டைனுக்கு எழுதினார்கள் — அலெக்ஸாண்டிரியாவில் போராடும் வீரர்கள் ஓராயிரம் பேர்களுக்கு அதிகமாக இல்லை. மக்களோ நம்முடைய நாவாய்களைக் கண்ட துமே தலைண்டு விடுவார்கள்' என்று.

மீண்டும் எகிப்தைப் பிடிக்க மனப்பால் குடித்துக் கொண்டிருந்த மன்னர் கான்ஸ்டன்டைனுக்கு அக்கடிதமே போதுமானதாக இருந்தது. முந்நூறு நாவாய்களைத் தம் தளகர்த்தனிடம் ஒப்படைத்து கடல் மார்க்கமாகவே அலெக்ஸாண்டிரியாவில் கரையிறங்க ஏவி அனுப்பினார். அலெக்ஸாண்டிரியாவில் தங்கியிருந்த அரபுகளோ கடல் மார்க்கமாக வந்த அவ்வாபத்தினைப் பற்றி எண்ணியும் பார்த்தவர்களல்லர். அதுவரை அவர்களிடம் எந்தக் கடற் படையும் இருந்ததுமில்லை. எனவே, ரோமானியர் வெகு எளிதாக அலெக்ஸாண்டிரியாவில் கரையிறங்கினர். அங்கி ருந்த ரோமானியக் கிருஸ்துவர்களின் உதவியோடு நகரைக் கைப்பற்றினர்.

அலெக்ஸாண்டிரியாவில் காலூன்றித் தொடர்ந்து அவர்கள் எகிப்தின் உட்பகுதியில் நுழையவும் முயன்றனர். ஆயினும் முன்னரே அவர்களின் கொள்ளைகளிலும் கொடு மைகளிலும் அல்லல்பட்டு முஸ்லிம்களின் வருகைக்குப் பின்னரே அவர்களின் நெறி நீதியால் நிம்மதி கொண்டி ருந்த எகிப்தியர்கள் இப்போது இஸ்லாமிய ஆட்சியாளர் களுக்கு தங்களால் ஆன முழு ஒத்துழைப்பையும் தர முன் வந்தனர். ஆனால் ஹழ்ரத் அம்ரு [ரலி] அவர்களால்

மட்டுமே ரோமர்களைத் தோற்கடித்து அலெக்ஸாண்டிரியாவையும் எளிதில் மீட்க முடியும் என அவர்கள் உறுதியாக நம்பினர். அதனையே அவர்கள் கலீஃபா அவர்களுக்கும் எழுதினர். கலீஃபா அவர்களும் அதற்கு இசைந்து ஹழ்ரத் அம்ரு (ரலி) அவர்களை மீண்டும் எகிப்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

எகிப்துக்கு வந்த ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ்,(ரலி) அவர்கள் மீண்டும் 15000 வீரர்களுக்குத் தலைமையேற்று வெகு திறனாக ரோமர்களைத் தோற்கடித்து கலகத்தை ஒடுக்கி ஹிஜ்ரி 25-ல் (645) மீண்டும் அலெக்ஸாண்டிரியாவைக் கைப்பற்றினார்கள்.

இப்போரில் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் காட்டிய வீரம் அதியற்புதமானது. இறுதி நாளன்று போர் வெகு மும்முரமாக நடந்தது. நீண்ட நேரமாக இடையறாதுத் தொடந்த போரினால் ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்களின் புரவியும் களைத்து விட்டது. தம் வாள் வீச்சின் வேகத்துக்குச் சரியாகச்சுழன்று வரக் களைத்து அப்புரவி திணறுவது கண்ட ஹழ்லரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் ஆவேசங் கொண்டவர்களாக ஒரே வெட்டில் புரவியின் கழுத்தை வெட்டிச் சாய்த்து, பாய்ந்து குதித்து, கால் நடையாகவே எதிரிகளின் அணிகளைப் பிளந்து கொண்டு புகுந்து முன்னேறினார்கள். அக்காட்சியால் ஏற்பட்ட திகிலிலேயே எதிரிகள் சிதறி ஓடலானார்கள்.

போர் முடிந்து அதன் வெற்றிச் செய்தியை அறிந்த கலீஃபா, ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்களையே எகிப்தின் ஆளுநராக நீடிக்கச் செய்தார்கள். வருவாய்த் துறையை மட்டும் அபூ ஸர்ராஹ் மேற்கொள்ளட்டும் என உத்தரவிட்டார்கள். அதனை ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்களின் உள்ளம் ஏற்கவில்லை. தம் நிர்வாகத்தில் மற்றவர்களின் தலையீட்டைப் பொறாத அவர்கள், 'பசுவின் கொம்பை நான் பிடித்துக் கொள்ள பால் கறப்பது மற்றவரா' எனக் கலீஃபா அவர்களுக்கே கேட்டு எழுதி விட்டார்கள். கலீஃபா அவர்கள் போதுமான ஆறுதல்களை எழுதி எகிப்தின் நிர்வாகத்தை அவ்விருவரிடமே பிரித்தளித்தார்களாயினும்

அது ஒரே உறையினுள் இரு வாட்களைத் திணிக்க படும் சிரமமாகவே இருந்தது. எப்படியோ ஓராண்டு காலம் கழிந்தது. பின்னர் கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அம்ரூ (ரலி) அவர்களை பதவி நீக்கம் செய்து திரும்ப அழைத்துக் கொண்டார்களா? அல்லது ஹழ்லரத் அம்ரூ (ரலி) அவர்களே பதவி துறந்து மதீனா திரும்பி விட்டார்களா என்ப தில் கருத்து வேறுபாடு காணப்படினும் அதனால் ஹழ்லரத் அம்ரூ (ரலி) அவர்களுக்கேற்பட்ட மனக் கசப்பென்னவோ, அவர்கள் மணம் புரிந்திருந்த கலீஃபா அவர்களின் மண சகோதரியை விடுதலை செய்வதில் முடிந்தது.

எகிப்து மாகாணம் அவ்விருவரின் நிர்வாகத்தில் இருந்த இடைக்காலத்தில் திரிப்போலியர்களும் பெரும் கல கம் செய்து வெற்றியும் கண்டிருந்தனர். கலீஃபா அவர்கள் திரிபோலியை கலகக்காரர்களிடமிருந்து மீட்கக் கட்டளை யிட்டார்கள். அப்துல்லாஹ் இப்னு நாபிஇ என்பவரின் தலைமையில் ஒரு துணைப் படையையும் அனுப்பினார்கள். அபூ ஸர்ராஹ் படை நடத்திச் சென்றாராயினும் எதிரி களின் அப்போதைய நிலையைக் கவனித்துப் போரிடாமலே அவர் திரும்பி விட்டார்.

கிழக்கே நிர்வாக மாறுதல்கள்

ஹழ்லரத் அம்ரூ இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களை அழைக்க நேர்ந்ததே போல் கூஃபாவின் ஆளுநராக அனுப் பப்பட்ட ஹழ்லரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்களையும் மிகக் குறுகிய காலத்தில் திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் கலீஃபா அவர்களுக்கு ஏற்பட்டது. கூஃபாவின் ஆளுநராக அனுப்பப்பட்ட ஹழ்ல ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் பொதுக் கருவூலத்திலிருந்து ஒரு பெருந்தொகையைக் கடனாகப் பெற்றிருந்தார்கள். அதனை குறித்தக் காலத்தில் திரும்பச் செலுத்த அவர்களால் இயலாமலாகி விட்டது. அதன் காரணமாக அவர்களுக்கும் கருவூலக் காப்பாளராக அப் போதிருந்த ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது [ரலி] அவர்களுக்குமிடையே பிணக்கேற்பட்டது. அப்பிணக் கையே பெரிதாக வளர்த்தி மக்கள் அவ்விரு பெரும் நபி

மணித் தோழர்கள் மீதும் மாறி மாறி குற்றச்சாட்டுகளை கலீஃபா அவர்களிடமே கொண்டு வந்தார்கள். மக்களிடையே ஓர் அமைதியை ஏற்படுத்த, கலீஃபா அவர்கள் தம் ஆளுநரைத் திரும்ப அழைக்க வேண்டியதாயிற்று. ஹழ்லரத் ஸஅத் (ரலி) அவர்களுக்குப் பகரமாக வலீத் இப்னு உக்பா கூஃபாவின் ஆளுநராக அனுப்பப்பட்டார். அவர் கலீஃபா அவர்களின் தாய் வயிற்றில் வேறு தந்தைக்குப் பிறந்த இளவல் ஆவார். அச்சமயம் கிழக்கே ஆஜர்பைஜானில் கலகம் தோன்றி விட்டது.

ஆஜர்பைஜான், கலீஃபா உமர் [ரலி] அவர்களின் காலத்தில் புகைர் இப்னு அப்துல்லாஹ், உக்பா இப்னு ஃபர்கத் போன்ற தளகர்த்தர்களால் வெற்றி கொள்ளப்பட்ட ஒரு பகுதியாகும். அவ்வெற்றிச் செய்தியை புகைர் இப்னு அப்துல்லாஹ்விடமிருந்து பெற்ற கலீஃபா உமர் (ரலி) அவர்கள் ஸுராக்கா இப்னு அம்ரு என்பவரை பாபில், தர்பந்த் ஆகிய நகரங்களைக் கைப்பற்றுமாறு எழுதி, அவருக்கு உதவுமாறு அச்சமயம் ஜஸீராவில் இருந்த ஹபீப் இப்னு ஸலமா அல்ஃபஹ்ரீ என்பவருக்கும் கட்டளை அனுப்பினார்கள். அவ்வாறு சென்று பாபிலை வெற்றி கொண்ட ஸுராக்கா தம் படைத் தளகர்த்தர்களைப் பிரித்து ஆர்மீனியாவைச் சுற்றிலுமுள்ள நகரங்களின் புறம் அனுப்பினார்.

புகைர் இப்னு அப்துல்லாஹ் மூகானின் புறமும், ஹபீப் இப்னு ஸலமா திப்லீஸின் புறமும், ஹுதைபத்துல் யமான் (ரலி) கோகஸ் மலைப் பிரதேசங்களின் புறமும் பிரிந்து சென்று வெற்றி முழங்கினர். எவருடைய எதிர்ப்பும் இஸ்லாமிய வீரர்களிடம் எடுபடவில்லை. முஸ்லிம்கள் மேற்கு ஆர்மீனியாவிலும் இன்றைய ஜார்ஜியாவின் ஒரு பகுதியான ஐபீரியாவிலும் குடிகொண்டனர். ஹபீப் இப்னு ஸலமா திப்லீஸுடன் அதனைச் சூழ்ந்த பெரும் பெரும் நகரங்களையும் வென்றார். அச்சமயம் ஸுராக்கா மரணமடைந்து விட்டார். அவரின் பொறுப்பை அப்துர் ரஹ்மான் இப்னு ரபீஆ ஏற்றார். அவரை பாபிலின் எல்லையிலேயே தங்கி துருக்கியர்களைச் சந்திக்குமாறு கலீஃபா உமர் (ரலி) அவர்கள் எழுதினார்கள். பாபிலைக் கடந்து அவர் வடபுறமாக முன்

னேறிச் சென்றார். காஸ்பியன் கடலோரத்தில் உள்ள மலைப் பகுதிகள் பல அவரால் வெல்லப்பட்டன. கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற ஒரு போரிலேயே மரணமடைந்த அவரின் வெற்றி வரலாறு கிழக்கு ஆர்மீனியாவில் கோகஸின் வட பகுதி வரை விரிந்து நிற்கிறது.

ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களின் கிலாஃபத் துவங்கியபோது ஆஜர்பைஜானில் படைத் தளபதியாக உத்பா இப்னு ஃபர்கத் என்பவரே இருந்தார். அதன் நிர்வாகப் பொறுப்புகளையும் அக்காலத்தில் கூஃபாவின் ஆளுநரே கவனித்துக் கொள்வது வழக்கம். ஆப்பிரிக்கப் பகுதிகளில் ஹழ்ரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் அச்சம் அனைவரின் இதயங்களையும் அழுத்தி நின்றதைப் போலவே, ஈரான், இராக்கியப் பகுதிகளில் ஹழ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்களின் திடுக்கம் ஆதிக்கங்கொண்டு விளங்கியது. ஹழ்ரத் ஸஅத் (ரலி) அவர்களை மதீனாவுக்கு அழைத்துக் கொண்ட கலீஃபா அவர்கள் ஆஜர்பைஜானின் முழுப் பொறுப்பையும் கூஃபாவின் புதிய ஆளுநரான வலீத் இப்னு உக்பாவையே ஏற்கச் செய்து உக்பா இப்னு ஃபர்கதையும் மதீனாவுக்கு அழைத்துக் கொண்டார்கள். உக்பா இப்னு ஃபர்கதின் வெளியேற்றத்தை அடுத்தே ஆஜர்பைஜான் வாசிகள் கலகம் செய்யத் துவங்கினர்.

வலீத் இப்னு உக்பாவும் திறனில் குறைந்தவரல்லர். கலீஃபா உமர் [ரலி] அவர்களால் ஜஸீராவின் ஆளுநராக நியமிக்கப் பெற்று அனுபவம் பெற்றவரே. ஆஜர்பைஜான் கலகத்தை அடக்க கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் கட்டளையுடன் சென்ற அவரிடம் கலகக்காரர்கள் சரணடைந்து விட்டனர். அதனைச் சூழ்ந்த மற்ற பகுதிகளையும் வென்று, ஆங்காங்கே அதிகாரிகளை அமர்த்தி, தம் நிர்வாகத்தை வலுப் பெறச் செய்து கூஃபாவுக்கு அவர் திரும்பிக் கொண்டிருந்த சமயம் கலீஃபா அவர்களின் கடிதமொன்று காத்திருந்தது மூஸலில்—ஸல்மா இப்னு ரபீஆவின் தலைமையில் பதினாயிரம் பேர்களைக் கொண்ட ஒரு படையை ஆர்மீனியாவுக்குள் அனுப்பும்படியாக.

ரோமர்களுக்கும் பாடங்கள்

ஸிரியாவில் ஏற்பட்ட பூரணத் தோல்விக்குப் பின் சிதறிப் பிரிந்த ரோமர்களில் பலர் ஆர்மீனியாவிலும் பதுங்கிக் கிடந்தனர். ஆஜர்பைஜான் கலகங்களை ஒடுக்க முஸ்லிம் படைகள் முனைந்திருந்த சமயம் ரோமர்கள் ஆர்மீனியாவிலும் கலகக் கொடிகள் உயரச் செய்தார்கள். ஆர்மீனியாவை முதலில் வெற்றி கொண்ட ஹபீப் இப்னு ஸலமா என்ற தளகர்த்தர் அச்சமயம் ஜஸீராவில் இருந்தார். கலீஃபா அவர்களின் கட்டளைப்படி ஸிரியாவின் ஆளுநராக இருந்த ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் ஹபீப் இப்னு ஸலமாவையே ஆறாயிரம் பேர்களைக் கொண்ட படையோடு மீண்டும் ஆர்மீனியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹபீப் இப்னு ஸலமா முக்கிய நகரான காலீக்லாவை முற்றுகையிட்டு எதிரிகளின் எந்த உதவிகளும் நகரினுள் செல்லாமல் தடையிட்டார். காலீக்லாவை முக்கியத் தலமாகக் கொண்டிருந்த கலகக்காரர்கள் சரணடைந்தனர். நகர மக்களோ ஜிஸ்யா தர எப்பொழுதும் போல் சம்மதித்துக் கொண்டார்கள். ஹபீப் இப்னு ஸலமா கலகக்காரர்களை நகரை விட்டும் வெளியேற்றி விரட்டியடித்தார்.

அங்கிருந்து வெளியேறிய கலகக்காரர்கள் மூரியான் என்ற இடத்தில் பெரும்படை திரட்டி போருக்கே தயாராகிறார்கள் என்ற தகவல் கிடைத்து ஹபீப் இப்னு ஸலமா உதவிப் படையின் தேவையை கலீஃபா அவர்களுக்கும் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களுக்கும் எழுதினார். அதன் பேரில் கலீஃபா அவர்கள் வலீத் இப்னு உக்பாவுக்கு எழுதிய கட்டளையே மூஸலில் கிடைத்தது.

மூஸலில் இருந்து புறப்பட்ட ஸல்மான் இப்னு ரபீஆவின் படை வந்த சேருமுன்பாகவே ஸிரியாவிலிருந்து ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களால் அனுப்பப்பட்ட ஈராயிரம் பேர்களைக் கொண்ட ஒரு படை வந்து சேர்ந்தது. கலீஃபாவிடமிருந்து உதவி வந்து சேரும் வரை

யிலும் ஹபீப் இப்னு ஸலமாவினால் பொறுத்திருக்க முடிய வில்லை. ஸிரியாவிலிருந்து வந்த படைகளின் ஒரு பகுதியை காலிக்லாவைப் பாதுகாக்க நிறுத்தி விட்டு எஞ்சிய படைக ளோடு இரவோடிரவாகவே புறப்பட்டார்.

★ ★ ★

அந்த இரவு நேரத்தில் புறப்பட்ட அவரின் புரவி யின் கடிவாளத்தை வந்து பற்றியது ஒரு பெண்ணின் கரம், கூர்ந்து கவனித்தார் ஹபீப். வேறு யாருமல்ல. அவருடைய மனைவி உம்மு அப்துல்லாஹ் கலபிய்யாவே!

''எங்கே இந்த அகால நேரத்தில்?'' எனக் கேட்ட தம் மனைவிக்கு விடையளித்தார் ஹபீப்—மோரியானில் உள்ள ரோமர்களின் பாசறை நோக்கி. தவறினால் சுவனத்தை நோக்கியே!'' என்று.

விடைபெற்றுப் பிரிந்த ஹபீப் இப்னு ஸலமாவின் புரவி யோடு அவரின் மற்ற வீரர்கள் ஏறிய புரவிகளும் பறந்தன. மூரியானில் ரோமர்களின் பாசறையை நெருங்கியபோது இடைமறித்து தமக்கு 'ஸலாம்' உரைப்பவர் யார்? என கவனித்த ஹபீப் திகைப்படைந்தார்.

ஆம்! அவரின் மனைவி உம்மு அப்துல்லாஹ் கலபியா தான்!

அக்காலப் போர்க்களங்களில் இஸ்லாமியப் பெண்களும் காட்டிய துணிவுக்கும் தியாகத்துக்கும் இது ஒன்றல்ல, எத்தனையோ எடுத்துக்காட்டுகளை இஸ்லாமிய வரலாற் றில் காண முடிகிறது.

★ ★ ★

ஸல்மான் இப்னு ரபீஆ அஞ்சா நெஞ்சமும் போர் ஆற்றலும் மிக்க ஒரு வீரர். பதினாயிரம் வீரர்களுடன் அவர் ஆர்மீனியாவின் கீழ்ப்பகுதிகளிலும், ஹபீப் இப்னு ஸலமா மேற்குப் பகுதிகளிலும் உலவி எல்லாக் கலகங்களையும் பூரணமாக ஒடுக்கி இஸ்லாமிய ஆட்சியை அங்கு நிலை நிறுத்தினார்கள்.

அலெக்ஸாண்டிரியாவின் தோல்விச் செய்தி கேட்டு வெகுண்ட ரோமானிய மன்னர் கான்ஸ்டன்டைன் தம் படைகளைப் பெருவாரியாக அனுப்பி சின்னாசியாவில் கரையிறங்கச் செய்தார். ஸிரியாவின் ஆளுநராக இருந்த ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்கள் மூலம் அச்செய்தி கிடைக்கப் பெற்ற கலீஃபா அவர்கள், ரோமானியர்களைச் சற்று இளைப்பாறவும் விட்டார்களில்லை. ஆர்மீனியாவிலிருந்த ஸல்மான் இப்னு ரபீஆவின் படைகளையும் ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்களுக்கு உதவியாகச் செல்லக் கட்டளையிட்டார்கள். அதன்படியே சென்ற அப்படையினர் ரோமர்களைத் தலை தூக்க விடாது அடித்து விரட்டினார்கள். தர்த்துஸ், அந்தாக்கியாவிலிருந்த ரோமானியக் கடல் துறைகள் ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்களின் படையினரால் நிர்மூலமாக்கப்பட்டன.

ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி] அவர்கள் எகிப்திலிருந்தபோது திரிப்போலியின் புறம் படையுடன் சென்று போர் நடத்தாமலே திரும்பி விட்ட அபூ ஸர்ராஹ் தாமே எகிப்தின் முழுப் பொறுப்பையும் ஏற்ற பின்னர், ஹிஜ்ரி 26-ல் மீண்டும் திரிப்போலியின் புறம் செல்ல கலீஃபா அவர்களின் அனுமதியை நாடினார். கலீஃபா அவர்கள் மதீனாவிலிருந்த முஹாஜிர்களையும் அன்ஸார்களையும் ஒன்று கூட்டி ஆலோசித்தார்கள். அவர்களின் கருத்தையேற்று திரிப்போலி செல்ல அபூ ஸர்ராஹ்வுக்கு அனுமதி வழங்கியதுடன் மதீனாவிலிருந்து ஒரு துணைப் படையும் அனுப்பி வைத்தார்கள். அப்படையில் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் [ரலி], அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி], அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் [ரலி], அப்துர் ரஹ்மான் இப்னு அபூபக்கர் [ரலி] போன்ற பெரும் நபிமணித் தோழர்கள் கலந்து சென்றனர். அதன் காரணமாகவே அப்போரை வரலாற்றாசிரியர்கள் 'அப்துல்லாஹ்'களின் போர்' என்றும் சிறப்பித்தார்கள். வழியில் 'அப்துல்லாஹ் இப்னு நாபி' இன் படையும் அவர்களோடு இணைந்து கொண்டது. அவ்வாறு சென்ற அப்படையினர் திரிப்போலியின் **கலகக்காரர்களை நிர்மூலமாக்கி விரட்டியதுடன்**

திரிப்போலியைக் கடந்து சென்று துனீஸியா, அல்ஜீரியா உள்பட இன்றைய மொராக்கோ வரை கலீஃபா அவர்களின் அதிகார எல்லையை விரிவடையச் செய்தனர்.

அப்போர்களில் முஸ்லிம் வீரர்கள் 25,000 பேர்களே பங்கேற்றனராயினும் அவர்கள் ஒன்றரை இலட்சம் ரோமானியர்களை எதிர்த்துப் போரிட வேண்டியதாயிற்று. அப்போரில் வெற்றி பெற்றால் கிடைக்கும் உடைமைகளில் ஐந்திலொரு பங்கை அபூ ஸர்ராஹ்வுக்குத் தந்து விடுவதாகக் கலீஃபா அவர்கள் வாக்களித்திருந்தார்கள். அதன் பலனாக அபூ ஸர்ராஹ்வின் முயற்சிகள் மிகத் துணிவு கொண்டு விளங்கின. அவருடைய ஆற்றலையும் திறனையும் கண்ட ரோமானியத் தளபதி ஜிர்ஜீர், முஸ்லிம் படைத் தலைவர் அபூ ஸர்ராஹ்வின் தலையை வெட்டிக் கொணர்பவருக்கு ஓராயிரம் தங்கக் காசுகள் பரிசளிக்கப்படுவதுடன் ஜிர்ஜீரின் மகளையும் மணமுடித்துத் தரப்படுமென்றும் பறையறிவிக்கச் செய்தான். அதன் காரணமாக முஸ்லிம் வீரர்கள் தங்கள் தளபதியைக் கூடாரத்திலேயே அமரச் செய்து காவல் புரிந்தார்கள். ஆனால் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் [ரலி] அவர்கள் அதற்கு எதிராக ஜிர்ஜீரின் தலையைக் கொணர்ந்தளிப்பவருக்கு ஓராயிரம் தங்கக் காசுகள் பரிசளிக்கப்பட்டு ஜிர்ஜீரின் மகளையும் மணமுடித்தளிக்கப்படும் என்று அறிவிக்கச் செய்தார்கள். அவ்வறிவிப்பு ரோமானியர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. திகிலடைந்த தளபதி ஜிர்ஜீர் தன் படையின் மிகப் பின்னே சென்று தங்கிக் கொண்டான்.

அன்று போர் துவங்கியபோது ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் (ரலி) அவர்கள் படையணிகளின் அத்தனைத் தலைவர்களையும் தத்தம் கூடாரங்களில் சென்று ஓய்வெடுக்கச் செய்தார்கள். தாம் அழைக்கும் வரை எந்த ஒரு தலைவரும் வெளியில் வர வேண்டாமெனக் கூறி வீரர்களை மட்டுமே களத்திலிறங்கச் செய்தார்கள். போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. மதியம் ஆனபோது இருதரப்பினருமே சற்று களைப்படைய

நேர்ந்த தருணத்தில், அதுவரை ஓய்வெடுத்துக் கொண்டிருந்த தலைவர்களனைவரையும் அழைத்துக் கொண்டு தாமும் களத்தில் இறங்கினார்கள். தலைவர்களைக் கண்டு விட்ட முஸ்லிம் படையினரை அலணத்திருந்த களைப்பும் அகன்று விட்டது. அவர்கள் உற்சாகத்துடன் வைரிகளை வெட்டலாயினர். ரோமர்களோ தாங்கள் சற்றும் எதிர் பார்க்காத திடீர் தாக்குதலால் சின்னா பின்னமாயினர். ஜிர்ஜீர் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் (ரலி) அவர்களின் வாளினாலேயே கொல்லப்பட்டான்.

அப்போரில் கிடைத்த உடைமைகளில் ஐந்திலொரு பாகம் பிரிக்கப்பட்டு மீதியைப் பங்கிடப்பட்டபோது ஒவ்வொரு முஸ்லிம் வீரருக்கும் ஓராயிரம் தீனார்களும், ஒவ்வொரு புரவி வீரருக்கும் மூவாயிரம் தீனார்களும் கிடைத்தன. ஜிர்ஜீரின் புதல்வியை ஜிர்ஜீரைக் கொன்ற ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் (ரலி) அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.

கலீஃபா அவர்கள் தாம் வாக்களித்தபடி ஐந்திலொரு பங்கை எகிப்தின் ஆளுநர் அப்துல்லாஹ் இப்னு ஸஅத் அபூ ஸர்ராஹ்வுக்கு முதலில் அளித்தார்கள். என்றாலும் பொது மக்கள் அதனை எதிர்க்கவே தமக்கேற்பட்டுள்ள சிக்கலை அபூ ஸர்ராஹ்வுக்கு அறிவித்து அதனைத் திரும்பப் பெற்றார்கள். மதீனா வந்த அவ்வைந்திலொரு பங்கை மர்வான் இப்னு ஹக்கம் ஐந்து லட்சம் தீனார்களுக்கு வாங்கினார்.

இஸ்லாமிய கடற்படை

ஸிரியாவின் ஆளுநராக இருந்த ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் தம் சிறந்த அரசியல் முன்னறிவாலும் நிர்வாகத் திறனாலும் கலீஃபா அவர்களின் ஆட்சிக்கு மிகப் பெரும் அரணாக விளங்கினார்கள். அவர்கள் அமர்ந்து நிர்வகித்த தலைநகருக்கு வெகு அருகிலேயே ரோமர்களின் எல்லை இருந்ததால் மிக முன்னெச்சரிக்கையோடு பாதுகாவல் பொறுப்பை மேற்கொண்டார்கள். ரோமப் படைகள் இஸ்லாமிய எல்லையில் தலை நீட்டும் போதெல்

லாம் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் படைகள் தம் அதிரடித் தாக்குதல் கொண்டு அவர்களை விரட்டின. கான்ஸ்டாண்டி நோபிலைக் கைப்பற்றாதவரை முஸ்லிம்கள் ஓய்ந்திருக்கவே இயலாதென்பதை அவர்கள் நன்குணர்ந்தார்களாயினும், அதன் மீது படை நடத்திச் செல்ல தரை மார்க்கமான பாதை—மலைகளும் காடுகளும் சூழ்ந்து-வசதியற்றதாயிருந்தது. ரோமர்களிடமோ பலமான கடற்படையும் நாவாய்களும் இருந்ததால் அவர்களால் நீர் மார்க்கமாக வந்து ஆப்பிரிக்க ஸிரிய இஸ்லாமிய எல்லைகளைத் தொட்டு விளையாட முடிந்தது. தாங்களும் கடற்படை ஒன்றை உருவாக்கி நீர் மார்க்கமாகவேனும் கான்ஸ்டாண்டினோபிலைக் கைப்பற்ற வேண்டும் என கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்திலேயே ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் எண்ணினார்கள். ஆயினும் கடல் மார்க்கமான போரில் தம் மக்களை சிரமத்திற்குள்ளாக்க விரும்பாத கலீஃபா உமர் (ரலி) அவர்கள், 'இவ்வெண்ணத்தை இனி ஒரு போதும் உம் நாவால் கூறவும் வேண்டாம்' எனக் கண்டித்து முஆவியா (ரலி) அவர்களைத் தடுத்து விட்டார்கள்.

ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் அப்போதைக்கு அமைதியுற்று விட்டார்களாயினும் அவர்களின் உள்ளத்தில் அவ்வெண்ணம் ஓய்ந்திடவில்லை. தரை மார்க்கமாக அனதோலியா வரை தம் நாட்டை முஸ்லிம்களிடம் இழந்து விட்ட ரோமப் பேரரசர், கடல் மார்க்கமாகப் படைகளைப் பெருமளவில் அனுப்பி அலெக்ஸாண்டிரியாவிலும் சின்னாசியாவிலும் விளைவித்த தொல்லைகள், மீண்டும் கடற்படை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசரத்தை ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களுக்கு உணர்த்தின. தற்போதைய கலீஃபா ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்கள் மீண்டும் கடற்படை பற்றி எழுதி அனுமதி கேட்டனர். கலீஃபா அவர்களும் ஆழ்ந்த ஆய்வுக்குப் பின் அனுமதி வழங்கினார்கள்—தாமாகவே துணிந்து முன்வருபவர்களைத் தவிர்த்து எவரையும் கடற் போருக்காக வற்புறுத்தலாகாது என்ற நிபந்தனையுடன்.

ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் கடற்படை அமைக்க ஆரம்பித்தபோது எவரையும் வலியுறுத்த வேண்டிய தேவையே அவர்களுக்கு ஏற்படவில்லை. அதற்கொரு காரணமும் இருந்தது!

மாநபித் தோழர் ஹழ்லரத் அனஸ் இப்னு மாலிக் [ரலி] அவர்களின் சிற்றன்னையார் உம்மு ஹராம் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

''ஒரு நாள் என் இல்லத்தில் ஓய்வு கொண்டிருந்த அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் திடீரெனச் சிரித்த வண்ணமே உறக்கம் கலைந்து எழுந்தமர்ந்தார்கள்.

''என் தந்தையும் தாயும் தங்களுக்கர்ப்பணம்! எம்பெருமானே, தாங்கள் சிரிக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

''மன்னர்கள் தங்கள் அரியணை மீது அமர்ந்து இருப்பதேபோல் என் சமூகத்தார் நாவாய்களின் மீது அமர்ந்து போர் புரியக் கண்டேன்'' எனக் கூறிய நபி பெருமான் [ஸல்] அவர்கள், ''அல்லாஹ்வின் பாதையில் போரிட கடல் மீது செல்லும் முதல் அணியின் மீது சுவனம் விதிக்கப் பட்டுவிட்டது'' என நன்மாராயம் கூறினார்கள்—இச்சம்பவத்தை அறிவித்த உம்மு ஹராம் (ரலி) அவர்கள், 'பெருமானே! அப்போராளிகளோடு நானும் இருப்பேனா?' எனக் கேட்டதாகவும், அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் 'ஆம்! நீயும் அவர்களோடிருப்பாய்' என அருளியதாகவும் அறிவிக்கிறார்கள்.

நன்மாராயத்தைச் செவியுறும்போதே சுவனத்தின் மீது ஒரு பெண்ணுக்கிருந்த தாபத்தை விட, அது நிறைவேறும் கால கட்டத்தை எத்தி விட்ட ஆண்களின் ஆவல் எவ்விதத்தில் குறைந்திருக்க முடியும்? எனவே பலமான கடற்படையொன்றை அமைக்க ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்படவில்லை.

ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்களின் எண்ணம் முதலில் ஸைப்ரஸ் தீவைக் கைப்பற்றுவதாகவே இருந்தது.

மத்திய தரைக் கடல் நடுவே இருந்த அச்சிறு தீவே ரோமர் களின் படைத் தளமாகவும், ஆப்பிரிக்காவின் புறமும் ஸிரியா வின் புறமும் செல்லும் ரோமானியப் படைகளுக்கு இளைப் பாறும் இடைத்தலமாகவும் பயன்பட்டு வந்தது. அலெக் ஸாண்டிரியாவிலிருந்து விரண்டோடிய ரோமர்களின் ஒரு பகுதியினரும் அங்கேயே தங்கியிருந்தனர். எனவே ஹழ்ல ரத் முஆவியா [ரலி] அவர்கள் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு கைஸ் ஹாரிஸீ என்பவரின் தலைமையில் ஒரு படையை ஸைப்ரஸின் புறம் அனுப்பி வைத்தார்கள்.

ஹிஜ்ரி 27 அல்லது 28-ல் முதன் முதலாகப் புறப்பட்ட அப்படையில் ஹழ்லரத் அபூதர் கிப்ஃபாரீ (ரலி), உபாதா இப்னு ஸாமித் (ரலி), அவரின் மனைவியும் நபி பெருமான் (ஸல்) அவர்களின் நன்மாராயத்தைக் கேட்டு அறிவித்த வருமான உம்முல் ஹராம் (ரலி) போன்ற நபிமணித் தோழர்களும் கலந்து சென்றார்கள். அப்படையினரின் வர வறிந்து ஸைப்ரஸில் தங்கியிருந்த ரோமப் படைகள் மிக வன்மையாக எதிர்த்துப் போராடின. ஆயினும் வெற்றி முஸ்லிம் படைகளுக்கே கிடைத்தது. இறுதியாக ஸைப்ரஸ் வாசிகள் ஆண்டொன்றுக்கு ஏழு லட்சம் தீனார்கள் தீர்வை செலுத்துவதாகவும், கடற்போர்க் காலங்களில் முஸ்லிம் படையினருக்கு முழு ஒத்துழைப்பும் தருவதாகவும் சம் மதித்து உடன்பாடு கொண்டனர்.

கலீஃபா அவர்கள் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்க ளுக்கு எழுதிய கடிதத்தில் ரோமானியக் கடற்படை வீரர் கள் எவரையும் கொல்வதை விட கைதிகளாகவே சிறை பிடிக்கும்படியாகவும், அவர்களிடமிருந்து முஸ்லிம்களுக்குக் கடற்போரின் நுணுக்கங்களைக் கற்பிக்கும்படியாகவும் எழுதினார்கள். ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களும் அவ் விதமே செயல்பட்டார்கள். அதற்குப் பின்னர் தொடர்ந்து பயிற்சி பெற்ற முஸ்லிம் வீரர்கள் கடற்போரிலும் ரோமானி யர்களை வியத்தகு முறையில் மிகைத்து நின்ற விந்தையை ஹிஜ்ரி 33-ம் ஆண்டில் நடைபெற்ற பெரும் போரில் காண முடிந்தது.

கிழக்கிலும் வெற்றிப் படலம்

வடக்கிலும் மேற்கிலும் விரிந்ததே போன்று இஸ்லாமிய எல்லை கிழக்கிலும் விரிந்து பரவத் தோதாக பாரஸீகக் கலகக்காரர்கள் பெரும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார்கள். குலஃபாயெ ராஷிதீன்களின் காலத்தில் பாரஸீகத்தின் எல்லை அதனைச் சூழ உள்ள பலூஸிஸ்தான், ஆப்கானிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், ஆஜர்பைஜான், வடமேற்கே குர்திஸ்தான், ஆர்மீனியாவின் வடக்கே காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடைப்பட்ட கோகஸ் மலைப் பிரதேசங்கள், தர்பந்த், தாரியால் வரை விரிந்து விட்டது. அவற்றில் பெரும்பாலான பகுதிகள் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்திலேயே வெல்லப்பட்டு விட்டன. அவர்களின் மரணத்தையடுத்து துரோகமிழைக்கத் துணிந்த பகுதிகளையும் கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் தம் திறன்பட்ட நடவடிக்கைகளால் அடக்கி வெற்றி கண்டார்கள். அவற்றையும் தாண்டி முஸ்லிம்கள் இன்னும் அடியெடுத்தே வைக்காத, தொலை தூரப் பகுதிகளில் தஞ்சம் புகுந்தவர்கள் அங்கு வாழ்ந்த அடங்காப் பிடாரிகளின் துணையோடு இஸ்லாமிய எல்லைகளில் அவ்வப்போது ஊடுருவி கலகங்களை விளைவித்தார்கள்.

கிலாஃபத்தின் ஐந்தாம் ஆண்டில் ஒரு புறம் குர்த் இனத்தவரும், மறுபுறம் மாவராவுன்னஹரின் துருக்கியர்களும் கலகஞ் செய்யலானார்கள். கலீஃபா அவர்கள் அச்சமயம் பஸராவின் ஆளுநராகவும் அப்பிராந்தியத்தின் படைத் தளகர்த்தராகவும் இருந்த ஹழ்லரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்களுக்கு அக்கலங்களை ஒடுக்க முழு ஒப்புதலும் அளித்தார்கள். அவ்வாறே ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களும் கலகங்களை ஒடுக்கத் தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டார்கள். ஆயினும், உள்நாட்டிலேயே முன்னர் ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களின் மீது அழுக்காறு கொண்டிருந்த சில குழப்பவாதிகள் கலீஃபா அவர்களிடம் அவ்வாளுநர் மீது குற்றச் சாட்டுளைக் கொணர்ந்து அவர்களையும் மதீனாவுக்குத் திரும்ப அழைக்கச் செய்தார்கள்.

கலீஃபா அவர்கள் ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்க ளுக்குப் பகரமாகத் தங்கள் தாய் மாமன் மகன் அப்துல் லாஹ் இப்னு ஆமிர் (ரலி) என்ற 25 வயதுடைய குரைஷி இளைஞரை பஸராவின் ஆளுநராக அனுப்பி வைத்தார்கள். அச்சமயம் அம்மான், பஹ்ரைன் ஆகிய பகுதிகள் உதுமான் இப்னு அபுல் ஆஸ் (ரலி) என்பவரின் அதிகாரத்தில் இருந் தன. அவற்றின் படைப் பொறுப்பையும் ஹழ்ரத் அப்துல் லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர்களிடமே ஒப்படைக்கப் பட்டது.

ஆளுநர் பொறுப்பேற்ற ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர்கள், தேவையான நிர்வாக மாறுதல் களைச் செய்து விட்டு, படைகளுடன் புறப்பட்டுச் சென்று பரவலான கலகங்களை ஒடுக்கினார். அச்சமயம் ஷீராஸ், கிர்மான் முதலிய பட்டணங்கள் அவரால் வெல்லப்பட்ட வற்றில் முக்கியமானவை.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) தாமே போர்த் திறன் பெற்றவராக மட்டுமல்ல, அந்த இளமையி லேயே மற்றவர்களின் ஆற்றலையும் ஒழுங்குறப் பயன் படுத்தும் பக்குவமும் பெற்றிருந்தார். அஸ்வத் இப்னு குல்ஸூம், அத்ஹம் இப்னு குல்ஸூம், கைஸ் இப்னு ஹஸீம், அப்துல்லாஹ் இப்னு ஹிஸம், அஹ்னஃப் இப்னு கைஸ், ரபீஃ இப்னு ஜியாத் ஹாரிஸீ, அப்துர் ரஹ்மான் இப்னு ஸம்ரஹ், முஜாஷிஃ இப்னு மஸ்ஊத் ஸலமீ (ரலி) போன்ற மிகச் சிறந்த துணைத் தளகர்த்தர்கள் அவரின் கீழ் பணியாற்றினர்.

ஹிஜ்ரி 31-ல் அவர் முஜாஷிஃ இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களிடம் சில ஆயிரம் படைகளை ஒப்படைத்து கிர்மா னின் கோட்டைகளை வெற்றி கிட்டும் வரை முற்றுகை யிட்டு நிற்குமாறு பணித்து விட்டு ரபீஆ இப்னு ஜியாதை ஸிஜிஸ்தானின் வெற்றிக்காக அனுப்பினார். அவை இரண் டும் வெல்லப்பட்டவுடன் அவர்களையே அப்பகுதிகளின் அதிகாரிகளாக அமர்த்தி விட்டு தாமே படைகளுடன் குராஸானின் புறம் சென்றார். வழி நெடுகிலும் அவரிடம் உடன்பாடுகள் கொண்டும் சில நகரங்கள் பணிந்தன.

வேறு சில போரினாலும் வீழ்ந்தன. பின்னர் அவர் நிஷாப்பூரை நோக்கி முன்னேறினார். அதனை வீழ்த்த ஆறு மாத காலம் வரை அவர் முற்றுகையிட்டிருக்க வேண்டியதாயிற்று.

நிஷாப்பூரின் வெற்றிக்குப் பின் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி), கலீஃபா அவர்களின் அறிவிப்பின்படி தம் துணைத் தளகர்த்தர்களை நாற்புறமும் பல நகரங்களின் பால் பிரித்தனுப்பினார். அதன் பலனாக அஜமிஞம், தைலமீகளும், துருக்கியர்களும் விளைவித்த அத்தனைக் கலகங்களையும் ஏக காலத்தில் துரிதமாக ஒடுக்கி, கிலாஃபத்தின் எல்லையை கிழக்கே சீன எல்லையோடு ஒட்டும் அளவுக்கு அவரால் விரிக்க முடிந்தது. ஷீராஸ், கஜ்னா, காபூல் போன்ற ஆப்கானியப் பெரு நகரங்களிலும் இஸ்லாம் பட்டொளி பரப்பி மிளிர்ந்தது.

ஏறத்தாழ ஆறாண்டு கால தம் நிர்வாகத்தில் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர்கள், பல ஆயிரக்கணக்கான சதுர மைல்களுக்குப் பரவி வாழ்ந்த மலைப் போராளிகளையும் நல்வழிப்படுத்தி இஸ்லாமிய ஆட்சியை —அல்ல, இஸ்லாத்தையே அவர்கள் ஏற்று வாழச் செய்தனர். அவர்களின் அட்டூழியங்களில் வதைந்த ஈரானிலிருந்து சீனாவின் எல்லை வரையிலும் பரந்த—பல்லாயிரம் சதுர மைல்கள் பரப்பளவு பூமி, தன் மீது அமைதியும் நீதியும் நிலவும் புதுமையைக் கண்டது. மதங்கொண்டலைந்த மலைவாழ் மறவர்களின் அறிவில் தெளிவு பிறந்தது. புதிய அறம் கண்டு அருள் வாழ்வைத் துவக்கிய அவர்கள் தங்கள் மீது ஆதிக்கங்கொண்டமைக்காக அஞ்சி ஆட்சியாளர்களுக்குத் துதி பாடுபவர்களாக அல்லாமல், அல்லாஹ்வின் அவ்வருள் மார்க்கத்தைத் தாங்கள் பெற்றுக் கொண்டதையே பெரும் பேறாக எண்ணி இனி எத்தகைய அர்ப்பணத்தையும் அதற்குச் செய்ய சித்தமானவர்களாய் அலைந்தனர். மக்களின் அம்மனமாறுதலை தம் கரத்திலளித்த அல்லாஹ்வின் அருளை எண்ணி நெகிழ்ந்த ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அதற்குரிய நன்றிக் கடன் தீர்க்க எண்ணி, தம் பொறுப்புகளனைத்தையும் அதிகாரிகளிடம் ஒப்படைத்து, அங்கிருந்தே இஹ்ராம் அணிந்தவர்களாகக்

கஅபாவை நோக்கி கால் நடையாகவே விரைந்தனர். புனிதத் திரு வீட்டின் படிக்கட்டுகள், தம் மீது திருநுதல் பதித்து நின்ற அப்புனிதரின் மோனக் குரல்களைச் செவி யுற்றன—''மனிதர்களின் பாவக் கறைகளை உன் மன்னிப் பென்னும் திரை கொண்டு போர்த்தி மறைக்கும் கொற் றவா! என் குற்றங்களைப் பொறுத்தருள்வாயாக; என் குறைகளை மன்னித்தருள்வாயாக. புகழடங்கலும் உனக்கே சொந்தம்" என்று.

ஸாஸானிய பாரம்பரிய முடிவு

ஹிஜ்ரி 30-ஆண்டில் கூஃபா வாசிகள் தங்கள் ஆளுநர் மது அருந்தியதாகக் குற்றச்சாட்டை சுமந்து கலீஃபாவின் முன் வந்து நின்றனர். ஆளுநர் வலீத் இப்னு உக்பாவை மதீனாவுக்கு வரவழைத்து விசாரணை நடத்திய கலீஃபா அவர்கள் சாட்சியங்களின் அடிப்படையில் அவரை சவுக்கடி தண்டனை ஏற்கச் செய்து ஆளுநர் பொறுப்பிலிருந்தும் நீக்கி விட்டார்கள். அவருக்குப் பகரமாக ஹழ்லரத் ஸஈத் இப்னுல் ஆஸ் [ரலி] கூஃபாவுக்கு அனுப்பப்பட்டார்கள். கூஃபா வந்த ஹழ்லரத் ஸஈதிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் ஹழ்லரத் ஹஸன், ஹுஸைன் (ரலி), அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரலி), ஹுதைபத்துல் யமான் (ரலி) போன்ற நபிமணித் தோழர்களு மிணைந்த ஒரு படையமைத்து கலகங்களை அடக்கப் புறப் பட்டார்கள். ஒரு புறம் இவர்களும் மறுபுறம் பஸ்ராவின் ஆளுநர் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர் ளும் மேற்கொண்ட திறன்பட்ட நடவடிக்கைகளினால் தப ரிஸ்தான், ஜிர்ஜான் முதலியவையும் வெல்லப்பட்டு இராக், ஈரானியப் பகுதிகளின் கலகங்களனைத்தும் ஒடுக்கப்பட் டன.

அதே காலத்தில் நடைபெற்ற ஒரு முக்கிய சம்பவம் ஈரானிய மன்னன் யஸ்தஜிர்த் கொல்லப்பட்டதாகும். ஹழ்லரத் ஃபாரூக்குல் அஃலம் (ரலி) அவர்களின் காலத்தி லேயே ஈரானிய ஆதிக்கம் நிர்மூலமாக்கப்பட்டதென்றா லும் தப்பியோடிய யஸ்தஜிர்த் பலக்ஃகிலும், மர்வ்'விலும்,

இஸ்பஹான், அஸ்த்தகர் போன்ற பிரதேசங்களிலும் அவ்வப்போது திரிந்து கொண்டிருந்தான். மீண்டும் ஓர் உதய காலம் அவனுக்குப் பிறந்து விட்டது என நம்பி அவன் பின்னே சில ஈரானியர்களும் அலைந்து கொண்டிருந்தனர். அவர்களால் கதைக்கப்பட்ட ஸாஸானிய முன்னவர்களின் சில சரித்திர நிகழ்ச்சிகளைக் கேட்டு மக்களிலும் ஆங்காங்கே ஒரு சிலர் அவனுக்கு ஆதரவாகத் திரும்பியதும் உண்டு. இடையிடையே அப்பகுதிகளில் பரவலாகக் கலகக் கொடிகள் உயர்ந்ததற்கான காரணங்களில் அதுவும் ஒன்று. ஆயினும் அவை எதிலும் அவன் வெற்றி கொள்ள வாய்ப்புகளே கிட்டவில்லை.

ஹிஜ்ரி 31-ல் சில ஆயிரம் படைகளுடன் பலக்ஃகின் பக்கம் வந்த யஸ்தஜிர்த் சிறு வெற்றிகளைக் கண்டாலும் தொடர்ந்து முன்னேற அவனால் முடியவில்லை. முஸ்லிம் படைகளின் மூர்த்தண்யத் தாக்குதலால் முறியடிக்கப்பட்ட அவன் சிறைப்பட அஞ்சி நீர்ப்பந்தமான நிலையில் ஒரு திருகை அரைப்பவனின் குடிலில் தஞ்சம் புகுந்தான். அவன் அணிந்திருந்த கிரீடமும், விலையுயர்ந்த அணிகலன்களும், வைரங்கள் பதியப் பெற்ற வாளும் ஊட்டிய ஆசைகளால் பேதலித்த அத்திருகை அரைப்பவன் யஸ்தஜிர்துக்கு உணவும் அளித்து, உபசாரமும் செய்து, அவன் உறங்கும்போது அவனைக் கொலையும் செய்து விட்டான். ஏறத்தாழ நானூறாண்டு கால பாரம்பரியத்தைக் கொண்ட ஈரானிய மன்னன் தன் அரச போகங்களை நான்கே ஆண்டுகள் அனுபவித்து, ஒரு நாடோடியாகவே பதினாறாண்டு காலங்கள் அலைந்து திரிந்து, இறுதியாக ஹிஜ்ரி 31-ல் (651) உயிரற்ற வெற்று மேனியனாக ஆற்றில் மிதந்து கொண்டிருந்தான்.

ஹிஜ்ரி 32-ல் மீண்டும் ஒரு பலமான கடற்போர் நடைபெற்றது. ஆப்பிரிக்காவின் வடக்கே கடலோர நாடுகள் அனைத்திலும் வேரூன்றி விட்ட முஸ்லிம்கள் இனி ஐரோப்பாவின் அந்துலூஸையும் தொடத் துணிந்து விட்டார்கள் என்ற செய்தி ரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைனை வெறி கொள்ளச் செய்தது. ஏறத்தாழ அறுநூறு கப்பல்களைக் கொண்ட ஒரு பெரும் படைக்குத் தாமே தலைமையேற்று மத்திய தரைக் கடலுக்கு அழைத்து வந்தார்.

முஸ்லிம்களோ ஸிரியாவில் அமைத்தது போன்றே அலெக் ஸாண்டிரியாவிலும் ஒரு கடற்படையை அமைத்திருந்தனர். ஒரு புறம் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களும், மறு புறம் இப்னு அபூ ஸர்ராஹ்வுமாக இரு பெரும் தளநாயகர் களும் கடற்போருக்கு ஆயத்தமாகி வந்தனர்.

ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் திட்டப்படி முஸ்லிம்களின் கப்பல்களும் நாவாய்களும் ஒன்றோடொன்று சேர்த்துப் பிணைக்கப்பட்டன. அவற்றின் மேல் முஸ்லிம்கள் தரையில் நிற்பது போன்று நின்று போராடினார்கள். அவர் களின் தியாகக் குருதி கடல் பரப்பையே செந்நிறமாக்கி விட் டது. ரோமானியர்களும் ஏராளமாகக் கொல்லப்பட்டனர். மன்னர் கான்ஸ்டன்டைனே காயமடைந்து தப்பி ஓடினார். இறுதியாக வெற்றி பெற்ற முஸ்லிம்கள் அப்பகுதியில் ரோமர்களின் கடலாதிக்கத்தையும் நிர்மூலமாக்கி, பெரும் பொருள்களை அள்ளித் திரும்பினார்கள்.

ஆட்சியின் மாட்சி

பொதுவாக கலகங்களனைத்தையும் முறியடித்து, துரோகிகளின் சதிகளை நிர்மூலமாக்கி, தம் முன்னவர் களால் வெல்லப்பட்ட நிலப் பரப்புகளில் ஓர் எள்ளளவும் பறி போகாமல் காத்ததோடு மட்டுமல்ல, பல்லாயிரம் சதுர மைல்கள் பரப்பளவுக்கு மாட்சி மிக்க தம் ஆட்சியின் எல்லைகளைப் பரந்து விரியச் செய்த பெருமைக்குரியவர் கள் மூன்றாம் கலீஃபா ஸையிதினா ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள். அமைதி தவழ்ந்த அவர்களின் உடலுக் குள்ளே அமைந்திருந்த ஆண்மையின் வெளிச்சம் பனிரண் டாண்டு கால கிலாஃபத் முழுதுமே பூரணமாக பளிச் சிட்டது.

ஏறத்தாழ எண்பது வயதுகளை எத்திய நிலைமையிலும் கலீஃபா அவர்கள் மதீனாவிலமர்ந்து, தம் கட்டளைகளைச் சுமந்து சென்ற கடித ஓலைகளின் மூலமாகவே படை களைத் திசை சுழற்றி, தம் தளநாயகர்களைக் கொண்டு

மூப்புறமும் வெற்றிகளைப் பெற்றுக் குவித்த லாவகமே அலாதி. அதற்கேற்ற பலம் பொருந்தியதாக இராணுவமும் உருவாக்கப் பெற்றிருந்தது.

இராணுவம்

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்திலேயே உயர்ந்த முறையில் சித்தப்படுத்தப்பட்டிருந்த இஸ்லாமிய இராணுவம் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் திறன் பட்ட நடவடிக்கைகளால் மேலும் உரம் பெற்றது. வீரர்கள் ஒவ்வொருவரின் ஊதியமும் ஒரு நூறு திர்ஹங்கள் வீதம் உயர்த்தப்பட்டன. படைகளின் நிர்வாகத்தை ஆளுநர்களிடமிருந்து பிரித்து, முக்கிய நகரங்களில் தனித் தனி இராணுவத் தளகர்த்தர்களைப் பொறுப்பில் அமர்த்தினார்கள். ஆங்காங்கே அத்தளகர்த்தர்கள் !சுயேச்சையாகச் செயல்பட சுதந்திரமும் இருந்தது. ஆயினும் அவை அனைத்தின் மத்திய நிர்வாகமும் கலீஃபா அவர்களால் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது. எதிரிகளின் எண்ணிக்கை மிகுதியால், தளவாடப் பெருக்கத்தால் எங்கெங்கே முஸ்லிம் படைகளிடையே தளர்வு தலைகாட்டுகிறதோ அங்கெல்லாம் துணைப் படைகளை கலீஃபா அவர்கள் சற்றும் தாமதமின்றி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் திட்டமிட்டாற்போல் மாறி மாறி உயர்த்தப்பட்ட கலகக் கொடிகளைக் கண்டு இஸ்லாமியப் படைகள் சோர்வடைய ஒரு சந்தர்ப்பத்தை கலீஃபா அவர்கள் தரவேயில்லை. ஆஜர்பைஜானிலிருந்து ஆர்மீனியாவுக்கும் ஜஸீராவிலிருந்து ஆர்மீனியாவுக்கும் பின்னர் ஆர்மீனியாவிலிருந்து ஸின்னாஸியாவுக்கும் படைகள் உடனுக்குடன் கலீஃபா அவர்களின் கட்டளைகளின்படியே சுழன்று கொண்டிருந்தன. அதே போல் மேற்கே ஆப்பிரிக்காவில் அபூ ஸர்ராஹ்வுக்கு தேவைப்பட்டபோது இராக்கிலிருந்தும் ஸிரியாவிலிருந்தும் படைகள் திருப்பப்பட்டன. போதாமைக்கு மதீனாவிலிருந்தும் தேவைப்பட்ட பகுதிகளுக்கெல்லாம் படைகளைத் திரட்டி உதவி அனுப்பவும் கலீஃபா அவர்கள் சளைக்கவில்லை.

திரிப்போலி, சைப்ரஸ், ஆர்மீனியா, தபரிஸ்தான் பகுதிகளில் புதிய இராணுவத் தலங்களும், சிறு சிறு நகரங்களில் ஆங்காங்கே பாசறைகளும் புதியனவாக அமைக்கப் பட்டன. படைகளின் பெருக்கத்திற்கேற்றவாறு புரவிகளும், ஒட்டகைகளும் பெருகி விட்டன. அவற்றின் பராமரிப்புக்காக மேய்ச்சல் நிலங்களையும் அதிகமாக அமைக்கச் செய்தார்கள் கலீஃபா. நீளத்திலும் அகலத்திலும் ஆறாறு மைல்களைக் கொண்ட ஜர்பா என்ற மேய்ச்சல் நிலத்தில் மட்டும் நாற்பதினாயிரம் ஒட்டகைகளும், அதிகமான புரவிகளும் மேய்ந்தன. மேய்ச்சல் நிலங்களில் பரப்பளவில் மூன்றாம் இடத்தையே ஜர்பா பெற்றிருந்தது. கலீஃபா அவர்களின் படைப் பெருக்கத்தைக் கணித்துப் பார்க்க இதுவும் ஓர் உரைகல் ஆகும்.

முதன் முதலாக முஸ்லிம்கள் கடற்போர் நடத்திய பெருமைக்குரிய காலம் ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களின் காலமேயாகும். தம் மக்களின் உயிர்களை விலையிலாப் புதையலாய்ப் பேணிய கலீஃபா உமர் (ரலி) அவர்கள், கடற்போரின் சிரமங்களையும் இழப்புகளையும் அம்மக்கள் மீது சுமத்த விரும்பாமலே கடற்படை அமைக்க ஹழ்ரத் முஆவியா [ரலி] அவர்களுக்கு அனுமதி மறுத்தார்களாயினும், அச்சிரமங்களையும் இழப்புகளையும் பொருட்படுத்தாது ஒதுக்கி, தம் படையினரை நீர் கடந்து பாய அனுமதி வழங்கிய கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் துணிவையே ஆழ்கடலுக்கும் அப்பாற்பட்ட முழு உலகிலும் இன்று இஸ்லாம் தழைத்து நிற்க முதல் துணை எனக் கூறல் முற்றும் பொருந்தும்.

அக்கடற்படையின் முதல் தலைவராக அப்துல்லாஹ் இப்னு கைஸ் அல் ஹாரிஸீ என்பவர் இருந்தார். அப்படையினர் நடத்திய போர்களில் தங்களின் ஒரு சிறு நாவாயையும் கூட இழந்ததில்லை. ஏறத்தாழ ஐநூறுக்கும் மேற்பட்ட கப்பல்களைக் கொண்ட ரோமர்களை இனி மத்திய தரைக் கடல் பிராந்தியத்தைத் திரும்பிப் பாராதவாறு விரட்டக் கூடிய வன்மையுடையதாய் அன்றைய முஸ்லிம் கடற்படை இருந்தது. மொத்தத்தில் கலீஃபா அவர்களின் பண்பட்ட திறனால் இஸ்லாம் கிழக்கே சீன எல்லையை

யும் மேற்கே மொராக்கோவையும் எத்தி நின்றது. வடக்கே அனதோலியாவிலிருந்து கோகஸ் மலைப் பிரதேசங்கள் முற்றாக ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் ஏகத்துவச் சித்தாந்தம் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

பொதுப் பணிகள்

அடுத்தடுத்த வெற்றிகளால் எல்லைகளை விரித்திட்ட தோடல்லாமல், அள்ளி வரப்பட்ட செல்வங்களால் கலீஃபா அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் விளைவித்த நன்மைகளும் அனந்தம். நிர்வாகத்திலும் வாழ்க்கையின் நடைமுறைகளிலும் மக்கள் பெற்ற வசதிகள் ஏராளம்.

மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்றவாறு நிர்வாகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. அவற்றைப் பொறுப்புடன் நடத்த பல கட்டடங்கள் எழுப்பப்பட்டன. அவற்றில் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தலைநகர் மதீனாவுக்கு வந்து சேரும் பாதைகள் அனைத்தும் விரிவுபடுத்தப் பட்டன. பாலங்கள் அமைக்கப்பட்டன. பள்ளிவாசல்கள் ஆங்காங்கே நிர்மாணிக்கப்பட்டன. ஒவ்வொரு பாதையிலும் காவல் நிலையங்கள், ஓய்வு கூடங்கள், உணவு மாடங்கள் நிறுவப்பட்டன. கடை வீதிகள் உருவாக்கப்பட்டன. நீர்க் கிணறுகள் நிறைய தோண்டப்பட்டன.

கைபரில் ஓடிக் கொண்டிருந்த ஒரு காட்டாற்றின் வெள்ளம் அடிக்கடி பிரவாகமெடுத்து மதீனாவின் மக்களுக்குத் தொல்லைகளை விளைவித்துக் கொண்டிருந்தது. ஒருக்கால் அதனால் மஸ்ஜிதுன் னபவீக்கும் ஊறு விளையக் கூடிய அச்சம் தோன்றவே, கலீஃபா அவர்கள் அணை கட்டச் செய்து அவ்வாற்றின் போக்கை திசை மாற்றி விட்டார்கள்.

ஆண்டவனைத் தொழ அருமைப் பெருமானார் (ஸல்) அவர்களால் அமைக்கப் பெற்ற அப்பள்ளி உலகளாவிய இஸ்லாமிய வணக்கத் தலங்களில் கஅபாவை அடுத்து இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. சீரோங்கிய அதனைச்

சிறப்புற அமைத்த அதன் ஆரம்ப கால நிர்மாண கர்த்தாக்களில் பெயரோங்கி விளங்குபவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களே. மாநபி (ஸல்) அவர்கள் வாழ்ந்தபோதே தொழப் பெருகியவர்களுக்கு இடம் போதாமலாகி விடவே பள்ளியை விரிவுபடுத்த தம் பொருளையுதவி சுவனத்தைப் பற்றிய அருளாசியைப் பெற்றவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி). அடுத்து கலீஃபா உமர் (ரலி) அவர்களாலும் அப்பள்ளி விரிவுபடுத்தப்பட்டது. மக்கள் கூட்டம் மேலும் பெரிதாக வளர்ந்து தொழுவதற்கான இடம் பற்றாமலாகி மேலும் அதனை விரிவுபடுத்த வேண்டியேற்பட்டது.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற ஆரம்ப ஆண்டிலேயே அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். ஆனால் பள்ளியின் அருகே தங்கள் இல்லங்களை அமைத்துக் குடியிருந்தவர்கள் பள்ளியின் அருகாமையை இழக்கத் துணியாதவர்களாய் எந்த விலைக்கும் தங்கள் குடியிருப்புக்களை விற்க மறுத்து விட்டனர். கலீஃபா அவர்களின் எந்த நிர்ப்பந்தமும் கூட அவர்களின் உரிமையைப் பறிக்க உதவவில்லை. இவ்வாறாக ஐந்தாண்டுகள் கழிந்தன. இறுதியாக,

ஹிஜ்ரி 29-ல் ஒரு வெள்ளிக்கிழமை கலீஃபா அவர்கள் தங்கள் பேருரையில் பள்ளியை விரிவுபடுத்தியே ஆக வேண்டிய தேவையை எடுத்துரைக்கக் கேட்ட மக்கள் உணர்வு கொண்டார்கள்; தங்கள் இல்லங்களை விட்டுக் கொடுக்கத் துணிவு கொண்டார்கள். அவற்றைப் பெற்று பணியைத் துவக்கிய கலீஃபா அவர்கள், ஏறத்தாழ பத்து மாத காலங்கள் இரவும் பகலுமாக அப்பணியிலேயே மூழ்கியிருந்தார்கள். மாநபி (ஸல்) அவர்களின் திருப்பள்ளி மேலும் 20 கெஜங்கள் நீளமுடையதாகவும், 30 கெஜங்கள் அகலமுடையதாகவும் விரிவுபடுத்தப்பட்டதோடு அதன் மேல் தளமும் தேக்கு மரத்தைக் கொண்டும் கற்களைக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இடையே ஹிஜ்ரி 27-ம் ஆண்டில் உம்ரா வணக்கத்திற்காக மக்காவுக்கு வருகை தந்த கலீஃபா அவர்கள், கஅபா

யைச் சூழ இருந்து வணங்கும் மக்கள் படும் அல்லல்களைக் கண்டு, அத்திருவீட்டைச் சூழவிருந்த பிறர் வீடுகளைத் தம் சொந்தப் பொருளால் விலை கொடுத்து வாங்கி, தொழும் வளாகத்தை விரிவுபடுத்தினார்கள்.

ஷைபா என்ற துறைமுகம் மிகப் பழையதாக இருந்த தோடன்றி மக்கவாசிகளுக்கு அது அதிக தொலைவிலும் இருந்தது. அவர்களின் வேண்டுதலை ஏற்று, கலீஃபா அவர்கள் ஜித்தாவுக்கு வந்து, அங்கு கடலில் நீராடி, கரையில் தொழுதேற்றி, அவ்விடத்திலேயே நவீன முறையில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்கச் செய்தார்கள். அதுவே இன்றைய ஜித்தா துறைமுகம்.

மக்களாட்சி முறை

முந்தைய கலீஃபாக்கள் பேணிய ஜனநாயக முறையையே நாயகத்தின் இம்மூன்றாம் கலீஃபாவும் பேணினார்கள். மாநபி (ஸல்) அவர்களின் மறைவினையடுத்து மக்களை வழி நடத்த ஒரு தலைவரை அம்மக்களே தேர்ந்தெடுத்த பாங்கை ஸித்தீக்குல் அக்பர் (ரலி) அவர்களின் வரலாறு காட்டுகிறது.

ஸையிதினா ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் மரணத் தறுவாயில் தம்முடைய கலீஃபாவாக, தமக்குப் பின் மக்களை வழி நடத்துவதற்காக—அன்றைய மக்களுள் மேலானவராகத் தாம் அறிந்த—ஹழ்ரத் பாரூக்குல் அஃலம் (ரலி) அவர்களை நியமனம் செய்தார்கள்.

மக்களை வழி நடத்தத் தாம் ஏற்றிருந்த கடமையை அக்கலீஃபா அவர்கள் மரணத்தின் மடியிலும் மறந்திடவில்லை.

மண்ணறையில் அக்கலீஃபாவை இறக்கிய பின்னரும் அவரின் கண்ணியம் பேண அம்மக்களும் தவறிடவில்லை.

கட்டுப்பாடு தளராவரம் பெற்றிருந்தது இறவாப் புகழ் படைத்த அச்சமூகத்தவரிடையே!

மக்களால் தெரிந்தெடுக்கப் பெற்ற அவ்வாரம்ப கால கலீஃபாக்கள் மக்களை வழி நடத்திச் செல்லும் காவலர் களாகத் தங்களை எண்ணினார்களேயன்றி அம்மக்களையே அடக்கி ஆதிக்கஞ் செலுத்தப் பிறந்த மன்னர்களாகத் தங் களை மாற்றிக் கொள்ளவில்லை. தாங்களும் அம்மக்களுள் ஒருவரே என்ற உணர்வை மறவாத அக் கலீஃபாக்கள் தங் கள் வழி மீது விழிகளைச் செலுத்த ஒரு குழுவை அம்மக்களி லிருந்தே தெரிந்தெடுத்து அமைத்துக் கொண்டார்கள்.

மஜ்லிஸ்-அல் ஷூரா என்றழைக்கப்பட்ட-முஹாஜிர் களையும் அன்ஸார்களையும் கொண்ட ஒரு சபை கலீ ஃபாவின் செயல்களில் நிறைகளைப் பேணவும் குறைகளைக் காணவும் பூரண உரிமை அளிக்கப்பட்டிருந்தது. தம் பெய ரின் திடுக்கத்தாலேயே உலகை அடக்கிய பெருமான் உமர் [ரலி] அவர்களும் கூட அவ்வுரிமைக் குரலுக்குச் செவி சாய்க் கத் தவறியதில்லை. அச்சபையின் பலமான பக்கத் துணை யோடேயே இஸ்லாமிய ஆட்சியின் ஒவ்வொரு வழிமுறை யும் வகுக்கப்பட்டது.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் ஆரம்ப காலத்திலும் அச்சபை திறன்பட செயலாற்றியது. பிந்திய காலத்தில் அதில் இடம் பெற்று விட்ட இறையச்சங் குறைந்த-இளம் தலைமுறையினரால் ஏற்பட்ட விளைவுகள் ஒரு துர்ப்பேறேயானாலும் கலீஃபா உதுமான் (ரலி) அவர் கள் எந்த நாளிலும் அதன் உரிமையைப் புறக்கணித்த தில்லை. மக்களின் குரல் உதாசீனம் செய்யப்படாமல் ஜனநாயகத்தின் அக்காவலரால் என்றுமே பேணப்பட்ட தற்கு அவர்கள் ஏற்ற தூற்றல்களும் தொல்லைகளுமே சான்று கூறப் போதுமானவை.

ஆட்சி மிக விரிந்து பல்வேறு மாநிலங்களாக நாடு பிரிக்கப்பட்டிருந்த நிலையில் அம்மாநிலங்கள் அனைத்தின் ஆளுநர்களையும் கலீஃபா அவர்கள் அவ்வப்போது அழைத் துக் கூட்டி ஆய்வு நடத்துவார்கள். அது ஒரு தனிச் சபை யாக இயங்கி வந்தது.

மாகாணங்களின் அமைப்பிலும் கலீஃபா அவர்கள் பல மாறுதல்களைச் செய்தார்கள். திறன்பட்டவர்கள் பொறுப்புகளை ஏற்றபோது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களையும் அவர்களின் மேற்பார்வையிலேயே இணைந்து சீரான ஒரே நிர்வாக முறையால் அவை செம்மைப்பட கலீஃபா அவர்கள் வழி செய்தார்கள். கிலாஃபத்தின் ஆரம்பத்தில் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் டமாஸ்கஸ், உர்துன் ஆகிய இரு மாகாணங்களுக்கு மட்டும் ஆளுநராக இருந்தார்கள். ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தை அடுத்து ஹிம்மஸ், கன்ஸரைன் ஆகியவற்றின் ஆளுநராக இருந்த ஹழ்லரத் உமைர் இப்னு ஸஃத் அன்ஸாரி (ரலி) அவர்கள் பதவி துறந்தபோது கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் அவற்றையும் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் ஆளுகையிலேயே இணைத்தார்கள். பாலஸ்தீனத்தின் அதிபர் அப்துர் ரஹ்மான் இப்னு அல்க்கமா (ரலி) அவர்கள் மரணித்தபோது பாலஸ்தீனத்தையும் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. இவ்வாறாக பிறகு ஸிரியா மாநிலம் முற்றாக ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறே ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) பஸராவின் ஆளுநராக ஆனபோது பஹ்ரைன், அம்மானின் நிர்வாகமும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. திரிப்போலி, ஸைப்ரஸ், ஆர்மீனியா, தபரிஸ்தான் போன்றவை தனித் தனி மாகாணங்களாக விளங்கின.

கலீ:ஃபா அவர்களின் கண்காணிப்பு

ஆளுநர்களையும் அதிகாரிகளையும் கண்காணிக்க வேண்டிய தம் கடமையிலும் கலீஃபா அவர்கள் தவறவில்லை.

மாகாண ஆளுநர்களுக்கும், அதிகாரிகளுக்கும், படைத்தளகர்த்தர்களுக்கும் கலீஃபா அவர்கள் எழுதிய கடிதங்கள் அவர்கள் கொண்டிருந்த இறையச்சத்துக்கு சாட்சியங் கூறுவனவாய் விளங்குகின்றன.

பதவியேற்பு நிகழ்ச்சிகள் முடிந்தவுடனேயே ஒவ்வொரு மாகாண ஆளுநருக்கும் அவர்கள் எழுதிய கடிதங்களில் முதலில் தாங்கள் கிலாஃபத் பொறுப்பை ஏற்றிருப்பதைக் குறிப்பிட்டு பின்னர்,

''அல்லாஹு தஆலா ஆள்பவர்களுக்கும் அவர்களின் ஏவலர்களுக்குமெனச் சில வரம்புகளை அமைத்து விட்டான். அவ்வரம்புகளின் மீதே நானும் நீங்களும் கடமையாற்றக் கடன்பட்டிருக்கிறோம். அல்லாஹ்வுக்காகவும், ஆட்சிக்காகவும், சமூகத்துக்காகவும் கேட்டுப் பெற வேண்டிய சில கடன்கள் மக்கள் பால் உள்ளன. மக்களுக்காகச் செலுத்த வேண்டிய சில கடன்கள் சமூகத்தின் மீதும், ஆட்சியாளர்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ளன. பெற வேண்டிதும் தரவேண்டியதுமான இரண்டு பணிகளையும்தான் நாம் ஆற்ற வேண்டியுள்ளது. பெற வேண்டியவற்றிலேயே முனைந்து தர வேண்டியவற்றில் நீங்கள் தவறி விடாதிருப்பீர்களாக. மார்க்கம் உங்கள் மீது இந்த இரு பணிகளையும் சம நிலையில் விதித்திருக்கிறது. அவ்வாறேதான் நமக்கு முன் சென்ற நல்லோர்களும் தம் கடனாற்றிச் சென்றிருக்கிறார்கள். அவர்களின் முன் மாதிரியே நமக்கு வழிகாட்டி. இக் கடன்களை ஆற்றுவதில் நாம் பின்னடைந்தோமானால் அல்லாஹ்வுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் முன்பாக நாம் குற்றவாளிகளாவோம். நீதியும் நாணயமும் அமைதியும் உலகை விட்டும் அகன்று விடும்'' என எச்சரித்தார்கள்.

ஜக்காத், ஜிஸ்யா, தீர்வைகளைப் பெற நியமிக்கப்பட்டிருந்த அதிகாரிகளுக்குக் கலீஃபா அவர்கள் பின்வருமாறு கடிதங்கள் எழுதினார்கள்:

''அல்லாஹ் உண்மையையே விரும்புபவன். அவன் விண்ணையும் மண்ணையும் சத்தியத்தோடேயே படைத்து நிலைகொள்ளச் செய்தான். சத்தியத்தையே அவன் ஏவுகிறான். சத்தியத்தையே அவன் ஏற்கிறான். கிலாஃபத்தின் அதிகாரிகளே! உங்களுக்குச் சேர வேண்டியதைத் தரும் மக்களுக்கு நன்றியுடையவர்களாக நின்று நீங்கள் அவற்றைப் பெறுங்கள். வரம்புகளுக்கு மேலாக ஓர் அணு

மையும் அவர்களிடமிருந்து பற்ற நீங்கள் எண்ணியும் பாரா தீர்கள். நாணயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மறுமை நாளைப் பற்றி அஞ்சிக் கொள்ளுங்கள். அந்நாளில் அல்லாஹ்வின் ஏவலர்கள் கொலைகாரர்களின் கூட்டத்தோடு சேர்த்து உங்களையும் விரட்டி வராதிருக்க வேண்டுமே?''

போர்த் தளகர்த்தர்களுக்கும், படை வீரர்களுக்கும் கூட கலீஃபா அவர்கள் அறிவுறுத்தத் தவறவில்லை.

''இஸ்லாத்தின் தளநாயகர்களே! அவர்களின் கீழிருக்கும் சத்தியத்தின் காவலர்களே! உங்களின் கடமைகள் நிச்சயம் உங்களுக்கு நினைவிருக்குமென்றே நான் நம்புகிறேன். எனினும் அந்நினைவுகளைப் பசுமைப்படுத்தவும், பொறுப்புகளை நிறைவேற்ற நீங்கள் கொண்டுள்ள உணர்வுகள் உறுதி பெறவுமே இப்போது நான் இதனை எழுதுகிறேன். எண்ணங்கள் வலுப்பெறுவதால் நமக்குள்ளே கடமைப் பொறுப்புகள் அதிகமாகும். தியாக உணர்வு பொங்கத் துவங்கும். அந்த உணர்வுகளே இஸ்லாமிய ஆட்சியின் வலிமைக்கும் பாதுகாப்புக்கும் உயிரூட்டங்களாகும். எந்தப் படைத் தளத்திலிருந்தும் உங்களிடையே கட்டுப்பாடும் ஒற்றுமையும் தளர்ந்த செய்தி எனக்கு வராமலிருக்கட்டும். அப்படி ஆகி விடுமானால் காவல் பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள் உங்களையே காத்துக் கொள்ள முடியாதாகி விடும். அல்லாஹ் உங்களுக்கு மாறாகப் புதிய காவலர்களை, வீரர்களை உருவாக்க முழு வல்லமையுடையவன். இந்த உண்மையை நீங்கள் புறக்கணித்து விடாதீர்கள். உங்களுக்குக் கிடைத்திருக்கும் இவ்வாய்ப்பை அவனுடைய பேரருளாய் எண்ணிப் பேணிக் கொள்ளுங்கள்'' என்ற அறிவுரைகளைச் சுமந்த ஓலைகள் ஒவ்வொரு பாசறையையும் சென்றடைந்தன.

குணத்தால் மென்மையே குடி கொண்ட அக்கலீஃபா மனதால் எவருடைய துன்பத்தையும் காணப் பொறுக்க மாட்டார்கள். மக்கள் துயர்படாதிருக்க—தங்கள் ஆளுநர்களையும் அதிகாரிகளையும் கண்காணிக்க ஹழ்லரத் **முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களின் தலைமையில்**

ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), உஸாமா இப்னு ஜ்ஸைத் (ரலி) போன்றவர்களுடன் கூடிய ஒற்றர் குழு ஒன்றையும் கலீஃபா அவர்கள் நியமனம் செய்து செயல்படச் செய்தார்கள்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் கலீஃபா அவர்கள் பள்ளியில் தம் பேருரையைத் துவங்குமுன் மேடையில் அமர்ந்து மக்கள் பிரதிநிதிகளை அழைத்து நாட்டின் சுற்றுப் புறநடப்புகளைக் கேட்டறிந்தார்கள். தொலை தூரங்களில் வாழ்ந்த மக்களுக்கு தங்கள் ஆளுநர்கள் பால் ஏற்படக் கூடிய குறைகளை கலீஃபா அவர்களிடமே நேரடியாகத் தெரிவிக்க வாய்ப்பிருந்தது. எல்லா ஆளுநர்களும் அதற்காகவே ஹஜ்ஜுடைய காலங்களில் அரஃபாவுக்கு வந்தே தீர வேண்டுமெனக் கலீஃபா அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள்.

மார்க்கப் பணிகள்

மாநபி (ஸல்) அவர்களின் அருள் வாக்கைப் பெற்ற கலீஃபாவாக இருந்த நிலையில் மார்க்கத்துக்கான பணிகளும் அவர்களால் நிறைவு செய்யப் பெற்றன. போர்களில் சிறையாகி வந்து சேரும் கைதிகளுக்கு கலீஃபா அவர்கள் தீன் மார்க்கத்தின் தேனழகை எடுத்துக் காட்டி அதன்பால் அவர்களை அழைப்பதையே தம் முதற்கடமையாகக் கொண்டார்கள். அவர்களின் அருளுரையால் ஈர்க்கப்பட்டவர்கள் இஸ்லாத்தில் இணைந்து விடுவார்கள். மற்றவர்களின் மீது கலீஃபா அவர்கள் எந்த நிர்ப்பந்தத்தையும் சுமத்தமாட்டார்கள்; அவர்களிடையே எந்த பேதத்தையும் பாராட்ட மாட்டார்கள்.

அதற்கடுத்த கட்டமாக இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு கலீஃபா அவர்கள் தாங்களே முன் நின்று அதன் வழிமுறைகளை, சட்ட வரம்புகளை போதிப்பார்கள். தங்கள் பெருமானின் செயல்முறைகளை அவர்களுக்குச் செயல்படுத்திக் காட்டுவார்கள். இடையில் ஏதேனும் ஐயங்கள் ஏற்பட்டு விடுமாயின் மற்ற நபித்தோழர்களை அழைத்து, தயக்கமின்றி அவற்றைக் கேட்டுத் தெளி

வார்கள்; மற்றவர்களையும் அவர்களிடம் தெரிந்து கொள்ளும்படி பணிப்பார்கள்.

மது அருந்துவோருக்கு கலீஃபா உமர் (ரலி) அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட சவுக்கடி தண்டனையை ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் தொடர்ந்து நடைமுறைப் படுத்தினார்கள். பணப் பெருக்கம் ஏற்பட்டு மக்களில் சிலர் புறாப் பந்தயம், அம்பெய்தல் போன்ற சூதாட்டங்களில் ஈடுபட்டபோது அவர்களை வன்மையாகக் கண்டித்துத் தடை விதித்தார்கள். ஜித்தாவுக்கு கலீஃபா அவர்கள் வந்திருந்தபோது கடற்றுறையில் நிர்வாணமாக நீராடிய மக்களை கண்டித்து இனி எவரும் நிர்வாணமாக நீராடக் கூடாதெனத் தடை விதித்தார்கள்.

'ஜுமுஆ'த் தொழுகைக்கு இரு பாங்குகள்

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் காலத்திலும் முன்னவர்களான இரு கலீஃபாக்களின் காலத்திலும் ஜுமுஆவுக்கு முன்னதாக ஒரு முறையே பாங்கென்னும் அழைப்பு விடுக்கப்பட்டு வந்தது. ஒரு முறை மதீனாவின் பள்ளிக்கு வெளியிலும் மக்கள் திரள் பெரிதாகக் கூடியிருக்க அவர்களில் பலரின் செவிகளிலும் பாங்கொலிக்கப் பட்டது கேட்காமலே போய்விட்டது. அதனை அறிந்த கலீஃபா மறு வெள்ளிக்கிழமை முதலே, வழமையாகக் கூறும் பாங்குக்குச் சற்று முன்னதாகவே பள்ளிக்கு வெளியில் அதிகப்படியாக ஒரு முறை பாங்கொலிக்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் அவ்வழிமுறைப்படியே இன்றளவும் உலகமெங்கும் ஜுமுஆவுடைய தொழுகைக்கு மட்டும் இரு முறை பாங்கொலிக்கப்பட்டு வருகிறது.

'ஜாமிஉல் குர்ஆன்'

கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் இந்த மார்க்கத்துக்கு ஆற்றிய பணிகளில் மிக மேலானது திருமறையை ஓதும் முறையில் உலகத்தாரை ஒருமுகப்படுத்தியதேயாகும்.

ஆஜர்பைஜான், ஆர்மேனியா பகுதிகளில் நடைபெற்ற கலகங்களை ஏடுக்கச் சென்ற மாநபித் தோழர்களில் ஹழ்ல ரத் ஹுதைபத்துல் யமான் (ரலி) அவர்களும் ஒருவர். இராக்கிய அரபுப் படைகளும், ஸிரியாவின் படைகளும் ஒன்று சேர்ந்திருக்கக் கிடைத்த தருணங்களில், இரவு காலங் களில் குர்ஆனை ஓதிய இராக்கியர்கள் வேறு முறையிலும், ஸிரியா வாசிகள் வேறு முறையிலும் ஓதியதை ஹழ்லரத் ஹுதைபா (ரலி) அவர்கள் கண்டனர். மாறுபட்ட முறை யில் ஓதிக் கொண்ட அவர்கள் மற்றவர்கள் ஓதும் முறை தவறு எனவும் தர்க்கித்துக் கொண்டார்கள். ஹழ்லரத் ஹுதைபா (ரலி) அவர்கள் குறுக்கிட்டு நடத்திய விசார ணையில் இராக்கியர்கள் தாங்கள் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது (ரலி) அவர்களிடமே அவ்வாறு ஓதக் கற்ற தாகவும், ஸிரியா வாசிகள் தாங்கள் ஹழ்லரத் மிக்தாத் (ரலி) அவர்களிடமே அவ்வாறு ஓதக் கற்றதாகவும் அறிவித் தனர். அவ்விரு பெரியார்களுமே தாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கற்ற தனித் தனி ஓது முறைகளையே அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்தார்கள். என்றாலும் அப்போது நடந்த தர்க்கம் பிற்காலத்திலும் தொடரு மானால் சமூகத்திடையே அது ஏற்படுத்தி விடக் கூடிய பெரும் பேதங்களை எண்ணி ஹழ்லரத் ஹுதைபா (ரலி) அஞ்சினார்கள்.

அக்கலகங்கள் யாவும் ஓய்ந்து மதீனா திரும்பிய ஹழ்ல ரத் ஹுதைபா (ரலி) அவர்கள் கலீஃபா அவர்களைச் சந் தித்தபோது தாங்கள் கண்ட நிலையைக் கூறி திருமறையை ஓதுவதற்கான ஒரே முறையை உலகத்தாருக்கு அறிமுகப் படுத்த வேண்டிய தேவையை உணர்த்தினார்கள்.

திருக் குர்ஆனை ஒரே நூலுருவிலாக்கிய பெருமை ஹழ் லரத் அபூபக்கர் (ரலி) அவர்களுக்கே உரியது. எனினும் ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களால் ஒரு நூலுருவிலாக் கப்பட்டு முஸ்ஹப் எனப் பெயருமிடப்பட்ட அப்பிரதி முதலில் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடமும் பின்னர்

ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமும் பாதுகாப்பாக இருந்தது. அன்றி அது பிரதிகள் எடுக்கப்பட்டு மக்களிடையே அது வரை புழக்கத்தில் விடப்படவில்லை. விரும்பியவர்களுக்கு அதனைப் பிரதிகள் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு மட்டும் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்கள் பலரும் அதனைப் பிரதிகள் எடுத்து அந் நபிகளாரிடம் தாம் கற்ற பல்வேறு ஓது முறைகளில் ஓதி வந்தார்கள்; பிறருக்கும் கற்பித்துத் தந்தார்கள்.

மாறுபாடுகள் தெரிந்ததெல்லாம் ஓது முறையிலேயேயன்றி இறை வசனங்களிலும் அதன் கருத்துக்களிலும் ஒரு போதும் இல்லை. என்றாலும் பிற்காலத்தில் அரபல்லாத அஜமிகள் இஸ்லாத்தில் இணைந்து அரபிகளோடு கலந்து பிரிகையில் அவ்வோது முறை மாறுபாடுகளே பொருள்களையும் பேதப்படுத்தி குழப்பத்தை உண்டாக்கி விடலாம் என்ற அச்சம் கலீஃபா அவர்களையும் வருத்தியது.

கலீஃபா அவர்கள் உடனடியாக அன்னை ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமிருந்த பிரதியைக் கேட்டுப் பெற்றார்கள். ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர், ஸஈதிப்னுல் ஆஸ், அப்துர் ரஹ்மான் இப்னு ஹாரிஸ், இப்னு ஹிஷாம் மக்ஸூமி (ரலி) ஆகிய திருக் குர்ஆனை முழுமையாக மனனம் செய்த குரைஷித் தோழர்களை ஒன்று கூட்டினார்கள். கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்களால் திருமறை வசனங்களை ஒன்று சேர்க்கப் பொறுப்பளிக்கப்பட்டவர்களான ஹழ்லரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களை அம்மூவருக்கும் தலைமையாக்கினார்கள். முஸ்ஹபிலிருந்து திருக் குர்ஆன் வசனங்களை ஹழ்லரத் ஜ்ஸைத் [ரலி] அவர்கள் ஓதி வர, மற்ற மூவரையும் பிரதி எடுக்கச் செய்தார்கள். ஓது முறையில் அவர்களுக்கிடையில் பேதம் தோன்றுமாகில் குரைஷித் தோழர்கள் மூவரின் கருத்துப்படி பிரதிகள் பதிவு செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிட்டார்கள். ஏனெனில் திருக்குர்ஆன் இறங்கியது முதலில் குரைஷிகளுக்கிடையிலேயேயான தால்.

அவ்வாறாக ஏழு பிரதிகள் எடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்றைக் கலீஃபா அவர்கள் மதீனாவில் தங்களிடமே வைத்துக் கொண்டார்கள். மற்றவற்றை மக்கா, ஸிரியா, யமன், பஹ்ரைன், கூஃபா, பஸ்ரா ஆகிய நகரங்களுக்கு அனுப்பி அதன்படியே திருமறை ஓதப்பட வேண்டுமெனக் கட்டளையிட்டார்கள். அதற்கு முன் இருந்த மற்றப் பிரதிகளனைத்தையும் எரித்து விடச் செய்தார்கள். அன்னை ஹஃப்ஸா (ரலி) அவர்களிடமிருந்து பெறப்பட்ட மூலப் பிரதியை அவர்களிடமே திரும்பவும் ஒப்படைத்து விட்டார்கள்.

திருக் குர்ஆன்—இறைவனின் திருமறை.

அது எவராலும் எழுதப்பட்டதல்ல—இயற்றப்பட்டதல்ல—படைக்கப்பட்டதல்ல—அல்லாஹ்வினால் அருளப்பட்டது. காலத்தால் அது மாற்றப்பட்டு விடாமல் — அதன் கோலம் குறை கொண்டு விடாமல்—ஞாலத்தின் அழிவோடும் அது அழிந்து விடாமல் உயர்த்தப்பட்டே தீரும் என்பதற்கு அதுவே சரியான ஆதாரம் கூறுகிறது:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ ○

''நிச்சயமாக நாம்தாம் இவ்வேதத்தை இறக்கி வைத்தோம். நிச்சயமாக நாமே அதனைப் பாது காத்துக் கொள்வோம்.'' (15 : 9) என்று.

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் அருள் மிகுத் திருவாழ்வில் இருபத்து மூன்றாண்டு கால இடைவெளியில், நானூற்று எண்பத்தாறு சந்தர்ப்பங்களில், அவ்வப்போது அருளப்பட்ட ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு திருவசனங்களும் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டன. நபிகளுக்கரசர் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அவ்விறை வசனங்களை ஒவ்வொரு முறை எத்தி வைக்கும்போதும் விண்ணவர்கோன் ஜிப்ரயீல் (அலை)

அவர்கள் தாங்கள் அப்போது கொணர்ந்ததை அதற்குமுன் கொணரப் பெற்ற எந்த வசனத்தையடுத்து இணைக்கப் பட வேண்டும் என்பதையும் கூறி விடுவார்கள். அதன்படியே நபி பெருமான் (ஸல்) அவர்களால் அது அறிவிக்கப்பட்டு தோழர்களால் பதிவு செய்யப்பட்டு விடும்.

ஒவ்வோர் ஆண்டும் ரமழ்லான் மாதத்தில் அதுவரை இறக்கப்பட்ட திருக் குர்ஆன் வசனங்களை அண்ணலார் (ஸல்) அவர்களைக் கொண்டு முழுமையாக ஓதச் செய்து விண்ணவர்கோன் ஜிப்ரஈல் (அலை) கேட்பார்களென்றும், அண்ணலார் (ஸல்) அவர்கள் இவ்வுலக வாழ்வுக்கு நிறைவு கண்ட இறுதி ரமழ்லானில் அவ்வாறு இரு முறை ஓதச் செய்து கேட்டார்களென்றும், அண்ணலார் (ஸல்) அவர்கள் தம் உலக வாழ்வு நிறைவு கொள்ளப் போவதற்கு அதையும் ஒரு முன்னறிவிப்பாகக் கணித்துக் கூறினார்களென்றும் அப் பூமானின் புகழ் மிக்க வரலாறு கூறுகிறது.

அருள் மறை திருக் குர்ஆன், அண்ணலார் (ஸல்) அவர் களின் வாழ்நாளிலேயே அல்லாஹ்வினால் ஓர் அமைப்பில் உருவாக்கப்பட்டு விட்டது என்பதற்கு அதுவே சான்றாகப் போதும். அவ்வமைப்பு முறையிலேயே பல நூறு புனிதத் தோழர்களின் நெஞ்சங்கள் தம் நினைவாற்றல் கொண்டு அருள் மறையைப் பாதுகாக்கும் கருவிகளாய்ச் செயல்பட்டு வந்தன,

எனினும் தாள்களின் புழக்கம் குறைந்த அப்பகுதியில் அவை அனைத்தும் தோல்களிலும், மரப் பலகைகளிலும், எலும்புப் பட்டைகளிலும் பதியப்பட்டே பிரிந்திருந்தன. அவை அனைத்தையும் தாள்களில் திரட்டிச் சேர்த்து ஒரே நூலுருவிலாக்கினவர்கள் முதற் கலீஃபா அபூபக்கர் (ரலி) ஆவார்கள். அதனையே பல பிரதிகள் எடுத்து உலகெலாம் பரவ அனுப்பி, தோன்றும் ஒவ்வொரு தலைமுறையிலும் வளரும் ஒவ்வொரு பசளையும் அதனைப் பெற்றுக் கொள்ள வழிவகுத்த பெருமைக்குரியவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களே. அதனாலேயே 'ஜாமிஉல் குர்ஆன்'

என்னும் புகழாரங் கொண்டு அவர்களுக்குப் பூச்சூடுகிறது உலகம்.

விதுமாறு வொளிவான வதனாதி நபிநாவில்
  விளைவான திருவேதமே
பதிவாக வொருசேக ரமதாக நிலமீது
  பயிராக வுரைதூ வினோர்
சதுமாம றையினோர்கள் பெரியோர்கள் சிறியோர்க
  டமதாவி யெனவாழுவோர்
உதுமானை யொருகாலு மறவாம லிருகாலு
  முளமீது நினைவாமரோ

(உமறுப் புலவரின் 'சீறா')



சோதனை வாழ்க்கை

ஸித்தீக்குல் அக்பர் ஸையிதினா ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களால் துவக்கப் பெற்ற கிலாஃபத் என்னும் நல்லாட்சி இரண்டாண்டுகள் மூன்று மாதங்கள் பதிமூன்று நாட்கள் நடைபெற்றது.

அடுத்துப் பொறுப்பேற்ற ஸையிதினா ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் ஏறத்தாழ பத்தரை ஆண்டு காலம் தொடர்ந்தது.

மூன்றாம் கலீஃபா ஸையிதினா ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் ஒரு சில நாட்களே குறைய பனிராண்டாண்டு காலம் கிலாஃபத் நடத்தினார்கள்.

இறுதியாகக் கிலாஃபத்தை ஏற்ற ஸையிதினா ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களும் நாலரை ஆண்டுகளே பொறுப் பேற்றிருந்தார்கள்.

ஆக, குலஃபாயெ ராஷிதீன் அல் மஹ்திய்யீன் எனப் பட்ட நேர்வழி காட்டப் பெற்ற அச்சீரார் கலீஃபாக்களில் மிக அதிகமான நாட்கள் பணியேற்றுச் சிறந்தவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களே.

நாட்டின் எல்லைகள் மிக விரிவடைந்ததும் அவர்களின் ஆட்சியிலேயே.

மக்கள் வாழ்வில் வளம் மிகக் கொழித்ததும் அவர் களின் கிலாஃபத்திலேயே.

ஆனால், தம் மாட்சியால் சிறந்த அம் மாண்புசால் கலீஃபாவின் வாழ்க்கையை மக்கள் ஒரு படு கொலையில் முடித்தார்கள் என்பதே எத்தகைய பரிதாபம்!

ஆம்—ஹிஜ்ரீ 35-ம் ஆண்டு துல்ஹஜ்ஜு மாதம் 18 அல்லது 24-ம் நாள், இஸ்லாத்தின் மூன்றாம் கலீஃபா ஸையிதினா உதுமான் கனீ (ரலி) அவர்கள்,

தம் மாநபிகளார் மறைந்து உறையும் மதீனாத் திருநக ரிலேயே,

தங்களையும் முஸ்லிம்கள் என்று கூறிக் கொண்ட ஒரு கூட்டத்தாரின் கரங்களாலேயே,

'எவ்விதக் குற்றமுமற்றவர் கலீஃபா' என முடிவு காணப்பட்ட நிலையிலேயே—படுகொலை செய்யப்பட்டது தான் எவ்வளவு வேதனைக்குரிய செய்தி!

முன்னறிவிப்புகள்

ஒரு நாள், அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஒரு தோட்டத்தில் சாய்ந்தமர்ந்து வண்டல் மண்ணை ஒரு குச்சியால் கிளறிக் கொண்டிருந்தார்கள். சிந்தனை வயப்பட்டிருந்த அவர்களின் செவிகளுக்குத் தோட்டத்தின் வாயில் கதவு தட்டப்படும் ஒலி கேட்டது. வாயிலருகே ஹழ்லரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் காவலாய் நின்றிருந்தனர். கதவைத் திறந்து விட்டு, வரு பவருக்கு சுவனத்தைப் பற்றி நன்மாராயம் கூறுமாறு பெரு மானார் (ஸல்) அவர்கள் பணித்தார்கள். ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் கதவைத் திறந்தனர். அங்கு ஹழ்ல ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் நின்றிருந்தனர். ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் மூலம் அண்ணலார் (ஸல்) அவர் களால் தமக்கருளப்பட்ட சுவன நன்மாராயத்தைக் கேட்ட ஸித்தீக்குல் அக்பர் [ரலி] அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி செலுத்தியவர்களாக உள்ளே சென்றார் கள்.

சற்று நேரம் கழித்து மறுபடியும் கதவு தட்டப்படும் ஒலி கேட்டது. முன்போலவே கதவைத் திறந்து விட்டு வருபவருக்கு சுவனத்தைப் பற்றி நன்மாராயம் கூற அண்ணலார் (ஸல்) அவர்கள், அபூ மூஸா (ரலி) அவர்களை ஏவினார்கள். ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் கத வைத் திறக்க அங்கு ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் நின் றிருந்தார்கள். தமக்கு அறிவிக்கப்பட்ட சுவன நன்மாரா யத்தைச் செவியுற்று ஃபாரூக்குல் அஃலம் (ரலி) அவர்களும்

இறைவனைப் புகழ்ந்து நன்றி செலுத்தியவர்களாக உள்ளே சென்றமர்ந்தார்கள்.

மீண்டும் சில விநாடிகளுக்குப் பின் கதவு தட்டப்படும் ஒலி கேட்டது. இம்முறை அண்ணலார் [ஸல்] அவர்கள் எழுந்தமர்ந்து கொண்டு கூறினார்கள்,

افْتَحْ لَهُ وَبَشِّرْهُ بِالْجَنَّةِ عَلَى بَلْوَى تُصِيبُهُ

''கதவைத் திறப்பீராக-தொடப் போகும் சோதனைக்குப் பகரமாக அவருக்கு சுவனத்தைப் பற்றி நன்மாராயம் கூறுவீராக" என்று.

ஹழ்லரத் அபூமூஸா [ரலி] அவர்கள் கதவைத் திறந்த போது, ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களே அங்கு நின்றிருந்தார்கள். நன்மாராயத்தைச் செவியுற்று நன்றி கூறிய அந்நாயகத் தோழர், ''இறைவா! எனக்குப் பொறுமையை அருள் புரி" என இறைஞ்சினார்கள். பின்னர் ''அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்" எனக் கூறிக் கொண்டவர்களாக உள்ளே சென்றனர்.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு விளையப் போகும் விபரீதத்தைப் பற்றி அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்நிகழ்ச்சியை புஹாரீ, முஸ்லிம் ஆகிய இரு இமாம்களுமே அறிவிக்கிறார்கள்.

விளையப் போகும் குழப்பங்களைப் பற்றி ஒரு சமயம் விவரித்துக் கொண்டிருந்த அண்ணலார் (ஸல்) அவர்கள், ''அக்குழப்பத்தின்போது உதுமான் அநீதமாகக் கொல்லப்படுவார்" என முன்னறிவித்ததையும் ஹழ்லரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் வரலாற்றில் காணப்படும் உஹது மலைச் சம்பவமும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கு இறவாப் பெருவாழ்வே நிச்சயம் என்பதற்குச் சான்று கூறுகிறது.

ஆனால் அருமைக் கலீஃபா அவர்கள் நடைபெற்ற போர்க்களங்களில் ஏதாவதொன்றில் எதிரிகளால் வெட்டப்பட்டே வீரத் திருவாழ்வை அணைத்திருக்கலாகாதா?

அப்படியின்றி அவர்கள் வணங்குதற்குரியவனாக அல்லாஹ் ஒருவனையே ஏற்ற தங்கள் உற்ற சகோதரர்களாலேயே கொல்லப்பட்டார்களென்றால்......

அதையே கலீஃபா அவர்கள் பெற்ற தவப்பேறெனக் கொள்வதா? அல்லது இந்த சமூகத்தைச் சூழ்ந்த பவக் கேடென்பதா?

பனூ முஸ்த்தலிக் என்னும் கூட்டத்தார் என்னை அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களிடம் சென்று தங்களுக்குப் பின் நாங்கள் எங்களின் தர்மப் பொருள்களை யாரிடம் சேர்ப்பிப்பது? எனக் கேட்டு வரச் சொன்னார்கள். நான் சென்று கேட்டபோது நபி பெருமான் (ஸல்) அவர்கள் 'எனக்குப் பின் உங்கள் தர்மப் பொருள்களை அபூபக்கரிடம் சேர்ப்பியுங்கள்' எனக் கூறினார்கள். அதைச் சென்று நான் அறிவித்தேன். 'அபூபக்கருக்கு ஒரு முடிவு சம்பவித்தால் பின்னர் யாரிடம் சேர்ப்பிப்பது?' எனக் கேட்டு வரும்படி பனூ முஸ்த்தலிக்குகள் என்னை ஏவினார்கள். அவ்வாறே நான் சென்று கேட்கவே, அண்ணலார் (ஸல்) அவர்கள் 'உமரிடம் சேர்ப்பியுங்கள்' எனக் கட்டளையிட்டார்கள். அதனை வந்து நான் அறிவித்தேன். அவர்கள் என்னை 'உமருக்கும் ஒரு முடிவு நெருங்கிடுமானால் எவரிடம் சேர்ப்பிப்பது?' எனக் கேட்டு வர மீண்டும் அனுப்பினார்கள். நான் சென்று கேட்டபோது நபிகளார் (ஸல்) 'உதுமானிடம் சேர்ப்பியுங்கள்' என ஏவினார்கள். அதனை வந்தறிவித்த என்னை பனூ முஸ்த்தலிக்குகள் மறுபடியும் அனுப்பினார்கள், 'உதுமானுக்கும் ஒரு கேடு சம்பவிக்குமானால் யாரிடம் சேர்ப்பிப்பது?' என்று அறிந்து வரும்படியாக. அவ்வாறே நான் சென்று வினவியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் 'உதுமானுக்கு ஒரு கேடு சம்பவிக்குமானால் அது உங்களுக்கும் நிரந்தரக் கேடாகவே ஆகி விடும்' என்றார்கள்-என ஹழ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அவ்வாறே ஆகியது! சமுதாயத்தைப் பற்றிய நிரந்தரக் கேடாகக் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் உலக வாழ்க்கை ஒரு படுகொலையிலேயே நிறைவு பெற்றது.

அதற்குரிய காரணங்கள் யாவை?

அருளைத் தம் பொருளால் விலை பேசிய அத்திருவுடைய நாயகரை, துரோகிகள் தம் குறுவாளின் குறிப் பொருளாய்க் கொள்ள கலீஃபா அவர்கள் என்ன கொடுமைகளை அவர்களுக்குச் செய்து விட்டார்கள்.

மறுவிலா மதியே வருக! குறையிலா அருளே வருக! என மாநபியை வரவேற்றணைத்த மதீனாத் திருநகரம் அம்மாநபியின் மருகரை — மார்பணைத்த தோழரை கொல்லக் காண நேர்ந்த விந்தைதான் என்ன?

மறதியும் மயக்கமும்

ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின் போது பொதுவாக தம் முன்னவர் ஃபாரூக்குல் அஅலம் (ரலி) அவர்களின் நிர்வாக முறைகளையே பற்றித் தொடர்ந்தார்கள். பிந்திய காலத்தில் அவர்களின் மீது பல்வேறு அபாண்டங்களைச் சுமத்திய குழப்பவாதிகளுக்கும் கூட எந்தவிதமான ஒரு குற்றச்சாட்டையும் சுட்டிக் காட்ட முடியாத அளவுக்கு கலீஃபா அவர்களின் ஆரம்ப கால ஆட்சி இருந்தது. மதீனா அமைதியும் சுபிட்சமும் நிறைந்து விளங்கியது. மக்களின் நெஞ்சங்கள் இக்கலீஃபாவை மிகவும் ஏற்றியே புகழ்ந்தன. காரணம் நிர்வாக முறைகள் ஃபாரூக்குல் அஅலம் [ரலி] அவர்கள் வகுத்தளித்துச் சென்ற வழிப்படியே இருந்த போதிலும், மக்களின் வாழ்க்கை நடைமுறைகளோடு கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் கொண்ட அணுகுமுறைகளில் ஹழ்ரத் ஸித்தீக்குல் அக்பர் (ரலி) அவர்களின் கனிவும் கழிவிரக்கமுமே பிரதிபலிக்க மக்கள் கண்டனர். ஏறத்தாழ பத்தரை ஆண்டு காலத்தை ஃபாரூக்குல் அஅலம் (ரலி) அவர்களின் கண்டிப்பான கண்காணிப்பில் கழித்த மக்களின் இதயங்கள் சற்றே ஆசுவாசப் பெருமூச்சு விட ஒரு வாய்ப்பு கிடைத்த

தென்றாலும், கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின், இளகிய மனமும், தாராள குணமும் ஆங்காங்கே மாகாணங்களின் ஆட்சியில் இருந்தவர்களுடையவும், அதிகாரங்களை மேற் கொண்டிருந்தவர்களுடையவும் உள்ளங்களைப் பற்றி யிருந்த ஃபாருக்கிய பநட்டத்தை விலகச் செய்து விட்டன என்பதை மட்டும் மறுப்பதற்கில்லை.

சன்னஞ்சன்னமாக அவர்களின் எண்ணப் போக்கு களில் அலட்சியம் குடி புகலாயிற்று. தொடர்ந்தே அவர்கள் சூடி வந்த வாகைகளும் அவ்வாகைகளின் பலனாக அவர் கள் பெற்ற வெற்றிப் பொருள்களும் மறதியுடன் கூடிய மயக்கத்தை அவர்களுக்கூட்டி உலகாயத சுகபோகங்களின் பால் அவர்களை நகர்த்தித் தள்ளலாயின. அரபுகளின் மீது தாங்கள் கொண்டிருந்த ஆதிக்கப் பிடியை உதறி 'விட் டோடி கை பிசைந்து நின்ற யூதர்களுடையவும் ரோமர் களுடையவும் பார்வைகளுக்கு ஒரு நம்பிக்கைக் கீற்று பளிச் சிடலாயிற்று. தங்களின் நயவஞ்சகத் தந்திரங்களால் குழப் பத்தை உருவாக்கி, கலகத்தை விளைவித்து மாபெரும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின்-மகிமையால் சிறந்த கலீஃபா வைக் கொல்வதற்கு முஸ்லிம்களிடையே முளைவிடத் துவங் கிய அவ்வாரம்ப பலஹீனமே அடித்தளம் அமைத்துத் தந்த கொடுமையை மறைக்கவே நாம் விரும்பினாலும் கலீஃபா அவர்களின் பிந்திய ஆறாண்டு கால வரலாறு ஒரு போதும் நம்மை அனுமதிக்காது.

செல்வமும், சுகபோகமும் சமூகத்தில் விளைவிக்கப் போகும் அச்சீர்கேட்டை நாயகத்தின் அக்கலீஃபா அவர்கள் மிக முன்னுணர்ந்தவர்களாகவே இருந்தார்கள் என்பதை, அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற ஆரம்ப நாளில் ஆற்றிய உரையே காட்டுகிறதல்லவா?

'கைருல் குரூன்'

அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் ஹிஜ்ரி 5-ம் ஆண்டில் ரோமானியர்களின் ஆதிக்கத்திலிருந்த தூமத் துல் ஜந்தல் கோட்டையை நோக்கிப் படை நடத்திச் சென் றார்கள். ஸிரியாவின் வழியில் ஏறத்தாழ பதினைந்து நாட்

கள் பயணத் தொலைவில் அமைந்திருந்தது அக்கோட்டை. எதிரிகள் அங்கு தங்கியிருந்து மதீனாவின் மீது படையெடுத்து வர ஆயத்தமாகிறார்கள் எனக் கேள்வியுற்று, அம்முயற்சியை முறியடிக்க நடத்தப்பட்ட அப்படையெடுப்பே, தங்களை அண்மி வாழ்ந்த அன்னியர்கள் மீது ஆரம்பகால முஸ்லிம்கள் மேற்கொண்ட முதல் நடவடிக்கையாகும். அன்று துவங்கி, கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் பதவி ஏற்றதற்கிடைப்பட்ட ஏறத்தாழ இருபதாண்டு காலங்களில் எத்தனையோ போர்க்களங்களை முஸ்லிம்கள் சந்திக்க நேர்ந்தது. அத்தனையிலும் அவர்கள் வெற்றிக்கு மேல் வெற்றிகளாய்ப் பெற்றுச் சேர்த்தார்களேன்றி ஜுஸ்ரில் ஏற்பட்ட ஒரு சருகுதலைத் தவிர்த்து எந்த நாளிலும் அவர்களுக்குத் தோல்வியின் முகம் காண வாய்ப்பேற்பட்டதில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 5-ம் ஆண்டில் தூமத்துல் ஐந்தலுக்குச் சென்றபோது அவர்களோடு சென்ற முஸ்லிம்கள் ஓராயிரம் பேர். பின்னர் நடந்த மூத்தாப் போரில் மூவாயிரம் பேர் பங்கேற்றனர். அதனையும் அடுத்து, நபி பெருமான் (ஸல்) அவர்களின் காலத்தில் இறுதியாக நடைபெற்ற தபூக் படையெடுப்பில் முப்பதினாயிரம் வீரர்கள் கலந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களை அடுத்து ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்றவுடன் ஹழ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படை மதீனாவைவிட்டும் வெளிச்சென்று திரும்பியது. பின்னர் மதம் மாறிய குழப்பவாதிகளையும் கலகங்களை விளைவித்த துரோகிகளையும் எதிர்த்து அவர்கள் உள் நாட்டிலேயே போராடினார்கள். அப்போர்களை ஒய்த்து அவர்கள் இராக்கின் புறமும் ஸிரியாவின் புறமும் ஒரே சமயத்தில் படை நடத்திச் சென்றார்கள்; பாரஸீக, ரோமப் பெரு வல்லரசுகளின் மீது ஒரே நேரத்தில் பாய்ந்தார்கள். ஆனால், எந்த நாளிலும் எந்த ஒரு போர்க்களத்திலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அவர்களை எதிர்த்து நின்றவர்களின் எண்ணிக்கையை மிகைத்ததாகவல்ல-அதற்குச் சமநிலையில்கூட இருந்ததில்லை.

எதிரிகளின் ஒவ்வொரு படைத் திரளுக்கும் முன்பாக முஸ்லிம்களின் அணிவகுப்பு நலிந்ததாகவும் மெலிந்ததாகவுமே இருந்தது. ஏறத்தாழ ஐந்து கோடி குடி மக்களைக் கொண்டிருந்ததும் ஸிரிய நிலப் பரப்பில் தன் ஆதிக்கத்தை ஊன்றி வைத்திருந்ததுமான ரோமப் பேரரசுக்கும் சரி, பாரஸீகப் பேரரசுக்கும் சரியே—அரபுகளின் ஒவ்வொரு படைக் கூட்டத்தையும் போன்ற ஒரு நூறு மடங்கு படைகளைத் திரட்டிக் கொணர்வது எளிதான செயலாகவே இருந்தது. படைப் பெருக்கத்தோடு கால மாறுதலுக்கேற்ற நவீனமான பல போர்த் தளவாடங்களையும் ரோமானியர்கள் தங்கள் கரமேந்தி வந்த அதே சமயம் அரபுகளோ தங்கள் பழமையான வாள், வில், அம்பு, வேல்களைத் தவிர வேறொன்றையும் பெற்றிருக்கவில்லை. பொருளாதார நிலையிலோ அரபுகள் போதிய உணவுக்கும், பயணஞ் செய்யத் தேவையான வாகனங்களுக்கும் கதியற்றிருந்தனர்.

தங்கள் தங்கள் தலங்களிலிருந்தே போராடிய எதிரிகளுக்கு அப்பூமிகளின் ஒவ்வொரு மேடு பள்ளங்களும் பாதைகளின் வளைவு நெளிவுகளும் விளங்கியிருந்தன. ஆபத்து காலங்களில் தங்களை எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்வதற்காக அவர்கள் மிகப் பலமான கோட்டைகளையும், மறைவான பதுங்குந் தலங்களையும் பாரஸீக, ஸிரிய, பாலஸ்தீனிய, ஆப்பிரிக்க பூமிகளெங்கும் முன்னதாகவே கட்டி வைத்திருந்தார்கள். போர்க் காலங்களில் அவர்களுக்குதவ பல்வேறு கோத்திரத்தார்களும் உடன்பாடு கொண்டு காத்திருந்தார்கள் ஆங்காங்கே.

உண்ணும் உணவுக்கும், வாகனங்களுக்கும் கூட வக்கற்ற நிலையிலும் ஊக்கங் கொண்டு தங்கள் ஊரைத் துறந்து சென்ற அவ்வாரம்ப கால முஸ்லிம்கள், தங்களுக்கு முற்றும் புதியனவான அந்நிலப்பரப்புகளில் அடியெடுத்து வைத்தபோது அவர்களை வரவேற்கவும் வழி காட்டவும் எந்த ஒரு துணையும் அவர்களுக்கிருக்கவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் நடந்து சென்ற பாதைகளில் எதிர்பட்ட கோட்டைகளும், கொத்தளங்களும் அவர்களுக்கு விளைவித்த தடைகளும், தங்கடங்களுமே அனந்தம்.

எண்ணிக்கைப் பருப்பத்தில் மெலிந்து, பொருளாதாரத்தில் நலிந்து, உண்ணும் உணவுக்கும் வாகனங்களுக்கும் தளவாடங்களுக்கும் தன்னிறைவு பெறா நிலையிலும் எவ்விதத் துணையுமற்ற அவ்வாரம்ப கால முஸ்லிம்கள் தங்கள் பாதைகளில் எதிர்பட்ட தடைகளையும், தங்கடங்களையும் தகர்த்துப் படுதூளாக்கி, வெற்றியோ வெற்றி எனப் பறை முழக்கி, பேரரசுகள் இரண்டையும் நிலை புரளச் செய்தார்களென்ற செய்தி கேட்பவர்களுக்கு வியப்பை அளித்தாலும், மறக்க முடியாத வரலாற்று உண்மை என்னவோ அதுவே தான்!

நெஞ்சத் துணிவொன்றையே துணையாக வரிந்து, எதிரிகளின் வல்லமைப் பெருக்கத்தைப் பற்றிய சிந்தனை எள்ளளவுமின்றி அரிமாக்களெனப் பாய்ந்த அவ்வடலேறுகள் தங்கள் வைரிகளுக்கு ஒவ்வொரு போர் முனையிலும் பரிதாபகரமான தோல்வியைத் தந்து அவர்களைப் புற முதுகிட்டோடச் செய்ததோடு மட்டுமல்ல வெல்லப்பட்ட நிலப்பரப்புகள் இனி ஒரு காலமும் தங்கள் கரங்களை விட்டும் பறிபோகாதவாறு பாதுகாத்துக் கொண்டதும் உண்மையில் புதினமேயாகும். பாரஸீகத்திலோ, ஸிரியாவிலோ, எகிப்திலோ, ஆப்பிரிக்காவிலோ இழந்த தங்கள் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதென்பது ஈரானியர்களுக்கும் ரோமானியர்களுக்கும் கலையும் வெறும் கனவுகளாகவே இருந்தன. அரபுகளுக்கு மாறாக மற்ற எந்த வல்லமைகளோடும் பொருதி அவர்கள் அதற்கு முன்னர் அத்தகைய இழப்புகளை அடைந்தவர்களே அல்லர்.

ரோமானியர்களிடமிருந்து அரபுகள் வென்ற அந் நிலப்பரப்புகளை முஸ்லிம்களுக்கு முன்னதாகவே வேறு பல ஆதிக்கவாதிகளும் வென்றிருக்கிறார்கள். ஆயினும் ஒரு குறுகிய கால கட்டத்தைக் கடந்து அவர்களெல்லாம் தங்கள் ஆதிக்கத்தை அங்கு நிலைக்கச் செய்ய ரோமர்கள் விட்டு வைக்கவில்லை.

இறுதியாக ஈரானியப் பெருவல்லமையும் ரோமர்களோடு பொருதி அப்பூமியை வெற்றி கண்டது. ஆனால் அவ்வெற்றி நிலைத்திருக்கப் போவதில்லை.

غُلِبَتِ الرُّوْمُ ۝ فِيْٓ اَدْنَى الْاَرْضِ وَهُمْ مِّنْۢ بَعْدِ غَلَبِهِمْ سَيَغْلِبُوْنَ ۝ فِيْ بِضْعِ سِنِيْنَ ۬

''ரூம்வாசிகள், சமீபத்திலுள்ள பூமியில் (தற்சமயம்) தோல்வி அடைந்தனர். (இன்று) தோல்வி அடைந்து விட்ட போதினும், அதிசீக்கிரத்தில் அவர்கள் வெற்றி அடைவார்கள்—சில வருடங்களுக்குள்ளாகவே." (30 : 2 to 4)

—எனத் திருக் குர்ஆன் ஆரம்பத்திலேயே முன்னறிவித்தது.

அதன்படியே பின்னர் திரண்டெழுந்த ரோமர்கள் தங்கள் ஆதிக்க பூமியை மீண்டும் பறித்துக் கொண்டதோடு ஈரானியர்களை ஓட ஓட விரட்டிச் சென்று மதாயினுள் பதுங்கச் செய்த பின்னரே அமைதி கொண்டனர்.

முஸ்லிம்கள் பத்ருப் போரில் வெற்றி கண்ட அதே சமயத்தில்தான் ரோமர்கள் ஈரானியர்களை வெற்றி கண்டனர். இணை வைத்து வணங்கி வந்த குரைஷிகளைத் தாங்கள் கொண்ட வெற்றியோடு வேதக்காரர்களாகிய ரோமர்கள் நெருப்பை வணங்கி வந்த ஈரானியர்களை மிகைத்தே தீருவார்கள் என்ற திருக் குர்ஆனின் அருள் வாக்கு பெற்ற வெற்றியும் சேர்ந்து இஸ்லாமியர்களைப் புளகாங்கிதம் கொள்ளச் செய்தன. ஆனால் ரோமர்கள், அந்தத் தங்களின் ஆற்றலை அம் முஸ்லிம்களின் மீதே செலுத்திப் பார்க்க முயன்றபோது காலித் ஸைஃபுல்லாஹ், அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) போன்ற இஸ்லாமிய தளநாயகர்கள் அம் முயற்சியை முறியடித்து ஐரோப்பாவின் அனதோலியாவிலிருந்து ஆப்பிரிக்காவின் அலெக்ஸாண்டிரியா வரை விரிந்த ஆசியாவின் நிலப்பரப்பை இனி என்றும் திரும்பியே பார்க்காதவாறு அவர்களை விரட்டியடித்தார்கள்.

அத்தகைய மகத்தான வெற்றிகளை ஆரம்ப கால அவ்வரபுகளுக்கு ஈட்டித் தந்த பேராற்றல் எது? மற்றவர்களிடமிருந்து பெற்ற வெற்றிகள் பின்னர் கை நழுவி விடாமல் அவர்களிடமே நிரந்தரச் சொந்தமாகி நிற்க அவர்கள் செய்த சாதனைதான் என்ன?

وَاذْكُرُوا نِعْمَتَ اللَّهِ عَلَيْكُمْ إِذْ كُنْتُمْ أَعْدَاءً فَأَلَّفَ بَيْنَ قُلُوبِكُمْ فَأَصْبَحْتُمْ بِنِعْمَتِهِ إِخْوَانًا

"ஒருவருக்கொருவர் நீங்களே விரோதிகளாகி நின்று நரக நெருப்புக் கிடங்கிற்கு வெகு அருகாமையை அடைந்து விட்ட சமயம், உங்களின் இதயங்களுக்கிடையே பிணைப்பை ஏற்படுத்தி, தன் பேரருளால் உங்களை ஒருவருக்கொருவர் உடன்பிறந்தவர்களாக ஆக்கிவைத்தானே— அல்லாஹ்வின் அந்தப் பேரருளை நினைத்துப் பாருங்கள்— என அறிவூட்டுகிறது திருக் குர்ஆன் (3 : 103).

ஆம்! பேதைகளாய் உழன்ற அரபுகளிடையே ஒரு பேரருளாகவே பிறந்த பெருமான் நபி (ஸல்) அவர்கள் தங்கள் வாக்காலும், வாழ்வாலும் ஊட்டிய உணர்வுகளும் பயிற்சிகளுமே அப்பெரும் வெற்றிகளுக்கெல்லாம் பாலங்களாய் அமைந்தன. குரோதமும், பொருமலும், கொள்ளையும், செறுமலுமே குணங்களாய்க் கொண்டிருந்தவர்களிடையே குண மகனார் நபி (ஸல்) அவர்கள் இணக்கத்தையும் ஒழுக்கத்தையும் உருவாக்கினார்கள்; ஈகையையும் வணக்கத்தையும் பயிற்றுவித்தார்கள். மாநபியின் தோழமையில் மேதைப் பண்புகளனைத்தையும் பெற்று அவ்வரபிகள், தாங்கள் கற்ற புதிய நிகண்டில் மரணம் என்ற சொல்லுக்குப் பொருளாய் சுவனம் என்று சொல்லப்படக் கேட்டு மந்தகாசப் புன்னகையை உதிர்த்தார்கள். மறுமைப் பெருவாழ்வின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையும் நாட்டமும் அச்சத்தை அவர்களை விட்டும் அகலச் செய்து அவர்களின் கண்களெதிரே காணப்பட்ட படைகளின் பெருக்கங்களை திரையிட்டு மறைத்து விட்டன. அத்தகைய வீரக் காதலர்களை விட்டகலாது வெற்றி தன் நெஞ்சங் கொண்டணைந்து நின்றது.

அது மட்டுமல்ல,

முஸ்லிம்களுக்கு முன்பாக படை நடத்தி வந்த மாவீரர்கள் அனைவருமே மண்ணாசையையும் பொன்னாசையை

புமே குறிகளாய்க் கொண்டிருந்தனர். ஆதிக்கத்தை விரியச் செய்து உலகைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதை தவிர, எந்த வித ஆன்மீக லட்சியத்தையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக அவர்களால் வெல்லப்பட்ட நிலப் பரப்புகளில் கொள்ளைகளை நடத்தி மக்களின் உடைமைகளை அள்ளிச் சேர்ப்பவர்களாகவும், கொலைகளை நிகழ்த்தி மக்களையும் பெண்களையும் அடிமை கொள்பவர்களாகவுமே இருந்தார்கள்.

இஸ்லாமியப் படைகள் அடியெடுத்து வைத்த காலத்தில் ஆங்காங்கே வாழ்ந்த மக்கள் புதிய ஓர் ஆதிக்கமே தங்கள் பூமிக்குள் நுழைகிறது என ஆரம்பத்தில் அஞ்சத்தான் செய்தார்கள். அவ்வச்சத்தால்—ஐயத்தால்—அவர்கள் தங்கள் மீது அதிகாரங் கொண்டிருந்த பழைய எஜமானர்களோடு சேர்ந்து முஸ்லிம்களுக்குத் தங்கடங்களையும் விளைவித்தார்கள். அத்தங்கடங்களனைத்தையும் தட்டி விலக்கி, எதிரிகளின் கோட்டைக் கொத்தளங்களை தங்கள் உடைமைகளாக்கிய பின், அங்கு அல்லாஹ்வின் ஆட்சியையே நிலை நாட்ட வந்த அப்படை வீரர்கள், தாங்கள் ஏந்தி வந்த சத்திய சித்தாத்தத்தை எடுத்தோதி மக்களை அதன் பால் அழைக்க முனைந்தார்களேயன்றி வெறி கொண்டு மனிதர்களை வேட்டையாடித் திரியவில்லை. நாயக மாமணி (ஸல்) அவர்களிடத்தில் நன்னயங்களில் பண் பட்டிருந்த நல்லற நவமணிகள், தங்களுக்கிழைக்கப்பட்ட இன்னல்களை மறந்து, அல்லாஹ்வுக்கே சொந்தமான அப் பூமிகளில் புதிதாகச் செலுத்திய நீதியும், நிர்வாகமும், அதிகார வரம்புகளும் முந்திய ஆதிக்கவாதிகளின் பிடிகளில் சிக்கித் தவித்திருந்த மக்களை வியப்படையச் செய்தன. தங்களின் நடைமுறைகளில் அப்புனிதவான்கள் வெளிப்படுத்திய குண நலன்களும் மனிதப் பண்பாடுகளும் இனி அவர்கள் ஒரு நாளும் தங்களைப் பிரிந்து சென்று விடக் கூடாதே என்ற பாச உணர்வை வெல்லப்பட்ட மக்களின் உள்ளங்களில் வளர்த்து விட்டன. பெரும் பெரும் வல்லமைகளும் தரிபட்டு நிற்காத நிலப் பரப்புகளில் இஸ்லாம் நிலை கொண்டு விட்டதற்கான காரண விளக்கம் இதுவேயாகும்.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்றதற்கிடைப்பட்ட காலமே இஸ்லாத்தின் பொற்கால மெனப் புகழுதற்குத் தகுதி படைத்ததாகும். அதுவரையிலு மான ஹிஜ்ராவின் கால் நூற்றாண்டு கால வரலாற்றில் ஒன் றன் பின் ஒன்றாக எத்தனையோ போர்க்களங்களை முஸ் லிம்கள் கண்டிருந்த போதிலும், எந்த ஒரு முஸ்லிமுக்கும் தம்முடைய ஓர் இஸ்லாமிய உடன்பிறப்பே தமக்கெதிராக வாளேந்தி நிற்கக் காணும் வாய்ப்பு கிட்டியதேயில்லை. காரணம் ஒரு முஸ்லிமுக்கெதிராக சிறு சங்கடத்தையும் விளைவிக்க எந்த ஒரு முஸ்லிமுடைய உள்ளமும் அற்ப சபல மும் கொள்ளத் துணிந்ததில்லை.

அக்கால கட்டம் கடந்தபோது முற்றிலும் மாறுபட்ட ஒரு தலைமுறை மாநபி [ஸல்] அவர்களின் தோழமையை ஏற்றுச் சிறந்த நற்றவச் செல்வர்களை எண்ணிக்கையில் மிகைத்து விட்டது. நடைபெற்ற பல போர்களிலும் தங்கள் உயிர்களை அர்ப்பணித்து விட்டவர்கள் நீங்கலாக, எண் ணிலா நபிமணித் தோழர்கள் மூப்படைந்தும், உலகை விட் டுப் பிரிந்து விட்டும் இருந்தார்கள். அம்வாஸ் கொள்ளை நோயால் இறந்து விட்ட நபிமணித் தோழர்கள் மட்டுமே ஏறத்தாழ ஐயாயிரம் பேர்களாவர். எஞ்சி வாழ்ந்த ஸஹா பாக்களையும் மதீனாவிலேயே தங்கி வாழ வேண்டும் என ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடும், ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலா ஃபத்தை ஏற்ற பின் தளர்வடைந்து, அவர்களெல்லாம் வெல்லப்பட்ட புதிய நிலப் பரப்புகளில் பரவலாகச் சென்று வாழலானார்கள். அதன் காரணமாக மக்களிடையே—வள ரும் தலைமுறையினரிடையே—ஸஹாபாக்களின் தொடர் பும் கண்காணிப்பும் தேடிப் பெற வேண்டியவைகளாய் மாறி விட்டிருந்தன.

வெற்றி மட்டும் அவர்களை விட்டும் பிரியாமலே இருந்தது. நாட்டின் முப்புறமும் எல்லைகள் விரிவடைந்த வண்ணமே இருந்தன. மக்களின் வருவாய் மிக உயர்ந்தது. வாணிபங்கள் செழித்தன. செல்வம் கொழித்தது. மக்கள் மிக மேலான மனத் திருப்தியோடு—என்று கூறுவதை

விட—சுகபோகத்தில் திளைத்தார்கள் எனக் கூறுவதே பொருத்தம்.

அத்தகைய சுகபோக வாழ்வை அவர்களின் முன்னோர்களும் எண்ணியேயிராத ஒரு காலத்தில்தான் அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்கள் முன்னறிவித்தார்கள் :

''முஸ்லிம்களின் ஆட்சியும் அதிகாரமும் வெகு தொலைவுக்கு விரிந்து பரந்து நிற்பதை இப்போது என் கண்களால் நான் காண்கிறேன். கிழக்கிலிருந்து மேற்கு வரை இஸ்லாத்தின் கொடியானது வானளாவப் பறப்பதை என் கண்களால் இப்போது நான் பார்க்கிறேன். இறைவனின் இம்மார்க்கத்தை ஏந்திச் செல்பவர்களின் கரங்களில் உலகக் கருவூலங்களின் திறவுகோல்கள் இருப்பதை இதோ நான் காண்கிறேன். நீங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்க மாட்டீர்கள் என்பதில் நான் பூரணப் பொருத்தம் கொண்டிருக்கிறேன். எனினும் அதிகாரத்துக்காகவும் செல்வத்துக்காகவும் உங்களுக்கிடையில் வேற்றுமையும், பிளவும், குழப்பங்களும், குரோதங்களும் உண்டாகுமோ என்ற அச்ச உணர்வை நான் அடைகிறேன்'' என்று.

முந்தைய சமுதாயங்களை அழித்த பயங்கரப் பிளவுகளையும், குழப்பங்களையும் நினைத்து எம்பெருமான் (ஸல்) அவர்கள் தங்கள் சமுதாயத்தவர்களை முற்கூட்டியே எச்சரித்த காலமே துவங்கி விட்டதோ...!

மதாயின் நகரத்தின் கருவூலங்கள் மதீனாவில் கொண்டு குவிக்கப்பட்ட அன்று 'செல்வமும் சுகபோகமும் நுழைவதையடுத்து நம்மிடையே குரோதங்களும் குழப்பங்களும் குடிபுகுந்து விடுமே—நயவஞ்சகமும் அநீதியும் பெருகி விடுமே' எனக் கவலையுற்று கலீஃபா உமர் (ரலி) அவர்கள் வடித்த கண்ணீர் இன்னும் உலரவில்லையே ......!!

அதற்குள் சகல தீங்குகளும் மக்களின் வாழ்க்கையில் பங்கேற்கத் துவங்கின. 'தக்வா'வென்னும் இறையச்சம்

குறைந்து மக்கள் பக்தி நெறியில் தளர்வடையலானார்கள். சமூகத்தின் இலாப நட்டங்களைப் பற்றிய கவலைகளைப் புறந்தள்ளி தங்களின் சுயநலன்களைப் பேணுவதில் கவனஞ் செலுத்தலானார்கள். சுகபோகங்களும்டாம்பீகமுமே வாழ்க்கையின் சோபிதங்களாய் நின்று அவர்களை எத்தகைய தீங்குகளையும்— தங்களின் உடன்பிறப்புகளுக்கே எதிராகவேயாயினும்— வெகு அலட்சியமாக இழைக்கத் துணிவூட்டலாயின. வாழ்க்கையின் நடைமுறைகளனைத்தும் மாறலாயின. பேதங்கள் உருவெடுத்தன. எளிமையிலேயே இனிமை கண்டு, பொறுமையையே தங்களின் போர்வையாக்கி பெருமான் நபி (ஸல்) அவர்களின் அடிச் சுவடுகளையே பற்றி வாழ்ந்த உத்தம ஸஹாபாக்கள், மறதியும் மயக்கமும் விளைவித்த வாழ்க்கையின் மாறுதல்களைக் கண்டு வெறுப்படைந்து ஒதுங்கலானார்கள். அதனை அப்பிந்திய தலை முறையினர் மிக ஏளனமாகவே எண்ணினார்கள். இஸ்லாமியர்களின் வாழ்க்கையில் அத்தகைய இடைவெளியைத்தான் தேடிக் காத்திருந்தது ஒரு சமூகம்.

யூதர்கள்

ஆரம்ப கால அம்முஸ்லிம்களிடம் ஆர்த்துப் போரிட்ட பெருவல்லமைகளெல்லாம் தோற்றுத் துவண்டு விட்ட நிலையிலும் சற்றும் நம்பிக்கை குறையாமல் அடுத்துக் கெடுப்பதற்கென ஒரு தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள் யூதர்கள். குரூர மனமும் வஞ்சகக் குணமும் கொண்டு ஈராயிரம் ஆண்டு கால வரலாற்றுப் பின்னணியையும் பெற்ற அச்சமூகத்தார் உலகத்தின் விதியையே நிர்ணயிக்கக் கூடியவர்களாய் விளங்கிய ஒரு காலச் சிறப்பை

يَٰبَنِىٓ إِسْرَٰٓءِيلَ ٱذْكُرُوا۟ نِعْمَتِىَ ٱلَّتِىٓ أَنْعَمْتُ عَلَيْكُمْ وَأَنِّى فَضَّلْتُكُمْ عَلَى ٱلْعَٰلَمِينَ ۝

''இஸ்ராயீலின் சந்ததிகளே! உலகத்தார் யாவரையும் விட உங்களை நான் உயர்வாக்கி வைத்த என் பேரருளை நினைத்துப் பாருங்கள்'' எனக் கோடிட்டுக் காட்டுகிறது

அல்லாஹ்வின் திருமறை (2 : 47; 122) அல்லாஹ் தங்கள் மீது புரிந்த பேரருள்களுக்கு நன்றி கூர்ந்து உயர்ந்த தங்கள் நிலையைத் தக்க வைத்துக் கொண்டவர்கள் அவர்களில் மிகச் சிலரே. அந்த மிகச் சிலரிடையேதான் நபிமார்கள் அடுத்தடுத்துத் தோன்றினார்கள். உணவுக்குச் சுவை கூட்டும் உப்பைப் போல் விளங்கிய அம்மிகச் சிலரைத் தவிர்த்து எஞ்சிய யூத சமூகம் முழுவதுமே நன்றி கொன்று தங்கள் மனங் கொண்ட போக்கில் தட்டழிந்து போனதோடு மட்டுமின்றி, தங்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டிய அந்நபிமார்களையும் கொன்றழித்த கொடுமையை திருக் குர்ஆன் மட்டுமின்றி முந்தைய அவர்களின் வேதங்களும் கூறிக் காட்டுகின்றன.

அவர்களிடையே தோன்றிய தீர்க்கதரிசிகளில் இறுதியானவர்களான ஹழ்ரத் ஈஸா [அலை] அவர்கள் சிறைபடுத்தப்பட்டிருந்த காலத்தில்-ஒரு திருநாளன்று ஜெருஸலத்தின் ஆளுனனாக இருந்த ஒரு ரோமானியன், ''இந்த உங்களின் திருநாளன்று மரண தண்டனை அளிக்கப்பட்ட ஒரு கைதிக்கு உயிர்ப் பிச்சை அளிப்பது வாலாயம். அதேபோல் இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஒரு கொலையாளிக்குப் பிரதியாக சிறைபட்டிருக்கும் ஈஸாவை விடுதலை செய்துவிடுவோம்'' எனக் கேட்டபோது, ''வேண்டவே வேண்டாம். அக்கொலையாளியையே விடுதலை செய்து ஈஸாவைக் கழுவிலேற்றி விடுங்கள்" என ஒருமித்து ஒலித்த யூதர்களின் குரல், அவர்களின் குரோதத்தின் கொடூரத்தைக் காட்ட போதிய சான்றாகும். அக்கொடூரத்திற்குரிய கூலியாக இறைவனின் வேதனை புக்த்து நஸ்ர் போன்ற கொடுங்கோலர்களின் உருவெடுத்துப் பலமுறை அவர்களை வதைத்தது. இறுதியாக ஹழ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்குப் பின் ரோமானியர்களால் அவர்கள் ஜெருஸலத்தை விட்டே விரட்டப்பட்டனர்.

பிந்திய காலத்தில் தோன்றப் போகும் பெருமான் நபி (ஸல்) அவர்களைப் பற்றி முந்திய வேதங்களெல்லாம்

செய்த முன்னறிவிப்புகளை யூதர்களும் அறிந்தே இருந்தார்கள். 'பாரான்' வெளியில் தோன்றப் போகும் 'ஃபர்கலீத்' ஆகிய—ஹழ்ரத் மூஸா (அலை) முதல் ஈஸா [அலை] வரை நெடுகிலும் தோத்தரிக்கப்பட்ட—அத்தூதர், பாலை நிலங்களிடையே பேரீத்தங்கனி மரங்களால் சூழப்பட்ட ஒரு சோலை நகரில் குடி புகுவார். அங்குறைந்தே அவர் அவனியின் மீதெல்லாம் முடி கொள்வார் என்பதையும் வேத நூல் விற்பன்னர்கள் விளக்கக் கேட்டிருந்தன பல யூத குடும்பங்கள். ஜெருஸலத்தை விட்டும் பிரிந்த அவர்கள், பயணம் செய்ய நேர்ந்த இடைவழியில், அடையாளங் கூறப் பெற்ற தலமாக யத்ரிபை அறிந்து அந்நபியைக் காண வேண்டுமென்ற ஆவலால் அங்கும், அருகில் இருந்த கைபரிலும் தங்கிக் கொண்டார்கள். பல தலைமுறைகளுக்கு அவர்களின் நம்பிக்கை உறுதியுடன் நிலைத்தே வந்தது. ஆயினும் அவர்களின் நம்பிக்கையெல்லாம் வேதங்கள் சாற்றிய அத்தேற்றரவாளர் பல்லாயிரம் தீர்க்கதரிசிகளின் கர்ப்பச் சுரங்கமாக விளங்கிய இஸ்ராயீலியப் பாரம்பரியத்திலேயே பிறப்பார் என்பதாகவே இருந்தது. அது பற்றி அவர்கள் யத்ரிபின் பூர்வீகக் குடிகளிடத்தில் பெருமையாகவும் பேசி வந்தார்கள். ஆனால் மதீனாத் திரு நகரினுள் புகழ் மணக்கப் புகுந்த பூமான் (ஸல்) அவர்கள், படைத்த இறைவனுக்கு நன்றி மிக்கவர்களாக 'மினா'வின் மேடையில் தம் சிரமறுத்தளிக்கவும் தயங்காத நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழிவாறாகப் பிறந்த செய்தி அவர்களின் நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டது. அதன் காரணமாகவே அவர்களின் உடலில் புரையோடிப் போயிருந்த புழுக்கம் பொங்கலாயிற்று. அந்நபியையும் கொன்றிட அவர்கள் ஏற்ற முயற்சிகளும் சூழ்ந்த சதிகளும் அனந்தம். அவை அனைத்தும் தோற்றுப் போயின.

لَنْ يَضُرُّوكُمْ إِلَّا أَذًى وَإِنْ يُقَاتِلُوكُمْ يُوَلُّوكُمُ الْأَدْبَارَ ثُمَّ لَا يُنْصَرُونَ ۝

''இத்தகையோர் உங்களுக்கு சிறிய தொல்லை இழைப்பதைத் தவிர (அதிகமாக)உங்களுக்கு (ஏதும்) தீங்கு செய்து விட முடியாது. உங்களுடன் அவர்கள் யுத்தம் புரிய முற்பட்

டாலோ, அவர்கள் உங்களுக்குப் புறங்காட்டியே ஓடுவார்கள். பின்னர் அவர்கள் (சென்ற இடத்திலும் எவராலும்) உதவி செய்யப்பட மாட்டார்கள்" என்ற திருமறையின் (3 : 11) சாபக்கேடு அவர்களை சூழ்ந்து கொண்டது. மதீனாவிலிருந்தும் பின்னர் கைபரிலிருந்தும் வெளியேற்றப் பட்ட அவர்கள், கலீஃபா உமர் (ரலி) அவர்களால் அரபு மண்ணை விட்டே அகற்றப்பட்டு, தங்குவதற்கொரு தல மற்றவர்களாகவே தட்டலைந்துக் கொண்டிருந்தார்கள்— தங்கள் குரூரப் பார்வையை மட்டும் முஸ்லிம்களை விட்டும் அகற்றாதவர்களாகவே.

'ஸாஹிபுஸ்—ஸிர்—நாயகத்தின் அந்தரங்கச் செயலர்' என அறியப்பட்ட ஹழ்லரத் ஹுதைபத்துல் யமான் (ரலி) அவர்களிடத்தில் ஒரு நாள் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள், ''ஹுதைபா! கடலின் அலைகளைப் போல் வீகம் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் விவரித்த குழப்பத்தைப் பற்றி நீர் அறிவீராயின் கூறும்'' என்று.

''அமீரல் முஃமினீன்! அதன் கவலை தங்களுக்குத் தேவையில்லை. பெருங்கதவொன்று அதனை அடைத்து நிற்கிறது" என்றனர் ஹழ்லரத் ஹுதைபா (ரலி).

''அந்தக் கதவு திறந்து கொள்ளுமா? இல்லை உடைந்து விழுமா? அல்லது அப்படியே பாதுகாக்கப் படுமா?'' என வினவினார்கள் கலீஃபா.

''அது திறக்கப்படாது. உடைந்து விடும்" என்றார்கள் ஹழ்லரத் ஹுதைபா (ரலி).

''அவ்வுரையாடலை எங்களுக்கறிவித்த ஹழ்லரத் ஹுதைபா (ரலி) அவர்களிடம் அக்கதவைப் பற்றி நாங்கள் வினவியபோது 'கலீஃபா உமரே அக்கதவு' என அவர்கள் கூறினார்கள்'' என்று மஸ்ரூக் என்ற தாபிஈ பெரியார் அறிவிக்கின்றார்.

ஆம்!

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் உடலில் வெறியன் ஃபைரோஸ் பாய்ச்சிய குறுவாள்!

அதுவே குழப்பங்களின் தலை வாசலுக்குத் திறவு கோல்.

''எனக்குப் பின்னர் கிலாஃபத் என்னும் நெறியாட்சி முப்பதாண்டுகள் நிலைத்திருக்கும்" என்றார்கள் எம்பெருமான் (ஸல்). ஆனால்,

அண்ணலரின் கண்ணொளிகளாய் நின்று மக்களைக் காத்த சீலர்களின் ஆட்சியில் அமைதி பதிமூன்றாண்டுகளோடு உறக்கங் கொள்ளத் துவங்கியதே!

அடைபட்டுக் கிடந்த குழப்பத்தின் வாசலைத் தகர்த்தது ஃபைரோஸின் குறுவாள். வஞ்சகம் வலை விரிக்கத் துவங்கியது. பொய்யும் புனைசுருட்டும் பொன் முலாம் பூசிக் கொண்டு உலா வரலாயின. மாநபியின் திரு வாழ்வால் தம் வாழ்வை அருள் வாழ்வாக்கி வாழ்ந்த தவச் செல்வர்களின் நெஞ்சுக்கு நேரே!

அவர்களோடு பிறந்த நற்றவச் செல்வர்களே வாளேந்திப் பாய நேர்ந்த கொடுமையை என்னென்போம்!

குழப்ப அலைகள்

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் ஆட்சியில் முந்திய ஆறாண்டு காலம் அமைதியும் சுபிட்சமும் நிறைந்ததாய் விளங்கியது என்பதில் வரலாற்றாசிரியர்கள் எவரும் மாறான கருத்து கொள்ளவில்லை. குழப்பம் அலை பாயத் துவங்கியது ஹிஜ்ரி 30-ம் ஆண்டிலிருந்துதான். ஆனால் அது உருவானதெப்போது?

கிழக்கிலும் மேற்கிலும் இஸ்லாம் விரிந்து பரவி முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் கணிக்க லட்சங்கள் பயனற்றுக் கோடிகள் நாடப்பட்டபோது,

களங்கம் அவர்களிடையே ஊடுருவி, பொறாமை, பூசல், குரோதம், வன்மம் போன்ற குணக் கேடுகளைப் பெற்றெடுக்கத் துவங்கி விட்டபோது,

ஒழுக்கத்தை, பண்பாட்டை, கட்டுப்பாட்டுணர்வை அவர்களுக்குப் போதித்து, அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளைக் கண்காணிக்கக் கூடிய 'முஃக்லிஸீன்' களாகிய பரிசுத்தவான்களுக்கு பற்றாக்குறையாகி விட்டபோது,

அவர்களைப் பிளக்கவும், அவர்களின் மார்க்கத்தைக் குழப்பவும் அதைவிட நல்ல தருணம் பின்னர் கிடைப்பது கடினம் என எண்ணிச் செயலாற்றத் துவங்கினர் யூதர்கள். அவர்களில் முன்னோடியானவன் இப்னு ஸெளதா எனப் பட்டவன். யமன் நாட்டில் ஸன்ஃஆ நகரில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்த அவன் மதீனாவுக்கு வந்து இப்னு ஸபா என்ற பெயரோடு தன்னையும் ஒரு முஸ்லிமாக அறிவித்துக் கொண்டான்.

மதீனா! அது

மாநிலந்தனக்கொரு மணிவிளக்காய் ஒளி வீச வந்த எங்கள் மாநபிகளார் மறைந்து உறையும் மாடம்;

மறை ஞானம் சூழ்ந்த கூடம்;

மருவிலாத் திருவுளங் கொண்ட மேதைகள் அமர்ந்து மாசறுத்துக் கொண்டிருந்த பீடம்.

அங்கே தன் செயல் முறைகள் அரங்கேற முடியாதெனப் புரிந்து கொண்ட இப்னு ஸபா மதீனாவை விட்டும் வெளியேறினான்.

கிலா:பத்தின் சலுகை

மூந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தமக்கே அமையப் பெற்ற அருள் வன்மையால் பத்தரை ஆண்டுகளில் ஏறத்தாழ இருபத்து இரண்டரை லட்சம் சதுர மைல்கள் பரப்பளவுக்குத் தம் ஆட்சியை விரிவடையச் செய்தார்கள். ஓராயிரத்துக்கும் அதிகமான நாடு நகரங்கள்

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் உடலில் வெறியன் லைஃபரோஸ் பாய்ச்சிய குறுவாள்!

அதுவே குழப்பங்களின் தலை வாசலுக்குத் திறவு கோல்.

''எனக்குப் பின்னர் கிலாஃபத் என்னும் நெறியாட்சி முப்பதாண்டுகள் நிலைத்திருக்கும்" என்றார்கள் எம்பெருமான் (ஸல்). ஆனால்,

அண்ணலரின் கண்ணொளிகளாய் நின்று மக்களைக் காத்த சிலர்களின் ஆட்சியில் அமைதி பதிமூன்றாண்டுகளோடு உறக்கம் கொள்ளத் துவங்கியதே!

அடைபட்டுக் கிடந்த குழப்பத்தின் வாசலைத் தகர்த்தது லைஃபரோஸின் குறுவாள். வஞ்சகம் வலை விரிக்கத் துவங்கியது. பொய்யும் புனைசுருட்டும் போலி மூலாம் பூசிக் கொண்டு உலா வரலாயின. மாநபியின் திரு வாழ்வால் தம் வாழ்வை அருள் வாழ்வாக்கி வாழ்ந்த தவச் செல்வர்களின் நெஞ்சுக்கு நேரே!

அவர்களோடு பிறந்த நற்றவச் செல்வர்களோ வாழ்ந்திடப் பாவ நேர்ந்த கொடுமையை என்னென்போம்!

குழப்ப அலைகள்

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் ஆட்சியின் முந்திய ஆறாண்டு காலம் அமைதியும் வளர்ச்சியும் நிறைந்ததாய் விளங்கியது என்பதில் வரலாற்றாசிரியர்கள் எவரும் மாறான கருத்து கொண்டிருக்கவில்லை. குழப்பம் அலைபாயத் துவங்கியது ஹிஜ்ரீ 30-ம் ஆண்டிலிருந்துதான். ஆனால் அது உருவானதெப்படியோ?

கிழக்கிலும் மேற்கிலும் இஸ்லாம் விரிந்து பரவி முஸ்லிம்களின் எண்ணிக்கையைப் பெருக்க [illegible] பயணத்துக் கொடிகள் நாட்டப்பட்டபோது.

களங்கம் அவர்களிடையே ஊடுருவி, பொறாமை, பூசல், குரோதம், வன்மம் போன்ற குணக் கேடுகளைப் பெற்றெடுக்கத் துவங்கி விட்டபோது,

ஒழுக்கத்தை, பண்பாட்டை, கட்டுப்பாட்டுணர்வை அவர்களுக்குப் போதித்து, அவர்களின் வாழ்க்கை நடைமுறைகளைக் கண்காணிக்கக் கூடிய 'முஃமினீன்'களாகிய பரிசுத்தவான்களுக்கு பற்றாக்குறையாகி விட்டபோது,

அவர்களைப் பிளக்கவும், அவர்களின் மார்க்கத்தைக் குழப்பவும் அதைவிட நல்ல தருணம் பின்னர் கிடைப்பது கடினம் என எண்ணிச் செயலாற்றத் துவங்கினர் யூதர்கள். அவர்களில் முன்னோடியானவன் இப்னு ஸௌதா எனப் பட்டவன். யமன் நாட்டில் ஸன்ஆ நகரில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்த அவன் மதீனாவுக்கு வந்து இப்னு ஸபா என்ற பெயரோடு தன்னையும் ஒரு முஸ்லிமாக அறிவித்துக் கொண்டான்.

மதீனா! அது

மாநிலத்தனைக்கொரு மணிவிளக்காய் ஒளி வீச வந்த மக்கள் மாநபிகளார் மறைந்து உறையும் மாடம்;

மறை ஞானம் சூழ்ந்த கூடம்;

மருவிலாத் திருவனம் கொண்ட மேதைகள் அமர்ந்து மாசறுத்துக் கொண்டிருந்த பீடம்.

அங்கே தன் செயல் முறைகள் அரங்கேற முடியாதெனப் புரிந்து கொண்ட இப்னு ஸபா மதீனாவை விட்டும் வெளியேறினான்.

கிலா:பத்தின் எல்லை

இரண்டாம் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தமக்கே அமையப் பெற்ற அருள் வல்லமையால் பத்தரை ஆண்டு களில் ஏறத்தாழ இருபத்தி இரண்டரை லட்சம் சதுர மைல் கள் பரப்பளவுக்குத் தம் ஆட்சியை விஸ்தரித்துச் சென் றார்கள். ஓராயிரத்துக்கும் அதிகமான நாடு நகரங்கள்

வெல்லப்பட்டு அவர்களின் ஆட்சியில் இணைக்கப்பட்டன. ஆனால் வெல்லப்பட்ட அந்நகரங்களின் புறம் தம் அனுமதி யின்றி பயணம் செய்யக் கூடாதென கலீஃபா அவர்கள் முஹாஜிர்களையும் மற்றக் குரைஷிக் கனவான்களையும் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். அக்கட்டுப்பாட்டினால் மனச் சங்கடங் கொண்டவர்கள் அநேகர். அவர்களின் எந்த முறையீட்டையும் கலீஃபா அவர்கள் பொருட்படுத்தவே இல்லை. பைத்துல் முகத்தஸின் பொறுப்பைத் தம் கர மேற்க ஒரு முறையும், அம்வாஸ் கொள்ளை நோயின் கொடுமைகளையேற்ற தம் குடிமக்களின் துயர் களைய ஒரு முறையுமேயல்லாது, கலீஃபா அவர்களே கூட கிலாஃபத் தின் மற்றெந்த நாளிலும் ஹிஜாஸை விட்டும் வெளிச் சென் றதே இல்லை.

புனிதப் போர் மேல் செல்லப் புறப்பட்ட ஒரு சில முஹாஜிர்களையும் கூட கலீஃபா அவர்கள், ''அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களோடிணைந்து புனிதப் போர் களில் நீங்கள் ஏற்றிருக்கும் பங்கே உங்களுக்கு சுவனப் பெரு வாழ்வை ஈட்டித் தரப் போதுமானது. இப்போது, நீங்கள் வெளி உலகைப் பாராதிருப்பதும் அவ்வுலகம் உங்களைப் பாராதிருப்பதுமே புனிதப் போர் புரிவதைவிட உங்களுக்கு மேலானது" எனக் கூறித் தடுத்தமர்த்தி விட்டார்கள்.

இஸ்லாத்துக்கு முந்திய இளமைப் பருவத்தில் ஈரானிய ரோமானிய பூமிகளெங்கும் சுற்றித் திரிந்து, அப்பூமிகளில் வாழ்ந்த மக்களின் மாறுபட்ட நாகரிகத்தையும் கலாச்சா ரத்தையும் கலீஃபா அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதன் பகட்டையும் பளபளப்பையும் சென்று கண்டு அரபிகள் மயங்கி விடுவர்; அறியாமைக் காலத்தின் முறுக் கும் செருக்கும் மீண்டும் அவர்களைப் பற்றிக் கொள்ளும் என கலீஃபா அவர்கள் கொண்ட அச்சமே அவர்கள் மேற் கொண்ட கட்டுப்பாட்டுக்கு அடிப்படை காரணமாகும்.

அக்கட்டுப்பாட்டினால் மற்றொரு பலனும் ஏற் பட்டது. முஹாஜிர்களும் அன்ஸார்களும் மதீனாவிலேயே

தங்கி வாழ்ந்தார்கள். தேவைப்பட்ட தருணங்களிலெல்லாம் அவர்களை அழைத்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியவும், தங்களின் பணியில் அவர்களையும் பங்கேற்கச் செய்யவும், அவர்களின் பணியாலும் சமுதாயத்துக்குப் பயன் கிடைக்கச் செய்யவும் கலீஃபா அவர்களுக்கு வசதியாக இருந்தது.

ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தில் அக்கட்டுப்பாடு தளர்வு கண்டது. குரைஷிகள் வெல்லப்பட்ட நாடு நகரங்களின் புறம் பயணம் செய்யலானார்கள். அப்பயணங்களில் புதுமையான பல பொருள்கள் அவர்களுக்கு எதிர்ப்பட்டன. முற்றிலும் நவீனமான ஓர் உலகையே அவர்கள் கண்டார்கள். அவர்கள் கண்ட புதுமையான வாழ்க்கை முறையும் பகட்டான அதன் நாகரிகமும், பளபளப்பும், அப்புதிய பூமிகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட அவர்களுக்கு ஆர்வமூட்டின. அங்கே வாழ்ந்த மக்களோ தங்களை வெற்றி கொண்ட அச்சமூகத்தாரின்பால் தனியொரு மரியாதை கொண்டு அவர்களின் அருகாமையையே தங்களுக்கொரு பேறாக எண்ணி அதிகமாகவே அவர்களை உபசரிக்கலாயினர். அதன் காரணமாக அங்கு குடியேறி வாழத் துவங்கியவர்களின் உள்ளங்களில், தாங்கள் மதித்துப் போற்றுவதற்குரிய ஒரு தனிச் சிறப்புக்குடையவர்கள் என்ற மேலெண்ணம் வளரலாயிற்று. மனித ஏற்றத் தாழ்வுகளை அழித்து சமத்துவத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தி வைத்த சமுதாயத்தில் அவர்களைப் பிளக்க ஊடுருவிய ஆரம்பக்கேடு என இதையே கூறத் தகும். இதனை மிகத் தீர்க்க ஞானத்தோடு முன்னுணர்ந்தே கட்டுப்பாட்டை கடைபிடித்தார்கள் கலீஃபா உமர் (ரலி) அவர்கள்.

அதே சமயம் அக்கட்டுப்பாட்டைத் தளர்த்தி விட்ட ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் தாராளத் தன்மையையும் ஒரு பலஹீனமாகக் கணிக்கத் துணிவது அணுவளவும் தகாது. உண்மையில் அத்தளர்வுக்குக் காரணம் அப்புதிய கலீஃபா அவர்களின் வேறுபட்ட கண்ணோட்டமேயாகும். நாட்டின் விரிந்த எல்லைக்குள் பரவலாகச் சென்று குடியேறக் கூடியவர்களால் தொலை தூரங்களில்

முளைத்தெழும் குழப்பங்கள் நசித்தொழிக்கப்பட்டு தம் கிலாஃபத்துக்கு வலிமை கிட்டும் என கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் கணித்தார்கள். நாட்டில் உருவாகி நின்ற புதிய சூழ்நிலையில் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் அம்மாறுபட்ட கணிப்பு குறையுடையதல்ல—அது தவிர்க்கக் கூடியதாகவுமில்லை என்பதை கலீஃபா அவர்களின் ஓர் உரையே மறைமுகமாக உணர்த்துகின்றது.

பள்ளியின் மேடையில் மக்களுக்கு உரையாற்றுகையில் கலீஃபா அவர்கள்,

''நீங்கள் எங்கே என்னை விட்டும் பிரிந்து விடுவீர்களோ என்ற அச்சத்தின் காரணமாகவே நான் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் அருளுரை ஒன்றை உங்களுக்கு வெளிப்படுத்தாது மறைத்து வந்தேன். ''அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் பாளையமிட்டிருப்பது தன் வீட்டில் தங்கியிருக்கும் ஓராயிரம் நாட்களை விட ஒருவனுக்கு மேலானது'' என அண்ணலார் (ஸல்) அவர்கள் கூறியதை இன்று நான் உங்களுக்கு வெளிப்படுத்தி விட்டேன். இனி எது சிறந்ததென எண்ணுகிறீர்களோ அவ்வழியை மேற்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு" எனக் குறிப்பிட்டார்கள்.

இவ்வாறாகக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியதோடு மட்டுமல்ல, கலீஃபா அவர்கள் புதிய பூமிகளில் குடியேறி வாழத் தலைப்பட்டவர்களுக்கு உதவியும் ஊக்கமும் தந்தார்கள். அதையே பலஹீனமாகப் பயன்படுத்தி தங்கள் சுயநலத்தை பேணிக் கொண்டவர்கள் விளைவித்த கேடுகளுக்கு கலீஃபா அவர்களை ஒரு போதும் பொறுப்பாளியாக்கவே முடியாது.

கலீ:.பா அவர்களின் நினைப்பும் அதிகாரிகளின் நிலையும்

ஹிஜ்ரி 30-ம் ஆண்டில் கூஃபாவின் ஆளுநராகச் சென்ற ஹழ்லரத் ஸஃத் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களிடமிருந்து, 'கூஃபாவில் அமைதி குலைந்து விட்டது. குழப்பக்

காரர்கள் கலகக் கொடி தூக்கச் சித்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்' என்ற செய்தி வந்தது. கலீஃபா அவர்கள் கலகத்தை ஒடுக்க, இராக்கிய நிலப் பரப்பில் போரில் கலந்து, வெற்றிப் பொருள்களாக அங்கேயே நிலபுலன்களைப் பங்கீட்டில் பெற்றிருந்தார்களே அத்தகையவர்களைத் திரட்டலானார்கள். அவர்களெல்லாம் அங்கேயே சென்று நிரந்தரமாகத் தங்கி வாழ்வதன் மூலம் துரோகிகளைத் தலை தூக்க விடாமல் ஒடுக்கி, தங்கள் ஆட்சிக்குத் துணை கூட்ட முடியும் என்ற நம்பிக்கை கலீஃபா அவர்களுக்கு அப்போதே ஏற்பட்டது எனலாம். நாட்டை விட்டும் வெளிச் செல்லக் காத்துக் கிடந்தவர்களல்லாம் தங்கள் கனவிலும் எண்ணாத ஒரு வழியை இறைவன் தங்களுக்குத் திறந்து விட்டதாகவே எண்ணிப் புறப்படலானார்கள்.

அந்த வாய்ப்பையே பல குரைஷிப் பெருமக்களும் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு அங்கு நிலபுலன்கள் இல்லாத போதிலும், அங்கே நிலபுலன்களைப் பெற்றும் மக்காவிலோ அல்லது மதீனாவிலோ வந்து வாழ விரும்பியவர்களிடம், ஹிஜாஸில் தங்களுக்கிருந்த சொத்துக்களைப் பரிமாற்றம் செய்துக் கொண்டு வெளியேறிச் சென்றார்கள். அதன் பலனாகவே அஜமிகள் மதீனாவில் வாழ கலீஃபா உமர் (ரலி) அவர்களால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடும் தளர்வு பெறலாயிற்று.

பஸரா, கூஃபா போன்ற புதிய நகரங்களிலும் மற்ற மாநிலங்களிலும் சென்று குடியேறி வாழத் துவங்கியவர்களில், சிறப்பில் மேலான முஹாஜிர்களும் இருந்தனர்; அன்ஸார்களும் இருந்தனர். அவர்களல்லாத—பெருமானார் (ஸல்) அவர்களின் பிந்திய காலத் தோழர்களும் இருந்தனர். அவர்களெல்லாம் முதுமையடைந்திருந்த நிலையில் மாறிய தலைமுறையில் இளம் ஸஹாபாக்களும் இருந்தனர்., ஸஹாபாக்கள் மட்டுமே பெரும் பேறாய்ப் பெற்ற—நபிமணியின் தோழமையைத் தவற விட்ட பிற்கால அரபுகளும் இருந்தனர். அவர்களிலும் குரைஷிகளும் இருந்தனர். குரைஷிகள் அல்லாத பிற கோத்திரத்தினரும் இருந்தனர். பாலைவனக் காட்டரபிகளும் இருந்தவர். ஆனாலும் அவர்களனைத்தவரும் வெல்லப்பட்ட நிலப்பரப்புகளில் நாட

பெற்ற போர்க்களங்களில் ஏதேனுமொன்றில் பங்கேற்ற சிறப்பிற்குரியவர்களாகவே இருந்தனர்.

முஹாஜிர்கள், அன்ஸார்களோடு மாநபி பெருமான் (ஸல்) அவர்களின் தோழமையைப் பெற்ற மனிதப் புனிதர்களைத் தவிர்த்த மற்றவர்களில் பல மாறுபட்ட பண்புடையவர்கள் இருந்தனர்.

இளங்குரைஷிகள் தங்களை மற்ற அனைவரையும் விட மிக மேலானவர்களாக எண்ணினார்கள். ஆட்சி தங்களுக்கே என்பதையேயன்றி மற்றவர்களின் எந்த அதிகாரத்தையும் அவர்களால் எண்ணிச் சகிக்க முடியாதிருந்தது. மக்க நகர வெற்றியை அடுத்து வக்கிழந்து இஸ்லாத்தை ஏற்றிருந்த நிலையிலும் அம்மார்க்கம் தங்களுக்களித்த சமத்துவத்தையே சாதகமாகக் கொண்டு கிலாஃபத்தின் விஷயத்திலும் முன்னுரிமை கொண்டாட முனைந்தவர்களே கூட அவர்களில் உண்டு. ஆனால், குரைஷிகளும் சரி குரைஷிகள் அல்லாத மற்ற எவருமே சரி எவ்வித நச்சுக் கருத்துக்களையும் வெளிப்படுத்த முடியாத தடையாக இருந்தது மதீனாவில் ஃபாரூக்கிய சன்னிதானம்.

ஒரு கோத்திரச் செருக்கோ அகம்பாவ முறுக்கோ தலை தூக்கவே முடியாத தனி வல்லமையாக கலீஃபா உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். பஞ்சைகளுக்கும் நலிந்தவர்களுக்கும் தஞ்சமளிக்கும் நிழற்கொடையாக நின்ற அவர்களின் கரங்கள் தலை காட்டும் தருக்கை அதன் முளை எங்கே எனத் தேடிக் கிள்ளி எறியும் வன்மையுடைத்திருந்தது. தம் குடிமக்களுக்கு முன்னே ஒரு குற்றேவலராகவே நின்று பணியாற்றினார்கள் அப்பெருங் கலீஃபா. ஆயினும் அவர்களின் பெயர் கேட்ட மாத்திரத்தில் அதிகாரத்திலிருந்தவர்களுடையவும் செல்வாக்கு படைத்தவர்களுடையவும் குலைகள் நடுங்கினவென்றால், குழப்பங்களும் குதர்க்கங்களும் தலைதூக்குவது எங்ஙனம்?

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களோ இரக்கத்தின் பிறப்பிடமாக, நாணத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தார்கள். இஸ்லாத்துக்கு முந்திய-அறிவை இருள் சூழ்ந்த—

'அய்யாமுல் ஜாஹிலிய்யத்' திலும் கூட நாணமே அவர்களின் போர்வையாய் நின்று மற்றவர்களின் பார்வைகளை மலரச் செய்துக் கொண்டிருந்தது. அத்தகைய நாணவாணிடத்தில் வன்மையும் கடுமையும் ஹழ்லரத் உமர்—அல்—ஃபாரூக் (ரலி) அவர்களிடத்தில் வெளிப்பட்டாற்போல்—வெளிப்படவில்லை என்பதையே எங்ஙனம் ஒரு குற்றமாய்க் கொள்ள முடியும்?

குரைஷிகளல்லாத மற்றக் காட்டரபிகளோ கோத்திரங் கோத்திரங்களாகப் பிரிந்து, ஒருவரையொருவர் மிகைப்பதில் வேற்றுமைப்பட்டு தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டிருந்ததைத் தவிர்த்து நாகரிகமோ பண்பாடோ பெற்றிருக்கவில்லை. கொள்ளையிலும் பழி தீர்க்கும் கொலையிலுமே பேதப்பட்டு அவர்களின் வாழ்நாள் அழிந்து அந்நியர்களிடம் அவர்களைக் கொத்தடிமைகளாகிக் கிடக்கச் செய்தது.

இஸ்லாம் அவர்களைப் புதியதோர் உலகுக்கு அழைத்து வந்தது. அவர்களில் இருந்த குரோதத்தையும் குரூரத்தையும் அடங்கச் செய்து வணங்குதற்குரிய ஒருவனின் திருமுன் அவர்களை வணங்கி நிற்கச் செய்தது. அந்த வணக்கத்திலேயே அவர்கள் ஒன்றுபட்டார்கள்; தங்கள் பேதங்களை மறந்தார்கள்; குலப் பெருமைகளை அழித்தார்கள்; குரோதச் செருக்கை ஒழித்தார்கள்; ஒன்றுபட்டவர்களாய் நின்று அல்லாஹ்வின் பருங்கயிற்றைப் பற்றிப் பிடித்து உலகத்தையே வரிந்து கட்டலானார்கள். ஆனால்,

அடுத்தடுத்துப் போர்களில் அடர்ந்தேறிய வண்ணமிருந்த பிந்திய தலைமுறையினரிடையே, முந்திய சித்தர்கள் முஹம்மதெம் கோமான் (ஸல்) அவர்களிடம் கற்ற தத்துவங்களும் தாத்பரியங்களும் பால பாடங்களாகவே இருந்தன. வேதத்தை ஓதிக் காட்டி, போதகர்கள் அவர்களுக்கு உணர்வினை ஊட்டி வழி நடத்திச் சென்றாலும் ஞானத்தைப் புகட்டக் கூடிய நாயகத் தோழர்களின் ஒட்டுறவு அரிதாகி விட்டது. அந்நிலையில் வைரிகளைத் தொடர்ந்து அழித்து வெற்றி மேல் வெற்றி கொண்டு வாரிச் சேர்த்த செல்வங்களும் அவை அளித்த சுகபோகங்

களும் சோர்ந்திருந்த அவர்களின் பூர்வீக உணர்வுகளைச் சுண்டி எழுப்பலாயின.

அதிகாரம் தங்களுக்கே சொந்தம் எனக் குரைஷிகள் எண்ணியது போலவே குரைஷிகள் அல்லாதவர்களும் எதிரி களை வெல்லத் தாங்கள் ஏற்ற பங்குகளுக்குண்டான பலன் களைத் தாங்களே அடைய வேண்டும் என்ற வேட்கை கொண்டார்கள். காணும் இடங்களிலெல்லாம் அதிகாரத் திலிருந்த குரைஷிகளால் அவர்களுக்குச் சடைவு ஏற் பட்டது. அச்சடைவு வீணான வெறுப்புகளை வளர்த்தது. ஆளுநர்களையும் அதிகாரிகளையும் பகிரங்கமாகவே தூற் றத் துவங்கினார்கள். தேவையற்றவும் பொய்யானவுமான குற்றச்சாட்டுகளைச் சுமந்து அடிக்கடி முறையிட்ட வண் ணம் கலீஃபா அவர்களுக்கும் சடைவை உண்டாக்கி னார்கள்.

அக்குற்றச்சாட்டுகள் மெய்யாகவோ பொய்யாகவோ இருந்த நிலையில் மாச்சரியங்கள் வளரத் துவங்கின. அதி காரிகளும் தாங்கள் மக்களின் காவலர்கள் என்பதை மறந்து மக்களை தங்களின் எடுபிடிகளாய் எண்ணலானார்கள். பதவிகளைப் பாதுகாப்பதிலும் பயன்களை அள்ளிச் சேர்ப் பதிலுமே தங்கள் கவனங்களைத் திருப்பி அல்லாஹ்வின் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய தங்கள் கடன் களை மறக்கலானார்கள்.

மக்களுக்கும் மக்களின் மீது அதிகாரத்தை ஏற்றிருந்த வர்களுக்குமிடையே ஏற்பட்ட இந்த விரிசல் இப்னு ஸபா போன்றவர்களுக்கு ராஜ பாட்டையையே அமைத்துத் தந்து விட்டது.

முஸ்லிம்களால் வெல்லப்பட்ட மற்ற மாநிலங்களில் வாழ்ந்த மக்களின் நிலை என்ன?

ஆண்டாண்டு காலமாகவே பூண்டிருந்த அடிமைத் தளைகளறுபட்டு நிரந்தரமாகவே கிடைத்து விட்ட உரிமை வாழ்வு,

ஏற்றத்தாழ்வுகளை அழித்து மனித வரிசையிலே ஆண்டானும் அடிமையும் ஒன்றுபட்டு நின்றபோது விளைந்த சமத்துவ உணர்வு,

—இவை இரண்டும் கூடி அதுவரை பாமர வாழ்வையே கண்டிருந்த அவர்களின் நரம்புகளில் புகுந்து தன்னிச்சையான ஒரு படபடப்பை உருவாக்கி விட்டன. இஸ்லாம் அவர்களில் எவரையும் எவருக்கும் தாழ்ந்தவராகப் பிரித்துக் காட்டவில்லை. கட்டுப்பட்ட வாழ்வு இப்போது அவர்களுக்குக் கசந்தது. போதிய தெளிவு பெறாமையால் அமைப்பான நிர்வாகத்தையும் கூட புரிந்து கொள்ளப் பக்குவம் இருக்கவில்லை அவர்களுக்கு.

அத்தகைய தான் தோன்றித்தனத்தில் தலைமையானவையாக பஸரா, கூஃபா ஆகிய நகரங்கள் சிறந்து விளங்கின. அங்கே பிறந்த பேதங்களும் குழப்பங்களும் முந்திய கலீஃபா ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கே பல சிரமங்களை விளைவித்ததுண்டு. ஆயினும் அக்கலீஃபா மிக்க வன்மையோடு—திண்மையோடு அவற்றைச் சமாளித்தார்கள்.

படாடோபத்தில் மிதந்த பஸரா

பஸரா, கூஃபா ஆகிய இரண்டு நகரங்களுமே கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டவையாகும். காதிஸிய்யாவை அடுத்து பல போர்களில் பங்கேற்ற அரபு வீரர்கள் அந்நகரங்களில் தளங்களை அமைத்தும் தங்கியும் வாழ்ந்து வந்தனர். ஹிஜாஸைச் சார்ந்த பல முஹாஜிர்களுக்கும் அன்ஸார்களுக்கும் கூட வெற்றிப் பொருள்களில் கிடைத்த பங்கீடுகளாக நிலபுலன்கள் அங்கிருந்தன.

'ஜலூலா', 'ஹல்வான்' போர் வெற்றிகளையடுத்து கிடைத்த செல்வமும் பெருமிதமும் ஆடம்பர நாகரீக வாழ்வை நோக்கி பஸரா வாழ் மக்களை இழுத்துச் சென்ற வேகம், அதனைக் கண்ட நபிமணித் தோழர்களுக்கெல்லாம் கலக்கத்தையே தந்தது. நகரம் நிர்மாணிக்கப்பட்டு

அதன் முதல் ஆளுநராய்ப் பொறுப்பேற்ற நபிமணித் தோழர் ஹழ்லரத் உத்பா இப்னு கஸ்வான் (ரலி) அவர்கள் ஆறே மாதங்கள் கூட அப்பொறுப்பில் நீடிக்கவில்லை.

மனம் வெறுத்து மதீனா வந்த அவர்களை கலீஃபா உமர் (ரலி) அவர்கள் மீண்டும் பஸராவுக்கே சென்று பணியாற்றும்படி வற்புறுத்தினார்கள். கலீஃபா அவர்களின் கட்டளையைப் புறக்கணிக்கவும் முடியாமல் மனச் சடைவோடேயே ஒட்டகையில் ஏறி அமர்ந்த ஹழ்லரத் உத்பா இப்னு கஸ்வான் (ரலி) அவர்கள், ''இறைவா! என்னை மீண்டும் பஸரா அளவில் கொண்டு சேர்க்காதே" என இறைஞ்சினார்கள். அவ்விறைஞ்சுதலின்படியே அவர்கள் இடைவழியிலேயே இறப்பினால் அணைக்கப்பட்டதே அத்தூய நபித் தோழரின் துறவற நெஞ்சம் பஸரா வாழ்க்கையில் கொண்டிருந்த வெறுப்பை விளக்கப் போதுமான சான்றாகும்.

பின்னர் பொறுப்பேற்ற ஹழ்லரத் மஜாஷிஇ இப்னு மஸ்ஊத் (ரலி), முகைரா இப்னு ஷஅபா (ரலி) ஆகியோரும் கூட ஓராண்டுக்கும் அதிகமாக பஸராவில் தங்கியிருக்கவில்லை. தங்களின் மனங்கொண்ட போக்கிற்குத் தடையாக நின்ற மாநபித் தோழர்கள் மீது அபாண்டங்களைச் சுமத்தவும் தயங்கவில்லை பஸராவாசிகள்.

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் மரண காலத்தில் அதன் ஆளுநராக மாநபித் தோழர் ஹழ்லரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். குழப்பத்தை விளைவிப்பதற்கென்றே பஸராவில் இருந்த ஒரு கூட்டத்தார் ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களையும் தப்ப விடவில்லை.

மக்காவின் குரைஷிகள் மாநபி (ஸல்) அவர்களை ஏற்க மறுத்த ஆரம்ப காலத்திலேயே யமன் நாட்டிலிருந்து தேடி வந்து அத்திரு நபியின் திருக்கரம் பற்ற முந்திக் கொண்டவர்கள் ஹழ்லரத் அபூ மூஸா (ரலி); மிகுந்த வெள்ளுள்ளம் கொண்டவர்; ஆயினும் போர்த்திறன் படைத்தவர். ஆளுநர் பொறுப்போடு பஸராவின் படைத் தலைமையும்

அவர்களிடமே இருந்தது. தகுதியால் உயர்வு பெற்ற அந் நபிமணித் தோழர் மீது வீண் பழிகளைச் சுமத்த குரோதக் காரர்கள் கொண்ட எண்ணங்கள் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் திடுக்கத்தால் முடங்கியே கிடந்தன. மாநபித் தோழர் ஹழ்லரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி) அவர் கள் மீது அபாண்டங்களைச் சுமத்தியவர்கள் கலீஃபா உமர் (ரலி) அவர்கள் நடத்திய விசாரணைகளில் உண்மை கள் வெளிப்பட்டபோது பெற்ற வெகுமதிகள் மற்றவர்களுக் கும் பாடங்களாய் இருந்தன.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற பின்னும் ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் நீண்ட காலம் அப்பொறுப்பில் இருந்தார்கள். ஆயினும் குரோதக் காரர்களை அழுத்தி நின்ற அச்சம் அகன்று விட்டிருந்தது. வாய்ப்பை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தார்கள்.

ஹிஜ்ரி 29-ல் 'குர்து' இனத்தவர்கள் கலகஞ் செய்யும் செய்தி ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை எட்டிய போது (பக்கம்-60) கலீஃபா அவர்கள் பஸராவின் ஆளு நரான ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களைச் சென்று அக்கலகத்தை அடக்குமாறு கட்டளை அனுப்பினார்கள். அதனை ஏற்று ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களும் ஆயத்தங்களை மேற்கொண்டார்கள்.

போருக்கென மக்களை அழைத்து பள்ளியில் உரை யாற்றிய ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள், கால் நடை யாகவே சென்று அல்லாஹ்வுக்காகப் போர் புரிவதற்குப் பிரதியாகக் கிடைக்கக் கூடிய பலன்களைப் பற்றி எடுத் துரைத்தார்கள்.

ஆளுநரின் உரை கேட்டு மக்களும் கிளர்ந்தெழுந்தனர். வாகனத்தைப் பெற்றிருந்தவர்களிலும் மிகப் பலர் ஆளு நரின் அவ்வுரை தந்த உணர்வால் தங்கள் வாகனங்களை விட்டு, கால் நடையாகவே போருக்குப் புறப்பட்டார்கள். குரோதக்காரர்கள் அவர்களிடையே சென்று, ''பொறுங் கள் நம் ஆளுநரல்லவா முதலில் புறப்பட வேண்டும்" எனத் தந்திரமாகப் பேசி அவர்களைத் தாமதிக்கச் செய்து விட்டனர்.

மறு நாள் காலை ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் தம் உயர்ந்த துருக்கிய புரவியின் மீது அமர்ந்து கம்பீர மாகக் களம் காணப் புறப்பட்டார்கள். அவர்களின் தளவாடங்களையும் பொருள்களையும் சுமந்து நாற்பது கோவேறு கழுதைகள் புறப்பட்டன. குழப்பக்காரர்கள் பாய்ந்து சென்று ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்களின் புரவியின் கடிவாளத்தைப் பற்றிக் கொண்டனர். ''நேற்று மக்களை கால் நடையாகவே போர் மேல் செல்லத் தூண்டி னீர். இன்று நீரோ புரவி மீதமர்ந்துப் புறப்படுகிறீர். என்னே உம் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே பேதமை! போர்க்களம் செல்லும் உம்மோடு இவ்வளவு பொருள்கள் எதற்கு—சுகம் தேடவா?" எனக் கேட்டுத் தர்க்கித்தார்கள். அந்தக் குழப்பத்தைச் சுமந்து கொண்டு மதீனாவுக்கே வந்து கலீஃபா அவர்களிடமும் முறையிட் டார்கள். வெண்மையுள்ளம் படைத்த ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் விஷமிகளின் செயல் கண்டு வாய டைத்து நின்றார்கள்.

வாகனங்களைப் பெற்றிருந்தவர்களில் பலரும் தங்கள் வாகனங்களை விட்டு கால் நடையாகவே போருக்குப் புறப்படக் காரணம் நன்மைகளை அள்ளிச் சேர்க்க அவர் கள் கொண்டிருந்த ஆர்வமும், ஆளுநரின் உரை கேட்டு அவர்களின் உள்ளங்கள் பெற்ற உணர்வுகளுமேயாகும். வாகனங்களற்றவர்கள் மனச்சோர்வு கொண்டு பின்ன டைந்து நின்று விடாதிருக்கவே ஆளுநர் அபூ மூஸா (ரலி) அவர்கள் உரையாற்றினார்களேயன்றி, வாகனக்காரர்கள் எவரையும் தம் வாகனத்தை நிறுத்தி விட்டு கால் நடை யாக களம் செல்ல அவர்கள் நிர்ப்பந்திக்கவில்லை.

ஆரம்ப கால இஸ்லாமியப் பெருவெற்றிகளுக்குக் காரணமாக நின்ற போர்த் தளபதிகளில் ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்களும் ஒருவர். கலீஃபா உமர் (ரலி) அவர் களின் காலத்தில் அடங்காப் பிடாரிகளாகத் தலைபட் டிருந்த 'அஹ்வாஸ்' கலகக்காரர்களைப் பூரணமாக ஒடுக்கி ஹர்மூஸானை இறுதியாகச் சிறை பிடித்தவரும் அவர்களே. புரட்சிக்காரர்களிடையே புகுந்து அவர்களை வெற்றி

கொண்டு வெளிப்பட்ட எத்தனையோ முன்னனுபவப் பாடங்கள் அவரிடம் இருந்தன.

ஆளுநராக இருந்த நிலையிலும் தம் வருவாயையும் உடைமைகளையும் ஏழைகளுக்கு அறம் வழங்கி எளிமையில் இனிமை கண்ட ஒரு நபிமணித் தோழர் — உணவையும் உறக்கத்தையும் குறைத்து பகல் முழுவதையும் உழைப்பிலும் இரவின் பெரும் பகுதியை வணக்கத்திலும் கழிக்கும் பழக்கமுடையவர்-பொதுக் கருவூலத்திலிருந்து உதவி பெறுபவர்களில் நேரில் வந்து பெறச் சக்தியற்ற பலஹீனர்களின் வீடு தேடிச் சென்று அவர்களின் பங்குகளைச் சேர்ப்பிப்பதோடு கடை வீதிகளுக்குச் சென்று அவர்களின் தேவைப் பொருள்களையும் வாங்கிச் சேர்ப்பிக்கும் ஒரு சீர்மையாளர் —அத்தகைய ஒரு மக்களின் ஆளுநர் கலகத்தை ஒடுக்கத் தம் மக்களை அழைத்துச் செல்கையில் பின்னர் தேவைப்படக் கூடியவற்றை முன்னறிவோடு எடுத்துச் செல்வதை அவர் தம் சுக வாழ்வு தேடியே எடுத்துச் சென்றதாகக் கணித்ததும் எத்தகைய பேதமை!

பெருமையையும் படாடோபத்தையும் அறவே விரும்பாத கலீஃபா உமர் [ரலி] அவர்கள் ஜாபியாவில் பட்டாடை உடுத்தி நின்ற தளபதிகள் காலித் இப்னு வலீத் (ரலி), யஜீத் இப்னு அபூஸுஃப்யான்(ரலி)போன்றோர் மீது கோபங் கொண்டு கூழாங்கற்களை அள்ளி அடித்தார்கள். 'அமீரல் முஉமினீன்! எதிரிகளின் உள்ளங்கள் அச்சங்கொள்ளவே இவ்வாறு எங்கள் கம்பீரத்தை வெளிப்படுத்துகிறோமேயன்றி பட்டாடைகளுக்குள்ளே போர்க் கவசங்களை அணியவும் நாங்கள் தவறவில்லை'' என அத்தளபதிகள் கூறிய காரணத்தை கலீஃபா அவர்கள் ஏற்கவில்லையா? அந்த முன்னுதாரணம் இருக்கையில் தள நாயகராய்க் களம் காணப் புறப்பட்ட ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் தம் புரவி மீது ஆரோகணித்துப் புறப்பட்டதில் என்ன தவற்றைக் காண முடியும்?

கலீஃபா அவர்களின் விசாரணையின்போது ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் வாயடைத்தே நின்றார்கள்

என்றெழுதுவதில் வரலாற்றாசிரியர்கள் எந்த இன்பத்தையும் சுவைக்கவே முடியாது. விளையப் போகும் விபரீதங்களைப் பற்றித் தம் மாநபிகளார் (ஸல்) அவர்கள் செய்த முன்னறிவிப்பு இத்தனை விரைவாகவே பலித்து விட்டது கண்டு அந்நாயகத் தோழர் வாயடைத்து நின்றதில்தான் என்ன வியப்பு?

நாயகத்தின் கலீஃபாக்களோ தங்கள் செயல் முறைகளில் சுயேச்சையானவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வுடையவும், அவன் தூதருடையவும் வரையறைகளையன்றி அவர்களை கட்டுப்படுத்த எந்த வல்லமையும் அப்போதிருக்கவில்லை. என்றாலும் அவர்கள் மக்களின் குரல்களுக்குச் செவி சாய்ப்பவர்களாகவே ஆட்சி செய்தார்கள். தங்களின் அதிகார எல்லைக்குள் வாழ்ந்த ஒவ்வொரு கூட்டத்தாருடையவும் மனோபாவங்களையும் அவர்கள் மதித்தார்கள். ஒவ்வொரு தனி மனிதனுக்குமே தன் எண்ணத்தை உரத்து ஒலிக்க உரிமையளிக்கப்பட்டிருந்தது அவர்களின் ஆளுகையில்.

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் முன்னே ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களின் சங்கையும் திறனும் மறைபொருள்களல்ல. அதே சமயம் குற்றச்சாட்டுகளைச் சுமந்து வந்தவர்கள் யார்? அவர்களின் சிந்தனைப் போக்கென்ன? என்பதையெல்லாம் உணர்ந்திருந்த கலீஃபா அவர்கள் தங்கள் முன்னவர் ஃபாரூக்குல் அஅலம் அவர்களின் முன்னுதாரணத்தையேயொட்டி ஹழ்லரத் அபூ மூஸா (ரலி) அவர்களை மதீனாவுக்கு அழைத்துக் கொண்டார்கள். அவர்களுக்குப் பிரதியாக கலீஃபா அவர்களின் தாய் மாமன் மகன் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) பஸராவின் ஆளுநராக அனுப்பட்டார். (பக்கம் 61).

மதீனாவை விட்டு வெளியேறிய இப்னு ஸபா பஸராவுக்கு வந்தான். நாடோடியாக வந்த அவனுக்கு அடைக்கலம் தந்தது ஹக்கீம் இப்னு ஜபலா என்பவனின் வீடு.

திம்மிகளைக் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டவன் ஹக்கீம் இப்னு ஜபலா. அவனின் தொல்லை

களைப் பற்றி திம்மிகளின் முறையீடுகள் கலீஃபா அவர் களை எட்டின. அவன் வழி திருந்தி விட்டான் என ஐயத் திற்கிடமின்றி உறுதியாகும் வரை கடுமையான காவலும் கண்காணிப்பும் இருக்கட்டும் என கலீஃபா அவர்கள் தங் கள் ஆளுநர் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர்களுக் குக் கட்டளையிட்டிருந்தார்கள். அத்தகைய ஒரு கால கட் டத்தில் இப்னு ஸபாவும் அவன் வீட்டில் வந்து தங்கினான்.

இப்னு ஸபா முதலில் பஸரா வாழ் மக்களின் மனோ பாவங்களை ஆயலானான். இரண்டு வெவ்வேறான குணங் கள் அவர்களிட மிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருந்தன. மருள் கலைத்து தங்களை மனிதர்களாக்கி விட்ட இஸ்லாத் தின் திருநபியின்பால் அவர்கள் மட்டிலாத மரியாதையும் அன்பும் கொண்டிருந்தது ஒன்று. மற்றொன்று சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துவங்கி விட்ட அவர்கள் ஒரு கட்டுப் பாட்டுக்குள் அடங்குவதில் கொண்டிருந்த வெறுப்பு. ஆட்சி, நிர்வாகம் பற்றிய போதிய அறிவு அவர்க ளுக்கில்லாததால் அதிகாரிகளை வெறுத்தார்கள். அந்தப் பலஹீனத்தையே படியாக வைத்துத் தன் பணியைத் துவக் கினான் இப்னு ஸபா.

அவர்களுக்கிடையே உறவாடி அவன் ''ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் உலகுக்கு வருவார்கள் என் பதை ஏற்கும் நீங்கள் நபிகளுக்கரசர் பெருமான் முஹம்மத் (ஸல்) அவர்களும் மீண்டும் வருவார்கள் என்பதை அறியா திருப்பதும் ஒரு விந்தையே'' எனப் பேசியது ஒரு புதுமை யாகவே பட்டது அவர்களுக்கு!

மக்களின் ஒரு சாராரின் உள்ளங்கள் தன்பால் மயக்க மடைந்து விட்டன என்பதை உணர்ந்தவுடனே அவன் அடுத்த கணையைத் தொடுத்தான்; ''என்னே! நபியின் பால் உங்களுக்கிருக்கின்ற அன்பு! நபியுடைய கோத் திரத்தார் உங்களிடையே உயிருடன் இருக்க நீங்கள் பிற கோத்திரத்தவரை உங்கள் கலீஃபாவாக்கிக் கொண்டீர்கள். அவரோ அப்புனித குடும்பத்தார்களை அடியோடு புறக் கணித்து தம் உமையாக் கோத்திரத்தாரையே அதிகாரத்

தில் நிரப்புகிறார்" எனப் பேசி அவர்களைத் திசை திருப்ப லானான். மாநபியின்பால் பேரன்பு கொண்டவனாக அவனை எண்ணிக் கொண்டார்களேயன்றி பாமரர்கள், ஐக்கிய கிலாஃபத்துக்கு எதிராக அவன் தூவும் வித்துக் களின் விஷத் தன்மையை உணர்ந்தார்களில்லை.

இச் செய்திகள் யாவும் ஆளுநர் இப்னு ஆமிர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்தன. அவனை அழைத்து விசாரித்தார் ஆளுநர். ''வேதக்காரனாக இருந்த நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். தங்களின் நிழலில் அமர்ந்து அதன் தாத்பரியங்களை ஆய்ந்து கொண்டிருக்கிறேன்'' எனக் குழைந்தான் இப்னு ஸபா. ஆயினும் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) மயங்கிடவில்லை அவனின் குழைவில்; 'உன் கோட்பாடுகள் அனைத்தும் தவறானவை. நீ இங்கிருக்கலாகாது' எனக் கூறி பஸராவை விட்டும் அவனை வெளியேற்றி விட்டனர். அங்கிருந்து வெளியேறிய இப்னு ஸபா கூஃபா வந்தான்!

குழப்பத்தின் கூடாரம் கூஃபா

கூஃபா நகரம் குழப்பத்தின் கூடாரமாக ஆரம்ப நாளிலேயே விளங்கியது. அதன் நிர்மாணகர்த்தாவான ஹழ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மீது கூஃபா வாசிகள் கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்திலேயே பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியவர்களே. எனினும் மக்களின் மனப்போக்காலேயே அவர்களை வழி திருத்தும் பக்குவம் கற்ற அப் பெருங் கலீஃபா குற்றமற்ற நிலையிலும் ஹழ்ரத் ஸஅத் [ரலி] அவர்களை மதீனாவுக்கு அழைத்துக் கொண்டு, அவர்களுக்குப் பகரமாக ஹழ்ரத் அம்மார் இப்னு யாஸிர் (ரலி) அவர்களை கூஃபாவின் ஆளுநராக நியமித்தார்கள். அவரையும் தங்களிடையே தங்க விடவில்லை கூஃபாவாசிகள். பின்னர் ஹழ்ரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி) அவர்கள் கூஃபாவின் ஆளுநர் பொறுப்பேற்றிருந்தனர். ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் மரணத் தருவாயில் வெளியிட்ட கருத்தின்படியே புதிய கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள், ஹழ்ரத் முகீரா [ரலி] அவர்களை மதீனாவுக்கு அழைத்துக் கொண்டு மீண்டும்

ஹழ்லரத் ஸஅத் (ரலி) அவர்களையே கூஃபாவின் ஆளுந ராக அனுப்பி வைத்தார்கள்.

ஹழ்லரத் ஸஅத் [ரலி] அவர்களின் கண்டிப்பான நிர்வாகத்தைப் பற்றிய அனுபவம் கூஃபா வாசிகளுக்கு முன்னரே இருந்ததால் அவர்கள் அம்மாநபித் தோழரின் வருகையை உண்மையில் விரும்பவில்லை. வாய்ப்பை எதிர் நோக்கிக் காத்திருந்த அவர்களுக்கு, ஹழ்லரத் அப்துல் லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களோடு ஹழ்லரத் ஸஅத் [ரலி] அவர்களுக்கு ஏற்பட்ட பிணக்கே ஒரு வர மாக அமைந்து விட்டது. (பக்கம் 49)

வாங்கிய கடனை வாக்களிக்கப்பட்ட தவணையில் திருப்பித் தர வசதியற்ற வாழ்க்கையில் ஒரு மாகாண ஆளு நர்—ஹழ்லரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி),

மாகாண ஆளுநராக மட்டுமின்றி அம்மாநிலத்தை வெற்றி கொண்ட வீர நாயகராகவும், கூஃபா நகரத்தையே நிர்மாணித்த அதன் தந்தையாகவும் அவர் இருந்த நிலையி லும், அத்தகுதிகளையெல்லாம் புறமொதுக்கி, மக்களின் உடைமையிலிருந்து அவர் பெற்ற கடனை அவரே வாக் களித்தபடி அவரிடமிருந்து திரும்பப் பெறுவதில் எந்தச் ச லுகையும் அவருக்குக் காட்டச் சித்தமாகாத கருவூலக் கா ப்பாளர் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி).

—நபிமணி [ஸல்] அவர்களின் இரு பெரும் தோழர் களில் ஒருவரின் வாழ்க்கையின் தூய்மையையும் மற்றவரின் கடனா ற்றும் பாங்கையும் பகுத்துணரத் திறனற்ற கூஃபா வின் கு ப்ட சிந்தனையாளர்கள் இரு அணிகளாகப் பிரிந்த னர்.

ஒரு சாரார் கடனைத் திருப்பித் தராததற்காக ஹ ழ்ல ரத் ஸஅத் (ரலி) அவர்களைத் தூற்றினார்கள். மறு சாரார் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர் களை நிந்தித்தனர். இரு சாராருமே தத்தம் குற்றச்ச ட்டு களைச் சுமந்து கொண்டு கலீஃபா அவர்களிடம் வந்து மு ற யிட்டனர். கலீஃபா அவர்கள் நபிமணித் தோழர்கள் இரு

வரையும் மதீனாவுக்கு வரவழைத்து விசாரணை நடத்தினார்கள். சக்திக்கு மீறிய தொகையைக் கடனாகப் பெற்றமைக்காக ஹழ்ரத் ஸஅத் (ரலி) அவர்களைக் கண்டித்து பதவி நீக்கமும் செய்து விட்டார்கள். அவர்களுக்குப் பகரமாக வலீத் இப்னு உக்பா இப்னு முஈத் கூஃபாவின் ஆளுநரானார்.

கலீஃபா உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஜஸீராவில் அதிகாரத்திலிருந்தபோதே வலீத் இப்னு உக்பாவின் இனிய மனமும் தாராளத் தன்மையும் கூஃபாவாசிகளிடையே பிரசித்தமாகி இருந்தன. எனவே ஆளுநராகிக் கூஃபா வந்ததுமே வலீத் இப்னு உக்பா, கூஃபாவாசிகளின் இதயங்களில் புகழினாலான பெரும் பெரும் மாளிகைகளையே எழுப்பி விட்டார். ஆனால் நான்கு அல்லது ஐந்தே ஆண்டுகளில் அவை அனைத்தும் தகர்ந்து தூளாகி விழுந்த மண்மேட்டையும் கூடக் காண முடியவில்லை. கூஃபாவாசிகள் தூற்றோ தூற்றென்று தூற்றினார்கள் வலீதை.

இறுதியாக, வலீத் மதுவருந்துவதாக கலீஃபா அவர்களிடமே வந்து முறையிட்டார்கள். விசாரணையின்போது அக்குற்றச்சாட்டில் கலீஃபா அவர்களுக்கு நம்பிக்கை தோன்றாததால் கலீஃபா அவர்கள் தீர்ப்பெதுவும் வழங்காமல் தாமதித்தாலும் குழப்பவாதிகள் அமைதி அடைந்து விடவில்லை. பலமான சாட்சிகளைக் கொணர்ந்து கலீஃபா அவர்கள் முன் நிறுத்தி வலீதுக்கு சவுக்கடி தண்டனை கிடைக்கவே செய்தார்கள். கலீஃபா அவர்கள் அத்துடன் வலீதை பதவி நீக்கமும் செய்து விட்டார்கள். அவருக்குப் பகரமாக ஹழ்ரத் ஸஈதிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் புதிய ஆளுநராக நியமனம் பெற்று கூஃபாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

கூஃபாவின் குழப்பக்காரர்கள் புதிய ஆளுநர் ஹழ்ரத் ஸஈதிப்னுல் ஆஸ் (ரலி) அவர்களோடேயே கூஃபா திரும்பினார்கள். ஹழ்ரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் [ரலி] அவர்களையடுத்து வலீத் இப்னு உக்பாவின் ஐந்தாண்டு கால நிர்வாகத்தில் அச்சந்தளர்ந்திருந்த கூஃபா வாசிகள் புதிதாகப் பதவியேற்று தங்களுடன் வரும் 28 வயதுகளே

நிரம்பப் பெற்றிருந்த இளம் ஆளுனரைப் பற்றி கொண்ட கற்பனை மிகச் சாமானியமானதாகவே இருந்தது.

ஹிஜ்ரி 1-ம் ஆண்டில் பிறந்து, மக்கா வெற்றியின் போதே இஸ்லாத்தில் இணைந்த ஹம்லாத் ஸஃதிப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிலும் திறனிலும் சிறந்தவர். கூஃபா வந்ததுமே அவர் நகரின் கண்ணியவான்களைக் கூட்டி அங்கிருந்த நிலைமையை ஆய்ந்து கலீஃபா அவர்களுக்கு எழுதினார். குழப்பக்காரர்களின் ஒரு பட்டியலே ஹம்லரத் ஸஃத் (ரலி) அவர்களால் கலீஃபா அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாலிக் இப்னு ஹாரிஸ் என்று அழைக்கப்பட்ட மாலிக் இப்னு ஹாரிஸ் நகஈ, ஹமதா னைச் சார்ந்த ஸாபித் இப்னு கைஸ், அஸ்வத் இப்னு யஜ்ஸீத், அல்க்மா இப்னு கைஸ், ஜுந்தப் இப்னு ஸுஹைர், ஜன்தப் இப்னு கஅப் அஸதீ போன்றவர்கள் அதில் முதலி டம் பெற்றிருந்தனர். அப்பட்டியலோடு அனுப்பி வைக்கப் பட்ட ஓலையில் "கூஃபாவின் நிலைமை மிகவும் கெட்டிருக் கிறது. மார்க்கம் இன்னதென்று அறியாதவர்கள், அடங் காப் பிடாரிகள் ஆகியோரின் கரங்கள் ஓங்கி நிற்கின்றன. கண்ணியவான்களின் உயிர்களும் உடைமைகளும் மரியாதை யிழந்து பாதுகாப்பின்றி தவிக்கின்றன" என ஹம்லரத் ஸஃத் (ரலி) அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதற்கு பதிலாக கலீஃபா அவர்கள், "அல்லாஹு தஆலா அந்தப் பூமியை நமக்கு வசப்படுத்தித் தர நாடிய போது கருவிகளாய் நின்று எதிரிகளை வீழ்த்த பெரும் பெரும் அர்ப்பணங்களைச் செய்திருக்கிறார்களே அவர் களின் கண்ணியம் குறையாது பார்த்துக் கொள்வீராக. மற்ற எவருக்கும் உம் அவையில் நீர் முன்னிடம் அளிக்க வேண்டாம். அம்முதல்வர்களிலும் எவரேனும் மார்க்க விஷயத்தில் அலட்சியத்தையோ தங்கள் அறியாமையை யோ வெளிப்படுத்துவார்களாயின் அத்தகையவர்களைப் பிற்படுத்தி மார்க்க உறுதியும் ஆர்வமும் கொண்டவர்களை முன்னிருக்கச் செய்வீராக. ஒவ்வொருவருடைய தகுதியை யும் கணித்து அத்தகுதிகளுக்கேற்றவாறே நியாயமான பங்குகளை அவரவர்களுக்கு அளிப்பீராக. அப்படியான வே

நீதி நிலைத்திருக்கும்" என கண்டிப்புடன் கட்டளையிட்டிருந்தார்கள்.

வலீதின் மீது பழி சுமத்தி தங்களின் சதிச் செயலில் வெற்றி கண்டு திரும்பிய குழப்பவாதிகள், ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர்களின் நிர்வாகத்தில் தங்களின் தான்தோன்றித் தனமான எண்ணங்களுக்கு முன்னிடம் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாந்தனர். ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர்களோ கலீஃபா அவர்களின் கட்டளைப்படி நகரின் கண்ணியவான்களின் கருத்துக்களுக்கே முதலிடம் அளிக்கக் கண்டபோது சற்றே அடங்கியிருந்த அவர்களின் குரோத நரம்புகள் மீண்டும் புடைத்தெழுந்தன. ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர்களின் நிர்வாகத்தைப் பற்றியும் தாறுமாறான விமர்சனங்களைச் செய்யலானார்கள்.

ஒரு நாள் ஆளுநரின் அவையில் அனைவரும் கூடியிருந்தனர். அதுவரை கண்ணியவான்களுக்கு முன்னிடம் அளிக்கப்பட்டதைத் தவிர்த்து குழப்பக்காரர்களும் அவையில் வந்தமர முற்றாகத் தடுக்கப்பட்டிருக்கவில்லை. அனைவருமே கூடிக் கலந்து, அவை மகிழ்ச்சியில் களை கட்டியிருந்த சமயமே ஆளுநர் ஸஈத் (ரலி) அவர்கள் தம் பேச்சு வாக்கில் ''கூஃபா நகரம் குரைஷிகளின் சோலை'' என மகிழ்ந்து கூறினார். அதனைக் கேட்டு மாலிக் இப்னு உஷ்த்தர் என்பவர் சினந்து பேசினார், ''எங்களின் வாட்களால் இறைவன் வெல்லச் செய்த ஒன்றை உம் இனத்தாரின் நந்தவனமென்றா நீர் கருதுகிறீர்" என்று. அவருக்குச் சாதகமாக வேறு சிலரும் கூக்குரலிட ஆரம்பித்தனர். அப்துர் ரஹ்மான் அஸதீ என்ற ஒருவர் அவர்களைக் கூக்குரலிட வேண்டாம் எனத் தடுத்தார். அனைவரும் சேர்ந்து அவரைத் தாக்கலானார்கள். அவர் மூர்ச்சையாகி விழுந்தார். அந்த அமளியோடு அவை கலைந்தது. அதோடு ஹழ்லரத் ஸஈத் (ரலி) வாயிலில் காவலரை நிறுத்தி இனித் தம் அவையில் குழப்பவாதிகள் வந்தமராதபடி தடை செய்தனர்.

ஆளுநரின் அவையில் இடமிழந்த குழப்பக்காரர்கள் தெரு வீதிகளிலும் முச்சந்திகளிலும் எங்கெங்கே ஓரிருவர்

சந்தித்துக் கொண்டார்களோ அங்கும், ஆளுநர் ஸஈத் (ரலி) அவர்களின் நிர்வாகத்தைப் பற்றி மட்டுமல்லாது ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் கிலாஃபத்தைப் பற்றியும் தாறுமாறான விமர்சனங்களைச் செய்யலானார்கள்.

அத்தகைய மிக ஏற்ற சூழ்நிலையில்தான், பஸராவை விட்டும் வெளியேறிய இப்னு ஸபா கூஃபா வந்தான். அக்குழப்பவாதிகளோடு கூடி உறவாடினான். அவர்களின் எண்ணங்களுக்கு வலிவூட்டினான். அக்குழப்பம் மேலும் முற்றவாரம்பித்தபோது ஹழ்ரத் ஸஈத் (ரலி) அவர்கள் எல்லா விபரங்களையும் கலீஃபா அவர்களுக்கு எழுதினார்கள். கலீஃபா, அவர்களனைவரையும் நகரை விட்டும் வெளியேற்றி ஸிரியாவின் புறம் விரட்டுமாறு கட்டளை எழுதினார்கள். அதன்படியே அவர்கள் கூஃபாவினின்றும் வெளியேற்றப்பட்டார்கள். அவர்களின் வரவைப் பற்றியும் அவர்களைப் பக்குவமாக வழி திருத்தும்படியும் ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்களுக்கும் கலீஃபா அவர்களின் ஓலை சென்றது.

கூஃபாவில் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மாதாந்தர ஊதியத்தை இனி அவர்கள் பெற முடியாதாகையால் ஸிரியாவில் இனி அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கலீஃபா அவர்களின் ஆணையும் அதில் காணப்பட்டிருந்தது. குழப்பக்காரர்களையும் கூட தங்கள் குடிமக்கள் என்ற தகுதியிலிருந்து இன்னும் தள்ளத் துணியாத நேரிய கலீஃபாவின் நீதி அது!

ஸிரியாவின் ஆளுநர் ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் அக்குழப்பக்காரர்களை நன்முறையிலேயே வரவேற்றார்கள். சதிச் செயல்களை விட்டொழிக்குமாறும் குரோத உணர்வுகளை ஒதுக்கி சமூக நடவடிக்கைகளில் இணைந்து பங்கேற்குமாறும் அறிவுரைகளைக் கூறினார்கள். ஆனால் அக்குழப்பக்காரர்களோ தங்கள் அகம்பாவத் தர்க்கங்களை விட்டொழிப்பவர்களாய் இல்லை. இறுதியாக சினமடைந்த ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் "நீங்கள் இதனைக் கூஃபாவாக எண்ணியிருக்கிறீர்கள். அல்ல,

நீங்கள் இப்போது தங்கியிருப்பது ஸிரியாவில் என்பது நினைவிருக்கட்டும். உங்கள் குடல்களை அறுத்து கூறு போட ஸிரியாவாசிகளுக்கு கண்சாடை காட்டுவதற்கு மேல் அதிகமாகச் சிரமப்பட வேண்டிய தேவை எனக்கு இருக்காது" என எச்சரித்தார்கள்.

அதோடு அவர்கள், கலீஃபா அவர்களுக்கும், அத்துரோகிகள் வழி திருந்தக் கூடியவர்களாகத் தெரியவில்லை என அறிவித்து எழுதினார்கள். கலீஃபாவிடமிருந்து அவர்களை ஜஸீராவுக்கு அனுப்பி விடுமாறு கட்டளை வந்தது. அவ்வாறே ஜஸீராவுக்கு விரட்டப்பட்ட அவர்களை அதன் ஆளுநராக இருந்த ஹழ்லரத் காலித் ஸைஃபுல்லாஹ் (ரலி) அவர்களின் திருமகனார்—அப்துர் ரஹ்மான் அவர்கள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. உளி கொண்டகற்ற வேண்டிய கணுவை ஊசி கொண்டசைப்பது மடமை என உணர்ந்த அவ்வாளுநர் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளாலும் கண்காணிப்பாலும் அயர்ந்தார்கள் குழப்பக்காரர்கள். கலீஃபா அவர்களிடமே சரணடைந்து தாங்கள் இழைத்த குற்றங்களுக்கு மன்னிப்பை வேண்டி எழுதினார்கள் அவர்கள். கலீஃபா அவர்களும் மன்னித்து அவர்களைக் கூஃபாவுக்கே சென்று வாழ அனுமதி வழங்கினார்களாயினும், கூஃபா சென்றால் அங்கு தாங்கள் எள்ளி நகையாடப்படுவோம் என அஞ்சி அவர்கள் ஜஸீராவிலேயே தங்கி வாழ்ந்தார்கள்.

வஞ்சகம் விலையாகாத ஸிரியா

கூஃபாவின் குழப்பவாதிகள் மீது ஆளுநர் ஸஈத் (ரலி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கவனித்த இப்னு ஸபா இனி தானும் கூஃபாவில் தங்குவது உசிதமல்ல எனக் கருதி வெளியேறினான். ஆயினும் அவன் பஸராவிலோ கூஃபாவிலோ தன் குழப்ப சிந்தனைகளைத் தொடர்ந்து பரப்ப ஒரு சில சீடகோடிகளையேனும் உருவாக்கி விட்டே பிரிந்தான்.

கூஃபாவிலிருந்து வெளியேறி ஸிரியாவுக்குள் நுழைந்த போது அங்கு அவன் கண்ட நிலை மற்ற மாகாணங்களில்

அவன் பெற்ற அனுபவங்களுக்கு முற்றிலும் மாற்றமான தாயிருந்தது. மக்களின் எண்ணங்களை கலீஃபாவுக்கோ அல்லது கலீஃபாவின் ஆளுநருக்கோ எதிராகத் திருப்பி விட எந்த வித நம்பிக்கையும் அவனுக்குத் தோன்றவில்லை. ஆளுநர் முஆவியா (ரலி) அவர்கள் தம் சுட்டு விரல் நீட்டிக் காட்டும் பாதையில் தடையின்றி நடை பயிலக் காத்திருந்த னர் ஸிரிய மக்கள். அந்த அளவுக்கு அம் மாநபித் தோழரின் மென்மையும் வன்மையும் கலந்த ஒப்பிலாத் திறன் படைத்த நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது ஸிரியாவில்.

இப்னு ஸபாவின் அறிவுக் கூர்மையும் குறைத்து மதிப் பிடக் கூடியதல்ல. மாநிலங்களின் ஒவ்வொரு பகுதியிலும் வாழ்ந்த மக்களின் மனப்போக்குகளுக்கேற்றவாறு அவ னுடைய செயல் திட்டங்களும் மாறிக் கொண்டிருந்தன. தன் முயற்சிகளில் வெற்றி காண எந்த வாசல் வழியாக—எந்த வேடமிட்டு நுழைந்து—எவரைச் சந்திக்க வேண்டு மென்ற முன்னறிவு மிகப் பெற்றவனாக அவன் விளங்கி னான். தன் வஞ்சகச் சொல்லலங்காரத்தில் மயங்கக் கூடிய சாமானியர்கள் ஒருவரையும் சந்திக்க வாய்ப்பு ஸிரியாவில் கிட்டாதபோது அவன் சோர்ந்து விடவில்லை. எவரைக் கொண்டு என்ன மாற்று வழி கிடைக்கும் எனத் தொலைவிலிருந்தே நோட்டமிட்டுக் கொண்டிருந்த அவன் பார்வை மாநபித் தோழர் ஹழ்லரத் அபூதர் கிஃபாரீ (ரலி) அவர்கள் மீது பதிந்து நின்றது.

'மஸீஹுல் இஸ்லாம்' எனப் பெருமானார் திரு நபி (ஸல்) அவர்களாலேயே புகழப் பெற்ற அத்துறவிப் பெருந் தோழர்—பொருளாதாரப் பெருக்கத்தினால் சமூகத்தைப் பற்றி நின்ற நவீனப் பகட்டுகளும் நாகரிக மிடுக்குகளும் சற்றுமே அண்மாத அவரின் பற்றறுத்த வாழ்க்கை—தனி யொருவன் பசித்திருக்க இனியொரு காசும் தம்மிடம் மிஞ்சியிருக்கத் தகாதெனக் கொண்டு உணவுத் தேவைக்கு அப்பாற்பட்ட தம் வருவாய் முழுவதையுமே அள்ளித் தந்து விடும் அவரின் வள்ளன்மை -இவை யாவற்றையும் கூர்ந்து நோட்டமிட்டுக் கொண்ட இப்னு ஸபாவின் நரிக்

கண்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களை நெருங்கி உற வாடவாரம்பித்தன.

''பெருந்தகையீர்! என்ன கொடுமை, முஆவியா முஸ்லிம்களின் உடைமைகளை அல்லாஹ்வின் உடைமை என்கிறார். பொருள்கள் ஒவ்வொன்றும் அல்லாஹ்வுக்கே உடைமையன்றோ? கருவூலத்தை மட்டுமே அல்லாஹ்வின் உடைமை எனக் கூறுவதன் மூலம் அவரின் நோக்கம் அதனை மக்களுக்குப் பங்கிட்டளிக்காது அரசாங்கத்தின் உடைமையாக்கிக் கொள்வதாகவே தோன்றுகிறது'' எனத் தூபமிட்டான்.

கள்ளங்கபடமற்ற தெளிந்த உள்ளத்தைப் பெற்றிருந்த வர்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி). இப்னு ஸபாவின் கூற்றில் எந்த ஒரு வினயத்தையும் அவர்கள் எண்ணிப் பார்க்கவே இல்லை. நேரே ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களிடமே சென்று வினவினார்கள், ''என்ன முஸ்லிம்களின் உடைமை களைத் தாங்கள் அல்லாஹ்வின் உடைமை எனக் கூறு வதேன்?'' என்று.

''அல்லாஹ் தங்கள் மீது அருள் புரிவானாக. நாம் அனைவரும் அல்லாஹ்வின் அடிமைகளேயன்றோ? படைப்பு கள் அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையன்றோ? இயக்கங்கள் யாவும் அவனின் கட்டளைகளின் பால் பட்ட வைகளேயன்றோ? அப்படியானால் உடைமைகள் யாவும் அவனுக்கே சொந்தமானவையன்றோ?" என வினவினார் கள் ஹழ்லரத் முஆவியா (ரலி).

''இவை யாவும் மிகச் சரியே. என்றாலும் பொதுக் கருவூலத்தைத் தாங்கள் அல்லாஹ்வின் உடைமை எனக் கூற வேண்டாம்" எனத் தர்க்கித்தார்கள் ஹழ்லரத் அபூ தர் (ரலி).

''இல்லை. கருவூலத்தை அல்லாஹ்வின் உடைமையல்ல என்று நான் ஒருபோதும் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். ஆயினும் தங்களின் விருப்பப்படி இனி அதனை முஸ்லிம் களின் உடைமை என்றே கூறுகிறேன்" எனக் கூறி ஆளுநர் முஆவியா (ரலி) விவாதத்தை முடித்துக் கொண்டார்கள்.

ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களிடத்தில் தன் முயற்சியில் வெற்றி கண்ட இப்னு ஸபா அடுத்து மாநபித் தோழர் ஹழ்லரத் அபுத்தர்தா (ரலி) அவர்களைச் சந்தித்தான். ஹழ்லரத் அபுத்தர்தா (ரலி) அவர்களும் எளிமை வாழ்விலேயே ஏற்றங்கொண்டு வாழ்ந்தவர்களேயானாலும் அவர்களிடமோ இப்னு ஸபாவின் முடிச்சு மாறித்தனம் செல்லுபடியாகவில்லை. அவர்கள் அவனைக் கைப்பிடியாகவே ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் முன் கொணர்ந்து நிறுத்தி, 'உமக்கும் அபூதர்ருக்குமிடையே சிண்டு முடிந்தவன் இவனே' எனக் கூறி ஒப்படைத்தார்கள்.

இப்னு ஸபா, ஸிரியாவை விட்டும் வெளியே விரட்டப்பட்டான். அவன் ஊன்றிய குழப்ப வித்து மற்ற மாகாணங்களைப் போல் ஸிரியாவில் படர்ந்து பரவாவிட்டாலும், பலனில்லாமலே பட்டுவிட்டது என்றும் கூற இயலாது.

ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களைச் சந்தித்துப் பிரிந்த ஹழ்லரத் அபூதர் (ரலி) மிகவும் உணர்ச்சி வசப்பட்டவர்களானார்கள். பொருள்களைச் சேமித்து வைப்பதன் தீங்கைப் பற்றி மக்களுக்கிடையே பிரச்சாரஞ் செய்யலானார்கள். ஏழைகள் ஒருபுறம் நலிந்து நிற்க டாம்பீக வாழ்க்கை நடத்துபவர்களைக் கடுமையாக நிந்தித்தார்கள். 'பைத்துல் மால்' எனப்பட்ட பொதுக் கருவூலமே அவசியமற்றது என்ற அளவுக்கு அவர்களின் பிரச்சாரம் வன்மையடைந்தது.

''அதிகாரத்தைத் தாங்கி உலவுபவர்களே! அநீதியால் ஏழைகளை வதைப்பவர்களே!

وَالَّذِيْنَ يَكْنِزُوْنَ الذَّهَبَ وَالْفِضَّةَ وَلَا يُنْفِقُوْنَهَا فِيْ سَبِيْلِ اللّٰهِ فَبَشِّرْهُمْ بِعَذَابٍ اَلِيْمٍ

பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்து அதனை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாத

வர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையைக் கொண்டு திருக்குர்ஆன் (9 : 34) நன்மாராயங் கூறுகிறது''

—என்ற அவர்களின் குரல் வாழ்க்கையில் நலிந்திருந்த வர்களிடையே ஒரு மன எழுச்சியைத் தூண்டத்தான் செய்தது. அவர்கள் தங்கள் அதிகாரிகளின் நடவடிக்கைகளில் குறை காணத் துவங்கினார்கள். பாமர வட்டாரங்களில் உருவாகிய அப்புதிய சூழ்நிலையைப் பற்றிய தகவல்கள் அதிகாரிகளின் வாயிலாக ஆளுநரை எட்டின. ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களுக்கு அது ஒரு கவலையை உண்டாக்கத்தான் செய்தது. ஏனெனில் கண்டிப்பு மிகுந்த ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களிடத்தில் மாநபித் தோழர் ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களின் கண்ணியமும் மகத்தானதாக இருந்தது.

ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றவர்களில் ஐந்தாமவர் என்றும் சில வரலாற்றாசிரியர்களால் கணிக்கப் பெற்ற முதுபெருந் தோழர் ஹழ்லரத் அபூதர் (ரலி) மக்கத்துக் குறைஷிகளிடமிருந்து தங்கள் உயிருக்கு ஊறு தேடிக் கொள்ள பெருமானார் திருநபி (ஸல்) அவர்களைச் சந்திப்பதே போதுமானதாயிருந்த—அத்தகைய ஆபத்தான—கால கட்டத்தில் கஅபாவுக்கு முன் நின்று பட்டவர்த்தனமாக ஏகத்துவத் திருமந்திரத்தை எடுத்தோத அஞ்சாத ஆண்மையாளர் அன்னவர்.

ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களோ, அதற்கு மிகப் பிந்திய காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றவர்கள் என்பது மட்டுமல்ல, தங்கள் மாநபியின் உறவின் முறையார்கள், உற்ற தோழர்கள் ஒவ்வொருவரைப் பற்றிய பேணுதலும் மரியாதையும் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களிடம் நிறையவே இடம் பெற்றிருந்தன. எனவே ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களின் நிலையைக் கலீஃபா அவர்களுக்கு எழுதி விடுதலே நிம்மதி என எண்ணி எழுதியும் விட்டார்கள் முஆவியா (ரலி). கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களை மிகக் கண்ணியத்தோடு தம்மிடம் அனுப்பி வைக்கும்படியாக பதில் எழுதினார்கள். அதன்

படியே ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களும் மிக மரியாதை யோடு மதீனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

இஸ்லாமியப் பொருளாதாரம்

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் அருமைத் தோழர்கள் இரு வகைப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள். இம்மைப் பேற்றையும் மறுமைப் பேற்றையும் ஒரு சேரக் கண்டு திருவாழ்வு கொண்ட சிலர்களும் அவர்களில் உண்டு. இம்மையின் பலன்களை முற்றாகப் புறமொதுக்கி அழிவிலா மறுமைப் பேறே தங்களுக்குப் போதுமெனக் காத்திருந்த உத்தமர்களும் அவர்களில் உண்டு.

வாழ்க்கையை அவர்கள் மிக எளிமைப்படுத்திக் கொண்டார்கள். தேவைகள் அவர்களுக்கு மிகக் குறைவாக இருந்தன. அத்தகைய சீலமிகு வாழ்க்கையை, பெருமானார் திரு நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த ஆரம்ப காலத்திலேயே தேர்ந்தெடுத்து அதன் காரணமாகவே மாநபி (ஸல்) அவர்களால் 'மஸீஹுல் இஸ்லாம்' என மகிழ்ந்தேற்கப் பெற்றவர்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி).

நாளைய தேவையைப் பற்றிய எண்ணத்தையே ஒழித்து, இருப்பதை அள்ளித் தந்தே திருப்தி கொண்டு விடுவதென்பது அந்நபித் தோழர்களுக்கேயன்றி மனிதர்கள் அனைவருக்கும் இயலக் கூடிய காரியமல்ல. இயலாமையின் பக்கம் மனிதனை எந்த ஒரு நிர்ப்பந்தத்தைக் கொண்டும் விரட்டிச் செல்லக் கூடிய மார்க்கமல்ல இஸ்லாம். பூரண நம்பிக்கையோடு பொறுமையின் துணை கொண்டு நடக்க முனையும் மனித வர்க்கத்துக்கு நிர்ப்பந்தங்களும் பலவந்தங்களுமில்லா அமைதி மார்க்கம் அது.

ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்கள் வெளியிட்ட கருத்துகள் வாழ்க்கைக்கென அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்ட கோட்பாடுகளேயன்றி பற்றொழித்த துறவறம் இஸ்லாத்தில் ஏவப்பட்ட ஒன்றல்ல. பண்பட்ட உறுதி கொண்ட அப்பெருந்தோழர் மேற்கொண்ட வாழ்க்கை முறை மனிதர்கள் அனைவருமே பின்பற்றக் கூடிய ஒன்றுமல்ல. ஆன்மீகத்தையும் லௌகிகத்தையும் புறக்கணிக்காத ஒரு

நடுநிலை வழியையே இஸ்லாம் மனித வர்க்கத்துக்கு அனைத்துத் துறைகளிலும் காட்டுகிறது. பதுக்கலை, கொள்ளையை, மோசடியைக் கொலைக்குச் சமமான குற்றமாகக் கண்டித்து அது எச்சரிக்கிறதேயன்றி, பொருள்களின் சேமிப்பையே அம்மார்க்கம் குற்றமெனக் கூறவில்லை.

வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகள் யாவும் இறைவனின் கற்பனையிலேயே விளைந்தவையாகும். அதனைச் சமன்படுத்தியே விடுவோம் எனத் துணிந்த எந்த வல்லமையும் நிலையான வெற்றியைக் காண முடிந்ததில்லை. அதன் சவாலைச் சமாளிப்பதற்கான சரியான ஒரு வழிமுறையை மனித வர்க்கத்துக்கு இஸ்லாம் ஒன்றே காட்டித் தருகிறது—'ஜக்காத்' என்னும் இறை சட்டத்தின் மூலம்.

அருள் மறை குர்ஆன் காட்டும் 'ஜக்காத்' என்னும் அந்தத் தத்துவம் ஒன்று மட்டுமே பேணப்பட்டால் போதும்—புழுக்கப் பேய் சமூகத்திடையே புக முடியாது. சீமான்களின் கண்கள் கனிந்து விடுமானால் சாமானியர்களின் கரங்கள் தாமே உயர்ந்து விடும் இறை சந்நிதானத்தில். அருள் வாசல்கள் திறக்கப்பட்டு விடும் அதன் பலனாக.

அருளையும் பொருளையும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த தாத்பரியத்தோடுதான் ஆண்டவனின் அருள் மறை தொழுகையை ஏவும் ஒவ்வொரு தருணத்திலும் மனிதனுக்கு ஜக்காத்தைப் பற்றியும் ஏவுகிறது. ஜக்காத்தாக அல்லாஹ்வினால் ஏவப்பட்ட அந்த ஈவுத் தொகையே அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணித்தே ஆக வேண்டியதாகும் என்பது ஹழ்ரத் முஆவியா (ரலி) போன்ற நபிமணித் தோழர்களின் கருத்து. அதனைச் சரிவரக் கணக்கிட்டு தந்து விடுபவர்களிடம் மிஞ்சியிருப்பதைப் பலவந்தமாகக் கேட்டுப் பெறுவதைக் கொள்ளையிடுவதற்குச் சமமாக எண்ணி அஞ்சினார்கள் அவர்கள். ஹழ்ரத் அபூதர் (ரலி) அவர்களின் கொள்கையோ அல்லாஹ்வினால் அருளப்பட்ட மனித உடைமைகள் அனைத்துமே அல்லாஹ்வின்

வின் பாதையில் அர்ப்பணிக்கப்பட முன்னுரிமை படைத்தவை என்பதாக இருந்தது.

பொன்னையும் வெள்ளியையும் சேமித்து வைத்துக் கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாதவர்களுக்குண்டான தண்டனை பற்றி திருக்குர்ஆன் கூறும் (9 : 34) எச்சரிக்கை முந்தைய கிறிஸ்துவப் பாதிரிகளுக்கும் சந்நியாசிகளுக்குமே ஆகும் என ஹழ்லரத் முஆவியா (ரலி) போன்றோர் விளக்கினர். அல்ல, செல்வம் படைத்த அனைவருக்குமே தான் என வாதிட்டார்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி).

அவ்வாறான மாறுபட்ட தம் கண்ணோட்டத்தால் ஸிரிய மக்களிடையே ஒரு பரபரப்பையே ஏற்படுத்தி விட்ட அந்நபிமணித் தோழரைப் பற்றி ''அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்களின்-சிரமமும் கடுமையும் நிறைந்த-எந்த ஒரு கட்டளையையும் அவர் கேட்பார். அதனைத் தம் மக்களுக்கும் சென்று அறிவிப்பார். பின்னர் நபி பெருமான் [ஸல்] அவர்கள் அதிலிருந்து சிரமத்தை விலக்கி விடுவார்கள். ஆனால் அந்தச் செய்தி அவருக்கு எட்டாமலும் போகலாம். அவர் தாம் முன்னர் கேட்டதன் பேரிலேயே உறுதியுடன் இருப்பார்'' என ஹழ்லரத் ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரலி) அறிவிக்கிறார்கள்.

மதீனா வந்தடைந்த ஹழ்லரத் அபூதர் [ரலி] அவர்களிடத்தில் கலீஃபா அவர்கள் கேட்டார்கள்,

''அபாதர்! ஸிரியாவின் தோழர்கள் உம்மைப் பற்றி முறையிடக் காரணம் என்ன?" என்று.

''அமீரல் முஃமினீன்! பைத்துல் மால் எனப்படும் பொதுக் கருவூலத்தை அல்லாஹ்வின் உடைமை எனக் கூறப்படுவதை நான் எதிர்க்கிறேன். இன்னும் பொருள்களைச் சேமிப்பது தலைவர்களுக்குத் தகுதியுடையதல்ல'' என்றனர் ஹழ்லரத் அபூதர் (ரலி).

நீண்ட உரையாடலுக்குப் பின் கலீஃபா அவர்கள் விளக்கினார்கள், ''யா அபாதர்! மக்களுக்கு என் மீது விதியாகியுள்ள பணிகளைச் செயல்படுத்த வேண்டியதும் மக்கள் மீது விதியாகியுள்ள கடன்களை அவர்களிடமிருந்து பெற வேண்டியதும் என் கடமைகளாகும். அவர்களை நான் மார்க்கம் காட்டும் நடுநிலையான பாதையில் அழைத்துச் செல்வேனேயன்றி உலகை வெறுத்தொதுக்க நான் ஏவ மாட்டேன்'' என்று.

''அப்படியானால் தாங்கள் என்னை விட்டு விடுங்கள். நான் மதீனாவை விட்டும் வெளிச்சென்று சற்று தொலைவில் தனிமையில் வாழ விரும்புகிறேன்'' என்றார்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி).

கலீஃபா அவர்கள் அவ்விருப்பப்படியே தம் தோழரை விட்டு விட்டார்கள். அவரின் தேவைகள் சரியாக அவரைச் சென்றடையவும் ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஹழ்லரத் அபூதர் [ரலி] அவர்கள் மதீனாவையும் விட்டு வெளியாகி 'ரப்ஸா' என்னும் சிற்றூரில் தனிமையில் தம் வாழ்வைக் கழித்து ஹிஜ்ரி 32-ம் ஆண்டில் மரணமடைந்தார்கள்— ''என் தோழர் அபூதர் தனிமையாகவே வாழ்ந்து தனிமையாகவே மரணிப்பார்" என அண்ணல் எம்பெருமானார் [ஸல்] அவர்கள் எப்பொழுதோ முன்னறிவித்து விட்டபடி.

புகலிடம் தந்த எகிப்து

ஸிரியாவிலிருந்து விரட்டப்பட்ட இப்னு ஸபா ஜஸீராவுக்குள் நுழைந்தான். எனினும் அப்துர் ரஹ்மான் இப்னு காலித் ஸைஃபுல்லாஹ்வின் பிடியில் அவன் சிக்கவில்லை. உடனடியாகவே தப்பி வெளிவந்த அவனுக்கு தகுந்த புகலிடமாக அமைந்தது எகிப்து. இயற்கையிலேயே எழிலும் வளமும் கொழித்த அம்மாநிலம் இஸ்லாத்தின் வரவால் பெரும் மலர்ச்சி கண்டிருந்தது. அதன் முன்னேற்றத்தில் அதனை வெற்றி கொண்ட ஹழ்லரத் அம்ரு இப்னுல்

ஆஸ் (ரலி) அவர்கள் மேற்கொண்ட திறன்பட்ட நடவடிக்கைகள் போற்றத்தக்கவை. ஒரு கட்டத்தில் ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்கள் பதவி துறக்க நேர்ந்தபோது ஆளுநர் பொறுப்பை அபூ ஸர்ராஹ் ஏற்றார்.

ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்களின் காலத்தில் மதீனாவுக்கு 20 லட்சம் திர்ஹங்களாக வந்து கொண்டிருந்த எகிப்தின் தீர்வை அபூ ஸர்ராஹ் ஆளுநராகப் பொறுப்பேற்ற மறு ஆண்டிலேயே 40 லட்சமாக உயர்ந்து விட்டது. கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்த ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களை அழைத்து, ''பசு அதிகமாகப் பால் கறக்காதென்று கூறினீர்கள் (பக்கம் 46) இதோ கறந்து விட்டதைப் பார்த்தீர்களா?'' என வினவினார்கள்.

ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் சிறந்த அரசியல் மதியூகி. ''அமீரல் முஉமினீன்! கறப்பவர்கள் கறந்து விட்டார்கள். ஆனால் கன்றுகள் பசியால் துடித்துக் கொண்டுள்ளன'' என அயராமல் பதில் கூறினார்கள்.

உண்மை நிலை அதுவேதான். ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் [ரலி] அவர்களின் நிர்வாகத்தில் எகிப்தில் நிலவிய அமைதியும் ஆரோக்கியமும் மாறி விட்டிருந்தன. அபூ ஸர்ராஹ்வின் தலைமையில் மக்கள் தத்தளித்துக் கொண்டிருந்தனர். அதிகாரிகளின் கெடுபிடிகளால் ஆட்சி விமர்சனங்களுக்குள்ளாகியது. மக்களின் இதயங்களில் வெறுப்பு துளிர் விட்டு வளரலாயிற்று. அந்த மக்களுக்கிடையே கலீஃபா உதுமான் (ரலி) அவர்களிடத்தில் பகைமை கொண்ட குறிப்பிடத்தக்க இரு குரைஷித் தலைவர்களும் இருந்தனர்.

ஒருவர் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி].

மற்றவர் முஹம்மத் இப்னு அபீ ஹுதைஃபா [ரலி].

ஹழ்லரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி], பெருமானார் [ஸல்] அவர்களின் இறுதி ஹஜ்ஜுப் பயணத்தின்போது, துல்ஹுலைஃபா என்ற இடத்தில், ஹழ்லரத்

அபூபக்கர் [ரலி] அவர்களின் மனைவியார் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்களுக்குப் பிறந்தவர். நபி பெருமான் (ஸல்) அவர்களின் மரணத்தின்போது நான்கே மாதங்களான ஒரு குழவி. கலீஃபா அபூபக்கர் [ரலி] அவர்களின் மரணத்துக்குப் பின் ஹழ்லரத் அஸ்மா பின்த் உமைஸ் [ரலி] அவர்களை ஹழ்லரத் அலீ [ரலி] அவர்கள் மறுமணம் புரிந்து கொண்டதால் இரண்டரை வயதுகளுடைய முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி] அவர்களும் ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களின் நிழலிலேயே வளர்ந்தனர்.

கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் பதவி காலத்தில், ஹழ்லரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி] அவர்களுக்கும் வேறொருவருக்கும் இடையே கொடுப்பல் வாங்கலில் ஏற்பட்ட ஒரு சச்சரவில் கலீஃபா உதுமான் [ரலி] அவர்கள் எதிரிக்குச் சாதகமாகவே தீர்ப்புக் கூறி, அவருக்குச் சேர வேண்டியதைத் தந்து விடுமாறு ஹழ்லரத் முஹம்மத் [ரலி] அவர்களை நிர்ப்பந்தப்படுத்தினார்கள். அச்சமயம் பதினைந்தே வயதுகளை அடைந்திருந்த இளைஞர் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி] அவர்களின் இதயத்தில் அதுவே பகையாக உருவாகி விட்டது. அவர் மதீனாவை விட்டே வெளியேறிச் சென்று எகிப்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்.

முஹம்மத் இப்னு அபூ ஹுதைஃபா நாட்டின் ஏதேனும் ஒரு பகுதிக்குத் தம்மை ஆளுநராக நியமிக்கும்படி கலீஃபாவிடம் கோரினார். அவர் அதற்கு முற்றிலும் தகுதியற்றவராக இருந்ததால் கலீஃபா அவர்கள் அவரின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார்கள். அவரும் பகைவராக மாறி எகிப்துக்குச் சென்று வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களால் வளர்க்கப்பட்ட முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி] அவர்களின் இதயத்தில் தம் வளர்ப்புத் தந்தையின் பாசமும் பெருமையும் நிரம்பி நின்றது. அதன் பிரதிபலிப்பாக அவரின் வாய் வழியே பிரவாகமெடுத்துக் கொண்டிருந்த — அலீ [ரலி] அவர்களைப் பற்றிய சிறப்புகளைச் செவியுற்ற எகிப்திய மக்களின் எண்ணங்களில்—ஆகா! அவரே நமக்குக் கலீஃபாவாக

ஆகியிருக்கலாகாதா? என்ற ஏக்கம் தோன்றத் துவங்கியது வியப்பல்ல!

அத்தகைய சூழ்நிலையில்தான் எகிப்துக்குள் நுழைந்த இப்னு ஸபா தன் திட்டங்களை அமர்ந்து செயல்படுத்தச் சரியான ஓர் இடம் கிடைத்து விட்டதாக மகிழ்ந்தான். மக்களோடு இணைந்து பழகி அவர்களின் மன நிலைகளைச் சரியாகப் புரிந்து கொண்டான். பஸராவில் செய்த பிரச்சாரத்தையே இங்கும் துவக்கினான்.

إِنَّ الَّذِي فَرَضَ عَلَيْكَ الْقُرْآنَ لَرَادُّكَ إِلَىٰ مَعَادٍ

''நிச்சயமாக இந்தக் குர்ஆனை உம் மீது விதியாக்கிய அவன் [மக்காவாகிய] உம்முடைய இல்லத்தில் மீண்டும் உம்மைச் சேர்த்து வைப்பான்" என்ற [28 : 85] திருமறை வசனத்தின் ஒரு பகுதியை அவர்களுக்கு ஓதிக் காட்டி, அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் மீண்டும் உயிர் பெற்றெழுந்து வரப் போவதற்கு அதுவே ஆதாரம் என விளக்கம் பேசினான்.

மாமறையின் வசனங்களுக்குத் தன் மனம் போல் விளக்கம் கூறி மக்களை மயக்கிய அவன் பின்னர் தன் சுருதியை மாற்றினான்.

''உலகில் பல்லாயிரம் நபிமார்கள் தோன்றினார்கள். அவர்களுள் ஒருவருக்கும் ஒவ்வொரு 'வஸீ' — வாரிசு — உண்டு. அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்களின் 'வஸீ' ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களாவர். அண்ணலார் (ஸல்) அவர்கள் இறுதி நபியானவர்களே போன்று ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் இறுதி 'வஸீ' ஆவர். இது அண்ணலார் [ஸல்] அவர்களே அறிவித்ததாகும். நபிமணி [ஸல்] அவர்களின் வாக்கை நிரப்பமாக்காது 'வஸீ'யின் உரிமையைத் தட்டிப் பறித்தவர்களை விட அநீதக்காரர்கள் யார்?'' என்ற தன் கேள்வியால் மக்களின் சிந்தனையைக் குழப்பினான்.

முன்னரே ஹழ்லரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்களின் வாயிலாக ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களின் பெருமைகளை அறிந்திருந்த மக்களை அக்கேள்வி கவர்ந்தது. இப்னு ஸபாவின் சொல்லலங்காரத்தில் அவர்கள் மயங்கலானார்கள். அவனுக்கென சீடர்களின் ஒரு தனிக் கூட்டமே உருவாயிற்று. "கிலாஃபத்தை ஏற்க உதுமானுக்கு எந்த உரிமையும் கிடையாது. 'வஸீ'யின் உரிமையையே அவர் தட்டிப் பறித்துக் கொண்டார். இவ்விஷயத்தை நீங்கள் கிளருங்கள். முதலில் நீங்கள் செல்வந்தர்களைச் சந்தியுங்கள். தீமையை ஒழித்து நன்மையைப் பாதுகாக்க வேண்டிய அவசரத்தை அவர்கள் உணரச் செய்யுங்கள். அவர்களின் துணையோடு மக்களையும் பக்கபலமாகத் திரட்டுங்கள்" எனத் தன் சீடர்களை அவன் தூண்டினான்.

எகிப்தில் காலூன்றி அமர்ந்து செயல்படத் துவங்கிய இப்னு ஸபா உள் நாட்டில் மக்களைக் குழப்புவதற்குத் தன் சீடர்களைக் கொண்டு ஒரு பரிவாரத்தை அமர்த்தியதுடன் நில்லாது இளைஞர்களைத் தேர்ந்தெடுத்துப் பிரித்து பல்வேறு நகரங்களின் புறமும் அனுப்பினான். மற்ற மாகாணங்களிலும் தான் சந்தித்துப் பிரிந்திருந்த குழப்ப சிந்தனை படைத்தவர்களோடு கடிதத் தொடர்புகளையும் மேற்கொண்டான்.

பிரிந்து சென்ற அவனுடைய சீடர்களும் பல்வேறு நகரங்களில் சென்று தங்கி, தாங்கள் கற்ற குழப்பச் சிந்தனைகளை மக்களிடையே பரப்பலானார்கள். ஆங்காங்கே ஆளுநர்கள், அதிகாரிகளின் நடைமுறைகளிலும் நடவடிக்கைகளிலும் காணக் கிடைத்த சாதாரண குறைகளையும் கூட்டியும் சோடித்தும் பேசி மாச்சரியங்களை வளர்க்கலானார்கள். ஒவ்வொரு மாகாணத்திலிருந்தவர்களும் பெரும் பெரும் சிரமங்களையும் குறைகளையும் சோடித்து எழுதி மற்ற மாகாணங்களிலுள்ள தங்கள் கூட்டாளிகளுக்கு அனுப்பினார்கள். அங்கிருந்த குழப்பக்காரர்கள் அவற்றை மக்களிடையே இன்னும் பெரிதுபடுத்திப் பரப்பி, "அதோ பாருங்கள் அண்டை மாநிலங்களில் நம் உடன் பிறப்புகள் படுகிற பாட்டை. ஆட்சியின் லட்சணம் எவ்வளவு கேவல

மடைந்து விட்டது. அகண்ட சாம்ராஜ்யத்தில் ஓரின மக்களாகிய நாமேயல்லவோ இதனைக் கவனிக்க வேண்டும்'" எனப் புலம்பலானார்கள். நிம்மதியுடனேயே வாழ்ந்து கொண்டிருந்த ஒவ்வொரு பகுதி மக்களின் இதயங்களும் 'ஏதோ நாம் மட்டுமே அதிருஷ்டவசமாக நிம்மதியாக வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம், மற்ற பகுதிகளில் வாழும் நம் உடன் பிறப்புகள் அவதியிலும் அல்லலிலும் உழல்கிறார்கள்' என்று உணர்வு கொள்ளலாயின. மொத்தத்தில் ஆட்சி நிர்வாகம் சீராக இல்லை என்ற குழப்பச் சிந்தனை நாடு முழுவதும் வேர் விட்டுப் பரவலாயிற்று. தருணம் போல் மக்களிடையே ஊடுருவி குழப்பக்காரர்கள் கிலாஃபத்தைப் பற்றிய விமர்சனங்களுக்கும் விதை தூவிக் கொண்டிருந்தார்கள்.

மாநிலத்தில் எங்கெங்கே மனமாச்சரியங்கள் துளிர்த்துக் கொண்டிருந்தனவோ அங்கெல்லாம் இப்னு ஸபாவின் சீடர்கள் ஊடுருவினார்கள். மற்ற மாநிலங்களின் ஆளுநர்கள் அதிகாரிகளைப் பற்றிய அபாண்டங்களை அள்ளித் தெளித்து, ஆங்காங்கே அநீதியும் கொடுமைகளும் விளையத் துவங்கி விட்டதாக மக்களை எண்ணச் செய்தார்கள். எல்லாவற்றிற்கும் கலீஃபாவே காரணம். அவர் தம் உமையாக் குடும்பத்தினரையே பதவியால் நிரப்புகிறார் எனப் புரளிப் பரப்பி மக்களின் கவனங்களை திசை திருப்பலானார்கள்.

அண்டை மாகாணங்களில் அநீதியும் நலிவும் நிலவுவதாக எண்ணங்கொண்ட ஒவ்வொரு மாகாணத்தைச் சார்ந்த மக்களும் இன வழியால் தங்களின் உடன் பிறப்புகளுக்கு உதவ தங்களுக்குமுள்ள கடமையாய் எண்ணி மதீனாவாழ் தத்தம் உற்றார் உறவினருக்கும் மாநபித் தோழர்களுக்கும் கடிதங்களை எழுதினார்கள்.

மதீனா கிலாஃபத்தின் தலைமைப் பீடமாக மட்டுமல்ல, மடமை இருளினை அழித்து மாச்சரியங்களை ஒழித்து மனிதப் பண்பாடுகளைத் துளிர்த்து வளரச் செய்து வாழச் செய்த வள்ளலிரஸூலின் கரம் பற்ற முந்திக் கொண்ட முஹாஜிர்களும் அன்ஸார்களும் கூடி வாழ்ந்த ஞானக்

கோட்டையாகவே திகழ்ந்தது. நாட்டின் எப்பக்கமும் குறைபட்ட உள்ளங்களின் மோனக் குரல்கள் அங்கேயே கேட்கும். நாயகத் திருமேனி [ஸல்] அவர்கள் ஏற்றி வைத்த நந்தா மணி விளக்கின் தூண்டுகோல்களாய் வாழ்ந்த அம் முஹாஜிர்களும் அன்ஸார்களும் கூடி மக்களின் மனக்குறைகளுக்கு மருந்திட்டுக் கொண்டிருந்தார்களங்கே!

நாட்டின் பரவலான பகுதிகளிலிருந்து செய்திகள் கிடைத்தபோது கவலை சூழ்ந்தது அவர்களை. கடிதங்களனைத்தையும் எடுத்துச் சென்று கலீஃபா அவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் கூறிய செய்திகள் அனைத்தையும் செவியுற்று வியப்படைந்தார்கள் கலீஃபா—மக்களின் வாழ்க்கையில் நலமும் வளமும் கொழிப்பது பற்றியே அன்றி இத்தகைய செய்திகள் எனக்கு இதுவரை கிடைக்கவே இல்லையே' என்று.

''அப்படியானால் நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் தங்களின் அந்தரங்கத் தூதர்களை அனுப்பி, ஆளுநர்களையும் அதிகாரிகளையும் பற்றி வந்துள்ள குறைகள் எந்த அளவுக்கு உண்மையானவை என்பதை ஆய்ந்து வரச் செய்யுங்கள்" என முஹாஜிர்களும் அன்ஸார்களும் கலீஃபா அவர்களுக்கு யோசனை கூறினார்கள்.

அதன்படியே கலீஃபா அவர்கள், ஹழ்ரத் முஹம்மத் இப்னு மஸ்லமா [ரலி] அவர்களை கூஃபாவுக்கும், ஹழ்ரத் உஸாமா இப்னு ஜ்ஸைத் [ரலி] அவர்களை பஸராவுக்கும், ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் [ரலி] அவர்களை ஸிரியாவுக்கும், ஹழ்ரத் அம்மார் இப்னு யாஸிர் [ரலி] அவர்களை எகிப்துக்கும் அனுப்பி நிலைமைகளை ஆய்ந்து வரச் சொன்னார்கள். சில நாட்களில் அவர்களனைவரும் திரும்ப வந்து தாங்கள் கண்ட மாகாணங்களில் மக்களின் வாழ்க்கை எவ்விதக் குறைகளுமின்றி கழிந்து கொண்டிருக்கிறதென்றும், ஆளுநர்கள் பற்றி வந்துள்ள குற்றச்சாட்டுகள் அத்தனையும் இட்டுக் கட்டப்பட்டவை என்றும் அறிவித்தார்கள்—ஹழ்ரத் அம்மார் இப்னு யாஸிர் [ரலி] அவர்களைத் தவிர. ஹழ்ரத் அம்மார் (ரலி) அவர்களை மட்டும் எகிப்தில் வாழ்ந்து கொண்டிருந்த

முஹம்மத் இப்னு அபூபக்கர், முஹம்மத் இப்னு அபீ ஹுதைஃபா [ரலி] ஆகியோர் தங்கள் வசப்படுத்தி எகிப்திலேயே தங்க வைத்துக் கொண்டனர் என்ற செய்தி எகிப்தின் ஆளுநர் அபூ ஸர்ராஹ்வின் ஓலை மூலம் கலீஃபா அவர்களுக்குக் கிடைத்தது.

கூஃபா சென்றிருந்த ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா [ரலி] அவர்கள் தங்கள் ஆய்வுகளினூடே வீதிகளில் விஷமிகள் செய்துக் கொண்டிருந்த தாறுமாறான விமர்சனங்களையும் கவனிக்கத் தவறிடவில்லை. அவையனைத்தையும் கலீஃபா அவர்களின் செவிகளுக்கும் எத்தி வைத்தார்கள்.

கலீஃபா அவர்கள் நாட்டில் ஏதோ ஒரு குழப்பம் உருவாக்கப்படுகிறதென்பதை உணரலானார்கள். ஆளுநர்கள் அனைவரையும் மதீனாவுக்கு வந்து சேரும்படியாக அழைப்புகள் அனுப்பினார்கள். அதன்படி கூஃபாவிலிருந்து ஹழ்லரத் ஸஅத் இப்னுல் ஆஸ்[ரலி], ஹழ்லரத் கஅகாஇப்னு அம்ர் [ரலி] அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்து மதீனா வந்தனர். அவ்வாறே பஸரா—பஹ்ரைனின் ஆளுநர் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் [ரலி], ஸிரியாவின் ஆளுநர் ஹழ்லரத் முஆவியா (ரலி), எகிப்தின் ஆளுநர் அபூ ஸர்ராஹ் ஆகியோரும் மதீனா வந்தடைந்தனர். எகிப்தின் முன்னாள் ஆளுநர் ஹழ்லரத் அம்ர் இப்னுல் ஆஸ் [ரலி] அச்சமயம் மதீனாவிலேயே இருந்தனர். இன்னும் குறிப்பிடத்தக்க சிலரையும் அவர்களனைவரோடும் ஒன்று கூட்டி கலீஃபா அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

வெளியிலிருந்து வந்த ஒவ்வோர் ஆளுநரும் தத்தம் மாகாணங்களில் அமைதியும் ஆரோக்கியமுமே நிலவுவதாக அறிவித்தனர். பிற மாகாணங்களைப் பற்றியோ கலீஃபாவுக்கு எட்டியிருந்தபடியான செய்திகளையே தாங்களும் செவியுற்றதாகக் கூறினர். அத்தனை ஆளுநர்களும் கூறிய ஒரே விதமான பதில்களிலிருந்து குழப்பவாதிகளான ஒரு கூட்டத்தாரால் திட்டமிடப்பட்டு பரப்பப்பட்ட விஷமத்தனமான வதந்திகளே அச்செய்திகள் என்பதை அனைவரும் உணர்ந்தனராயினும் வதந்திகளைட்

பரப்புபவர்கள் யார்? என்பதை மட்டும் ஒருவராலும் கூற முடியவில்லை.

கலீஃபா அவர்களின் சிந்தனையோ விஷமிகள் யார் என்பதை விட அவர்களின் விஷமத்தனத்துக்கு அடித்தளம் என்னவென்பதை ஆய்வதில் ஆழ்ந்தது. ''தோழர்களே! நீங்கள் அனைவரும் என் பிரதிநிதிகள்—ஆலோசகர்கள். ஆனால், ஒவ்வொரு பகுதியிலும் ஏதோ ஒரு கூட்டத்தார் உங்களை நான் திரும்ப அழைத்துக் கொண்டு அவர்கள் விரும்பும் வேறொருவரை அவர்கள் மீது ஆளுநராக நான் நியமிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவே தெரிகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என அவர்களை வினவினார்கள்.

''அமீரல் முஉமினீன்! தாங்கள் ஏதேனும் ஒரு பகுதியின் புறம் (மார்க்கப் போரான) ஜிஹாதைப் பிரகடனப் படுத்தி விடுங்கள். மக்கள் படை திரளத் துவங்கி விடுவர். இது போன்ற குழப்பச் சிந்தனைகள் மறைந்து விடும்'' என யோசனை கூறினார் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி).

ஹழ்லரத் ஸஈத் இப்னுல் ஆஸ் (ரலி) குறுக்கிட்டார், 'மக்கள் தலைவ! நோயறிந்து மருந்திட வேண்டும். தாங்கள் என் சொல்லைக் கேட்டு தங்கள் பாதையில் முளைத்துள்ள முட்களை களைந்தெறியுங்கள்'' என்று.

''நீர் என்ன சொல்கின்றீர்?" என வினவினார்கள் கலீஃபா.

''குழப்பக்காரர்களின் தலைவர்கள் யார்? எனத் தேடிப் பிடித்து அவர்களைக் கொன்று விட்டால் மற்றவர்கள் தாமாகவே அடங்கி விடுவர். குழப்பம் தன் குழியினுள் தானே விழுந்து மடியும்'' என்றாரவர்.

''உம் கருத்து மிகச் சரியே. எனினும் எந்த ஒரு முஸ்லிமின் உயிரும் அநீதமாகக் கொல்லப்பட நான் விரும்பவில்லை'' என்றார்கள் கலீஃபா.

''கலீஃபா அவர்களே! இவையெல்லாம் பொருளாசை யால் விளைந்த சூழ்ச்சிகளே. அவர்களின் முன் பணப் பையை வீசி விட்டால் போதும், அவ்வாசை அடங்கி விடும்'' எனத் தம் உத்தியைக் கூறினார் எகிப்தின் ஆளுநர் அபூ ஸர்ராஹ்.

ஹழ்ரத் அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் ஆழ்ந்த கவலை கடுமையுடன் வெளிப்பட்டது,

''அமீரல் முஉமினீன்! கண்ணியத்திற்குரிய தங்களி டமே நான் குறையைக் காணுகிறேன். தாங்கள் மிதமிஞ் சிய மென்மையைக் கையாளுகிறீர்கள். தங்கள் பொறுமை யின் மூலம் துரோகிகளுக்கு மிகத் தாராளமான வாய்ப்பை அளிக்கிறீர்கள். சமூகத்தினரிடையே பிரிவினையோ குழப் பமோ தோன்றாத நிலையில் மட்டுமே தனி மனிதனின் உரிமை பேணப்படல் வேண்டும். இருளிலும், நிழலிலும் பதுங்கிப் பதுங்கியே விஷமிகள் வினையை விதைத்துக் கொண்டிருக்க, அவர்கள் கொன்று தொலைக்கப்படாத திருக்கட்டும்—இன்னும் தேடவும் படாததும் எனக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது. தங்கள் முன்னோடிகளின் காலங்களில் இந்த நிலை இருந்ததுண்டா? இத்தகைய சந் தர்ப்பங்களில் ஃபாரூக்கிய வழிமுறைகளே பின்பற்றப்பட வேண்டியவை. அமைதியை நாடி தங்கள் செயல் முறை களை அமைத்துக் கொள்வோரிடத்தில் தாங்கள் மென்மை யைக் கையாள்வது மிகச் சரியே. ஆனால் தீமையை விட்டும் திரும்ப மறுப்பவர்களிடத்தில் தங்கள் நடவடிக்கைகள் கடு மையாகவே இருத்தல் அவசியம்'' என்று.

கலீஃபா அவர்களின் உள்ளத்தில் அணுவளவேனும் கடுமையுணர்வு இருந்திருக்குமேயானால் அவர்கள் மேற் கூறப்பட்ட வழிகளில் ஏதேனும் ஒன்றைக் கடைபிடிக்கத் துவங்கியிருப்பார்கள். அதற்கான படை வலிமையும் அவர் களிடத்தில் பூரணமாகவே இருந்ததன்றி, எந்தப் பலஹீனத் தையும் அவர்களின் கடந்த கால வரலாறு காட்டவில்லை. ஆனால் மென்மையில் ஊறிய அவர்களின் நெஞ்சம் மக்களை வலியப் போர் மேல் விரட்டவும் விரும்பவில்லை. ஐயத்தின் அடிப்படையில் எந்த ஓர் உயிருக்கும் துன்ப

மிழைக்கவும் துணியவில்லை. அமைதியைக் குலைக்கும் ஒரு சிலரே குற்றவாளிகள். அவர்களையும் நல்வழிப்படுத்தி விட நாடியே, மார்க்க வரம்புகளைக் கடக்காத மென்மையான முறைகளை நாடியது அக்கருணையுள்ளம். அதன் காரண மாகவே கலீஃபா அவர்கள் எந்தக் கடுமையான நடவடிக் கைகளையும் மேற்கொள்ளவில்லை.

விவாதங்களனைத்தையும் கேட்ட வண்ணமேயிருந்த ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் கூறினார்கள், 'அமீரல் முஉமினீன்! ஸிரியா மாகாணத்தில் எந்தக் குழப் பங்களும் இல்லை. இனியும் ஏற்படாதவாறு கண்காணிக்க நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அதேபோல் ஒவ் வொரு மாகாணத்திலும் அமைதியைக் காக்க அதனதன் ஆளுநரிடமே பொறுப்பை அளியுங்கள். அவரவர்களின் உத் திப்படி ஆங்காங்கே நடவடிக்கைகளை மேற்கொள்ள அனு மதி தந்து விடுங்கள்'' என்று.

முடிவாகக் கலீஃபா அவர்கள் பேசினார்கள்,

''தோழர்களே! இந்தக் குழப்பம் தன் திறனை வெளிப் படுத்தியே தீரும். விரைவில் அதன் வாயில்கள் திறந்து கொள்ளும். அதில் நான் குற்றவாளியாகாமல் அல்லாஹ் காத்தருள் புரிவானாக. இதுவரையிலும் நான் என் மக்க ளுக்கு நன்மைகளைத் தவிர்த்து வேறெதையும் செய்ய வில்லை. அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் முன்னறி வித்து, எனக்குப் பொறுமையைப் பற்றிப் போதித்த குழப் பம் ஒருக்கால் இதுவாகவே இருக்கக் கூடும். அதன் எந்தப் பழியும் என் தலை மீது சுமத்தப்பட்டு விடக் கூடாதே என நான் அஞ்சுகிறேன்'' என்று.

அவை கலைந்தது. ஆளுநர்கள் அனைவரும் பிரிந்து செல்லத் துவங்கினார்கள். விடை பெறுகையில் ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்கள், ''குழப்பம் வெடிக்கும் முன்பா கவே தாங்கள் என்னோடு ஸிரியாவுக்கு வந்து விடுங்கள். அங்கு பூரண அமைதி நிலவுகிறது" எனக் கூறி கலீஃபா அவர்களை அழைத்தார்கள்.

''இல்லை, பெருமானார் (ஸல்) அவர்களின் அருகாமையை நான் எக்காரணங்கொண்டும் பிரியமாட்டேன்'' என மறுத்து விட்டார்கள் கலீஃபா.

''அப்படியானால் அமீரல் முஉமினீன்! தங்களின் பாதுகாவலுக்கென நான் ஒரு தனிப் படையை மதீனாவுக்கு அனுப்பி வைக்கிறேன்'' என அனுமதி வேண்டினார்கள் ஹழ்லரத் முஆவியா (ரலி).

''வேண்டாம். அவர்களின் நடமாட்டங்கள் முஹாஜிர்கள் அன்ஸார்களுக்குச் சங்கடத்தை உண்டாக்கலாம்'' எனத் தடுத்து விட்டார்கள் கலீஃபா.

தங்களின் உயிரையும் ஆபத்துகள் சூழலாம் என ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்கள் எவ்வளவோ சுட்டிக் காட்டியும் கலீஃபா அவர்கள் அவ்வாளுநரின் விருப்பங்களுக்கு இணங்கவே இல்லை. ''அல்லாஹ் ஒருவனே எனக்குத் துணைவனும் காவலனுமாவான்'' எனத் தீர்மானமாகத் தெரிவித்து விட்டார்கள்.

கலீஃபா அவர்களின் மறுப்புகள் ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்களுக்குக் கவலையையே அளித்தன. என்றாலும் அவர்கள் என்ன செய்ய இயலும். பயணம் புறப்பட்டு விட்ட அவர்கள், வழியில் ஹழ்லரத் அலீ, தல்ஹா, ஜுபைர் [ரலி] ஆகிய மூவரையும் சந்தித்தார்கள். அவர்களோடும் கலந்துரையாடிய ஹழ்லரத் முஆவியா (ரலி) இறுதியாக, ''ஆட்சி என்பது ஆரம்பகாலத்திலிருந்தே மக்கள் அதன்மீது அடித்துக் கொண்டு விழுந்து சாகக் கூடிய ஒன்றாகவே இருந்து வந்தது. அல்லாஹ் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களைத் தன் தூதராய் வெளிப்படுத்தி, இஸ்லாமிய ஒளிக் கதிர்களின் மூலம் இருண்ட உலகத்தை வெளிச்சம் பெறச் செய்தான். அதன்பால் முந்திக் கொண்டவர்களும் விரைந்தவர்களுமே முன்னிடம் பெற்றார்கள். மற்றத் தகுதிகளனைத்தும் பின் தள்ளப்பட்டன. இன்று வரை இம் முறையே பேணப்பட்டது. மக்களும் அதே வழிமுறையில் செயல்படுவார்களேயானால் இந்தத் தலைமை. அக் கண்ணியவான்களிடமே நிலைத்திருக்கும். மற்றவர்கள்

அவர்களுக்குக் கட்டுப்பட்டிருப்பர். அல்லாது அவர்கள் உலகாதாயத்தில் மூழ்கித் தலைமையைப் பறிக்க முயல்வார்களானால் ஆட்சி என்னும் தன் அருட்கொடையை அல்லாஹ் அவர்களிடமிருந்து பறித்து பிறருக்களித்து விடுவான். உண்மையில் ஆதிக்கமுடையவன் அவனே. அவன் எந்த மாற்றத்தையும் செய்ய வல்லமை படைத்தவன். நான் உங்களிடையே முதுமை அடைந்த ஒரு மேலானவரை விட்டுப் பிரிந்து செல்கின்றேன். அல்லாஹ்வின் அந்த கலீஃபாவின் அருகிலேயே இருந்து நீங்கள் அவருக்கான துணை புரியுங்கள். அல்லாஹ்வும் உங்களுக்குத் துணை புரிவான். அதற்கான மேலான தன் அருட்கொடைகளையும் வழங்கி உங்களை மகிழ்விப்பான்'' எனக் கூறி விடை பெற்றுச் சென்றார்கள்.

ஆளுநர்கள் அனைவரும் மதீனாவில் கூடி கலீஃபா அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்த அதே சமயம் குழப்பக்காரர்கள் தங்கள் செயல் முறைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். கூஃபாவில் வாழ்ந்து கொண்டிருந்த கண்ணியவான்களும் நகரில் உருவாகி வரும் சூழ்நிலையைக் கண்டு தங்கள் குடியிருப்புகளை புறநகர்ப் பகுதிகளில் மாற்றிக் கொண்டிருந்தார்கள். அதுவே மேலும் வசதியாகி விட்டது குழப்பக் கூட்டத்தினருக்கு. கலீஃபா அவர்களைப் பற்றியும் சர்ச்சைகள் வீதிகளில் பலமடைந்தன. முன்னர் விரட்டப்பட்டு ஓடிய கலகக்காரர்களின் தலைவன் மாலிக் இப்னு உஷ்த்தர் என்பவன் ஜஸீராவிலேயே வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுக்கு கூஃபாவிலிருந்த யஜ்ஸீத் இப்னு கைஸ் என்பவன் ஓலை எழுதினான்—கூஃபாவின் நிலைமை மிக அனுகூலமாக மாறியுள்ளது. உடனே புறப்பட்டு வா" என்று.

அத்துடன் நின்றிடவில்லை அவன். நகரில் வாழ்ந்து கொண்டிருந்த தன் கூட்டத்தாரையெல்லாம் ஒன்று திரட்டினான் மதீனா செல்வதற்காகவென்று. அவனுடைய நடவடிக்கைகளை அறிந்து ஹழ்லரத் கஅகா இப்னு அம்ரு (ரலி) அவனைச் சிறை பிடித்தனர். ''ஆளுநர் ஸஈதின் பால் எங்களுக்குப் பிடித்தம் இல்லை. மதீனாவுக்குச் சென்று

கலீஃபா அவர்களிடம் ஆளுநரை மாற்றும்படியாக முறை யிடப் போகிறோம். அவ்வளவுதான்'' என்று சமாதானம் கூறி விடுதலையடைந்தான் யஜ்ஸீத் இப்னு கைஸ். அதற் குள்ளாக மாலிக் இப்னு உஷ்த்தரும் ஜஸீராவிலிருந்து வந்து சேர்ந்தான். கூட்டம் இன்னும் பெரிதாகத் திரண்டு விட் டது. அனைவரும் மதீனா நோக்கிச் சென்று கொண்டிருந் தனர்.

கலீஃபா அவர்களிடமிருந்து விடை பெற்றுத் திரும்பிக் கொண்டிருந்த ஹழ்லரத் ஸஈத் [ரலி] அவர்கள் காதிஸிய் யாவின் அருகே 'ஜர்ஆ' என்ற இடத்தை அடைந்தபோது கூஃபாவின் கலகக் கூட்டத்தினரை அங்கு சந்தித்தார்கள்.

''திரும்பிப்போம். உம்மை நாங்கள் கூஃபாவினுள் நுழைய விடமாட்டோம்'' எனக் கூச்சலிட்டான் யஜ்ஸீத். அவனுக்கு மறுப்புரைத்த—ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர் களின் அடிமை ஒருவரை ஒட்டகையின் மேலிருந்து காலைப் பிடித்து இழுத்துக் கொன்று விட்ட மாலிக் இப்னு உஷ்த்தர் ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர்களிடம் கூறினான், ''நீர் சென்று கலீஃபாவிடம் அபூ மூஸாவை எங்களுக்கு ஆளு நராக அனுப்பக் கூறும்'' என்று. நிலைமையின் கடுமையை உணர்ந்து ஹழ்லரத் ஸஈத் (ரலி) அவர்கள் மதீனா திரும்பி விட்டார்கள்.

மதீனா வந்து சேர்ந்த தம் ஆளுநர் மூலம் செய்திகள் யாவும் அறிந்தார்கள் கலீஃபா.

''ஆகட்டும். நான் அபூ மூஸாவையே அவர்கள் மீது ஆளுநராக நியமித்து விட்டேன். ஆண்டவனின் மீதாணை யாக, நான் அவர்களுக்கு எந்த வாய்ப்பையும் தரப் போவ தில்லை. என் மீது பழி கூற எந்த ஆதாரத்தையும் நான் அவர்களிடம் சிக்க விட மாட்டேன். அவர்கள் எதிர்பார்க் கும் காலம் வரும்வரை என் பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்குச் செய்த அறிவுரைப்படியே நான் நடப்பேன்'' என்றார்கள் கலீஃபா.

ஹழ்லரத் ஸஈத் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் மதீனாவில் நிறுத்தப்பட்டு ஹழ்லரத் அபூ மூஸா (ரலி)

அவர்கள் ஆளுநர் பொறுப்போடு கூஃபாவுக்கு அனுப்பப் பட்டனர். அவரின் கரம் கலீஃபா அவர்களின் அறிவிப்பை ஏந்திச் சென்றது :

"என் மக்களே! நீங்கள் விரும்பாத ஆளுநரை நான் என் பக்கம் நிறுத்திக் கொண்டேன். இதோ நீங்கள் விரும்பும் ஒருவரையே உங்கள் பால் என் ஆளுநராக அனுப்பி யுள்ளேன். ஆண்டவன் மீது ஆணையாக நான் என் வல்லமைக்கு இயன்றவரை உங்களின் நிம்மதிக்காக எனக்கிழைக் கப்படும் அவமதிப்புகளைப் பொருட்படுத்தாமலே இருப் பேன், பொறுமையையே மேற்கொள்வேன். எவ்வழியாக வேனும் உங்களைத் திருப்தி கொள்ளச் செய்ய பூரண முயற் சிகளையும் மேற்கொள்வேன். நீங்கள் கேட்கும் ஒவ்வொன் றையும் உங்களுக்குத் தருவேன். இறைவனின் சட்டவரம்பு களை நீங்கள் கடக்காதிருக்க வேண்டும் என்பதே என் ஒரே நிபந்தனை. பின்னர் நீங்கள் எந்தப் பழியையும் என் மீது சுமத்தாமலிருக்க எல்லா வழியாலும் உங்களை அமைதிப் படுத்த நான் முயல்வேன்."

கூஃபாவாசிகளுக்கு மட்டுமல்ல இதே போன்ற சுற்றறிக் கைகளை கலீஃபா அவர்கள் எல்லா மாகாணங்களுக்கும் அனுப்பி வைத்தார்கள். கலகக்காரர்களோ அதையே கலீ ஃபா அவர்களின் பலஹீனமாகக் கொண்டு தங்கள் நடவடிக் கைகளைத் தீவிரப்படுத்தலானார்கள். உண்மையில் கலீ ஃபா அவர்கள் பலஹீனப்பட்டு விடவில்லை. அவர்களின் படையிலும் வலிமை குறைந்திடவில்லை.

ஆனால்,

தங்களின் எந்த அவசரப்பட்ட நடவடிக்கையாலும் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்து குழப்பத் தீ பற்றி எரிந்து ஆட்சியை முழுமையாகவே சூழ்ந்து கொள்ளுமோ என்ற ஓர் அச்சம் மட்டும் அவர்களை அணைத்துக் கொண்டது உண்மையே!

ஏன்? என்ன காரணம்?

கிலாஃபத்தின் ஆரம்பத்திலிருந்தே புற்றீசல்களைப் போல் வெளிப்பட்ட புல்லுருவிகள் அனைத்தையும் மிகத் தீர்க்க சிந்தனையோடு அடக்கி ஒடுக்கித் தம் முன்னவர் இருவரையும் விடப் பரந்த-விரிந்த-வளம் கொழித்த-நல்லாட்சியை ஆறாண்டு காலம் நீடிக்கச் செய்த அப்பெருங் கலீஃபாவின் இதயம் அச்சத்தால் சூழப்பட்ட அந்தரங்க மென்ன ?

காவல் புரிந்த கணையாழி

அறியப்பட்ட வரலாற்றில் ஆரம்ப நாள் முதல் இது வரை கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் உள்ளும் புறமும் அப்பழுக்கற்ற ஒப்பிலாத் தெளிவுடையதாகவே தூய்மை கொண்டிலங்குகின்றன. பின்னரும் அவர்களின் வரலாறு இனிதே தொடர்ந்து இதயத்தைப் பிழிவதாய் முடிகிறதே யன்றி களங்கம் ஒன்றை அதனிடை காணவே முடியவில்லை.

இயல்பினால் மென்மையே குடி கொண்ட—இன்னல் கொண்டெவரையும் வருத்தாத — நாயகத்தின் — அக் கலீஃபாவை எழுபதாண்டுகளையும் கடந்த முதுமை தழுவிய நிலையில்,

—தம் கிலாஃபத்தின் ஆரம்ப நாள் முதல் தோன்றிய குழப்பங்களையும் கலகங்களையும் அடக்க விரைந்த போதெல்லாம் தோன்றாத அச்சம் அணைக்கத் துணிந்ததும் ஒரு விந்தையே!

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள், ஹிஜ்ரி 6-ம் ஆண்டில் அரபு நாட்டைச் சூழ்ந்த குறுநிலத் தலைவர்களுக்கும் பெருநில மன்னர்களுக்கும் அழைப்போலைகள் எழுதச் செய்தபோது தோழர்கள், ''பெருமானே! முத்திரையிடப்படாத ஓலைகளை மக்கள் மதிக்கிறார்களில்லை'' என முறையிட்டார்கள். அதன் பேரில் நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் அழைப்போலைகளில் பதிப்

பதற்காக ஒரு முத்திரையை மோதிரமாகச் செய்து தங்கள் விரலில் அணிந்து கொண்டார்கள்.

முத்தி தரும் **'முஹம்மத்'** என்னும் திரு நாமத்துக்கு மேலாக **'ரஸூல்'** என்றும் அதற்கும் மேலாக 'அல்லாஹ்' என்றும் பொறிக்கப்பட்டு, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற சொற்றொடரைத் தாங்கிய அக்கணையாழி அண்ணலாரின் வாழ்நாள் முழுவதும் அவர்களின் கரத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அவர்களின் பிரிவை அடுத்து அது ஆயிஷா நாயகியாரிடம் இருந்தது. ஆனால்,

لَا نُوْرَثُ مَا تَرَكْنَاهُ صَدَقَةٌ

[நபிமார்களாகிய] நாங்கள் (எதையும்) வாரிசுரிமை கொள்ள விட்டுச் செல்வதில்லை — தர்மப் பொருள்களாகவேயன்றி — என்ற திரு வாக்குப்படி, அதனை ஓர் அமானிதமாகவேயன்றி ஆயிஷா (ரலி) அவர்கள் தம் உடைமையாக வைத்திருக்கவில்லை.

إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمٰنٰتِ إِلٰى أَهْلِهَا

அமானிதங்களை அதன் உரிமைக்காரர்களிடம் ஒப்படைத்து விடுங்கள் என ஏவுகிறது அல்லாஹ்வின் அருள் மறை (4 : 48). அதன்படியே அன்னையார் அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களின் மறைவை அடுத்து கலீஃபாவாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் அக்கணையாழியை ஒப்படைத்து விட்டார்கள். திருத்தூதரை அடுத்து அவர்களின் கலீஃபா ஸையிதினா அபூபக்கர் (ரலி) அவர்களின் கரத்தை அக்கணையாழி இரண்டே காலாண்டு காலம் அலங்கரித்து வந்தது. அதனைக் கொண்டே ஸையிதினா ஸித்தீக்குல் அக்பர் (ரலி) அவர்கள் அரசாங்க எழுத்தோலைகளில் முத்திரையிட்டு அதன் கீழ் தாங்கள் கையெழுத்திட்டு வந்தார்கள்.

ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களையடுத்து பத்தரை ஆண்டு காலம் கிலாஃபத் நடத்திய பெருமான் உமர் [ரலி] அவர்களின் கரத்திலும் பெருமானார் [ஸல்] அவர்களின் அக்கணையாழி அமர்ந்து அரசு செலுத்தியது. கலீஃபா உமர் [ரலி] அவர்கள் தம் மரணத் தறுவாயில், தமக்குப் பின் கிலாஃபத்தை ஏற்பவரிடம் அதனை ஒப்படைக்குமாறு கூறி, கழற்றித் தந்து சென்றார்கள்.

சோதனைப் புயல்களிடையே சோர்ந்து விடாமல் கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்களின் மெலிந்த உடலைத் தாங்கி நின்ற வல்லமை எது?

வன்மையும் கொடுமையும் கொண்டவர் என்று மக்களின் உள்ளங்கள் அஞ்சிய ஹழ்லரத் ஃபாரூக்குல் அஅலம் (ரலி) அவர்களை உத்தமராய்-தத்துவம் படைத்த வித்தகராய்ப் பண்படுத்திய மூலிகை எது?

என்ற வினாக்களுக்கெல்லாம் விடையை இப்போது நாம் சிந்தித்துப் பெறலாம்!

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்றபோது அன்னை ஹஃப்ஸா (ரலி) அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அந்த அமானிதம்-அண்ணலார் (ஸல்) அவர்களின் அருட்கணையாழி—புதிய கலீஃபாவின் கரமேறித் தன் ஆட்சியைத் துவக்கியது.

அண்ணலார் (ஸல்) அவர்களின் திருமேனி தொட்ட அவ்வருட்கணையாழி, கலீஃபா ஸையிதினா உதுமான் (ரலி) அவர்களின் கரத்தினை அலங்கரித்துக் கொண்டிருந்த-ஏறத்தாழ ஆறாண்டு-காலம் வரை அம்முது பெருங் கலீஃபா அவர்களை,

எந்தச் சோதனையும் சூழவில்லை.

எந்தக் கலகங்களும் கலங்கச் செய்யவில்லை.

எந்த அச்சமும் அணுகவே இல்லை—என்பதற்கு அத்தனை வரலாற்று ஏடுகளும் ஒருமித்துச் சான்று கூறுகின்றன.

ஹிஜ்ரி 30-ம் ஆண்டு!

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்றுச் சரியாக ஆறாண்டுகள் கழிந்த பின்னர் ஒரு நாள்,

மதீனாவிலிருந்து ஏறத்தாழ இரண்டு மைல் தொலைவிலிருந்த ஒரு தோட்டத்தில் இருந்த 'பீரே அரீஸ்' என்ற கிணற்றண்டை கலீஃபா அவர்கள் வந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு நாள் தங்கள் கால்களிரண்டையும் உட்புறம் தொங்க விட்டவாறு அக்கிணற்றின் வாரியில் அமர்ந்திருந்தார்கள். அச்சமயம் ஹழ்லரத் அபூபக்கர், உமர், உதுமான் (ரலி) ஆகிய மூவரும் ஒருவரையடுத்து ஒருவராக அங்கு வந்து அவர்களோடு அமர்ந்து உரையாடினார்கள் என்ற நிகழ்ச்சி புஹாரீ, முஸ்லிம் ஆகிய இரு தொகுப்புகளிலும் காணக் கிடைக்கிறது.

மாநபி (ஸல்) அவர்கள் பால் பேரன்பு கொண்ட அக் கலீஃபாக்கள் அனைவருமே பழைமை நினைவுகள் பசுமையடையும் போதெல்லாம், புனிதத் திருவடிகள் பட்ட தலங்களையெல்லாம் சென்று காணும் வாலாயமுடையவர்களாய் இருந்தார்கள். அவ்வழக்கப்படியே கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் 'பீரெ அரீஸ்' கிணற்றண்டை வந்து அதன் மீது அமர்ந்திருந்தார்கள். சற்று நேரம் கழித்து கலீஃபா அவர்கள் தம் முகம் கழுவ எண்ணி தண்ணீர் அள்ளக் குனிந்தபோது எப்படியோ அக்கணையாழி நழுவி கிணற்றினுள் விழுந்து விட்டது. அதனைத் தேடி எடுத்து விட கலீஃபா அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். நீர் முழுவதையும் இறைக்கச் செய்தும் தேடினார்கள். ஆயினும் அக்கணையாழி மறைந்த தடமே தெரியாமல் மாயமாகி விட்டது.

கலீஃபா அவர்களைத் தாக்கிய துயரத்துக்கோ அளவே இல்லை. அதையே போன்ற ஒரு கணையாழியை மிக நுணுக்கத்தோடு செய்வித்து கலீஃபா அவர்கள் தம் விரலில் அணிந்து கொண்டார்கள். ஆயினும் என்ன? அண்ணலாரின் பொன்னுடலோடு ஐந்தாண்டு காலம்

மூட்டி உறவு கொண்டிருந்த கணையாழியில் கண்ட அருள் வன்மையை இதில் எப்படி அவர்கள் காண முடியும் ?

அன்றோடேயே தொலைந்து போனது கலீஃபா அவர்களின் நிம்மதியனைத்தும்.

சோதனைகள் உருவாயின, குழப்பங்கள் சூழலாயின.

துரோகிகளின் வியூகம்

ஆளுநர் பொறுப்பேற்று கூஃபாவை அடைந்த ஹழ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள், அடுத்து வந்த வெள்ளிக் கிழமையன்று பள்ளியில் திரண்ட மக்களிடையே 'நாட்டில் அமைதி நிலவ, மாச்சரியங்களை ஒழித்து, ஒன்றுபட்டு ஒத்துழைக்குமாறும், கலீஃபா அவர்களுக்கு வழிப்பட்டு வாழுமாறும்' நீண்ட அறிவுரைகளை வழங்கினார்கள். முளை விட்டுக் கிளம்பும் விஷமத்தனங்களை உணரத் துவங்கி விட்ட மக்களிடையே அவ்வுரை விழிப்பை ஏற்படுத்தவே செய்தது. அதுபோலவே எல்லா ஆளுநர்களும் தத்தம் மாகாணங்களின் புறம் திரும்பிய பின்னர் எடுக்கத் தலைப்பட்ட நடவடிக்கைகளால் கலகக்காரர்களின் செயல் முறைகளில் சிறு தேக்கம் ஏற்படவே செய்தது.

அக்காலத்தில் முழு இஸ்லாமிய சாம்ராஜ்யத்திலும் ஐந்து நகரங்களே முன்னோக்கத் தக்க முக்கிய நகரங்களாகவும் படைத் தளங்களாகவும் விளங்கின.

(1) மதீனா—மாநிலம் முழுமைக்குமான கிலாஃபத்தின் தலைமைப் பீடம், (2) பஸரா, (3) கூஃபா ஆகிய இரண்டும் கிழக்கே இரு பெரும் படைத் தளங்களாகவும் இராணுவ நகரங்களாகவும் விளங்கின. அவற்றின் நாம் பீரம் முழு ஈரானிய நிலப் பரப்பிலும் ஆர்மீனியா, ஜார்ஜியா உள்பட காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்கும் இடைப்பட்ட முழுப் பிரதேசத்திலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. (4) மேற்கே இன்றைய கெய்ரோவான 'புஸ்தாத்'தின் கண்காணிப்பு முழு எகிப்தின் மீதும் பதிந்திருந்ததன்றி, திரிப்போலி, மொராக்கோ போன்ற

ஆப்பிரிக்காவின் பகுதிகளோடு பாலஸ்தீனப் பகுதிகளையும் கண்காணித்து வந்தது, (5) ஹழ்லரத் முஆவியா [ரலி] அவர்களால் நிர்வகிக்கப்பட்ட டமாஸ்கஸோ ரோமானியப் படைகளுக்கொரு சிம்ம சொப்பனமாகவே விளங்கியது.

இப்னு ஸபாவின் அறிவுச் சாணக்கியம் அதனை ஆரம்பத்திலேயே கணித்துக் கொண்டதாலேயே அவன் காலத்தைப் பாழடிக்காமல் அந்நகரங்களை மட்டுமே தன் பிரச்சாரக் கேந்திரங்களாகத் தேர்ந்தெடுத்தான்.

ஸிரியாவில் மட்டுமே அவன் பூரண வெற்றி பெற முடியாது போயினும் பஸராவை விட்டும் கூஃபாவை விட்டும் வெளியேற நேர்ந்தபோது அவன் தன் சீடர்களின் கூடாரங்களை ஆங்காங்கே விட்டே வந்தான். தான் தங்கக் கிடைத்த குறைந்த இடைவெளிகளிலும் அவன் அவ்விரு நகரங்களிலும் பெருத்த வெற்றிக்கான வினைகளை விதைத்தே வந்தான். எகிப்து அவனுக்குத் தக்க புகலிடமாக அமைந்து விட்டபோது அதையே தன் தலைமைக் கேந்திரமாக அமைத்து கூஃபாவிலும் பஸராவிலும் இருந்த தன் கூட்டத்தார்களோடு அவன் தொடர்புகளைத் தொடர்ந்து வந்தான். இஸ்லாத்தின் பால் யூதர்களுக்கிருந்த பொதுவான காழ்ப்போடு மட்டுமின்றி, கலீஃபா உதுமான் [ரலி] அவர்கள் பால் ஒரு தனிப்பட்ட குரோதமும் இப்னு ஸபாவுக்கு இருந்தது. காரணம் எந்த விதமான குற்றச்சாட்டுக்கும் தம்மை இலக்காக்கிக் கொள்ளாதது மட்டுமின்றி எவ்விதச் சதிக்கும் சமுதாயத்தைப் பலியாக ஒட்டாமல் தடுத்துக் காத்து வந்த அவர்களின் ஒப்பற்ற திறனேயாகும்.

இறுதியாக நடைபெற்ற கடற்போரில் படுதோல்வியுற்ற ரோமானியர்களிடமிருந்து அள்ளி வரப்பட்ட பெரும் பொருள்களைப் பங்கிட்டுக் கொண்டபோது எகிப்திய படையினரிடையே சச்சரவேற்பட்டது. அப்படையில் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி], முஹம்மத் இப்னு அபீ ஹுதைஃபா ஆகியோரும் இருந்தனர். ஆளுநரும் படைத் தலைவருமான அபூ ஸர்ராஹ் ஒரு கட்டத்தில் முஹம்மத்

இப்னு அபூபக்கர் [ரலி] அவர்களைப் போர்த் திறன் குறைந்தவர் எனக் கூறி விட்டார். அதற்குப் பதிலாகச் சினமடைந்த இளைஞர் முஹம்மத் இப்னு அபூபக்கர் [ரலி] ''நீர் எந்தத் தகுதியால் உயர்ந்து விட்டீர். பெருமானார் [ஸல்] அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே மதம் மாறிப் போனீர். கஅபாவின் புனித எல்லைக்குள் கிடைத்தாலும் கொல்லப்பட வேண்டும் என்று அண்ணலார் [ஸல்] அவர்களால் அறிவிக்கப்படவரல்லவோ நீர்'' என இழித்துரைத்தனர். இப்னு ஸபாவுக்கு சரியான குறி (point) ஒன்று கிடைத்து விட்டது. ''இத்தகையவரைத் தம் ஆளுநராக்கிக் கொண்ட உதுமானுக்கும்தான் கலீஃபாவாக இருக்க என்ன தகுதியிருக்கிறது?" என்பது வரை மக்களிடையே தன் குறும்புப் பிரச்சாரத்தை வளர செய்தான். அதே நிலையில் மற்ற மாகாணங்களிலும் பொதுவாக நாடு முழுவதிலும் கலீஃபா அவர்களுக்கே எதிரான கருத்தைத் திரட்டுவதற்கான செயல் முறைகளை ஆயலானான்.

குழப்பவாதிகள் அனைவரும் கடிதத் தொடர்பு கொண்டு தங்கள் திட்டங்களைத் தொடர வழிமுறைகளை ஆய்ந்தனர். பிரிந்து நிற்கும் தாங்கள் அனைவரும் மதீனாவில் வந்து சந்திப்பது என முடிவு கண்டனர். அதன்படி எகிப்திலிருந்தும் பஸராவிலிருந்தும் கூஃபாவிலிருந்தும் பிரதிநிதிகள் புறப்பட்டனர். தங்களைக் கவனித்த மக்களிடம் தாங்கள் சமூகத்தின் நன்மையை நாடியே செல்வதாகவும், மதீனா சென்று கலீஃபா அவர்களை நேரில் சந்தித்து ஆளுநர்கள், அதிகாரிகள் பற்றிய குறைகளைக் கூறி நிவாரணந் தேடப் போவதாகவும் தெரிவித்துக் கொண்டனர்.

அதன்படியே எகிப்திலிருந்தும் பஸராவிலிருந்தும் கூஃபாவிலிருந்தும் வந்தவர்கள் மதீனாவில் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டார்கள். அவர்கள் வந்திருப்பது பற்றி கலீஃபா அவர்களுக்கும் செய்தி கிடைத்து விட்டது. கலீஃபாவைச் சார்ந்த இரு மனிதர்கள் அவர்களின் பால் அனுப்பி வைக்கப்பட்டார்கள்—வந்திருப்பவர்களின் நோக்கங்களைத் தெரிந்து வருவதற்காக.

குழப்பக்காரர்கள், தங்களைச் சந்திக்க வந்த அவ்விரு வரையும் தங்களைச் சார்ந்த கூட்டாளிகள் என நினைத்து தாங்கள் மதீனா வந்துள்ளதற்கான அந்தரங்க திட்டங் கள் அனைத்தையும் ஒளிவு மறைவின்றி கூறி விட்டார்கள்.

நாடு நகரங்களில் அவர்கள் என்னென்ன வதந்திகளைப் பரப்பியிருக்கிறார்கள், கலீஃபா அவர்களிடம் என்னென்ன குதர்க்கமான கேள்விகளையெல்லாம் சோடித்துக் கேட்கப் போகிறார்கள் என்பனவற்றையெல்லாம் விளக்கிய அவர் கள், ''கலீஃபா அவர்கள் எந்த விதத்திலும் அவற்றுக்குச் சரியான பதில் கூறவே முடியாது. பின்னர் நாங்கள் எங்கள் பகுதிகளுக்குச் சென்று, 'நாங்கள் கலீஃபாவைச் சந்தித்து நாட்டில் நடைபெறும் அநீதிகள் அனைத்தையும் எடுத்துச் சொன்னோம். கலீஃபாவோ நாங்கள் கூறிய எதையும் மறுக்கவும் இல்லை. ஆனால் அவற்றுக்காக எவ்விதப் பச் சாதாபத்தையும் கூடத் தெரிவிக்கவும் இல்லை' எனக் கூறி, மக்களின் அனுதாபத்தை எங்கள் புறம் திரட்டுவோம். அடுத்த ஹஜ்ஜுடைய காலத்தில் பெருந்திரளாக வந்து இக் கலீஃபாவைப் பதவி துறக்கச் செய்வோம். அல்லது கொலை யேனும் செய்து ஆட்சியை மாற்றுவோம்" என விளக்க மாகவே பேசினார்கள்.

அவ்விரு மனிதர்களும் திரும்பச் சென்று கலீஃபா அவர்களிடம் செய்திகளனைத்தையும் கூற, அவற்றை முழு மையாகக் கேட்ட கலீஃபா அவர்கள் முறுவலித்தார்கள். ''நாயனே! நீயே அவர்களைக் குழப்பத்தை விட்டும் காத் தருள வேண்டும். இல்லையெனில் அவர்கள் நாசமடைந்து விடுவார்களே" என அவர்களின் நாவு இறைஞ்சியது.

கலீஃபா அவர்களின் விளக்கம்

பின்னர் கலீஃபா அவர்கள், முதிய முஹாஜிர்கள்-அன் ஸார்கள், மதீனா வாழ் மாநபித் தோழர்கள் அனைவரை யும் பள்ளியில் திரட்டினார்கள். நாட்டின் முப்பகுதிகளி லிருந்தும் தம் அழைப்பின்றியே வந்திருந்த அவ்விருந்தி

ளர்களையும் அழைத்து வரச் செய்து அமர்த்தினார்கள். அவர்களனைவருக்கும் முன்பாக ஒற்றறிந்து வந்திருந்த தங்கள் இரு பிரதிநிதிகளையும் பேசப் பணித்தார்கள். செய்திகள் யாவும் வெளிப்படையாகத் தெரிந்தன. ஸஹாபாக்களின் நாளங்கள் கொதிப்படைந்தன. ''அமீரல் முஉமினீன்! 'உங்களிடையே பின்பற்றத் தக்க முன்னவர் ஒருவர் இருக்க, தம்மையே பின்பற்றும்படியாகவோ, அல்லது வேறொருவரைப் பின்பற்றும்படியாகவோ மக்களை அழைப்பவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்—அத்தகையவர்களைக் கொன்று விடுங்கள்' என அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே இவர்களனைவரும் கொல்லப்பட வேண்டும்" எனக் கிளர்ந்தெழுந்தார்கள்.

ஆனால் அம்முதிய கலீஃபா அதற்கு உடன்படவில்லை. தம் பொறுமையை அவர்களின் வற்புறுத்தல்களனைத் துக்கும் முற்படுத்தியவர்களாக,''இல்லை, நாம் அவர்களின் தவறுகளைப் புறமொதுக்குவோம். வழி திருந்த அவர்களுக்கு வாய்ப்பளிப்போம். மார்க்கத்தை அவர்கள் புறக்கணிக்காதவரை, அதன் வரம்புகளைக் கடக்காதவரை எவரையும் கொல்ல நான் அனுமதிக்கமாட்டேன்'' என மறுத்து விட்டார்கள்.

மனித அறிவினால் வகுக்கப்பட்ட ஒரு சட்டம் அன்று நடைமுறையில் இருந்திருக்குமானால் சதிகாரர்களின் கதி முடிவடைந்திருக்கும். சதியொன்று புலப்பட்டவுடனே அதில் சம்பந்தப்பட்டவர்கள் அப்போதே பிடிக்கப்படுகிறார்கள்; ஒடுக்கப்படுகிறார்கள்; ஒழிக்கப்பட்டும் விடுகிறார்கள். சந்தர்ப்பங்களும் சதி செய்யும்போது சட்டத்தின் மேடையில் நிரபராதிகளும் பலி கொள்ளப்பட்டு விடுவதைத் தவிர்க்க முடியாமலே ஆகி விடுவதுமுண்டு. ஆனால்,

நாயகத்தின் கலீஃபாக்கள்,

மக்களை வழிநடத்த வழிகாட்டப் பெற்றவர்கள்,

மதி கொண்டு விதியை வெல்வோம் என்ற மதோன்மத்த உணர்வு கொள்ளாதவர்களாக,

தங்கள் உயிர் கொள்ளக் காத்திருக்கும் சதிகாரர்களை நேருக்கு நேராகச் சந்தித்த நிலையிலும் அவர்களைப் பிடிக்காத காரணம் அவர்களின் மதியின் பலஹீனமல்ல. அவர்கள் மேற்கொண்ட வழிமுறை மறை தந்த மாநபியால் வகுக்கப்பட்டது. குற்றத்தை இன்னும் செயல்படுத்தாத நிலையில் எந்த ஒரு தண்டனையையும் ஒருவனுக்களிக்க இடமளிக்கவில்லை இஸ்லாமிய தர்மம். அதன் காரணமாகவே முந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்களும் கூட தங்களைக் கொல்லவிருக்கும் ஃபைரோஸை நேராகச் சந்தித்தும்—அவனின் கொலை தாபத்தை உணர்ந்தும்—அவனைத் தம் பிடியில் கொள்ளவில்லை. விதியின் எல்லைக் கோட்டை தம் மதி கொண்டு மிதியாத மாண்பை, பின்னர் கிலாஃபத்தை ஏற்ற அண்ணல் அலீ (ரலி) அவர்களும் வெளிப்படுத்துகிறார்கள். குணத்தால் உயர்ந்த முதுபெருங் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களும் அடுத்த ஆண்டு தம்மைக் கொல்ல நாடியிருப்பவர்களை முதலாண்டிலேயே கொன்று விட எவ்விதம் துணிவார்கள்?

கலீஃபா அவர்கள் சதிகாரர்கள் சுமந்து வந்த குற்றச் சாட்டுகள் அனைத்தையும் பகிரங்கமாகவே கேட்க அவர்களுக்கு முழு வாய்ப்பளித்தார்கள். தங்கள் பால் அவர்களின் உள்ளங்களில் குமைந்து கொண்டிருந்த குரோதங்கள் அனைத்தையும் முழுமையாகவே வெளிப்படச் செய்தார்கள். புனையப்பட்டு வந்த ஒவ்வொரு பொய்யையும் மாய்க்கும் ஆணித்தரமான ஆதாரங்களை அவையினர் முன் எடுத்தளித்தார்கள்.

பள்ளியின் மேடையில் நின்று, இறைவனைப் புகழ்ந்து அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் மீது வாழ்த்து கூறி பேசத் துவங்கினார்கள் கலீஃபா. தங்கள் பாலும் தங்களின் உமையாக் குடும்பத்தின் பாலும் பூக்கத் துவங்கி விட்ட பொறாமையின் பிரதிபலிப்பே குழப்பத்திற்குக் காரணம் எனத் தெளிவுபடுத்த முனைந்த கலீஃபா அவர்கள், ''என் உடன் பிறப்புகளே! எனக்கு முந்திய மேலோர்களான அபூபக்கர் (ரலி), உமர் (ரலி) ஆகிய இருவருள் எவருடனும் ஒப்பிடப்பட நான் அணுவளவும் தகுதியுடையவன் அல்லவே அல்லன். அச்சிலர்கள் இருவரும் அல்லாஹ்வின்

முன் கணக்குத் தீர்க்கப்பட வேண்டியுள்ள அச்சத்திற்காட் பட்டவர்களாக தங்களின் உற்றார் உறவினர்களுக்காதர வான எந்த செயல்களையும் விட்டும் தங்களைக் காத்துக் கொண்டார்கள் என்பது உண்மையே. ஆனால், அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் தங்கள் உறவினர்களை, குடும்பத்தார்களை ஆதரிப்பவர்களாக, ஆதரிக்க ஏவுபவர் களாகவே இருந்தார்கள். என்னுடைய குடும்பத்தார்கள் ஏழ்மைப்பட்டவர்களாக இருப்பதால் நான் அவர்களை ஆதரிக்கின்றேன். மார்க்கத்தில் அது தடுக்கப்பட்டது என்றோ, விரும்பத்தகாததென்றோ நீங்கள் முடிவு காண் பீர்களாகில் நான் என்னைத் திருத்திக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்'' என பேசிக் கொண்டிருக்கையிலேயே ஒரு வன் இடைமறித்துக் கேட்டான்.''அமீரல் முஉமினீன்! தாங் கள் மாபெரும் நபித் தோழர்களையெல்லாம் பதவி நீக்கம் செய்தது தவறல்லவா?" என்று.

கலீஃபா அவர்கள் அதற்கு பதில் கூறி முடிக்குமுன் மற் றொருவன் எழுந்து ஒரு கேள்வியைக் கேட்டான். அதற்கு பதில் கூறி முடிக்குமுன் மூன்றாமவன் எழுந்து ஒரு குற்றச் சாட்டைக் கூறினான். இவ்வாறாக நாட்டின் முப்புறமிருந் தும் ஒன்று கூடியிருந்த சதிகாரர்கள் தங்கள் முழுத் திறன் களையும் கொண்டு சோடித்த நீண்ட பட்டியலையே கலீ ஃபா அவர்களின் முன் கணைகளாகத் தொடுத்தனர். அவை அத்தனையும் பொய்யையும் புழுக்கத்தையுமே அடிப் படைகளாக வைத்துப் புனையப்பட்டவை என்பதை மிக நிதானத்தோடு அம்மேதை விளக்கினார்கள்.

குற்றச்சாட்டுகள் ஒவ்வொன்றும் பொய்யானவையாக,

அல்லது புழுக்கங்கொண்டு புனையப்பட்டவையாகவே இருந்தது மட்டுமல்ல,

மாபெரும் அக்கலீஃபா அவர்களை நோக்கி அக்கேள்வி களைக் கேட்க அவர்களுக்குத் தகுதியும் என்ன இருந்தது?

அவர்களின் முதலாம் குற்றச்சாட்டின்படி கலீஃபா அவர்களால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மாநபித் தோழர்

கள்: 1. ஹழ்லரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி)
2. ,, அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி)
3. ,, ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி)
4. ,, அபூ மூஸா அஷ்அரீ (ரலி)
5. ,, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)
6. ,, அம்மார் இப்னு யாஸிர் (ரலி)
7. ,, அப்துல்லாஹ் இப்னு அர்க்கம் (ரலி)

ஆகியோராவர். அம்மாநபித் தோழர்கள் ஒவ்வொருவரின் தகுதியும் படித்தரமும் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்குத் தெரியாதவையல்ல. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களின் தோழர்களிடம் தங்களுக்குப் பரிவேற்பட்டு விட்டதாகக் காட்டிக் கொண்ட அத்துரோகிகளே அதற்கு முன்னர் ஹழ்லரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி) அவர்கள் மீது லஞ்சம் வாங்கியதாகப் பழி சுமத்தியவர்கள் என்பதை வரலாறு மறந்திடவில்லை. அது அபாண்டம் என்பது வெளிப்பட்டு விட்டாலும் ஹழ்லரத் முகீரா (ரலி) அவர்கள் பதவியின்றும் திரும்ப அழைக்கப்பட்டது ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரிலல்ல. பழியற்ற நிலையிலும் குறை சுமத்தப்பட்ட ஆளுநர்களைத் திரும்பவே அழைத்துக் கொண்டு மாச்சரியங்களை வளர விடாமல் தடுத்து விடுவதும், அவ்வாளுநர்களின் திறனும், பணியும் தொய்ந்து விடாமல் மாற்றுத் துறைகளில் தொடரச் செய்வதும் ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களின் நிர்வாகத் திறன்களின் பால் பட்டவை. அவர்களின் இறுதி நேர அறிவுரைப்படியே ஹழ்லரத் உதுமான் (ரலி), முகீரா (ரலி) அவர்களை மதீனாவுக்கு அழைத்துக் கொண்டார்கள்.

(2) ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் பதவியிலிருந்து அழைக்கப்பட இரு காரணங்கள் இருந்தன.

முதலாவதாக, ரோமர்களுக்கு உதவிய அலெக்ஸாண்டிரியாவின் கலகக்காரர்களை ஒடுக்கிய ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள், அக்கலகக்காரர்களின் பெண்களைச் சிறை பிடித்து கைதிகளாக மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள். கலீஃபா அவர்களைச் சந்திக்க நேர்ந்த அப்பெண்கள் "அமீரல் முஉமினீன்! தங்களுக்குத்

துரோகம் செய்தவர்கள் எங்களின் ஆண்களே, அடிமை கொள்ளப்பட நாங்கள் என்ன பாவம் செய்தோம்" எனக் கதறியழுதார்கள். இதயங்கசிந்த கலீஃபா, அப்பெண்களனைவரையும் விடுதலை செய்து அவர்களின் நாட்டுக்குச் சென்று நிம்மதியுடன் வாழ அனுமதித்தார்கள். திம்மிப் பெண்களின் விஷயத்தில் ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கை யதேச்சாதிகாரமான ஒன்றாக கலீஃபா அவர்களின் உள்ளத்தை வருத்தியது.

இரண்டாவதாக, எகிப்தின் பொதுப்பணித் துறையில் ஏராளமான அபிவிருத்திகளைச் செய்த பின்னரும் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் அதன் தீர்வையை அதிகப்படுத்தத் தவறி விட்டார்கள் என்பதல்ல மறுத்தே விட்டார்கள். அதன் நிர்வாகம் அப்துல்லாஹ் இப்னு ஸஅத் அபூ ஸர்ராஹ்வின் கரத்தில் மாறிய மறு ஆண்டிலேயே எகிப்தின் தீர்வை இரு மடங்காக மதீனாவுக்கு வந்தது. களங்களில் கடுமையைக் கக்கிய ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களின் இதயம் மக்களின் வாழ்க்கைத் தலங்களில் தாராளத் தன்மை கொண்டிருந்தது அவர்களின் தனிச் சிறப்பு. ஆனால் குரோதக்காரர்கள் அபூ ஸர்ராஹ் தம்மின் பால்குடிச் சகோதரர் என்பதற்காகவே கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களைப் பதவி நீக்கி, அபூ ஸர்ராஹ்வுக்கு இடமளித்ததாகப் பழி சுமத்தினார்கள். அதே சமயத்தில் ஹழ்லரத் அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் கலீஃபா அவர்களின் சகோதரியையே மணமுடிந்திருந்ததை அவர்கள் உணரவில்லை. எகிப்தின் நிர்வாகப் பிரச்சனையில் ஹழ்லரத் அம்ரு (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட மன முறிவு கலீஃபா அவர்களின் சகோதரியின் மணவாழ்வையே முறித்து விட்டது. ஒரு பால்குடிச் சகோதரரைப் பதவியால் உயர்த்துவதற்காக தம் சகோதரியின் வாழ்க்கையும் பலி கொடுத்து விடத் துணிந்தார்களா கலீஃபா அவர்கள் என்பது சிந்தனைக்குரிய வினாவல்லவா?

(3) ஹழ்லரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) (4) ஹழ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) (5) ஹழ்லரத்

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) ஆகியோர் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகள் வஞ்சகர்களின் விதண்டாவாதச் சூழ்ச்சிகளே என்பதை கலீஃபா அவர்கள் உணர்ந்து தங்கள் மாநபியின் அத்தோழர்களை, பாமரர் களிடையே பரவக் கூடிய பழிகளிலிருந்து காக்கவே பொறுப்புகளிலிருந்து மீட்டு அழைத்துக் கொண்டார்கள்.

ஹல்ரத் அம்மார் இப்னு யாஸிர் (ரலி) அவர்களையோ பதவி நீக்கம் செய்தவர்கள் ஹழ்லரத் உமர் (ரலி) அவர் களேயன்றி கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் அல்லர்.

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் காலத்தில் ஹழ் லரத் அம்மார் (ரலி) அவர்களுக்கும் உத்பா இப்னு அபூ லஹப் என்பவருக்குமிடையே ஏற்பட்ட ஒரு சச்சரவு கை கலப்பில் முடிந்தது. ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களே உத்பாவைத் தாக்கி விட்டிருந்தார்கள். இஸ்லாத்தை ஏற்ற வர்கள் மீது குரைஷிகளின் கொடுமை கோரத் தாண்டவ மாடிய ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுச் சோதனைகளைச் சுமந்த பெருமைக்குரியவர்கள் ஹழ்லரத் அம்மார் (ரலி). உத்பா அவர்களோ அண்ணலார் (ஸல்) அவர்களின் கடும் வைரியாக விளங்கிய அபூ லஹபின் புதல் வர். மக்க நகர வெற்றிக்குப் பின்னரே இஸ்லாத்தில் இணைந்த மிகப் பிந்திய காலத் தோழர். கைகலப்பில் ஈடு பட்டது இருவர் பாலும் குற்றமே. ஆனாலும், ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களுக்கிருந்த தகுதியின் உயர்வையும், பிந்திய காலத்தில் இஸ்லாத்தை ஏற்ற ஹழ்லரத் உத்பா வின் மனப் பலஹீனத்தையும் சிந்தனையில் கொண்டு கலீ ஃபா அவர்கள் ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களையே கண்டித்தார்கள். ஆனால் வஞ்சகர்கள், உத்பா குரைஷி குலத்தைச் சேர்ந்த ஒருவர் என்பதாலேயே கலீஃபா அவர் கள் நீதியில் தவறி விட்டதாக சோடித்து ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களின் உள்ளத்தில் பகைமையை மூட்ட முயற் சித்தனர். எனினும் ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்கள் மதீனாவில் இருந்தவரை அம்முயற்சியில் அவர்கள் வெற்றி கொள்ளவில்லை.

அந்தக் கண்டிப்பைத் தவிர்த்து கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களை எந்தப் பதவியினின் றும் நீக்கவும் இல்லை; நாடு கடத்தவும் இல்லை.

தங்கள் ஆளுநர்களைப் பற்றிய முன்பின் முரணான செய்திகள் கிடைத்தபோது உண்மை நிலையை அறிய நாட் டின் பல்வேறு மாகாணங்களுக்குத் தங்கள் அந்தரங்கத் தோழர்களை அனுப்பிய கலீஃபா அவர்கள் எகிப்துக்குத் தங்கள் அந்தரங்கத் தூதராய் ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களையே அனுப்பி வைத்தார்கள். அதுவே அவ்விரு வரின் உள்ளங்களின் தூய்மைக்குச் சான்று கூறப் போதும். ஆனால் கலீஃபா அவர்களுக்கு எதிராக ஹழ்லரத் அம்மார் (ரலி) அவர்களைத் திருப்ப மதீனாவில் நடைபெற்ற முயற்சி கள் வெற்றியடையாத நிலையில் எகிப்தில் அவர்களைச் சந்தித்த ஹழ்லரத் முஹம்மத் இப்னு அபூபக்கர், முஹம்மத் இப்னு அபீ ஹுதைஃபா ஆகியோர் பூரண வெற்றி கண்ட னர். அம்மார் (ரலி) அவர்களைத் தங்கள் வசப்படுத்தி எகிப்திலேயே தங்க வைத்துக் கொண்டனர்.

ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு அர்க்கம் (ரலி) அவர் களின் பதவி நீக்கத்திற்கான காரணத்தை கலீஃபா அவர் கள், ''அபூபக்கர், உமர் (ரலி) ஆகிய அவர்களின் காலத் திலிருந்தே பொறுப்பில் தொடர்ந்திருந்த அவரை இப்போது முதுமையும் இயலாமையும் அணைத்து விட்டதாலேயே அப் பொறுப்பை ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) இடம் ஒப்புவிக் கிறேன்" என முன்னமேயே பகிரங்கமாக அறிவித்திருக் கிறார்கள்.

ஹழ்லரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் மதீனா வாழ் அன்ஸாரியே அல்லாமல் கலீஃபா அவர் களோடு எந்த சொந்த பந்தமுங்கொண்டவரல்லர். வரவு செலவு கணக்குகள் பாகப் பங்கீடுகள் பற்றிய கணக்குகளில் வணிக மன்னரான கலீஃபா உதுமான் (ரலி) அவர்களை யடுத்து மிகத் தேர்ச்சி பெற்றவராக அக்காலை ஹல்ரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களே விளங்கினர். கலீ ஃபா அவர்கள் கருவூலப் பொறுப்பை அவரிடம் தர அடிப் படைக் காரணம் அதுவே.

ஆனால் அத்தகைய பதவி மாற்றங்கள் முந்திய கலீஃபா உமர் (ரலி) அவர்களாலும் செய்யப்பட்டுள்ளன. ஈரானின் வீர நாயகர் ஹழ்லரத் ஸஅத் இப்னு அபீ வக்காஸ், ஹழ்லரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி) ஆகியோர் மட்டுமின்றி அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் திருவாயால் 'அல்லாஹ்வின் வாள்' எனப் புகழப்பட்ட ஹழ்லரத் காலித் இப்னு வலீத் (ரலி) அவர்களும் கூட பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். கலீஃபா உதுமான் (ரலி) அவர்களால் அமர்த்தப்பட்டு கிழக்கிலும் மேற்கிலும் பறி போன நிலப் பகுதிகளையெல்லாம் பகைவர்களிடமிருந்து பறித்து மீட்டு இஸ்லாமிய ஆட்சியின் எல்லைகளை மேலும் விரிவடையச் செய்த பெரும் தள நாயகர்களெல்லாம் பிந்திய கலீஃபா அலீ (ரலி) அவர்களால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் நடவடிக்கைகளில் குற்றம் கண்டு நாயகத் தோழர்களுக்குப் பரிந்து நிற்பதாக நடித்தவர்கள் முன்னர் ஹழ்லரத் உமர் (ரலி) அவர்களால் எடுக்கப்பட்ட பதவி நீக்க நடவடிக்கைகளின்போது வாயடைப்பட்டுக் கிடந்ததைக் கோழைத்தனம் என்றால் பிந்திய கலீஃபா ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களின் நடவடிக்கைகளைக் காணாதது போல் இருந்ததும் கயமைத்தன மல்லவா?

கலீஃபா அவர்கள் மீது சுமத்தப்பட்ட இரண்டாம் குற்றச்சாட்டு அனுபவமும் தகுதியுமற்ற இளைஞர்களை கலீஃபா அவர்கள் பெரும் பொறுப்புகளில் அமர்த்தினார்கள் என்பது. அக்குற்றச்சாட்டினால் சுட்டிக் காட்டப்பட்டவர்கள்:

1. வலீத் இப்னு உக்பா, 2. அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி), 3. ஸஈத் இப்னுல் ஆஸ் (ரலி), 4. அப்துல்லாஹ் இப்னு ஸஅத் அபூ ஸர்ராஹ் ஆகியோர் ஆவர்.

முஹாஜிர்கள், அன்ஸார்கள், முந்திய கால ஸஹாபாக்களோடு ஒப்பிட்டு நோக்கப்படுவதற்குரிய தகுதி அந்நால்வருக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் கலீஃபா அவர்களால் அளிக்கப்பட்ட பொறுப்புகளுக்குரிய திறனற்ற

வர்கள் என்று அவர்களை எப்படி விலக்கிப் பார்க்க முடி யும்? கிலாஃபத்தின் துவக்கத்தில் கலகக்காரர்களால் பறிக் கப்பட்ட நிலப் பரப்புகள் அனைத்தையும் மீண்டும் வென்று சேர்த்ததோடு இஸ்லாமிய ஆட்சியின் எல்லையை மேலும் பல லட்சம் சதுர மைல்கள் பரப்பளவுக்கு விரியச் செய்த தங்களின் ஆற்றலின் மூலம் அவர்களனைவரும் கலீஃபா அவர்களின் தூர நோக்குக்கும் தேர்வுத் திறனுக் கும் சான்று கூறுபவர்களாகவல்லவா திகழ்கிறார்கள்.

1. வலீத் இப்னு உக்பா, முதலாவதாக கலீஃபா உதுமான் (ரலி) அவர்களால் பொறுப்பில் அமர்த்தப் பட்டவரே அல்லர். ஈரானியப் போர்க் களங்களில் ஹழ்ல ரத் ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்களின் கீழ் ஒரு துணைத் தளபதியாகப் பணியாற்றிய அவரை ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் ஜஸீராவின் ஆளுநராக நியமனம் செய்திருந்தார்கள். கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் அவரைக் கூஃபாவின் ஆளுநராக இடமாற்றம் செய்தார் களேயன்றி, அவர் தம் இளவல் என்பதற்காகப் பதவியில் அமர்த்தவில்லை. அது போன்றே,

(2) ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (ரலி) அவர்களும் துணைத் தளபதியான வலீத் இப்னு உக்பா வின் கீழ் மூன்றாம் இடத்தில் நின்று ஈரானியப் போர்க் களங்களில் பங்கேற்றவர்.

ஹிஜ்ரி 4-ம் ஆண்டில் பிறந்து பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதி நாட்களில் பத்தே வயதுகளையுடைய ஓர் இளவலாக உலவிய அத்தோழர் தம் அண்ணலரின் திருவாயால், ''இவர் மக்களின் தாகந்தீர்ப்பார்" என்ற அருள்வாக்கையும் பெற்றிருந்தனர். கலீஃபா உதுமான் (ரலி) அவர்களால் பொறுப்பளிக்கப்பட்ட அவருக்கு அவர் பெற்றிருந்த அந்தத் தகுதிகளே போதாவா? பஸரா நகரின் நிர்வாகப் பொறுப்பேற்ற அவர் பல கால்வாய் களை வெட்டியும் கடைத் தெருக்களைக் கட்டியும் நகரைச் செழிக்கச் செய்தார். அண்ணலார் (ஸல்) அவர்கள் முன்

ணற்ஸித்தது போலவே அவரின் நிர்வாகத்தில் அரபு நாட்டில் பாலைவனங்கள் சோலைவனங்களாய்த் திகழ்ந்தன.

வெல்லப்பட்ட நிலப் பரப்புகளில் கலகங்கள் தோன்றிய போது, கலீஃபா அவர்கள் மிக விவேகத்தோடு முன்னர் அப்பகுதிகளில் படை நடத்தி அனுபவம் பெற்றவர்களையே தெரிந்தெடுத்து பொறுப்பளித்து அனுப்பினார்கள் என்றால், அவர்கள் கலீஃபா அவர்களைச் சார்ந்த 'உமையா' குடும்பத்தில் பிறந்திருந்திருந்ததே ஒரு குற்றமாகி விட்டதா? ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஆமிர், ஸஈத் இப்னுல் ஆஸ் (ரலி) ஆகிய இவ்விருவரும் வெளிப்படுத்திய அறிவின் திறனாலும் நெஞ்சத் துணிவாலுமே கிழக்கே தலை தூக்கிய கலகங்கள் யாவும் ஒடுக்கப்பட்டு தபரிஸ்தான், ஆர்மீனியா, ஸீஜிஸ்தான், நைஷாப்பூர் பகுதிகளெல்லாம் இஸ்லாமிய ஆட்சியில் இணைக்கப்பட்டன.

படைக் களத்தில் அவர்கள் வல்லவர்களாக இருக்கலாம். நிர்வாகத்திற்குத் தகுதி படைத்தவர்கள்தாமா? என்ற ஐயமெழுந்தாலும், குழப்பச் செய்திகளைக் கேள்வியுற்ற கலீஃபா அவர்களால் உண்மை நிலையை ஆய்ந்து வர நாட்டின் பல புறமும் அனுப்பப்பட்ட அந்தரங்கத் தோழர்கள் அனுப்பி வைத்த குறிப்புகள் சான்று கூறுகின்றன அவர்களின் நிர்வாகச் செழிப்புகளைப் பற்றி. கூஃபாவுக்கு அனுப்பட்ட ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களும், பஸராவுக்கு அனுப்பப்பட்ட ஹழ்லரத் உஸமா இப்னு ஜ்ஸைத் (ரலி) அவர்களும் 'நீதி குலையவில்லை. மக்களின் வாழ்க்கை அமைதியோடு விளங்குகிறது' என்று அவ்விரு ஆளுநர்களின் நிர்வாகங்களைப் பற்றியே கலீஃபா அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள்.

எகிப்தின் ஆளுநராக பொறுப்பளிக்கப்பட்ட அப்துல்லாஹ் இப்னு ஸஅத் அபூ ஸர்ராஹ்வே திரிப்போலியிலிருந்து மொராக்கோ வரை ஆப்ரிக்காவின் வட பகுதிகளை வென்று இஸ்லாமிய ஆட்சியை அங்கெல்லாம் மலரச் செய்தவர்; ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களோடு

இணைந்து நின்று கடற்போர் நடத்தி ஸைப்ரஸின் வெற்றிக்குத் துணை நின்றவர். அவ்விருவரையும் கலீஃபா அவர்கள் இறுதி வரையில் எகிப்தினுடையவும் ஸிரியாவினுடையவும் ஆளுநர்களாக நீடிக்கச் செய்தது அவர்களின் ஆற்றலையும் நிர்வாகத் திறன்களையும் கண்டேயல்லாமல் அவர்கள் தம் உமையாக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்காக அல்ல.

காலமெல்லாம் அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களுக்கு இன்னல்களை விளைவித்து, மக்க நகர வெற்றிக்குப் பின்னரே இஸ்லாத்தை ஏற்ற அவர்களின் துர்ப்பேற்றை எண்ணி பச்சாதாபப்படுவதே தவிர, பாரம்பரியமாகவே மற வாழ்வு கண்ட உமையாக்களுக்கு இயல்பிலேயே அமைந்திருந்த ஆற்றலை கலீஃபா அவர்கள் எவ்விதம் புறக்கணிக்க முடியும்?

''இளைஞர்களை நான் ஆளுநர்களாக நியமனம் செய்து விட்டது பற்றி என்னைக் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்விளைஞர்களின் வாழ்க்கை நடைமுறைகளில் வெளிப்பட்ட மேலான பண்பாடுகளையும் அப்பொறுப்புகளை ஏற்ற அவர்கள் பெற்றிருந்த தகுதியையும் கண்டே அவர்களை நான் அப்பொறுப்புகளில் அமர்த்தினேன். அவர்கள் இளைஞர்களாக இருந்ததே அவர்கள் செய்த குற்றமாகிவிடாது. முந்திய கலீஃபாக்களும் அவ்வாறு செய்திருக்கிறார்கள். அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களும் பதினெட்டே வயதுகளையடைந்திருந்த உஸாமா (ரலி) இடம் பெரும் பொறுப்பை ஒப்படைத்தார்கள். அப்போதும் பலர் இப்போதை விட அதிகமாகவே குறை கூறினார்கள் அல்லவா?''

—என கலீஃபா அவர்கள் கேட்டபோது நபிமணித் தோழர்கள் பலர் ''ஆம்! கூறவே செய்தார்கள்'' எனப் பதில் கூறினார்கள்.

மூன்றாவதாக கலீஃபா அவர்கள் பெரும் பதவிகளில் தம் உறவினர்களையும் குடும்பத்தைச் சார்ந்தவர்

களையுமே அமர்த்தி விட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

''பந்த பாசத்தை வைத்து நான் எவரையும் பதவிகளில் அமர்த்துவதில்லை. சமூகத்திற்குப் பயன் தரக் கூடியவர்களையே பொறுப்புகளில் அமர்த்தத் தெரிந்தெடுக்க வேண்டியது என் கடமையாகும். உமையா குடும்பத்தில் ஒரு சிலர் நிர்வாகத்தில் நிகரற்றவர்கள் என அறிந்தே நான் அவர்களிடம் பொறுப்புகளை அளித்துள்ளேன். அதனை நீங்கள் விரும்பவில்லையாயின் அவர்களுக்கு மாறாக நீங்கள் விரும்பும் எவரிடமும் அப்பொறுப்புகளை அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் அவர்களும் அதே போன்ற தகுதி படைத்தவர்களாக இருக்கட்டும்''

—எனக் கலீஃபா அவர்கள் அளித்த விளக்கம் புறக்கணிக்க முடியாத ஒன்று. பொறுப்பளிக்கப்பட்டவர்கள் கலீஃபாவின் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததே தவறாகி விடாது. அவர்கள் தகுதி படைத்தவர்களா, அல்லவா என்பதே கவனிக்கப்பட வேண்டியிருந்தது. நம்பிக்கைக்குரியவர்களாகவும் கலீஃபா அவர்களுக்குத் தம் சொந்த குடும்பத்தார்களே இருந்ததில்தான் தவறென்ன?

கலீஃபா அவர்கள் மீது சுமத்தப்பட்ட நான்காம் குற்றச்சாட்டு 'பைத்துல் மால்' என்னும் பொதுக் கருவூலப் பணத்தை அவர்கள் விரயம் செய்தார்கள், நியாயமற்ற முறையில் உற்றார் உறவினர்களுக்கு அள்ளித் தந்தார்கள் என்பது.

அள்ளிக் கொடுத்த ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் வள்ளன்மை மங்காப் புகழ் படைத்தது. வாணிபத்தின் மூலம் பல இலட்சங்களாகப் பொருளீட்டிய அவர்களின் கருவூலம் வற்றாத சுனையாக விளங்கியது. அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் வாழ்நாளின் போதும் முந்தைய கலீஃபாக்களின் காலத்திலும் கொடுத்தே சிவந்த அவர்களின் பொற்கரங்களுக்கு மதீனாவின் திருப்பள்ளியும், பீரெ ரூமா நன்னீர்க் கிணறும்,

தபூக் போர் வரலாறும் புகழாரஞ் சூட்டுவனாய் விளங்கு கின்றன. வாழ்க்கையின் எந்த நாளிலும் பற்றாக்குறை எட்டியும் பாராத அப்பெருஞ் சீமான் தம் வற்றாச் சுனை யிலிருந்து வாரித் தந்தபோது உற்றார் உறவினர்களுக்கு முதலிடம் அளித்ததையே குற்றமாகக் கொள்வதா? ஆரம்ப நாளிலேயே அல்லாஹ்வைத் தொழ பள்ளி அமைத்தவரை, மக்களின் தாகந்தீர்த்தவரை பொதுக் கருவூலத்தை விரை யப்படுத்தினார் எனப் பழி கூறித் தூற்றுவதும் தகுமா? நீதி கேட்டும் கலீஃபாவின் குரல் பதிவேடுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது:

''என் குடும்பத்தாருக்கு நான் அள்ளிக் கொடுப் பது பற்றியும் அவர்களுக்கு முதலிடம் தருவது பற்றி யும் குற்றம் சாட்டுகிறார்கள். அன்பு என்பது மனித இயல்பிலிருந்து ஊற்றெடுக்கும் ஒரு பண்பு. அதனை எந்த வல்லமையைக் கொண்டு நான் தடுக்க முடியும்?

ஆண்டவனை சாட்சியாக நிறுத்தி உங்களை நான் கேட்கிறேன் - அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் அரபுகள் அனைவரிலும் குரைஷிகளை முற்படுத்தி வைக்கவில்லையா? குரைஷிகளுக்கிடையிலும் ஹாஷிம் குடும்பத்தவர்களுக்கு முன்னிடம் அளிக்கவில்லையா? 'ஹுனைன்' போரின் கொள்பொருள்கள் பங்கீடு செய் யப்பட்ட சமயம் சில இளம் அன்ஸார்களும் அவசரப் பட்டு ''இரத்தம் எங்கள் வாள்களிலிருந்து சொட்டிக் கொண்டிருக்கையில் வெற்றிப் பொருள்களை குரைஷி கள் அள்ளிச் செல்கின்றனர்'' எனக் குறை கூறி விட்டுப் பின்னர் வருந்தினார்கள் அல்லவா?

உண்மையில் கூறுகிறேன் — சுவனத்தின் திறவு கோல் என்னிடம் இருக்குமேயானால் அதில் என் உமையா குடும்பத்தவர்களை நிரப்பியே விடுவேன். அல்லாஹ்வும் அவன் தூதரும் கூறுகிறபடி உற்றார் உறவினர்களை நான் அணைப்பது ஏற்கப்பட வேண்

டிய செயலேயன்றி எதிர்க்கப்பட வேண்டியதே அல்ல. ஆனால் அந்த என் அன்பு என்னை அநீதியின் புறம் விரட்டிச் சேர்க்கவில்லை. நான் அவர்களுக்குத் தருவ தெல்லாம் அவர்களுக்கு நான் கடன்பட்டிருப்பதையே. அவர்கள் மீது வியாதியாக்கப்பட்ட கடன்களை நான் அணுவளவும் குறைக்காது அவர்களிடமிருந்து கேட்டுப் பெறுகிறேன்.

இனி, அவர்களுக்கு நான் தருவதெல்லாம் என் சொந்தப் பொருள்களிலிருந்தே தருகிறேன். முஸ்லிம் களின் உடைமையான கருவூலத்திலிருந்து நான் எனக் காகவும் ஒரு காசேனும் எடுப்பதில்லை, என்னைச் சார்ந்த பிறருக்காகவும் அப்படியே. அண்ணலார் (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலும் என் முன் னோடிகளான அபூபக்கர், உமர் (ரலி) ஆகியவர் களின் காலத்திலும் சரியே, நான் தேடிச் சேர்த்த பொருள்களையே அள்ளித் தந்து வந்தேன். அது இளமையும், பொருளீட்ட நான் பேராவலும் கொண் டிருந்த காலம். இப்போதோ முதுமை என்னைத் தழுவி மரணத்தை நோக்கி இழுத்துச் சென்றுக் கொண்டிருக்கும் நிலையில், என்னிடம் எஞ்சியுள்ள உடைமைகளை அதன் உரிமைக்காரர்களுக்கு பங் கிட்டளிக்கும் விஷயத்தில் பழி சுமத்தப்படுகிறேன்.

வெற்றிப் பொருள்களை வீரர்கள் என்னிடம் கொணர்ந்து சேர்ப்பிக்கிறார்கள். அவற்றில் ஐந்தி லொரு பங்கைப் பிரித்தெடுத்துக் கொண்டு மற்றதை அவர்களிடமே தந்து விடுகிறேன். பிரிக்கப்பட்ட ஐந்தி லொரு பாகத்திலும் நான் ஏதும் பெற்றுக் கொள்வ தில்லை. என் வாழ்க்கையின் தேவைகளனைத்தை யும் வாணிபத்தின் மூலம் அல்லாஹ் எனக்களித்த வருவாயிலிருந்து நிறைவேற்றிக் கொண்டேனே யன்றி மக்களின் உடைமையிலிருந்து ஒரு காசையே னும் நான் எந்த நாளிலும் தொட்டதே இல்லை'' —என கலீஃபா அவர்கள் நீண்ட விளக்கம் தந்தார்கள்.

துரோகிகளின் அபாண்டங்கள்

1. ஹக்கம் இப்னு அபுல் ஆஸ் என்பவர் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் சிறிய தந்தை. ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றதற்காக உதுமான் (ரலி) அவர்களைக் கயிறுகளால் பிணைத்து வதைத்தவர் அவரே. பின்னர் அவரும் இஸ்லாத்தை ஏற்றார். திருமறை வசனங்களை எழுதும் பணியில் அமர்த்தப்பட்டிருந்த அவர் புரிந்த ஒரு தவற்றுக்குத் தண்டனையாக அண்ணலார் (ஸல்) அவர்கள் அவரைத் தாயிஃபுக்கு நாடு கடத்தியிருந்தார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களால் நாடு கடத்தப்பட்ட அவரை கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின்போது மதீனாவுக்குள் வர அனுமதித்து, கருவூலத்திலிருந்து அவருக்கு ஓர் இலட்சம் திர்ஹங்கள் கொடுத்தார்கள்.

2. அவரின் மகன் ஹாரிஸுக்கு கடை வீதியில் விற்பனையாகும் பொருள்களுக்கு வரி வசூலித்துக் கொள்ள உரிமையளித்தார்கள்.

3. திரிப்போலியின் வெற்றிப் பொருள்களில் ஐந்திலொரு பங்கை மர்வானுக்கு அள்ளிக் கொடுத்து விட்டார்கள்.

4. பொதுக் கருவூலத்திலிருந்து ஓர் இலட்சம் திர்ஹங்களை ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களுக்குத் தந்து விட்டார்கள்.

5. கருவூலத்திலிருந்த பணத்தைக் கொண்டு மதீனாவின் பள்ளிக்கு அருகாமையில் தமக்காகப் பெரும் வீடு ஒன்றை கலீஃபா அவர்கள் கட்டிக் கொண்டார்கள்.

—என்பனவே கலீஃபா அவர்கள் பொதுக் கருவூலத்தை விரையம் செய்தார்கள் என்பதற்கு பழிகாரர்கள் சமர்ப்பித்த ஆதார அபாண்டங்கள்.

'வஹீ'யாக வந்துக் கொண்டிருந்த திருமறை வசனங்களைப் பதியும் எழுத்தர்களில் ஒருவராக பணியாற்றி

வந்த ஹக்கம், 'ஆலு இம்ரான்' என்ற அத்தியாயத் தலைப்பை 'ஆலு மர்வான்' எனத் திரித்தெழுதிய குற்றத்துக்காக அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களால் நாடு கடத்தப்பட்டு தாயிஃபில் ஆடுகளை மேய்த்து வாழ்ந்துக் கொண்டிருந்தார். பின்னர் அவருடைய வாழ்க்கையின் நலிவைப் பற்றிக் கேள்வியுற்று ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் பரிந்துரைத்து இறுதி நாட்களில் அவருக்காக மன்னிப்பையும் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அவரை மதீனாவுக்குத் திரும்ப அழைத்துக் கொள்வதற்குள் அண்ணலார் (ஸல்) அவர்கள் உலகைப் பிரிந்து விட்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹக்கம் இப்னு அபுல் ஆஸை மன்னித்து விட்ட செய்தி முந்திய கலீஃபாக்களான அபூபக்கர், உமர் (ரலி) ஆகிய இருவருக்கும் எட்டியிருக்கவில்லை. ஆகவே அவ்விருவரும் தங்களின் கிலாஃபத்தில் ஹக்கமை மதீனாவுக்குள் வர அனுமதிக்கவில்லை. ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்கும் அதனை அவ்விருவரிடம் வலியுறுத்த அவசியப்படவில்லை.

தாமே கிலாஃபத்தை ஏற்றபோது ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் தம் சிறிய தந்தையை மதீனாவுக்கு வர அனுமதித்ததோடு நலிவுற்றிருந்த அவருடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்திக் கொள்ள ஓரிலட்சம் திர்ஹங்களை— தம் சொந்தப் பொருளிலிருந்தே — கொடுத்தார்கள். அவரின் மகன் மர்வானுக்குத் தம் மகளையும் மணமுடித்தளித்ததோடு ஓரிலட்சம் திர்ஹங்களைச் சீதனமாகவும் கொடுத்தார்கள். இவையனைத்தும் அவர்களின் சொந்தப் பொருளிலிருந்தேயல்லாமல் பைத்துல் மாலில் இருந்தல்ல.

மதீனாவின் கடைத் தெருவில் வரியாக வசூலித்துக் கொள்ள கலீஃபா அவர்கள் ஹாரிஸுக்கு எந்த உரிமையும் அளிக்கவே இல்லை.

திரிப்போலியின் கலகத்தை ஒடுக்க அபூ ஸர்ராஹ் படை நடத்திப் புறப்படுவதற்கு முன், அம்முயற்சியில் வெற்றியுடன் திரும்பினால் எதிரிகளிடமிருந்து கொள்ளப் படும் பொருள்களில் பைத்துல் மாலுக்கெனப் பிரிக்கப்

படும் ஐந்திலொரு பங்கில் ஐந்திலொரு பங்கை அபூ ஸர்ராஹ்வுக்கு அன்பளிப்பாகத் தருவதாக கலீஃபா அவர்கள் வாக்களித்திருந்தார்கள். அவ்வாக்கின்படியே கலீஃபா அவர்கள் வெற்றியுடன் திரும்பிய அபூ ஸர்ராஹ்வுக்கு அன்பளிப்புச் செய்தார்கள். முந்திய கலீஃபாக்களும் அவ்வப்போதைய தளநாயகர்களின் திறன்களை மெச்சி இத்தகைய அன்பளிப்புகளை வழங்கியதுமுண்டு. ஆனால், கலீஃபா உதுமான் (ரலி) அபூ ஸர்ராஹ்வுக்கு வழங்கிய அன்பளிப்பைப் பற்றி ஒரு சிலர் மனப்பொருத்தங் கொள்ளாதபோது, அந்நிலையை அபூ ஸர்ராஹ்வுக்கு எழுதி கலீஃபா அவர்கள் தாம் வழங்கிய அன்பளிப்பைத் திரும்பப் பெறவும் தவறவில்லை.

இறுதியாக ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் (ரலி) அவர்களின் உதவிப் படை சென்று ஜிர்ஜீரைக் கொன்று திரும்பியபோது கொணர்ந்த வெற்றிப் பொருள்களின் ஐந்திலொரு பங்கை மர்வான் ஐந்திலட்சம் திர்ஹங்கள் விலையாகக் கொடுத்து வாங்கினார் என வரலாற்றாசிரியர் இப்னு கல்தூன் எழுதுகிறார். விலை பேசி விற்கப்பட்ட ஒன்றை கலீஃபா அவர்கள் அன்பளிப்பாக அள்ளித் தந்து விட்டதாகக் கூறுவதும்தான் எத்தகைய அபாண்டம்!

பைத்துல் மாலில் ஒரு முறை எல்லாப் பங்கீடுகளும் முடிந்த பின்னர் ஓரிலட்சம் திர்ஹங்கள் மீதியிருந்தன. கலீஃபா அவர்கள் அத்தொகையைப் பொதுப்பணித் துறையில் செலவிடும்படியாக கருவூலக் காப்பாளர் ஹழ்ரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களிடம் ஒப்புவித்தார்கள். ஹழ்ரத் ஜ்ஸைத் (ரலி) அவர்கள் அதனைக் கொண்டு மஸ்ஜிதுன் னபவியின் மராமத்துகளைக் கவனித்து முடித்தார்கள். அதையே கலகக்காரர்கள் முன் பின்னாகச் சோடித்து கலீஃபா அவர்கள் ஹழ்ரத் ஜ்ஸைத் (ரலி) அவர்களுக்கு நியாயமற்ற முறையில் அன்பளிப்பாகத் தந்து விட்டதாக அபாண்டம் கூறினார்கள்.

கலீஃபா அவர்கள் மதீனாவின் பள்ளிக்கு அருகாமையில் தமக்காக ஒரு பெரும் வீட்டைக் கட்டிக் கொண்டது

உண்மையே. ஆனால், அது அவர்களின் ஆடம்பர வாழ்க்கைக்காக ஒரு போதும் இல்லை.

உண்மையில் கலீஃபா அவர்களின் வாழ்க்கை எவ்வாறிருந்தது?

கலீஃபாவாக இருந்த காலத்தில் அவர்கள் பள்ளியில் பகலுறக்கம் கொள்வார்கள். ''ஒரு நாள் 'அமீருல் முஉமினீன் எழுந்து விட்டார்கள்' என மக்கள் பேசிக் கொள்ளக் கேட்டு நான் திரும்பிப் பார்த்தேன். நின்றுக் கொண்டிருந்த கலீஃபா அவர்களின் பக்கவாட்டில் கூழாங்கற்கள் பதிந்த அடையாளங்கள் தெரிந்தன" என ஹழ்லரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஒரு ஜும்ஆப் பேருரையின்போது மேடையில் நின்றிருந்த—முஸ்லிம்களின் கலீஃபா நான்கு அல்லது ஐந்தே திர்ஹங்கள் விலையுள்ள மட்டமான முரட்டு ஆடையை உடுத்தி, சாயந்தோய்க்கப் பெற்ற—கூஃபாவின் சாதாரண மேலாடையொன்றைப் போர்த்தியிருந்தார்கள் என ஹழ்லரத் அப்துல் மலிக் இப்னு ஷத்தாத் (ரலி) அறிவிக்கிறார்கள்.

வாழ்க்கையில் இத்தகைய எளிமையை மேற்கொண்டிருந்த கலீஃபா அவர்கள் தம் பெருமான் (ஸல்) அவர்களின் அருகாமையை விரும்பி, பள்ளியின் மருங்காக எழுப்பிக் கொண்ட அப்பெருவீடு பசித்து வந்தவர்களுக்கு உணவுக் களஞ்சியமாக உற்றார் உறவினர்களுக்கு நிழற்கூடமாக விளங்கியது.

கலீஃபா அவர்கள் பள்ளியிலும் தமக்காகத் தனியிடம் ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். முந்திய கலீஃபாக்கள் அவ்விதம் செய்யவில்லை என்பது உண்மையே. ஆயினும் கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்ட முடிவும் பிந்திய காலத்தில் மதீனாவில் ஏற்பட்ட அஜமிகளின் பெருக்கமும் அவ்வாறு அமைத்துக் கொள்ள கலீஃபா அவர்களுக்கு அவசியத்தை உருவாக்கின. ஆனால் இவை அனைத்தையும் கலீஃபா அவர்கள் தம் சொந்த

உடைமைகளைக் கொண்டே அமைத்தார்கள். கஅபாவின் வளாகத்தையும் தம் சொந்த உடைமைகளைக் கொண்டு விரிவாக்கிய பெருந்தகையின் மீது மக்களின் உடைமையைச் சூறையாடி தமக்காக மாளிகை எழுப்பிக் கொண்டதாக பழி சுமத்துவது எங்ஙனம்? முந்திய கலீஃபாக்கள் இருவருக்கும் ஏற்பட்டதைப் போன்று கிலாஃபத் பணிகளில் குடும்பத்திற்கு வருவாய் தேடும் வாய்ப்புகள் தவறி பொதுக் கருவூலத்திலிருந்து கடனாகப் பெற வேண்டிய தேவையும் கூட கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்கு ஏற்பட்டதில்லை. ஆனால் பைத்துல் மாலில் இருந்து அணிகலன்களை எடுத்துத் தம் பெண்களுக்கு அணிவித்துக் கொண்டதாகவும் கூட அப்புனித கலீஃபா அவர்களின் மீது அபாண்டத்தைச் சுமந்த அப்பழிகாரர்கள் அஞ்சவே இல்லை.

மதீனாவைச் சூழ இருந்த திறந்த வெளிகளை அரசாங்க கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களாக்கி பொதுமக்கள் தங்கள் கால்நடைகளை அங்கு மேய்ச்சலுக்கு விடாவண்ணம் தடுத்து விட்டதாகவும் ஒரு குற்றச் சாட்டு கலீஃபா அவர்கள் மீது சுமத்தப்பட்டது.

தன் தேவைக்காக கால்நடைகளை வைத்திருக்கும் ஓர் அரசின் மீது அக்கால்நடைகளின் பராமரிப்புக்காகவும் மேய்ச்சலுக்காகவும் இடங்களை வைத்திருக்க வேண்டியதும் கடமையல்லவா? அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களும் முந்திய கலீஃபாக்களும் கூட அவ்வாறு மேய்ச்சல் நிலங்களைத் தேர்ந்தெடுத்து அமைத்திருக்கிறார்கள். இராணுவப் புரவிகளுடையவும் மக்கள் தர்மப் பொருள்களாகச் சேர்ப்பித்த கால்நடைகளினுடையவும் பராமரிப்புக்காகவும் மேய்ச்சலுக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலங்களில் தனிப்பட்டவர்களும் தங்கள் கால்நடைகளை மேயவிடுவார்களானால் பராமரிப்புக்காகச் சித்தப்படுத்தப்பட்ட அரசாங்கப் பொருள்களையே அத்தனிப்பட்டவர்களின் கால்நடைகளும் பெற்றனுபவிக்க நேரும். அதனால் அரசுக்கு ஏற்படக் கூடிய மிகுதமான செலவினங்களுக்கு கலீஃபாவையன்றி பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்? அரசாங்க உடைமைகளைக்

காக்க வேண்டிய தங்கள் பொறுப்பையுணர்ந்து கலீஃபா அவர்கள் அத்தடையை விதித்தார்களேயன்றி அவர்களின் சொந்தத் தேவையை ஒட்டியல்ல. இக்குற்றம் சாட்டப் பட்ட காலத்தில் கலீஃபா அவர்களின் ஹஜ்ஜின் பயணத் தேவைக்காக இருந்த இரண்டே ஒட்டகைகளைத் தவிர்த்து வேறு கால்நடைகளும் அவர்களுக்குச் சொந்தமாக இருக்க வில்லை.

தம்முடைய குடும்பத்தவர்களுக்கும், தாம் விரும்பியவர் களுக்கும் மதீனாவைச் சூழவும் வெல்லப்பட்ட பகுதிகளி லும் இருந்த நிலபுலன்களைத் தம் மனம் போல் கலீஃபா அவர்கள் பங்கிட்டளித்தார்களென்பதும் ஒரு குற்றச் சாட்டு.

வீணாகக் கிடந்த நிலங்களை எவர் தம் உழைப் பால் விளைச்சலுக்குத் தகுதி படைத்தவையாக ஆக்கினார் களோ அவர்களே அந்நிலங்களை உடைமை கொள்ள கலீஃபா அவர்கள் எந்தத் தடையும் விதிக்கவில்லை. மார்க்க வரம்புகளும் அதற்குத் தடையாக இல்லை. தங்களுக்கே சொந்தமான நிலங்களை கலீஃபா அவர்கள் தங்கள் தந்தையுடையவும் தந்தையோடு பிறந்தவர்களு டையவும் வழிவாறுகளான பனூ ஆஸ், பனூ ஐஸ், பனூ ஹர்ப் குடும்பத்தவர்களுக்குப் பங்கிட்டளித்தார்களேயன்றி மற்றவர்களின் நிலங்களை அவர்கள் தொட்டதும் இல்லை.

''வெல்லப்பட்ட நிலங்களையும் நான் எவரிடமும் பறித்து மற்றவர்களுக்குத் தந்திடவில்லை. அந்நிலங் களை வெற்றி கொள்ள நடைபெற்ற போர்களில் முஹாஜிர்களும் அன்ஸார்களும் கூட பங்கேற்றிருக் கிறார்கள். தாங்கள் வெற்றி கொண்ட அந்நிலங்களி லேயே தங்கிக் கொண்டவர்கள் அவற்றுக்கு உரிமைக் காரர்களாகி விட்டார்கள். அதனை விட்டும் திரும்பி விட்டவர்களும் அல்லாஹ்வின் அருளை விட்டும் நட்ட மடைந்து விட முடியாது. அவர்கள் கேட்டுக் கொண்ட படியே—அவர்களின் வசதிக்கேற்ப-மாற்றிடங்களை அவர்களுக்குத் தந்தேன். மதீனாவில் அவர்களுக்கு

நிலபுலன்களைத் தந்து அதற்குப் பகரமாக புதிய நிலப் பரப்புகளில் வெல்லப்பட்ட அவர்களின் பாகங்களைப் பெற்று அங்கு சென்று வாழச் சம்மதித்த மதீனா வாசிகளுக்கு அவை தரப்பட்டன. ஆக, பரிமாற்றங்கள் செய்யப்பட்டதைத் தவிர்த்து எவருடைய உடைமைகளும் பறிக்கப்படவில்லை'' என கலீஃபா அவர்கள் விளக்கினார்கள்.

இந்தப் பழிகளனைத்துக்கும் கலீஃபா அவர்களின் வாயாப்புகளைப் பெற்றுத் தடுமாறிய அம்மூடர்கள் தங்கள் கேள்விகளின் திசையை மாற்றலானார்கள்.

மாநபித்தோழர் ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்கள் மதீனாவை விட்டும் வெளியேற கலீஃபா அவர்கள் நிர்ப்பந்தத்தை உருவாக்கியதாக ஒருவன் பழி தூற்றினான்.

கலீஃபா அவர்கள் ஒரு போதும் எவ்வித நிர்ப்பந்தத்தையும் உருவாக்கவில்லை. ஸிரியாவிலிருந்து வந்த ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்கள் கலீஃபா அவர்களைச் சந்தித்துத் தம் பொருளாதாரக் கருத்தை விளக்கித் தர்க்கித்தார்கள். ''செல்வத்தை சேமிப்பதே குற்றமெனில் வாரிசுரிமைச் சட்டமும் ஜக்காத் பற்றிய சட்டங்களும் வஹீயாக இறங்க என்ன தேவை ஏற்பட்டது?'' எனக் கலீஃபா அவர்கள் வினவினார்கள்.

ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்கள் அதற்கு நேரிடையாக பதிலைக் கூறாமல் ''உஹது மலைச் சாரலில் ஒரு நாள் உலவிக் கொண்டிருந்த நபி பெருமான் (ஸல்) அவர்கள் அம்மலையை எனக்குச் சுட்டிக் காட்டி, 'இம்மலையின் அளவு தங்கம் என்னிடம் இப்போது வந்து சேர்ந்தாலும் சரியே, நான் அதனை மூன்று நாட்களுக்கிடையில் அல்லாஹ்வின் நல்லடியார்களுக்குப் பங்கிட்டளித்து விடுவேன்' என அருளினார்கள்" என்பதையே விடையாகக் கூறினார்கள்.

''பொருள்களைச் சேமித்துக் கொண்டும் அதற்குரிய ஜக்காத்தைச் சரிவர செலுத்திக் கொண்டும் இருப்பவரைப்

பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?" என கலீஃபா அவர்கள் வினவினார்கள்.

அப்போது அவையில் அமர்ந்திருந்த ஹழ்லரத் கஅபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் இடைமறித்து, ''அத்தகையவருக்காக நான் ஈடேற்றத்தையே நம்பிக்கை கொள்கிறேன்'' எனக் கூறி விட்டார்.

அதனைக் கேட்டதுமே ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களின் சினம் வரம்பு கடந்து விட்டது. ''யூதத் தாய்க்குப் பிறந்தவரே! மறுமை நாளன்று அத்தகையவரின் இதயத்தையே தேள்கள் கடித்துக் குதறப் போவது பற்றி நீர் அஞ்சவில்லையா?" எனக் கூச்சலிட்டவாறு தம் கைத்தடியால் தாக்கப் பாய்ந்த ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களைக் கட்டுப்படுத்த கலீஃபா அவர்கள் மிகச் சிரமப்பட வேண்டியதாயிற்று.

ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களை மக்களின் மனோபாவத்தோடு ஒன்றிணைத்து வாழ வைக்க முடியாது என உணர்ந்த கலீஃபா அவர்கள் அத்தோழரை அவர்களின் இல்லத்திலுள்ளேயே தங்கி வாழுமாறும், அவர்களின் அன்றாடத் தேவைகள் அனைத்தையும் தாம் இல்லத்திலேயே கொணர்ந்து சேர்ப்பிக்கச் செய்வதாகவுமே முதலில் கூறினார்கள். ஆனால்,

''உங்களின் எந்த உபகாரமும் எனக்குத் தேவையில்லை. மதீனாவை விட்டும் வெளிச் சென்று வாழ என்னை விட்டு விடுங்கள்'' என்று ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களே கேட்டார்கள்.

—அப்போதும் கலீஃபா அவர்கள் அத்தோழரைத் தம்மை பிரிந்து செல்லவிடவில்லை; ''பெருமான் நபி (ஸல்) அவர்கள் உறையும் இத்திரு நகரை விட எந்தச் சிறப்புடையதாகக் கொண்டு வேறாரு வாழ்விடத்தை உமக்காகத் தேடத் துணிந்தீர்'' என அவர்களை வினவினார்கள்.

''அமீரல் முஉமினீன்! மதீனாவின் குடிமக்கள் உம்மை ஒரு நாள் வெளியேற்ற முனைவார்களாயின் நீர் இந்நகரில்

தங்க வேண்டாம்" என எம்பெருமான் (ஸல்) அவர்கள் எனக்குக் கூறியிருக்கிறார்கள். அந்த நாள் வருமுன்பாக நானாகவே வெளிச் சென்று விட என்னை விட்டு விடுங்கள்'' என வேண்டினார்கள்.

தங்கள் மாநபியின் முன்னறிவிப்பைச் செவியுற்ற பின் அதற்குத் தடையாக நிற்க நாயகத்தின் அந்த கலீஃபாவுக்கு எப்படித் துணிவிருக்க முடியும்? தம் இருப்பிடம் விட்டெழுந்து கலீஃபா அவர்கள் ஹழ்லரத் அபூதர் (ரலி) அவர்களைக் கட்டியணைத்துக் கண்ணீர் உகுத்த வண்ணம் பிரிந்து செல்ல அனுமதித்தார்கள்.

கூஃபாவின் ஆளுநர் வலீத் இப்னு உக்பா மது அருந்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது அவருக்குக் கசையடி தர ஏற்பட்ட தாமதத்தை—அவர் தம் இளவல் என்பதனாலேயே கலீஃபா அவர்கள் பாராமுகம் காட்டியதாக ஒரு பழி கூறப்பட்டது. ஆனால்,

கால தாமதத்திற்கான காரணம், விசாரணையின் போது குற்றச்சாட்டின் பேரில் கலீஃபா அவர்களுக்கு பூரண நம்பிக்கையும் மனப் பொருத்தமும் ஏற்படாத நிலையில் தண்டனையை எப்படி அவர்கள் பிரகடனம் செய்ய முடியும். சட்டத்தின் அடிப்படையில் சாட்சியங்களை ஏற்றே கலீஃபா அவர்கள் ஒருவாறாக வலீதுக்குக் கசையடி தர ஏவினார்கள். என்றாலும் உண்மையிலேயே வலீத் மது அருந்தினார் என்பதில் ஒருமுகமான நம்பிக்கை அதன் பின்னரும் கூட ஏற்படவில்லை. உண்மையில் கூஃபாவில் நடந்ததுதான் என்ன?

பொறுப்புகளில் எவரையும் அமர்த்தும் முன்னரே அவரின் தகுதிகளைச் சுண்டிப் பார்க்கும் பழக்கம் கொண்ட கலீஃபா உமர் (ரலி) அவர்களால் ஜஸீராவின் ஆளுநராக அமர்த்தப்பட்டவர் வலீத் இப்னு உக்பா. அப்போது வெளிப்பட்ட அவருடைய நிர்வாகத் திறன்களையும் நடைமுறை ஒழுங்குகளையும் கண்டு மனப் பொருத்தம் கொண்டதாலேயே அவரை கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் ஒரு குழப்பச் சூழ்நிலையில் (பக்கம்-50) கூஃபாவின் ஆளுந

ராக அனுப்பி வைத்தார்கள். அப்பொறுப்பை ஏற்ற பின்னரும் வலீத் இப்னு உக்பா, கலீஃபா அவர்கள் எதிர் நோக்கிய படி தம் திறன்களை வெளிப்படுத்தத் தவறவில்லை. அவரின் தாராளத் தன்மையைக் கண்டு கூஃபாவாசிகளும் புகழினாலேயே அவரை மகிழ வைத்தார்கள்—என்பதை விட வாழ்க்கைக்கான சில நவீன வசதிகளை வலீத் தேடிக் கொண்டதை வைத்து மக்கள் அவரை மயங்க வைத்தார்கள் என்றும் கூறப் பொருந்தும்.

வலீதின் நிர்வாகத்தில் ஒரு நாள் கூஃபாவில் மூன்று இளைஞர்கள் ஒரு வீட்டில் கன்னம் வைத்து அவ்வீட்டுக் குடையவரைக் கொலையும் செய்து விட்டார்கள். அதனை நேரிடையாகவே கண்ட அண்டை வீட்டுக்காரர் காவலர்களுக்கு அறிவிக்க, குற்றவாளிகள் பிடிபட்டு, விசாரணைக்கு பின், குற்றம் நிருபணமானதன் பேரில் கொலைக் குப் பிரதியாகக் கழுவிலேற்றப்பட்டனர். இந்தத் தண்டனையின் பலனாக அம்மூன்று இளைஞர்களைப் பெற்றவர்களின் உள்ளங்களில் வலீதின் மீது குரோதம் புகையலாயிற்று.

ஒவ்வொரு நாளும் நிர்வாகப் பணிகள் முடிந்ததும் இரவு காலங்களில் கதா காவியங்கள் பாடி மனம் மகிழச் செய்வதற்காக ஒரு குழுவை வலீத் தம்மிடம் அமர்த்திக் கொண்டிருந்தார். அபூ ஜுபைத் அத்தாயீ என்ற ஒரு கிருஸ்துவர் இஸ்லாத்தை ஏற்று, வலீதைச் சந்தித்தார். இஸ்லாத்துக்கு முன்னர் ஒரு மதுப் பிரியராக மக்களால் அறியப்பட்டிருந்த அவர் சிறந்த கவிஞராகவும் இருக்கக் கண்டு, வலீத் அவரைத் தம் மனமகிழ் மன்றத்தில் ஓர் உறுப்பினராக அமர்த்திக் கொண்டார். நாட்கள் சில நகர்ந்தன.

வலீதின் பால் குரோதங்கொண்ட மூவரில் ஒருவன், வலீத், அபூ ஜுபைதுடன் கூடி மது அருந்துவதாகக் கதைத்தான். மற்ற இருவரும் அவனோடு சேர்ந்து வதந்தியைப் பரப்பினார்கள். மக்கள் ஒரு சிலர் ஓர் இரவு திடீரென ஆளுநரின் கட்டிடத்தினுள் புகுந்தனர். அங்கு வலீதோடு அபூ ஜுபைதும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தாலும் மதுவின் வாடையும் கூட வீசவில்லை. வதந்தி பரப்பிய

வர்களை மக்கள் கண்டித்தனர். ஆளுநர் வலீதுக்கு அச் செய்திகள் அனைத்தும் தெரிய வந்தும் அவர் அதனைச் சற்றும் பொருட்படுத்தாமலும் கலீஃபா அவர்களுக்கு அதனைப் பற்றி எதுவும் அறிவிக்காமலும் இருந்ததே பின்னர் அவருக்கு வினையாக முடிந்தது.

குரோதக்காரர்கள் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களைச் சந்தித்து தங்கள் பழியைக் கூறினர். முதுமையடைந்திருந்த அம்மாநபித் தோழர் 'பிறருடைய அந்தரங்கங்களை என்னிடம் கூறாதீர்கள். அவரவர்களின் செயல்களுக்கு அவர்களே பதில் கூறிக் கொள்வார்கள்' எனப் பொதுவாக அறிவுறுத்தினார்கள். அச்செய்தி வலீதுக்கு எட்டியது. அவர் ஹழ்லரத் அப்துல் லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களைச் சந்தித்து 'பழி காரர்களுக்குத் தாங்கள் கூறிய பதில் என்னை அப்பாவத் தின்பால் பட்டவனே என மறைவாகச் சுட்டிக்காட்டுவது போல அல்லவா இருக்கிறது. தங்களுக்கு நான் எந்த அந்த ரங்கத்தை மறைத்தேன்' எனக் கேட்டுத் தர்க்கித்தார்.

அந்த சிண்டு முடியும் வேலைக்குப் பின் குழப்பக்காரர் கள் மதீனாவுக்கே சென்று கலீஃபா அவர்களிடம் வலீதைப் பதவிநீக்கம் செய்யக் கோரினார்கள். வந்திருப்பவர்கள் முன் னர் வலீதினால் தண்டிக்கப்பட்டு அவரின்பால் குரோதங் கொண்டவர்களே என்பதை கலீஃபா அவர்கள் அறிந்திருந் தார்கள். எனவே கலீஃபா அவர்கள், 'குற்றச்சாட்டை நீங் கள் சாட்சியங்களோடு நிரூபணம் செய்யாதவரை உங்கள் முறையீட்டை ஏற்க இயலாதவனாக இருக்கிறேன்' எனக் கூறி விட்டார்கள். நகர் திரும்பிய குழப்பக்காரர்கள் சளைக்கவில்லை. எப்படியும் வலீதின் மீது மதுபானக் குற் றச்சாட்டைச் சுமத்தி வெற்றிகாண்பது எப்படி என ஆய்ந் தார்கள். அபூ ஜைனப், அபூ மூரிஃ என்ற இருவர் அதற் கான பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

அன்றிலிருந்து அவ்விருவரும் முயற்சித்து ஆளுநர் வலீ தோடு தொடர்பு கொண்டு அவரின் அவையில் பங்கேற்க

லானார்கள். ஒரு நாள் அவர்கள் வலீதைக் காணச் சென்ற போது ஆளுநர் உறங்கிக் கொண்டிருந்தார். அருகில் எவருமே இருக்கவில்லை. அங்கிருந்த அவருடைய கணையாழியைத் தந்திரமாக எடுத்துக்கொண்டு அவ்விருவரும் திரும்பினார்கள். அவர்களின் கூட்டாளிகளும் ஒன்று சேர்ந்து மதீனா சென்று கலீஃபா அவர்களைச் சந்தித்தார்கள். ஆளுநர் வலீத் மது அருந்தியதாக அபாண்டம் சுமத்தினார்கள்.

''நீங்கள் அவர் மது அருந்தியதை நேரிடையாகவே கண்டீர்களா?" என கலீஃபா அவர்கள் வினவினார்கள்.

''மது அருந்தியதை நாங்கள் காணவில்லை. ஆனால் அவர் மதுவை வாந்தி எடுக்க நாங்கள் கண்டோம். இதோ அவர் போதையுற்றிருந்த நிலையில் அவரின் கரத்திலிருந்து நாங்கள் கழற்றிய கணையாழி' எனக் காட்டினார்கள். மேலும் பல குழப்ப வாதிகளும் அவர்களோடு ஒத்து சாட்சியம் கூறினார்கள்.

அவையிலிருந்த நபித் தோழர்களோடு கலந்தாலோசித்து கலீஃபா, வலீத் இப்னு உக்பாவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்து கசையடியும் ஏற்கக் கூறினார்கள். விசாரணைக்காக மதீனா வந்திருந்த வலீத், தாம் குற்றமற்றவர் எனக் கூறியும் கலீஃபா அவர்கள் சாட்சியங்களுக்கு ஏற்ப சட்டத்தின் தீர்ப்பைத் தாம் தட்ட முடியாதெனவும், கூறப்பட்ட சாட்சியங்கள் பொய்யானவையாயின் அதற்குரிய தண்டனையை அவர்கள் இறைவனிடமிருந்து பெறாமல் தப்பிக்க முடியாதென்றும் கூறி விட்டார்களே தவிர, தம் இளவல் என்பதற்காக வலீத் இப்னு உக்பாவை விட்டு விடவில்லை.

(1) அவற்றோடு மட்டுமின்றி அரஃபாவின் மதிய நேரத் தொழுகையைத் தங்களுக்கு முந்தியவர்கள் செய்ததே போன்று இரண்டு ரக்அத்துகளாகச் சுருக்கித் தொழாமல் பூரணமாகவே நான்கு ரக்அத்துகளாகத் தொழுதது,

(2) ஹழ்லரத் ஜைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட திருமறையின் பிரதிகளைத் தவிர்த்த மற்ற பிரதிகளனைத்தையும் கலீஃபா அவர்கள் எரிக்கச் செய்தது,

(3) முதல் கலீஃபா ஸையிதினா அபூபக்கர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பேணுதலையொட்டி பள்ளியின் மேடையில் இரண்டாம் படியிலும் இரண்டாம் கலீஃபா ஸையிதினா உமர் (ரலி) அவர்கள் தங்கள் முன்னோடிகளின் பால் கொண்டிருந்த பேணுதலையொட்டி மேடையின் முதற் படியிலுமே அமர்ந்து வர, மூன்றாம் கலீஃபா ஸையிதினா உதுமான் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்த மூன்றாம் படியிலேயே அமர்ந்தது—போன்றவையெல்லாம் குற்றங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டன.

ஆயினும் கலீஃபா அவர்கள் அவர்களின் ஒவ்வொரு பழிச் சொல்லுக்கும் விளக்கம் அளிக்கத் தவறவில்லை.

கலீஃபா அவர்களுக்கு மக்காவில் உடைமைகள் இருந்தன, உறவினர்கள் இருந்தார்கள். எனவே தொழுகையைச் சுருக்க வரையறுக்கப்பட்ட தொலை தூரத்தில் அரஃபா இல்லை. ''அண்ணலார் (ஸல்) அவர்களின் வழிமுறை ஒன்றிருப்பதும் சரியே. தொலை தூரங்களிலிருந்து ஹஜ்ஜுக்காக மட்டுமே வந்து கூடும் மக்களுக்கு சட்ட வரம்புகள் தெளிவுபட வேண்டும் என்பதற்காகவே அரஃபாவின் மதிய நேரத் தொழுகையை நிரப்பமாகவே தொழுதேன்'' என்ற காரணத்தைக் கலீஃபா அவர்கள் அச்சம்பவம் நிகழ்ந்த போதே விளக்கியிருந்தார்கள். நபிமணித் தோழர்களும் அதனை ஏற்றிருந்தார்கள். ஏற்கப்பட்டிருந்த அம்முடிவையே குதர்க்கவாதிகள் மீண்டும் கிளறினார்கள்.

திருமறையை ஓதும் முறையில் பேதம் ஏற்படக் கூடாதென்பதற்காகவே ஜைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களின் குழுவினரால் திருமறை ஒரே ஓதுமுறையில் எழுதப்பட்டது. அதற்குப் பின் கலீஃபா அவர்கள் மற்றப் பிரதிகளை எரிக்காமல் விட்டு வைத்தால் அவர்கள் மேற்கொண்ட முயற்சி எப்படிப் பலனளிக்கும். காலப் போக்கில்

மற்ற வேதங்களுக்கு ஏற்பட்ட பேதங்களும் குழப்பங்களும் இறுதி மறையாம் குர்ஆனிலும் ஏற்பட்டு விடக் கூடிய ஆபத்தை எவ்விதம் தடுத்திருக்க முடியும்?

பிந்திய காலத்தில் கிலாஃபத்தை ஏற்ற ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களின் முன்னிலையிலும் கூஃபாவின் பள்ளியில் ஒருவர் இது பற்றியே பேசியபோது சினமடைந்து குறுக்கிட்ட கலீஃபா அலீ (ரலி) அவர்கள் ''உன் பேச்சை நிறுத்து. உதுமான் (ரலி) அவர்கள் செய்த போற்றத்தக்க செயல் அது. அன்று தலைமை என்னிடம் இருந்திருக்குமானால் நானும் அவ்வாறே செய்திருப்பேன்'' எனப் புகழ்ந்துள்ளார்கள்.

''என் உடன் பிறப்புகளே! எம்பெருமான் (ஸல்) அவர்களின் பிரிவுக்குப் பின் கிலாஃபத்தை ஏற்ற அபூபக்கர் (ரலி) அவர்கள் உரையாற்ற எழுந்தபோது அண்ணலார் (ஸல்) அவர்கள் வழக்கமாக ஏறி நிற்கும் மூன்றாம் படியில் அமரவும் அவர்களின் உள்ளம் அஞ்சியது. அதனால் அவர்கள் இரண்டாம் படியிலேயே அமர்ந்து கொண்டார்கள். அவர்களுக்குப் பின் கிலாஃபத்தை ஏற்ற உமர்(ரலி)அவர்கள் தங்களின் முன்னவரான அபூபக்கர் (ரலி) அவர்கள் அமர்ந்த படியில் தாம் அமரத் தமக்கெந்தத் தகுதியுமில்லை என எண்ணி முதற் படியிலேயே அமர்ந்து கொண்டனர். அவர்களையும் அடுத்து கிலாஃபத்தை ஏற்றுள்ள நான் முதற் படியில் அமர்ந்தேனாகில் என்னை நீங்கள் என் முன்னவர் உமர் (ரலி) அவர்களுக்குச் சமமாகவோ அல்லது இரண்டாம் படியில் அமர்ந்தேனாகில் அபூபக்கர் (ரலி) அவர்களுக்குச் சமமாகவோ எண்ணி விடுவீர்களோ என்று அஞ்சினேன். அவ்விருவருக்கும் சமமாகும் தகுதி அணுவளவும் அற்ற என்னை நீங்கள் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுக்குச் சமமாக ஒருபோதும் கருத முடியாதெனத் தெரிந்தே அவர்கள் அமர்ந்த மூன்றாம் படியில் அமரத் துணிந்தேன்—என விளக்கமளித்தார்கள் கலீஃபா.

கலீஃபா அவர்கள் தாங்கள் அளித்த விளக்கங்களின் இடையிடையே நிறுத்தி நிறுத்தி தங்கள் கூற்றுகளுக்கான சாட்சியங்களை எதிர்பார்த்தபோது முஹாஜிர்களிலும் அன்ஸார்களிலும் அங்கிருந்தவர்கள் 'மிகச் சரியே' எனக் கூறி ஒப்புதல் தெரிவித்தார்களேயன்றி எவரும் மறுத்துரைக்கவில்லை.

நபித்துவ வாழ்க்கை முற்றாக, நாயகப் பெருமான் (ஸல்) அவர்களோடு அமரிலும் சமரிலும், இடையிலும் நடையிலும் இணைந்து நின்றும், அவர்களின் நடை, உடை, பாவனைகளை, அங்க அசைவுகளை ஊன்றிக் கவனித்து, வாயுரைகளைச் செவியேற்று, வழிமுறைகளை அவர்களின் பிரிவுக்குப் பின்னரும், அணுவும் தவறாது முற்றாகப் பேணி ஒழுகியும் வந்த அப்பெருங் கலீஃபா,

''ஆண்டவனின் மீதாணையாக! அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களோடு வாழ்ந்திருக்கிறேன்; வழிப் பயணம் செய்திருக்கிறேன். நாங்கள் நோயுற்ற போது அவர்கள் வந்து வினவினார்கள்; எங்களில் மரித்தவர்களை எடுத்து அவர்கள் அடக்கினார்கள். புனிதப் போர்களில் அவர்களும் எங்களோடு கலந்து கொண்டார்கள். அப்பெருமான் (ஸல்) அவர்கள் எங்களைப் பற்றி அவ்வப்போது சுருக்கமாகவும் விரிவாகவும் விசாரித்தறிவார்கள். ஆனால், இவர்களில் எவருமே அண்ணலார் (ஸல்) அவர்களைத் தங்கள் கண்களால் ஒரு முறையேனும் கண்டே இராத நிலையிலேயே அவர்களின் வழிமுறையை எனக்குக் காட்டித் தர வந்திருக்கிறார்கள்'' என்றபோது அவர்களின் குரல் கேட்டு நல்லவர்களின் உள்ளங்கள் உருகிக் கசிந்தன.

தங்களின் திருமுகத்தை விண் பால் உயர்த்திய கலீஃபா அவர்கள், ''என் இறைவா! உன் அடியார்கள் முன் மான பங்கத்தால் என் தலை குனிந்து விடாமல் காத்த உனக்கு நன்றி செலுத்துகிறேன். இனியும் நீ என்னை பழியை விட்டும் பங்கத்தை விட்டும் காத்தருள் புரிவாயாக'' என இறைஞ்சினார்கள்.

அன்றி 'நான் பரிசுத்தமானவன்' என்று (என்னை நானே புகழ்ந்து) கூறவில்லை. (ஏன் என்றால்) நிச்சயமாக என் இறைவன் கருணை புரிந்தாலன்றி (மனித) மனம் பாவம் செய்யும்படி தூண்டக் கூடியதாகவே இருக்கிறது. நிச்சயமாக என் இறைவன் மிக மன்னிப்போனும் கிருபையுடையோனுமாய் இருக்கிறான்.

—என்ற (12 : 53) திரு வசனத்தை கலீஃபா அவர்கள் ஓதி முடித்தபோது வெளிப்பட்ட தழதழத்த குரல் உள்ளத்தின் வேதனையை வெளிச்சமிட்டுக் காட்டியது.

கலீஃபா அவர்கள் தங்கள் மீது பழிகாரர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் பூரண விளக்கம் அளித்தார்களேயன்றி மாநபித் தோழர்களின் கூற்றுக்களை ஏற்று அத்துரோகிகள் மீது எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவே இல்லை. மக்களின் அத்தலைவர் தாம் அளித்த ஆதாரங்கள் அவர்களின் எண்ணங்களில் மாற்றத்தை விளைவிக்கும்; தங்களின் மேலான பொறுமையும் மன்னிப்பும் அவர்களின் புழுக்கத் தீயை அணைத்து விடும் என நம்பினார்கள். ஆனால், கட்டுப்பாட்டுச் சொரணையற்றவர்களாய் அமர்ந்திருந்த அக்குழப்பவாதிகளின் நெஞ்சங்களில் எந்தச் சூடுமே படவில்லை. ஏனெனில் அவர்களனைவரும் குதர்க்கம் பேசி சமுதாயத்தைக் குழப்பச் சேர்ந்திருந்த சதிகேடர்களேன்றி தங்கள் மதியீனத்தால் குழம்பி வந்திருந்தவர்களல்லர்; அறியாமையினால் தவறிழைத்து விட்டவர்களல்லர். பழிகளைச் சுமத்தி கலீஃபா அவர்களைப் பதவியிலிருந்து இறங்கச் செய்ய வேண்டும்; பெருமான் நபி (ஸல்) அவர்களின் வரவினால் ஒன்றுபட்டு உயர்ந்து விட்ட சமுதாயத்தினிடையே ஒரு கொலையினாலேனும் பிளவை உண்டாக்கி விட வேண்டும் என்பதே அவர்களின் குறியாக இருந்தது. பூரணமாக இல்லாவிடினும் ஓரளவுக்காவது தாங்கள் வந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட பெருமிதத்தோடு இனித் தங்கள் செயல் முறைகளைத் தொடர்வதற்காக அவர்களனைவரும் திரும்பிச் சென்றார்கள்.

ஒவ்வொரு தலைநகரையும் சென்றடைந்த அவர்கள் மற்ற நகரங்களிலிருந்த தங்கள் கூட்டாளிகளோடு

தொடர்பு கொண்டு செயல் திட்டங்களை வகுத்தார்கள். மதீனாவுக்குச் சென்ற தாங்கள் மக்களுக்குள்ள குறைகளை கலீஃபா அவர்களிடம் நேரடியாக விளக்கிக் கூறியதாக வும் கலீஃபா அவர்களோ அவற்றைச் செவியுற்றதோடு சரி-மேற்கொண்டு எந்தச் சிரத்தையுமே காட்டிக் கொள் ளாதது மட்டுமல்ல, மக்களின் சிரமங்களைப் பற்றி அணு வளவு அனுதாபத்தையும் கூட வெளிப்படுத்திக் கொள்ள வும் இல்லை எனப் பழி தூற்றினார்கள். அதோடு மட்டு மல்ல,

ஒவ்வொரு நகரங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதிகாரங்களை மேற்கொண்டிருந்த ஆளுநர்களுடை யவும் அதிகாரிகளுடையவும் சின்னஞ் சிறு குறைகளையும் துருவி ஆராய்ந்தார்கள். அவற்றை மற்ற நகரங்களி லிருந்த தங்கள் கூட்டாளிகளோடு பரிமாறிக் கொண்டார் கள். அக் கூட்டாளிகள் அவற்றைப் பெரிதுபடுத்தி மக்களி டையே பரப்பினதோடு மதீனாவில் தங்களுக்குத் தொடர் புடைய பெரியோர்களுக்கும் உறவினர்களுக்கும் எழுதினார் கள். அவர்கள் அவற்றை கலீஃபா அவர்களிடம் எடுத்துச் சென்று கூறி அவ்வாளுநர்களையும் அதிகாரிகளையும் பதவி நீக்கம் செய்யும்படி வலியுறுத்தினார்கள். கலீஃபா அவர் களோ ஆதாரபூர்வமாக ஒரு குற்றச்சாட்டையும் காணாத நிலையில் எந்த ஒரு சிறு அதிகாரியிடமும் அளிக்கப்பட் டிருந்த பொறுப்பைப் பறிக்க பின்னடைந்தார்கள். அந்தத் தயக்கமும் தாமதமும் முறையீடுகளை ஏந்தி வந்தவர் களுக்கு மன வெறுப்பை அளித்தன. அவ்வாறான ஒரு மாறு பட்ட சூழ்நிலை மதீனாவிலேயே வளரலாயிற்று.

ஹிஜ்ரி 35-ம் ஆண்டில் எகிப்தின் ஆளுநராக இருந்த அபூ ஸர்ராஹ்வின் கெடுபிடிகளில் வெறுப்படைந்த ஒரு சிலர் மதீனா சென்று கலீஃபா அவர்களிடம் முறையிட் டனர். விசாரணை நடத்திய கலீஃபா அவர்கள், அபூ ஸர்ராஹ்வைக் கண்டித்தும் மக்களிடம் நீதியுடன் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்தியும் அவருக்குக் கடிதம் எழுதி அனுப்பி வைத்தார்கள். முன்னரே குழப்பவாதிகளின் நடவடிக்கைகளால் வெறுப்படைந்திருந்த அபூ ஸர்ராஹ்

கலீஃபாவிடம் தம்மைப் பற்றி முறையிடச் சென்றவர்களை யும் குழப்பவாதிகளைச் சார்ந்தவர்களாகக் கண்டு அவர் களைக் கொலையும் செய்து விட்டார்.

எகிப்தில் அமர்ந்தே பெருங்கலகத்துக்கு அடித்தளம் அமைத்துக் கொண்டிருந்த இப்னு ஸபா அதையே உவ மானம் காட்டி 'முதுமை அடைந்து விட்ட கலீஃபாவைப் பற்றிய அச்சம் ஆளுநர்களின் உள்ளங்களை விட்டும் அகன்று விட்டது. அவர் இனிப் பதவி வகிக்கத் தகுதி யில்லை' என்ற எண்ணத்தை உருவாக்கினான். மற்ற மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த தன் கூட்டத் தாருக்கும் தகவல் அனுப்பி அங்கும் குழப்ப நிலைகளை வளரச் செய்தான். எங்கெங்கே அவனுடைய கூட்டத்தா ரின் சூழ்ச்சிகளை உணர்ந்து அவர்களின் சொற்களுக்குச் செவி சாய்க்காதவர்களாக மக்கள் இருந்தார்களோ அவர் களில் குறிப்பிடத்தக்கவர்களைத் தேர்வு செய்து அவர் களுக்கு-மதீனாவில் தங்கி வாழ்ந்த-இப்னு ஸபாவின் கூட் டாளிகள், ஹழ்லரத் அலீ, தல்ஹா, ஜ்ஸுபைர் (ரலி) போன்ற மாநபித் தோழர்களின் பெயராலும், உம்முல் மூஉமினீன்களின் பெயராலும், 'கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் முதுமையடைந்து விட்டதால் அவர்களால் பல குளறுபடிகள் விளைகின்றன. எனவே அவர்களுக்குப் பதி லாக வேறொருவரைக் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கான முனைப்புகளை இவ்வாண்டு ஹஜ்ஜுடைய காலத்தில் செய்திட வேண்டியது அவசியமும் அவசரமுமாகும்' என்று எழுதினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் திரு மனைவிகளின் பெயர்களாலும் தோழர்களின் பெயர்களாலும் உருவாக்கப்பட்ட கடிதங் களைக் கண்ட நல்லவர்களும் தங்களைச் சார்ந்தவர்களி டையே அவற்றைப் படித்துக் காட்டி ஒரு பெருந்திருப் பதை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். இஸ்லாம் வளரத் துவங்கிய ஆரம்ப நாள் முதல் அன்று வரை மாநபி (ஸல்) அவர்களின் புனித உடலைத் தாங்கிய அம்மதீனா நகரினுள் புக பதினாயிரம் படைகளும் பெறாத மனத் துணிவை புரட் சிக் குரல் ஏந்திய புல்லுருவிகள் தங்கள் நயவஞ்சகத்தா லேயே பெற்றுக் கொண்டார்கள்.

மதீனாவில் மாநபித் தோழர்களும் புனித குடும்பத்தார் களும் கூட கிலாஃபத்தில் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்ற பிரமை நல்லவர்கள் பலரையும் சூழ்ந்து கொண்டது. அச்சூழ்நிலையிலேயே இப்னு ஸபாவின் தோழர்கள் திறம் பட ஒரு திட்டம் வகுத்தார்கள். ஹஜ்ஜுடைய காலம் துவங்கும்போது மக்கள் அனைவரும் ஹஜ்ஜுக்காகப் புறப் படுவார்கள். தாங்களும் ஹஜ்ஜுக்குப் புறப்படுவதாகவே மக்களுக்குக் காட்டிப் புறப்பட வேண்டும். ஆனால் அனை வரும் மதீனாவில் ஒன்று கூட வேண்டும். கலீஃபாவைச் சூழ்ந்து கொண்டு அவரைப் பதவி துறக்கப் பலவந்தப் படுத்த வேண்டும். அதற்கவர் உடன் படாவிடில் அவரைக் கொலையேனும் செய்திடல் வேண்டும்—என்றவரை அவர் கள் ஒரே முடிவு செய்தார்கள். ஆனால் அடுத்து கலீஃபா வாக எவரைத் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றி அவர்கள் ஒருமித்த முடிவு செய்யவில்லை. எகிப்தியர்களின் எண்ணங் களெல்லாம் ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களே கலீஃபாவாக இருக்க வேண்டும் என்பதாயிருந்தது. பஸராவாசிகளோ ஹழ்லரத் தல்ஹா [ரலி] அவர்களை நேசித்தார்கள். கூஃபா வாசிகளின் உள்ளங்கள் ஹழ்லரத் ஜ்ஸுபைர் இப்னு அவ்வாம் [ரலி] அவர்களைக் கலீஃபாவாக்க நாடின. இந்த மாறுபாடான மனோநிலையில் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களைக் கொல்வதில் மட்டும் அவர்களிடையே எந்தப் பேதமும் இல்லை.

திட்டமிட்டபடி எகிப்திலிருந்து ஓராயிரம் பேர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தார் உம்ராவுக்காகப் புறப்படுவ தாகக் கூறி முன்னதாகவே புறப்பட்டார்கள். காஃபகீ இப்னு ஹரம் என்பவன் அவர்களுக்குத் தலைமை வகித்தா லும் இப்னு ஸபாவே அவர்களிடையே இருந்து உண்மையில் அவர்களை வழி நடத்திக் கொண்டிருந்தான். எகிப்தி லிருந்து புறப்பட்டு நான்கு பிரிவுகளாகப் பயணம் செய்த அவர்கள் பின்னர் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்துக் கொண்டார் கள். அதே விதமாகக் கூஃபாவிலிருந்து மாலிக் இப்னு உஷ்த் தரின் தலைமையில் ஓராயிரம் பேர் புறப்பட்டனர். அவர் களிடையே யஜ்ஸீத் இப்னு கைஸும் இருந்தான். பஸரா விலிருந்து ஹர்கூஸ் இப்னு ஜ்ஸுபைர் அஸ்ஸஅதி என்பவ

னின் தலைமையில் ஓராயிரம் பேர் புறப்பட்டனர். அவர்களிடையே ஹக்கீம் இப்னு ஜபலாவும் இருந்தான்.

பயணம் கடந்த எகிப்தியர்கள் 'தீ கஷ்ப்' என்ற இடத்தையும், பஸராவாசிகள் 'தீ மர்வா' என்ற இடத்தையும், கூஃபாவாசிகள் 'அஅவஸ்' என்ற இடத்தையும் அடைந்தார்கள். அம்மூன்று தலங்களும் அவரவர்கள் புறப்பட்ட இடங்களிலிருந்து செல்லும் வழிகளில் மதீனாவுக்கு மூன்று கல் தொலைவுகளில் இருந்தன. ஒவ்வொரு கூட்டத்தாரின் நடவடிக்கைகளும் முன்பே திட்டமிடப்பட்டபடி இருந்ததால் அவர்களின் வழித் தடங்களையும் இடைத் தலங்களையும் மற்றவர்கள் அறிந்தே இருந்தனர்.

எகிப்திலிருந்து வந்த கூட்டத்திலிருந்து ஜியாத் இப்னு நள்ர், அப்துல்லாஹ் இப்னு அஸம் என்ற இருவர் இப்னு ஸபாவின் கட்டளைப்படி புறப்பட்டுத் தனித் தனியாகச் சென்று பஸரா, கூஃபாவாசிகளைச் சந்தித்தனர். 'மதீனாவிலும் ஏதோ போர் ஆயத்தங்கள் நடைபெறுவதாக நாங்கள் செவியுறுகிறோம். அவ்வாறு நடைபெறுமாயின் நிச்சயம் நாம் தோற்கடிக்கப்படவே செய்வோம். பின்னர் நம்முடைய திட்டங்கள் நிறைவேற ஒரு போதும் மார்க்கம் கிடைக்காது. எனவே நீங்கள் அவசரப்பட்டு இதனை விட்டும் முன்னேற வேண்டாம். நாங்கள் சென்று நிலைமையை ஆய்ந்து திரும்பும் வரை இங்கேயே தாமதியுங்கள்' எனக் கூறி ஒவ்வொரு கூட்டத்தினரையும் அவரவர்கள் தங்கியிருந்த தலங்களிலேயே தங்கி நிற்கச் செய்தார்கள்.

பின்னர் அவ்விருவரும் இப்னு ஸபாவின் கருத்தை ஏற்று மதீனா சென்றனர். அங்கு உம்முல் முஉமினீன்களையும் ஹழ்லரத் அலீ-தல்ஹா-ஜ்ஸு‌பைர் (ரலி) ஆகியோரையும் சந்தித்தார்கள். கலீஃபா அவர்களைச் சந்தித்து சில ஆளுநர்களையும் அதிகாரிகளையும் பற்றிய குறைகளை எடுத்துக் கூறி அவர்களை மாற்றம் செய்யக் கேட்பதற்காகத் தாங்கள் சில தோழர்களோடு வந்திருப்பதாகவும், தங்கள் தோழர்களோடு மதீனாவினுள் நுழைய முன் அனுமதி பெறவே, தாங்கள் வந்திருப்பதாகவும் கூறிக் கொண்டனர்.

அப்பெரியார்கள் ஒவ்வொருவரும் அவ்விருவரின் நடமாட்டங்களையும் வெறுப்புக் கண் கொண்டு நோக்கியவர்களாகத் தங்கள் எரிச்சல்களை வெளிப்படுத்தி விலக்கினார்கள். உண்மையில் மதீனாவின் பொதுவான நிலைமையை அறியவே வந்திருந்த அவ்விரு துரோகிகளும் மதீனாவை விட்டும் திரும்பிச் சென்று நகரம் பூரண அமைதியோடு காணப்படுகிறதென்பதை இப்னு ஸபாவுக்கு அறிவித்தார்கள்.

அடுத்து ஒவ்வொரு பிரிவினரிடையிருந்தும் சிறு சிறு குழுவினர் தனியாகச் சென்று ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களைச் சந்தித்தனர். அவர்களுக்கு முகமன் கூறி, தாங்கள் எகிப்திலிருந்து வந்து தீ கஷ்பில் தங்கியிருக்கும் விபரத்தையும் கூறி, கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்குப் பகரமாக அண்ணல் அலீ (ரலி) அவர்களையே தாங்கள் கலீஃபாவாக்க வந்திருப்பதாகவும், எனவே தங்களிடம் பிரமாணம் எடுக்கும்படியும் கோரினார்கள். ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களோ, ''இறைவனால் சபிக்கப்பட்ட கூட்டத்தினர் தீ கஷ்ஃபிலும், தீ மர்வாவிலும், அஅவஸிலும் பாளையமிறங்குவர்' என அண்ணலெம் பெருமான் (ஸல்) முன்னறிவித்திருப்பதை தோழர்கள் அனைவரும் அறிந்திருக்கிறார்களே! இனி ஒரு நாளும் இத்தகைய எண்ணத்தை நீங்கள் என் முன் வெளிப்படுத்தத் துணிய வேண்டாம்'' எனக் கூறி அவர்களை இகழ்ந்தார்கள்.

அவ்விதமாகவே பஸராவாசிகள் ஹழ்லரத் தல்ஹா (ரலி) அவர்களையும் கூஃபாவாசிகள் ஹழ்லரத் ஜுஸுபைர் (ரலி) அவர்களையும் சந்தித்து தாங்கள் ஒவ்வொருவரும் கொண்டுள்ள நோக்கங்களை எடுத்துக் கூறினார்கள். அவ்விரு பெரியார்களும் ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் கூறியதே போன்ற பதிலையே கூறக் கேட்டு ஒவ்வொரு கூட்டத்தாரும் 'திரும்பி விட்டனர்.

விடை பெற்றுப் பிரிந்த அம்மூன்று குழுவினரும் அப்பெரியார்களிடம் தாங்கள் தங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதாகவே கூறிப் பிரிந்தனர். ஆனால் அவர்

களில் ஒவ்வொரு குழுவினரும் நேராகத் தங்கள் கூட்டத்தார் தங்கியிருந்த தலங்களுக்கே வந்து சேர்ந்தார்கள். மேலும் எந்தத் தாமதமும் இன்றி ஒட்டு மொத்தமாக மதீனாவில் நுழைந்து விடத் தீர்மானித்தார்கள். அதன்படி முதலாவதாக எகிப்தியர்களின் கூட்டம் மதீனாவினுள் நுழைந்தது. அடுத்தடுத்து மற்ற இரு கூட்டத்தினரும் நுழைந்தனர். இரவோடிரவாக நகரம் அமளிப்பட்டது.

மாநபித் தோழர்களோ மதீனாவாசிகளோ அதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. எனவே அவர்கள் எந்த முன்னேற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கவுமில்லை. என்ன நடைபெறப் போகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்காகவே அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இல்லங்களில் தங்கிக் காத்திருப்பதைத் தவிர்த்து அவர்களுக்கு வேறெந்த மார்க்கமும் இருக்கவில்லை.

நாட்கள் ஒன்றிரண்டு நகர்ந்தன. கலகக்காரர்கள் மதீனாவில் பலரையும் சந்தித்தவண்ணமிருந்தனர். கலீஃபா அவர்களை இன்னும் அவர்கள் சந்திக்கவில்லை. கலீஃபா உதுமான் (ரலி) அவர்களும் தொழுகையை நடத்துவதற்காகப் பள்ளிக்கு வந்த ஒவ்வொரு நேரமும் மாறுபட்ட பல மனித நடமாட்டங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

வெள்ளிக்கிழமை வந்தது. அன்று ஜும்ஆ உரையாற்ற மேடையில் நின்ற கலீஃபா அவர்கள் தங்கள் உரையினூடே மதீனாவில் புகுந்துள்ள சதிகாரர்களைப் பற்றியும் கூறி எச்சரித்தார்கள். அதனைச் செவியுற்று ஹழ்ரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி), ஜைத் இப்னு ஸாபித் [ரலி] போன்ற நாயகத் தோழர்கள் கிலாஃபத்துக்கு ஆதரவான தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். அக்காட்சிகளைக் கண்டு சினங் கொண்ட கலகக்காரர்கள் கலீஃபா அவர்கள் மீது சரமாரியாகக் கற்களை வீசினார்கள். அவற்றில் சிலவற்றின் தாக்குதல் பட்டு மூர்ச்சித்து விழுந்த கலீஃபா அவர்கள் பாதுகாப்புடன் இல்லம் சேர்க்கப்பட்டார்கள். ஹழ்ரத் ஸஅத் இப்னு மாலிக், அபூஹுரைரா,

ஜூலைத் இப்னு ஸாபித், இமாம் ஹஸன் [ரலி] போன்ற நபி மணித் தோழர்களின் பெருங் கூட்டம் வாட்களை ஏந்திப் போருக்கு ஆயத்தமாகி விட்டது. அதற்குள் மூர்ச்சை தெளிந்து செய்தியறிந்த கலீஃபா அவர்கள் 'பெருமான் நபி [ஸல்] அவர்கள் உறையும் தலமிது. இங்கே கலகக்காரர் களோடு எவ்வித மோதல்களையும் மேற்கொள்ள வேண் டாம்' எனக் கட்டளையனுப்பி அவர்களைத் தடுத்து விட்டார்கள்.

பின்னர் கலீஃபா அவர்கள் தங்கள் அந்தரங்கச் செயல ராகக் கொண்டிருந்த மர்வான், ஸஈத் இப்னுல் ஆஸ் [ரலி] ஆகியோரோடு சென்று அலீ [ரலி] அவர்களைச் சந்தித்தார் கள். தங்களைக் கொல்வதேயன்றி மாற்றுக்குறி கொள் ளாத அக்கலகக்காரர்களின் சதிகளைச் சமாளிக்க வழிகளை ஆயலானார்கள்.

''அமீரல் முஉமினீன்! முன்னமேயே தாங்கள் மாநபித் தோழர்களின் எச்சரிக்கைகளைப் புறக்கணித்து விட்டீர் கள். இப்போது முற்றி விட்ட நிலைமையை எவ்விதமாக சமாளிப்பது" என அலீ (ரலி) அவர்கள் கவலையுற்றனர்.

''அபல் ஹஸன்! கடந்து போன விஷயங்களைக் கருத் தில் கொள்ளும் தருணம் அல்ல இது. நிலைமையைச் சமா ளிக்க வழி காண வேண்டியது என்னோடுள்ள இரத்த பந் தத்தின் மீது தங்களுக்குள்ள கடமையாகும்'' என்றுரைத் தார்கள் கலீஃபா.

''ஆகட்டும். தாங்கள் சென்று ஓய்வு கொள்ளுங்கள். நாளை இவர்களை நகரத்தை விட்டும் வெளியேறச் செய் வேன்'' எனக் கூறி கலீஃபா அவர்களை அனுப்பி வைத்தார் கள் அலீ [ரலி].

இதற்கிடையே எகிப்தியர்கள் ஹழ்ரத் தல்ஹா, ஜுஸுபைர், ஸஅத் இப்னு அபீ வக்காஸ், அலீ (ரலி) ஆகி யோரையும், ஆயிஷா நாயகியாரையும் தனித்தனியாகச் சந்தித்தார்கள். எகிப்தின் ஆளுநர் அபூ ஸர்ராஹ் தங் களைச் சார்ந்த ஓரிருவரை—கலீஃபா அவர்களிடம் தம் மைப் பற்றி முறையிட்டார்கள் என்பதற்காகவே—கொலை

செய்து விட்டதையும், அவரை மாற்றஞ் செய்யவே தாங்கள் வந்திருப்பதாகவும், வேறெந்த நோக்கமும் தங்களுக்கில்லை எனவும் முறையிட்டுக் கொண்டார்கள். ஹழ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் உடனடியாக கலீஃபா அவர்களைச் சந்தித்து அதுபற்றி விவாதித்தார்கள். ஆயிஷா (ரலி) அவர்களும் கலீஃபா அவர்களுக்கு, 'கொடுமைக்கார ஆளுநரை நீங்கள் உடனடியாக விலக்கினீர்களில்லை. அவர் குறை கூறியவர்களை இப்போது கொலையும் செய்து விட்டார். எனவே அவரைப் பற்றிய முறையீட்டை உடனடியாகக் கவனியுங்கள்' என்று சொல்லியனுப்பினார்கள்.

ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களும் கலீஃபா அவர்களைச் சந்தித்து, எகிப்தியர்களின் குறையினைப் பற்றி அறிவித்து ஆளுநரை உடனடியாக மாற்றி விடுதலே நலம் எனக் கருத்தறிவித்தார்கள். ''அப்படியானால் தாங்கள் விரும்பும் ஆளுநரை அவர்களே அறிவிக்கட்டும். நான் நியமனம் செய்து விடுகிறேன்'' என்றார்கள் கலீஃபா.

''முஹம்மத் இப்னு அபூபக்கரை அவர்கள் விரும்புகிறார்கள்" என அறிவித்தார்கள் அலீ (ரலி).

கலீஃபா அவர்கள் உடனடியாகவே நியமனப் பத்திரம் எழுதித் தந்து விட்டார்கள். அவர்களின் அந்தரங்கத் தூதர் ஹழ்ரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களே ஐம்பது அன்ஸார்களோடு சென்று கலீஃபா அவர்களின் முடிவை எகிப்தியர்களுக்கு அறிவித்து அறிவுரைகளும் கூறிச் சமாதானப்படுத்தினார்கள். ''இத்தகைய நிலைமைகள் உருவாகாது கலீஃபா அவர்கள் கவனித்துக் கொண்டால் போதும். நாங்கள் விடை பெறுகிறோம்'' எனக் கூறிப் புறப்பட்டனர் எகிப்தியர்களும் அவர்களைத் தொடர்ந்து மற்றவர்களும். அபூ ஸர்ராஹ்வுக்கு விளக்கம் கூறி புதிய ஆளுநர் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்கள் பற்றிய கலீஃபா அவர்களின் பிரகடனத்தைச் செயல்படுத்தி வைக்க சில முஹாஜிர்கள்-அன்ஸார்களும் அவர்களோடு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

புரட்சி ஓய்ந்தது என எண்ணி நபிமணித் தோழர்கள் அமைதி கொண்டார்கள். நிம்மதிப் பெருமூச்சு விட்ட நகர மக்களும் தங்கள் அன்றாட நடைமுறைகளுக்குத் திரும்ப லானார்கள். நாட்கள் சில ஒன்றன் பின் ஒன்றாக நகர்ந் தன. ஐந்தாம் நாள் காலை, திடீரெனப் பெருத்த ஆர வாரம் கேட்டது. கூச்சலிட்ட வண்ணம் கலகக்காரர்கள் மீண்டும் மதீனாவினுள் நுழைந்தனர்.

கலீஃபாவைக் கொல்வோம்
வஞ்சகத்தை வெல்வோம்
பழிக்குப் பழி தீர்ப்போம்

என்ற அமளிக் குரல்களைக் கேட்டு தோழர்கள் திடுக்கிட் டார்கள். எகிப்தியர்களைச் சந்தித்த ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் கேட்டார்கள், ''என்ன நடந்து விட்டது? மீண்டும் ஏன் திரும்பினீர்கள்'' என்று.

''பயணம் செய்துக் கொண்டிருந்த நாங்கள் மூன்றாம் நாள் ஓர் அடிமை எங்களை முந்திக் கொண்டு செல்வதைக் கண்டோம். அவனுடைய வேகத்தில் எங்களுக்கு ஐயம் பிறந்தது. அவனைப் பிடித்து விசாரித்தோம். தான் கலீ ஃபாவின் அடிமை என்றான் அவன். தொடர்ந்து நாங்கள் கேட்டவற்றுக்கு அவன் தந்த பதில்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையாக இருந்தன. அவனின் உடைமை களைச் சோதித்ததில் அவன் வைத்திருந்த தண்ணீரற்ற துருத்திக்குள் இந்தக் கடிதம் இருந்தது'' எனக் கூறிய கல கக்காரர்கள் ஒரு கடிதத்தையும் காட்டினார்கள். அக்கடி தத்தில் மதீனாவிலிருந்து வரும் முஹம்மத் இப்னு அபூபக் கர் (ரலி) அவர்களையும், மற்ற முஹாஜிர்களையும், அன் ஸார்களையும் பிடித்துக் கொலை செய்து விட்டு அபூ ஸர் ராஹ்வையே பதவியில் நீடிக்கும்படி எழுதப்பட்டு அதன் கீழ் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் முத்திரையும் வைக்கப்பட்டிருந்தது!

அதே செய்தியையே பஸராவாசிகள் ஹழ்லரத் தல்ஹா [ரலி] அவர்களிடமும் கூஃபாவாசிகள் ஹழ்லரத் ஜ்ஸுபைர் (ரலி) அவர்களிடமும் தெரிவித்தார்கள். ஹழ்லரத் அலீ

[ரலி] அவர்கள் பஸரா, கூஃபாவாசிகளை அழைத்துக் கேட்டார்கள், ''நீங்கள் ஏன் திரும்பி வந்தீர்கள்?'' என்று.

அவர்கள், ''நாங்கள் எங்கள் எகிப்திய சகோதரர்களுக்கு உதவவே வந்தோம்'' என்றனர்.

அப்பதில் கேட்டு அலீ (ரலி) அவர்கள் சினந்தார்கள். ''மூன்று நாட்கள் வரை நீங்கள் வெவ்வேறு திக்குகளில் பிரிந்து சென்றீர்கள். மூன்றாம் நாள் எகிப்தியர்கள் கையில் சிக்கிய கடிதத்தைப் பற்றி அன்றே நீங்களும் எப்படி அறிந்து திரும்ப முடிந்தது! நீங்கள் கலீஃபாவுக்கு எதிராக மதீனாவிலிருந்தே சதி செய்துப் பிரிந்திருக்கிறீர்கள் என்று நான் ஆண்டவன் மீது சத்தியமிட்டும் கூறுவேன்'' என்றார்கள்.

''நீங்கள் எப்படி எண்ணினாலும் சரியே. எங்களுக்கு இந்த கலீஃபா தேவையில்லை. அவரைப் பதவியிலிருந்து விலக்க நீங்களும் எங்களோடு ஒத்துழையுங்கள்'' என்றார்கள் கலகக்காரர்கள்.

ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் ''ஒருக்காலும் நான் உங்களுக்கு எந்த ஒத்துழைப்பும் தர முடியாது'' என மறுத்தார்கள்.

''அப்படியானால் நீங்கள் ஏன் கடிதம் எழுதி எங்களை அழைத்தீர்கள்'' எனக் கேட்டனர் புரட்சிக்காரர்கள்.

ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களோ, ''நான் உங்களுக்கு எந்தக் கடிதமும் எழுதவில்லையே" என மறுத்தார்கள். கூட்டத்தினர் ஒவ்வொருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலானார்கள்.

எகிப்தியர்களில் இப்னு அதீஸ் என்பவன் ஸெளதான் இப்னு ஹிம்ரான் மற்றும் இரு கூட்டாளிகளுடன் வந்து ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களைச் சந்தித்தான்.

''அபா அப்தர் ரஹ்மான்! எங்களுக்கெதிரான எல்லா குறைபாடுகளையும் கலீஃபா அவர்கள் இனித் தவிர்த்திடு

வார்கள் என வாக்களித்து தாங்கள் எங்களை அனுப்பி வைத்தீர்கள் அல்லவா?"

''நிச்சயமாக, அப்படியிருக்க நீங்கள் ஏன் மீண்டும் வந்தீர்கள்?" என ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) வினவினார்கள்.

''வழியில் 'புவைப்' என்ற இடத்தில் நாங்கள் ஓர் ஒட்டகையைப் பிடித்தோம். அதில் அரசாங்கத்துக்குச் சொந்தமான அடையாளமிருந்தது. அதன் மீது அமர்ந்திருந்தவன் கலீஃபாவின் அடிமை எனவும் அறிந்தோம். அவனிடமிருந்து நாங்கள் கைப்பற்றிய கடிதம் இதோ'' எனக் கூறி ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களிடம் காட்டப்பட்ட கடிதத்தையும் தந்தான் இப்னு அதீஸ்.

கடித வாசகத்தில் இப்னு அதீஸையுடையவும் அவனைச் சார்ந்த நால்வருடையவும் தலை, தாடி முடிகளைச் சிரைத்து, நூறு சவுக்கடிகளும் தந்து, மறு கட்டளை வரும் வரை அவர்களைக் காவலில் வைக்கும்படியும் குறிப்பிடப் பட்டிருந்தது.

ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்கள், ''இது நம் கலீஃபாவினால் எழுதப்பட்டது என நீங்கள் நினைக்கிறீர்களா?" எனக் கேட்டார்கள்.

''கலீஃபா அவர்கள் தம் உத்திப்படி இதனை எழுதாமலிருக்கலாம். அவரின் செயலர் மர்வான் இப்படி எழுதக் கலீஃபாவை நிர்ப்பந்தித்திருக்கலாம்" என்றான் இப்னு அதீஸ்.

''நீங்கள் எங்களோடு வாருங்கள். கலீஃபாவிடமே சென்று நேரிடையாகக் கேட்போம். அலீ (ரலி) அவர்களும் மதியத் தொழுகைக்குப் பின் கலீஃபாவைச் சந்திக்க இசைந்துள்ளார்கள்" என அந்நால்வரும் வேண்ட, ஹழ்லரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களும் சம்மதித்தார்கள்.

திட்டமிட்டபடி கலீஃபா அவர்களின் இல்லத்திற்கு வந்து, எகிப்தியர்களை வெளியில் தங்கச் செய்து ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களும், ஹழ்ரத் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களும் முதலில் கலீஃபா அவர்களைச் சந்தித்தார்கள். ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் எகிப்தியர்கள் கொணர்ந்திருந்த கடிதத்தைக் கலீஃபா அவர்களிடம் காட்டி எல்லா விவரங்களையும் கூறினார்கள். கடிதத்தைக் கண்டு கலீஃபா அவர்கள் திகைத்தார்கள். ''ஆண்டவனின் மீதாணையாக இதனை நான் எழுதவுமில்லை. இதனைப் பற்றி எந்த விவரமும் நான் அறியவுமாட்டேன்'' என்று.

கலீஃபா அவர்களின் வாய்மையை அவ்விருவரும் ஏற்றார்கள். எகிப்தியர்களை உள்ளே அழைத்து கலீஃபா அவர்களே நேரடியாக அவர்களிடம் விளக்கம் தருவது நல்லதென ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் வலியுறுத்தினார்கள். அதன் பேரில் வெளியில் காத்திருந்த எகிப்தியர்கள் கலீஃபா அவர்களால் உள்ளே வரவழைக்கப்பட்டனர்.

உள்ளே நுழைந்த எகிப்தியர்கள் கலீஃபா அவர்களுக்கு முகமன் கூறினர். இப்னு அதீஸே பேசலானான்; ஆளுநர் அபூ ஸர்ராஹ்வைப் பற்றிய குறைகளைக் கூறலானான். எகிப்தில் அவரின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் விவரித்தான். ''அந்நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நாங்கள் முறையிட்ட போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் கலீஃபாவின் கட்டளை அப்படித்தான் என அவர் எங்களுக்குச் சொன்னார். அதன் பேரில் ''நாங்கள் தங்களைக் கிலாஃபத்தை விட்டும் விலகச் செய்வது அல்லது கொன்றே விடுவது,'' என்ற தீய எண்ணத்தோடேயே மதீனா வந்தோம். ஆனால் அபூ அப்துர் ரஹ்மான் [முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி)] எங்களின் கோரிக்கைகள் தங்களால் ஏற்கப்படும் என வாக்குறுதியளித்து எங்களைத் திரும்பச் செய்தார்.''

''ஆம்! இப்போதும் அவரின் வாக்குறுதியை நான் கண்ணியப்படுத்துவேன்'' என்றார்கள் கலீஃபா.

இப்னு அதீஸ் தொடர்ந்தான், ''நாங்கள் எங்கள் எங்கள் நகரங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம்.

புளைபை நாங்கள் எத்தியபோது தங்கள் அடிமை ஒருவனைப் பிடித்தோம். அவனிடமே இக்கடிதம் இருந்தது. அதில் எங்களைக் கைது செய்யவும் தண்டனைகள் தரவும் ஒரு சிலரைக் கொல்லவும் கட்டளை காணப்படுகிறது. கீழே உங்கள் முத்திரையும் வைக்கப்பட்டுள்ளது'' என்று.

கலீஃபா அவர்கள் மீண்டும் ''இக்கடிதத்தை ஆண்டவன் மீதாணையாக நான் எழுதவும் இல்லை. எவரையும் எழுதச் சொல்லவும் இல்லை. இதனைப் பற்றி எதுவுமே நான் அறியமாட்டேன்'' என அவர்களிடமும் சத்தியம் செய்து கூறினார்கள்.

அதனைப் பற்றிக் கலீஃபா அவர்கள் ஏதும் அறியவே மாட்டார்கள் என்பதை நபிமணித் தோழர்கள் இருவரும் ஐயமின்றி ஏற்றார்கள். ஆனால் குழப்பத்தையே குறியாகக் கொண்டவர்கள் எப்படி ஏற்பார்கள்?

எகிப்தியர்கள் கேட்டார்கள், ''ஒட்டகை உங்களுடையது. அடிமை உங்களுடையவன். கடித வாசகமும் உங்களுடையது. முத்திரையும் உங்களுடையதே. ஆனால் அது பற்றி நீங்கள் எதுவுமே அறியமாட்டீர்களெனச் சத்தியமிடுகிறீர்கள். இது எங்ஙனம் நடைபெறக் கூடும்'' என்று.

கலீஃபா அவர்கள் விளக்கினார்கள், ''ஒட்டகை களவாடப்பட்டிருக்கலாம். அடிமைக்கு கையூட்டளிக்கப்பட்டிருக்கலாம். வாசகமும் என்னுடையதைப் போல் எவராலும் எழுதப்பட்டிருக்கலாம். முத்திரையும் போலியான ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கலாம்'' என்று.

''அவ்வடிமையை நீங்கள் என்னிடம் ஒப்படையுங்கள். நான் அவனை விசாரித்து இது எவ்விதம் நடந்தது என்பதை உங்களுக்கும் தெரிவிப்பேன்'' என கலீஃபா அவர்கள் கேட்டபோதும் அடிமையை ஒப்படைக்க அவர்கள் மறுத்து விட்டார்கள். ''நாங்கள் அவனை விசாரித்து விட்டோம். உங்கள் அடையாள முத்திரையை எப்போதும் தம்மிடம் வைத்திருக்கும் உங்கள் செயலர் மர்வானின் சதியே இது'' என உறுதியுடன் கூறிய அவர்கள் மர்வானைத்

தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரினார்கள். கலீஃபா அவர்கள் அவ்வாறு ஒப்படைக்க மறுத்து விட்டார்கள்.

''நாங்கள் தங்களைச் சந்தேகிக்கவில்லை. ஆனால் தாங்கள் அதிகாரிகள் அனைவரையும் மாற்றி விடுங்கள். எங்களின் கோரிக்கைகளை ஏற்று எங்களுடன் நீதியுடன் நடக்கக் கூடிய அதிகாரிகளை நியமியுங்கள். உங்கள் செயலர் மர்வானை எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் அவரை விசாரிப்போம். அவர் குற்றத்துக்கும் பழி தீர்ப்போம்" என்றார்கள் எகிப்தியர்கள்.

கலீஃபா அவர்கள் கேட்டார்கள், ''நீங்கள் கூறுகிற அனைவரையும் விலக்கி அவர்களுக்கு மாறாக நீங்கள் குறிப்பிடுகிறவர்களையே நியமனம் செய்ய வேண்டும். குற்றவாளிகளையும் நீங்களே விசாரணை செய்ய வேண்டும். அப்படியானால் கிலாஃபத் என்னும் தலைமை என்னுடையதாக எப்படி ஆகும்? உங்களுடையதே அதிகாரமாக வல்லவா மாறி விடும்'' என்று.

''நிச்சயம் அப்படித்தான் ஆக வேண்டும். இல்லையானால் நீங்கள் பதவி விலகுங்கள்'' என்றனர் எகிப்தியர்கள்.

கலீஃபா அவர்கள், ''கிலாஃபத் என்பது அல்லாஹ் எனக்கருளிய மேலாடை. ஒருக்காலும் அதனை நான் என் கரத்தால் கழற்றி வீசமாட்டேன்'' என உறுதியுடன் கூறினார்கள்.

''தவறுகள் நிகழ்ந்திருக்கலாம். அவற்றுக்காக நான் பிழை பொறுக்கத் தேடுவேன். அத்தவறுகளைத் திருத்திக் கொள்ள முயல்வேன்'' எனக் கலீஃபா அவர்கள் தொடர்ந்தபோது இடைமறித்தான் இப்னு அதீஸ், ''ஒவ்வொரு முறையும் இப்படித்தான் வாக்களிக்கப்படுகிறது. ஆயினும் நடப்பதே தொடர்ந்து நடைபெறுகிறது. இப்போது கிலாஃபத்தை உங்களிடமிருந்து பறிப்பது எங்கள் கடமையாகி விட்டது. பதவி விலகாவிடில் உங்களை நாங்கள் கொல்லவும் பின்னடையமாட்டோம். உங்களைச்

சூழ்ந்து நிற்பவர்களோடும் போராடுவோம்—உங்களை அண்மிக் கொல்லும்வரை அல்லது நாங்கள் கொல்லப் படும்வரை."

அந்த நிலையிலும் கலீஃபா அவர்கள் மிக நிதானத் தோடு கூறினார்கள், "நீங்கள் கலவரப்பட வேண்டாம். உங்களை எவரும் நெருங்கவிட மாட்டேன்" என்று.

இதயம் என்ற ஒன்று அவ்வெகிப்தியர்களுக்கு இருந் திருக்குமானால் அது அழுதிருக்கும் கலீஃபா அவர்களின் சொல்லைக் கேட்டு. ஆனால், அக்குழப்பவாதிகளோ அதற்குப் பின்னரே ஒவ்வொருவரும் தங்கள் வாய்களுக்கு வந்தவாறெல்லாம் கூச்சலிடலானார்கள். சினமடைந்தவர் களாக எழுந்த ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் குழப்பக் காரர்களை கலீஃபா அவர்களின் வீட்டை விட்டும் வெளி யேற்றி விரட்டினார்கள். கலீஃபா அவர்களின் மென்மை யால் அவர்களுக்குத் தங்கள் நிலையும் மிகச் சங்கடத்திற் குள்ளாகியது. அங்கிருந்து தங்கள் இல்லத்துக்குச் சென்று விட்டார்கள். முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர் களும் தங்கள் இல்லம் சென்றனர். வெளியேறிச் சென்ற எகிப்தியர்கள் தங்கள் கூட்டத்தினரனைவரோடும் வந்து கலீஃபா அவர்களின் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டனர்.

"மர்வானை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அத்தகைய சதிகாரரைத் தம் முதல் அதிகாரியாக வைத் திருந்த கலீஃபாவும் பதவி துறக்கவே வேண்டும். இல்லை யானால் அவரைக் கொல்வோம். இரண்டில் ஒன்றை முடிவு செய்வோம்" என்ற குரல்கள் காட்டுக் கூச்சல் களாய் செவிகளைப் பிளந்தன.

பொங்கி நின்ற புரட்சிக்காரர்களின் கட்டுக் கடங்காத் தனம் ஒரு புறம், அவர்களுக்கெதிராக வாளேந்த அனுமதி யும் தராமல் உண்மையையும் பொறுமையையும் அணி கலன்களாகப் பூண்ட கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் தம் நிலையில் உறுதி படைத்தவர்களாய் மறுபுறம், இவர் களுக்கிடையே ஹழ்ரத் அலீ, தல்ஹா, ஜுபைர், ஸஅத் (ரலி) போன்ற நாயகத் தோழர்கள் அனைவரும் செய்வதறியாது திகைத்து நின்றார்கள்.

நிலைமையின் கடுமையை ஊகித்த ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் தங்கள் மகனார் ஹஸன் (ரலி) அவர்களை கலீஃபா அவர்களின் இல்ல வாசலில் காவலாய் நிற்கப் பணித்து விட்டு கவலை சூழ்ந்தவர்களாய்த் தங்கள் இல்லம் அடைந்தார்கள். அதேபோல் ஹழ்ரத் ஜுபைர் (ரலி) அவர்களும் தங்கள் மகனார் அப்துல்லாஹ் (ரலி) அவர்களையும் ஹழ்ரத் தல்ஹா (ரலி) அவர்களும் தங்கள் புதல்வர் முஹம்மதுடன் மற்றொரு புதல்வரையும் கலீஃபா அவர்களின் இல்லவாசலில் காவலாய் நிற்கப் பணித்து விட்டுச் சென்று விட்டார்கள்.

துரோகத்தை விட்டும் வஞ்சகச் சதிகளை விட்டும் தூய்மை பெற்றவர்கள் கலீஃபா என்ற முடிவில் மாறுபாடான சிறு ஐயத்திற்கும் இடமேயில்லை. அப்படியிருந்த நிலையிலும் அவர்கள் கலகக்காரர்களின் வேண்டுதல்படி அவர்களால் குற்றம் சாட்டப்பட்ட மர்வானை அவர்களிடம் ஒப்படைக்கவும் மறுத்து விட்டார்கள். தாங்கள் பதவி துறக்கவும் மறுத்து விட்டார்கள். அவற்றுக்கான காரணங்கள் யாவை?

முதலாவதாக மர்வான் உமையாக் குடும்பத்தைச் சார்ந்தவர். கலீஃபா அவர்கள் பொறுமையோடும் மென்மையோடும் அணுகியதைப் போல் புரட்சிக்காரர்களோடு மர்வானும் மென்மையோடு நடந்து கொள்ளவில்லை. தம்முடைய பதவிக்குரிய அதிகாரத்தோடும் தம் இயல்பில் அமைந்திருந்த உத்வேகத்தோடும் கலகக்காரர்களைச் சாடினார். கலீஃபா அவர்களின் பார்வைக்குப் புறம்பாக அவர் மேற்கொண்ட அத்தகைய அணுகுமுறைகளால் மர்வானின் மீது கலகக்காரர்களுக்கு மிகுதமான வெறுப்பிருந்தது. கலீஃபா அவர்களை அவரே திசை திருப்புகிறார் என்றோ அல்லது கலீஃபா அவர்களுக்குத் தெரியாமலே தங்களுக்கு எதிரான சதிகளை மேற்கொள்கிறார் என்றோ கலகக்காரர்கள் முடிவு கொண்டனர். அத்தகைய வெறி கொண்டிருந்த கலகக்காரர்கள் நிச்சயம் மர்வானைக் கொன்று விடுவார்கள் என கலீஃபா அவர்கள் அஞ்சினார்கள்.

அச்சமயம் ஏறத்தாழ எல்லா மாகாணங்களிலுமே உமையாக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே ஆளுநர்களாக இருந்தார்கள். அவர்கள் நிச்சயம் மர்வானின் கொலைக்குப் பழி தீர்க்கத் துவங்கி விடுவார்கள். தாமும் உமையாக் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்த நிலையிலும் எதிரிகளைக் கருவருக்க ஒட்டுமொத்தமாகத் தங்களின் ஆளுநர்கள் துவங்கி விட்டார்களானால் தாங்களே அவர்களைக் கட்டுப்படுத்த முடியாதாகி விடலாம். அதன் காரணமாக நாடெங்கும் முஸ்லிம்களின் இரத்தமே முஸ்லிம்களால் சிந்தப்பட நேரிட்டு விடும் என்றும் கலீஃபா அவர்கள் அஞ்சினார்கள்.

இரண்டாவதாக, கலீஃபா அவர்களை அக்கடிதத்தைப் பற்றிய எந்த விசாரணையுமே மேற்கொள்ள கலகக்காரர்கள் இடந்தரவில்லை. உண்மையில் அக்கடிதம் கலீஃபா அவர்களால் எழுதப்பட்டதாகவோ அல்லது எழுதப் பணிக்கப்பட்டதாகவோ அல்லது மற்றெந்த விதத்திலும் அது கலீஃபா அவர்களுக்கு சம்மந்தப்பட்டதாகவோ இராதது மட்டுமல்ல, கலீஃபாவின் செயலர் மர்வானாலோ அல்லது கலீஃபா அவர்களுக்கு நெருக்கமான அவர்களின் குடும்பத்தைச் சார்ந்த மற்ற எவராலுமோ எழுதப்பட்டதாகவும் தெரியவில்லை. கலக எண்ணங் கொண்டு வந்திருந்த அச்சதிகேடர்களாலேயே உருவாக்கப்பட்ட நாடகமாகவே அக்கடித நிகழ்ச்சி முழுமையாகக் காட்சி தருகிறது.

(1) கடிதத்தைக் காட்டி குறைபட்ட ஆரம்பத்திலேயே ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களும் முஹம்மத் இப்னு மஸ்லமா (ரலி) அவர்களும் ஒரே கருத்தாக "நீங்கள் பொய்யுரைக்கிறீர்கள். மதீனாவை விட்டுப் புறப்படும் போதே நீங்கள் கலீஃபாவுக்கு எதிராகச் சதி செய்துப் புறப்பட்டிருக்கிறீர்கள்" எனத் தெரிவித்து விட்டார்கள். அவ்வாறு அவர்கள் கூறக் காரணம்:

சதிகாரர்கள் தாங்கள் புவைப் என்ற தலத்தில் அக்கடிதத்தைக் கைப்பற்றியதாகக் கூறினார்கள். புவைப் என்ற தலம் மதீனாவிலிருந்து எகிப்துக்குச் செல்லும் பாதையில் உள்ளது. அத்தலத்தை அடைய அவர்கள் அங்

காலத்தில் இராத் தங்கித் தங்கிப் பயணம் செய்து ஆறு நாட்களைக் கழித்தாக வேண்டும். எகிப்தியர்கள் தங்கள் பயணத்தைத் துவக்கியபோதே அவர்களைப் பிரிந்து தங்கள் தங்கள் நகரங்களை நோக்கித் தனித்தனியே பயணம் புறப்பட்ட பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் கூட எகிப்தியர்களைப் போன்றே ஆறு நாட்கள் பயணத் தொலையை வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு பாதைகளில் கடந்து சென்றிருப்பார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க மீண்டும் மதீனா வரைத் திரும்ப வந்தே பாதை மாறிப் பயணம் செய்ய வேண்டுமேயன்றி அக்காலத்தில் குறுக்குப் பாதைகள் கிடையா. அந்நிலையில் எகிப்தியர்கள் தங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள சதி பற்றிக் கிடைத்துள்ள கடிதச் செய்தியை பஸராவாசிகளுக்கும் கூஃபாவாசிகளுக்கும் அறிவித்து தங்களுக்குத் துணை புரிய அவர்களை அழைக்க விரும்பியிருந்தால் தனித் தனியாக இரு தூதர்களை அவர்கள் பால் அனுப்பியிருக்க வேண்டும். அத்தூதர்கள் மதீனா நோக்கி ஆறு நாட்கள் பயணம் செய்து அங்கிருந்து பிரிந்து ஒருவர் பஸராவின் பாதையிலும் மற்றவர் கூஃபாவின் பாதையிலுமாக ஆறு நாட்கள் பயணம் செய்திருக்க வேண்டும். செய்தியறிந்த பஸரா கூஃபாவாசிகள் மீண்டும் திரும்பி மதீனாவை நோக்கி ஆறு நாட்கள் பயணம் செய்து வர வேண்டும். இவ்வாறாக, மதீனாவை விட்டும் வெளியேறிய எகிப்தியர்கள் பனிரண்டாம் நாளும், பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் இருபத்து நான்காம் நாளுமே மதீனா வந்தடைய முடியும். படைகள் பெயர்ந்து செல்லும் வேகத்துக்கும் தனித் தூதர்கள் விரைந்து செல்லும் வேகத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் இருந்தாலும், எகிப்தியர்களிடமிருந்து ஆறாம் நாள் புறப்பட்ட தூதர்கள் இருவரும் பனிரண்டாம் நாள் மதீனாவை அடைந்து பஸரா, கூஃபாவின் திசையில் விரையும்போது பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் தங்கள் பயணங்களைத் தொடர்ந்து இன்னும் பல நாள் தொலைவைக் கடந்திருப்பர். எப்படியும் பஸராவாசிகளும், கூஃபாவாசிகளும் முப்பது நாட்களுக்கு முன்பாக மதீனா வந்தடையவே

முடியாது. ஆனால் அவர்கள் அனைவருமே ஒட்டுமொத்த மாக மதீனாவை விட்டும் புறப்பட்ட மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் காலையிலேயே மதீனாவினுள் நுழைந்து விட்டனர். அதுவே அவ்விருபெரும் நபிமணித் தோழர் களுக்கும் ஐயத்தைத் தந்து விட்டது.

(2) படை பெயர்ந்து செல்லும் வேகத்தையும் தூதன் விரைந்து செல்லும் வேகத்தையும் கணித்துப் பார்க்கையில், உண்மையில் எகிப்தியர்கள் ஆறு நாட்கள் பயணத் தொலை யில் உள்ள புவைபை அடைந்த அதே சமயம் கலீஃபா அவர்களின் ரகசியச் செய்தியை எடுத்துச் சென்ற தூதன் எகிப்தையே அடைந்திருக்க வேண்டும். அப்படியல்லாமல் தம் எதிரிகளை வஞ்சகத்தோடு கொல்ல சதி சூழ்ந்ததாகப் பழி கூறப்பட்ட கலீஃபா தம் செய்தியை எடுத்துச் செல்ல எதிரிகள் சென்ற பாதையிலேயே சென்று அவர்களின் முன் னேயே உலவிச் சிக்குமாறு ஒரு பித்துக்குளியையா தூதனா கத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். மர்வானும் கூட அத்தகைய மதியீனத்தோடு செயல்பட்டிருக்க முடியாது.

(3) பிடிபட்ட அடிமையைத் தம் முன் விசாரணைக் காகக் கொணர்ந்து சேர்ப்பிக்குமாறு கலீஃபா அவர்கள் இட்டக் கட்டளையைக் கலகக்காரர்கள் ஏற்கவும் இல்லை. அவ்வடிமையை கலீஃபா அவர்களுக்கோ மற்ற நபித் தோழர்களுக்கோ காட்டவும் இல்லை. தாங்களே விசா ரித்து விட்டதாகக் கூறி விட்டனர்.

இந்த அடிப்படைக் காரணங்களெல்லாமே அக்கடித நிகழ்ச்சி கலகக்காரர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சதி நாடகமேயன்றி அவ்வாறான ஒரு கடிதத்தைக் கலீஃபா அவர்களேயல்ல கலீஃபாவின் செயலர் மர்வானோ அல்லது மதீனாவைச் சார்ந்த மற்ற எவரோ எழுதவே இல்லை என்பதற்குப் போதுமான சான்றுகளாகும்.

தம் குடும்பத்தவர்களிடத்தில்-மற்றவர்கள் குரோதங் கொள்ளுமளவு மட்டற்ற பாசமும் அன்பும் கொண்ட கலீஃபா, குற்றச்சாட்டுக்காளானவர்கள் தம் குடும்பத்தவர் களாகவே இருந்தபோதிலும், சாட்சியங்களோடு அவர்

காலத்தில் இராத் தங்கித் தங்கிப் பயணம் செய்து ஆறு நாட்களைக் கழித்தாக வேண்டும். எகிப்தியர்கள் தங்கள் பயணத்தைத் துவக்கியபோதே அவர்களைப் பிரிந்து தங்கள் தங்கள் நகரங்களை நோக்கித் தனித்தனியே பயணம் புறப்பட்ட பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் கூட எகிப்தியர்களைப் போன்றே ஆறு நாட்கள் பயணத் தொலையை வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு பாதைகளில் கடந்து சென்றிருப்பார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்க மீண்டும் மதீனா வரைத் திரும்ப வந்தே பாதை மாறிப் பயணம் செய்ய வேண்டுமேயன்றி அக் காலத்தில் குறுக்குப் பாதைகள் கிடையா. அந்நிலையில் எகிப்தியர்கள் தங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள சதி பற்றிக் கிடைத்துள்ள கடிதச் செய்தியை பஸராவாசிகளுக்கும் கூஃபாவாசிகளுக்கும் அறிவித்து தங்களுக்குத் துணை புரிய அவர்களை அழைக்க விரும்பியிருந்தால் தனித் தனியாக இரு தூதர்களை அவர்கள் பால் அனுப்பியிருக்க வேண்டும். அத்தூதர்கள் மதீனா நோக்கி ஆறு நாட்கள் பயணம் செய்து அங்கிருந்து பிரிந்து ஒருவர் பஸராவின் பாதையிலும் மற்றவர் கூஃபாவின் பாதையிலுமாக ஆறு நாட்கள் பயணம் செய்திருக்க வேண்டும். செய்தியறிந்த பஸரா கூஃபாவாசிகள் மீண்டும் திரும்பி மதீனாவை நோக்கி ஆறு நாட்கள் பயணம் செய்து வர வேண்டும். இவ்வாறாக, மதீனாவை விட்டும் வெளியேறிய எகிப்தியர்கள் பனிரண்டாம் நாளும், பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் இருபத்து நான்காம் நாளுமே மதீனா வந்தடைய முடியும். படைகள் பெயர்ந்து செல்லும் வேகத்துக்கும் தனித் தூதர்கள் விரைந்து செல்லும் வேகத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் இருந்தாலும், எகிப்தியர்களிடமிருந்து ஆறாம் நாள் புறப்பட்ட தூதர்கள் இருவரும் பனிரண்டாம் நாள் மதீனாவை மடைந்து பஸரா, கூஃபாவின் திசையில் விரையும்போது பஸராவாசிகளும் கூஃபாவாசிகளும் தங்கள் பயணங்களைத் தொடர்ந்து இன்னும் பல நாள் தொலைவைக் கடந்திருப்பர். எப்படியும் பஸராவாசிகளும், கூஃபாவாசிகளும் முப்பது நாட்களுக்கு முன்பாக மதீனா வந்தடையவே

முடியாது. ஆனால் அவர்கள் அனைவருமே ஒட்டுமொத்த மாக மதீனாவை விட்டும் புறப்பட்ட மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் காலையிலேயே மதீனாவினுள் நுழைந்து விட்டனர். அதுவே அவ்விருபெரும் நபிமணித் தோழர் களுக்கும் ஐயத்தைத் தந்து விட்டது.

(2) படை பெயர்ந்து செல்லும் வேகத்தையும் தூதன் விரைந்து செல்லும் வேகத்தையும் கணித்துப் பார்க்கையில், உண்மையில் எகிப்தியர்கள் ஆறு நாட்கள் பயணத் தொலை யில் உள்ள புவைபை அடைந்த அதே சமயம் கலீஃபா அவர்களின் ரகசியச் செய்தியை எடுத்துச் சென்ற தூதன் எகிப்ததையே அடைந்திருக்க வேண்டும். அப்படியல்லாமல் தம் எதிரிகளை வஞ்சகத்தோடு கொல்ல சதி சூழ்ந்ததாகப் பழி கூறப்பட்ட கலீஃபா தம் செய்தியை எடுத்துச் செல்ல எதிரிகள் சென்ற பாதையிலேயே சென்று அவர்களின் முன் னேயே உலவிச் சிக்குமாறு ஒரு பித்துக்குளியையா தூதனா கத் தேர்ந்தெடுத்திருப்பார்கள். மர்வானும் கூட அத்தகைய மதியீனத்தோடு செயல்பட்டிருக்க முடியாது.

(3) பிடிபட்ட அடிமையைத் தம் முன் விசாரணைக் காகக் கொணர்ந்து சேர்ப்பிக்குமாறு கலீஃபா அவர்கள் இட்டக் கட்டளையைக் கலகக்காரர்கள் ஏற்கவும் இல்லை. அவ்வடிமையை கலீஃபா அவர்களுக்கோ மற்ற நபித் தோழர்களுக்கோ காட்டவும் இல்லை. தாங்களே விசா ரித்து விட்டதாகக் கூறி விட்டனர்.

இந்த அடிப்படைக் காரணங்களெல்லாமே அக்கடித நிகழ்ச்சி கலகக்காரர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சதி நாடகமேயன்றி அவ்வாறான ஒரு கடிதத்தைக் கலீஃபா அவர்களேயல்ல கலீஃபாவின் செயலர் மர்வானோ அல்லது மதீனாவைச் சார்ந்த மற்ற எவரோ எழுதவே இல்லை என்பதற்குப் போதுமான சான்றுகளாகும்.

தம் குடும்பத்தவர்களிடத்தில்-மற்றவர்கள் குரோதங் கொள்ளுமளவு-மட்டற்ற பாசமும் அன்பும் கொண்ட கலீஃபா, குற்றச்சாட்டுக்காளானவர்கள் தம் குடும்பத்தவர் களாகவே இருந்தபோதிலும், சாட்சியங்களோடு அவர்

களின் குற்றம் நிரூபிக்கப்படுகையில், சட்டத்தின் தண்டனையை அவர்களுக்கு அளிப்பதில் எத்தனைக் கடின சித்தமுடையவர்கள் என்பதற்கு கூஃபாவின் ஆளுநர்-கலீஃபாவின் இளவல் வலீத் இப்னு உக்பாவின் உடல் ஏற்ற சவுக்கடிகள் சான்று கூறுகின்றன. அந்த நிலையில் மர்வானோ கலீஃபா அவர்களைச் சார்ந்த மற்ற எவருமோ கலீஃபா அவர்களின் பெயராலேயே கடிதம் எழுதி தங்களுக்குத் தாங்களே கேடு தேடிக் கொள்ள எங்ஙனம் துணிவார்கள்?

உண்மையில் அக்கடிதம் எதிரிகளே தயாரித்த ஒன்று என்பதற்கு அதன் வாசகமே சான்று கூறுகிறது. இப்னு அதீஸின் தாடியைச் சிரைக்கும்படியாக அதில் கண்டிருந்த வாசகம் இஸ்லாமிய ஷரீஅத்துக்கே புறம்பான ஒன்று. இப்னு அதீஸும் ஒரு முஸ்லிமாக இருந்த நிலையில் இஸ்லாமிய கலீஃபா தம் மாநபியின் ஷரீஅத்துக்குப் புறம்பான ஒரு தண்டனையை அவன் ஓர் எதிரி என்ற காரணத்திற்காகவும் எப்படி விதிக்க முடியும்? அதற்கு முன்னரும் கலீஃபா அவர்களோ அல்லது அவர்களின் எந்த ஓர் அதிகாரியோ அத்தகைய தண்டனையை எவருக்கும் விதித்ததே கிடையாது.

ஒவ்வொரு நகரங்களிலிருந்தும் மற்ற நகரங்களில் இருந்தவர்களுக்கும், மதீனாவிலிருந்து உம்முல் முஉமினீன்கள், நபித் தோழர்கள் பெயராலும், எகிப்தியர்களுக்கு ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெயராலுமே போலிக் கடிதங்களை எழுதிக் கொண்ட சதிகாரர்களுக்கு, கலீஃபா உதுமான் (ரலி) அவர்களின் பெயராலும் ஒரு கடிதம் எழுத என்ன சிரமம் இருக்கிறது? கலீஃபா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல் மதீனாவிலிருந்தே சதித் திட்டமிட்டு புறப்பட்ட அவர்கள் சாட்சியம் காட்ட அரசாங்க ஒட்டகை ஒன்றை களவாடிச் சென்றிருக்கலாம். கலீஃபா அவர்களின் முத்திரையைப் போன்ற போலியானதை உருவாக்கியுமிருக்கலாம்.

எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றவர்கள் கலீஃபா அவர்களுக்கு எதிரிகளே போல் பஸரா-கூஃபா ஆகிய நகரங்களின் புறம் புறப்பட்டுச் சென்றவர்களும் கலீஃபா அவர்களுக்கு எதிராகக் கிளர்ந்தவர்களே அல்லவா? அவர்களெல்

லாம் சிறு எண்ணிக்கையினராக மதீனாவுக்கு வந்திருந்த சமயத்தில் அவர்களை நிர்மூலமாக்க கலீஃபா அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கிட்டவில்லையா? ஸஹாபாக்களனைவரும் அதற்கென துணிந்தெழவில்லையா? அவர்களின் உணர்வு களனைத்தையும் புறக்கணித்து, எதிரிகளின் குற்றங் களைப் பொறுத்து, தம் பொறுமையின் மூலமும் மன்னிப் பின் மூலமுமே அவர்களை வழி திருத்த எண்ணிய கலீஃபா அவர்களை—வாக்களித்து புறமுதுகில் தாக்கத் துணிந்த— வஞ்சகராக எப்படி எண்ண முடியும்?

அப்படியே வஞ்சகத்தோடு சதி சூழ்ந்தாலும் கலீஃபா அவர்களோ அல்லது அவர்களின் செயலர் மர்வானோ எகிப்தின் ஆளுநருக்கு எழுதியது போன்றே பஸரா, கூஃபா ஆகியவற்றின் ஆளுநர்களுக்கும் எழுதி ஒரே சமயத்தில் எல்லா எதிரிகளையும் கருவருக்கவல்லவா முனைந்திருக்க வேண்டும். ஆனால், அத்தகைய எந்தத் துப்பும் பஸரா கூஃபாவை நோக்கித் திரும்பிய கூட்டத்தாரிடம் சிக்க வில்லை. எகிப்தை நோக்கித் திரும்பிச் சென்றவர்களே கடிதத்தைக் கண்டார்கள். அவர்களுக்கிடையே மட்டுமே இப்னு ஸபா இருந்தான். அவனுடைய வஞ்சகத் திறன் கொண்டு கலீஃபா அவர்களின் பெயரால் உருவாக்கப் பட்ட போலியான ஒன்றே அக்கடிதம் என்பதற்கு இன்னும் என்ன ஆதாரம் வேண்டும்.

ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களின் பெயராலும், தல்ஹா, ஜ்ஸுபைர் (ரலி) ஆகியவர்களின் பெயர்களாலும், உம்முல் முஉமினீன்களின் பெயர்களாலும் போலிக் கடிதங் களை எழுதிய நிபுணர்கள் அத்துரோகிகள். தங்கள் மீதும் தங்கள் ஆளுநர்கள் அதிகாரிகள் மீதும் கலகக்காரர்கள் சுமத்திய எத்தனையோ குற்றச்சாட்டுகள் பொய்யானவை யாகவே வெளிப்பட்டிருந்த நிலையில், அவர்களின் கூற்றை ஏற்று எந்த விசாரணையுமின்றி மர்வானை அவர்களிடம் ஒப்படைக்க எவ்விதம் இசைவார்கள் கலீஃபா.

பதவி துறக்கவும் கலீஃபா அவர்கள் சம்மதிக்காத காரணம் அப்போதவர்கள் அடைந்திருந்த முதுமை யிலும் பதவியின் மீது அவர்களுக்கிருந்த மோகமல்ல.

அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் வாழ்நாளி லேயே அவர்கள் ஏற்றிருந்த ஓர் அருட்கட்டளை அவர் களைத் தடுத்து நின்றது.

ஒரு நாள் அண்ணலார் (ஸல்) அவர்கள்,

يَا عُثْمَانُ إِنَّهُ لَعَلَّ اللّٰهَ يُقَمِّصُكَ قَمِيصًا
فَإِنْ أَرَادُوكَ عَلَى خَلْعِهِ فَلَا تَخْلَعْهُ لَهُمْ

''உதுமானே! அல்லாஹ் உமக்கொரு மேலாடையை அணிவிப்பான். மக்கள் அதனை உம்மிடமிருந்து களைய முனைவர். நீர் அதனைக் களைந்து விடாதீர்'' என அருளியதாக அன்னை ஆயிஷா நாயகியார் அறிவிக்கிறார் கள். மாநபியின் திருக்கலீஃபா தங்கள் நாயகத்தின் கட்ட ளையைப் புறக்கணித்து பதவி துறக்க எங்ஙனம் துணிவார்கள்-தம் உயிரையே அவர்கள் துறக்க நேரிடி னும் சரியே!

ஆம்! அவர்களின் உயிரையும் துறக்கவே நேரும் எனவும் அண்ணலார் (ஸல்) அவர்கள் முன்னறிவித்துச் சென்றார்கள்.

தமக்குப் பின் தோன்றப் போகும் குழப்பங்களை விவரித்துக் கொண்டிருந்த ஒரு சமயம் நபி மணி (ஸல்) அவர்கள், 'அச்சமயத்தில் அநீதமாக அவர் கொல்லப் படுவார்' என ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களைக் குறித்துக் காட்டி கூறியதை ஹழ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்.

''மஸ்ஜிதுன் னபவீயில் அமர்ந்து ஒரு நாள் அண்ண லார் (ஸல்) அவர்கள் சமீபத்தில் தோன்றவிருக்கும் குழப் பத்தைப் பற்றி அறிவித்துக் கொண்டிருந்தார்கள். அப் போது பள்ளியில் நுழைந்த ஒருவரைச் சுட்டிக் காட்டி 'அவர் அந்நாளில் நேர்வழியின் மீதிருப்பார்' எனக் கூறி னார்கள். அது கருக்கல் நேரமாக இருந்ததாலும் அம் மனிதர் குளிருக்காக ஒரு போர்வையைப் போர்த்தியிருந்த

தாலும் அவர் யார் என அறிய முடியவில்லை. பள்ளியினுள் வந்த அவர் போர்வையை விலக்கி அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு முன் அமர்ந்தார். ஆம்! உதுமான் இப்னு அப்ஃபானே! அவரின் முகத்தைச் சுட்டிக்காட்டி 'பெருமானே! இவரா?' என நான் வினவியபோது அண்ணலார் (ஸல்) அவர்கள் 'ஆம்' என்றார்கள்'' என ஹழ்லரத் முர்ரா இப்னு கஅப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

கலீஃபா அவர்கள் அன்று நேரிய வழியின் மீதே நிலைத்திருந்தார்கள் என்பதில் நம்பிக்கை குறைந்தவர்களாக நல்லோர் எவரும் இல்லை. அவர்களின் தூய்மையிலும் மாநபித் தோழர்கள் எவரும் எள்ளளவும் ஐயம் கொள்ளவில்லை. ஆனால் குழப்பத்தையே குறியாகக் கொண்டவர்கள், திருந்த எந்த மார்க்கமும் இருக்கவில்லை. அவர்கள் எந்த ஆதாரத்தையும் கலீஃபா அவர்களின் முன் வைக்காமல் மர்வானைப் பாதுகாக்க நினைக்கும் கலீஃபா அவர்களும் பதவி துறக்க வேண்டும் எனக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள்.

கலகக்காரர்களால் தம் இல்லம் சூழப்பட்ட நிலையில் கலீஃபா அவர்கள் இனி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையைப் பற்றி ஆயலானார்கள். எகிப்தியர்கள் ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களிடம் மரியாதை கொண்டிருப்பதால் அவர்களையழைத்து அக்கலகக்காரர்களோடு பேசச் செய்வது கலீஃபாவின் சிரமத்தை நீக்கும் என கலீஃபா அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் கூறினார்கள். அந்த அறிவார்ந்த கூற்றை ஏற்று கலீஃபா அவர்களும் ஹழ்லரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து வரச் செய்தார்கள். எகிப்தியர்களின் நிலையுணர்ந்து வந்த ஹழ்லரத் அலீ (ரலி) ''அமீரல் முஉமினீன்! தாங்கள் வெளியில் வந்து மக்கள் முன் ஓர் உரையாற்றுவதே நலம், மற்ற கலகக்காரர்களும் இவர்களோடு வந்து சேருமுன் உங்கள் நிலையை மக்கள் அறிய உதவும்'' என்றார்கள்.

கலீஃபா அவர்கள் ஹழ்லரத் தல்ஹா, ஜுஸுபைர் (ரலி) போன்ற நபிமணித் தோழர்களனைவரையும் வரவழைத்தார்கள். மதீனாவின் மக்களும் வந்து பள்ளியில் கூடினார்

கள். கலகக்காரர்களும் அவர்களோடு கூடி அமர்ந்தார்கள். கலீஃபா அவர்கள் பேசத் துவங்கினார்கள். அல்லாஹ்வைப் புகழ்ந்து, அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் மீது வாழ்த்துரைத்த பின் கலீஃபா அவர்கள்,

''மதீனாவின் மக்களே! நான் உங்களை அல்லாஹ்வின் பால் பரஞ்சாட்டி ஒப்படைக்கிறேன். எனக்குப் பின்னர் ஒரு மேலான கலீஃபாவை அவன் உங்களுக்குத் தந்தருள்வானாக'' எனக் கூறி கலீஃபா அவர்கள் சற்று மவுனித்திருந்தார்கள். மீண்டும் தலை நிமிர்ந்து அவர்கள் பேசலானார்கள்:

''உங்களை நான் அல்லாஹ்வின் மீதாணையிட்டுக் கேட்கிறேன். கலீஃபா உமர் (ரலி) அவர்களின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த சமயம் உங்களின் இதயங்கள் உங்களில் மேலான ஒருவரை உங்களுக்குக் கலீஃபாவாக்கித் தரும்படியாக அல்லாஹ்விடம் கெஞ்சிக் கேட்டனவல்லவா? அந்த உங்களின் இறைஞ்சுதல் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையா? அல்லாஹ்வினால் தலைமை அருளப்பட்ட அந்த அடியார் சோதனைகளுக்குட்படுத்தப்படவில்லையா? அவரின் தகுதிகள் ஆயப்படவில்லையா? எவருடைய ஒப்புதலுமின்றி இந்தத் தலைமை பலவந்தத்தால் பறித்து எனக்களிக்கப்பட்டதா?

''மீண்டும் நான் ஆண்டவனின் மீதாணையிட்டுக் கேட்கின்றேன். இதன் மீது எனக்குள்ள முன்னுரிமையை, தகுதியை நீங்கள் அறிவீர்கள். இப்போது நீங்கள் சிந்தியுங்கள். மூன்று பேரைத் தவிர்த்து மற்றெவரையும் கொலை செய்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டதல்ல. ஒருவன் கொலைகாரன், மற்றவன் விபச்சாரம் செய்தவன், மூன்றாமவன் மார்க்கத்தைப் புறக்கணித்து வெளியேறியவன். இம் மூவரிலும் அல்லாத என்னை நீங்கள் கொல்வீர்களாயின் உங்களின் அந்த வாள் உங்கள் கழுத்துக்களின் மீதே நிலையாய் இருக்கும். அல்லாஹ் என்றுமே குழப்பத்தை உங்களை விட்டும் விலகச் செய்யமாட்டான்.''

கூட்டத்தில் ஒருவன் இடைமறித்துப் பேசினான், ''கலீஃபா உமர் (ரலி) அவர்களுக்குப் பின் அல்லாஹ்

நன்மையையே செய்தான். ஆனால் பின்னர் அவன் உம்மையே தன் அடியார்களுக்கு ஒரு சோதனையாக்கி விட்டான். உமக்குள்ள முன்னிடம் மறுக்கப்பட முடியாத ஒன்றே. நீர் தகுதியால் உயர்ந்தவரே. ஆனால் உம்முடைய பல செயல் முறைகள் அத்தகுதிகளை வைத்தும் உம்மை விட்டு விட எங்களை அனுமதிக்கவில்லை. ஏனெனில் வரப் போகும் நாட்களில் உம்மால் குழப்பங்கள் மேலும் அதிகமாகும். நீர் கூறுகிறபடி மார்க்கம் சுட்டிக் காட்டும்—கொல்லப்படத்தக்க—மூவரை விட மேலும் சிலரையும் கொல்லப் படத் தக்கவர்களாகவே நாங்கள் எண்ணுகிறோம். உலகத்தில் குழப்பத்திற்குக் காரணமானவர்கள், துரோகஞ் செய்து போராடுபவர்கள், உண்மைக்கும் நேர்மைக்கும் மாறாக நின்று திருந்த மறுப்பவர்கள் ஆகியோரையும் கொல்லத் தகும். ஐயமின்றி நீர் துரோகஞ் செய்தீர்; நீதிக்கு மாறு செய்தீர்; குழப்பம் விளைவிக்கத் துணை நின்றீர். உம் அதிகார பலத்தை எங்கள் மீது செலுத்தினீர். எங்களை எதிர்த்தவர்களுக்கும் இனி எதிர்க்க வருபவர்களுக்கும் உம் அதிகாரமே துணிவளிக்கக் கூடியதாக உள்ளது. நீர் பதவி துறந்தால் அவர்களனைவரும் அடங்கி விடுவர்'' என்று.

அந்த விதண்டாவாதத்தைக் கேட்டு கலீஃபா அவர்கள் மிகக் கவலை கொண்டார்கள். அவர்களின் கண்கள் நீரை வடித்தன. அதனைக் கண்ட பல நல்லோர்களின் கண்களும் அழுதன. ஆயினும் பொறுமையோடு அவர்கள் மீண்டும் கூறினார்கள்.

''மக்களே! நல்லுரைகளுக்குச் செவி சாய்க்கும் முதல் மனிதனாக நானே இருப்பேன். அல்லாஹ்விடத்தில் நான் என் பிழைகளைப் பொறுக்கத் தேடுகிறேன். பின்னர் நான் என் வாக்குறுதிகளின் புறம் திரும்ப கவனம் செலுத்துகிறேன். உங்களின் தலைவர்கள் என்னிடம் வாருங்கள். உங்களின் எண்ணங்களைக் கூறுங்கள். ஆண்டவன் மீதாணையாக நீதி என்னை ஓர் அடிமையைப் போல் வளைத்துத் திருப்பினாலும் நான் ஓர் அடிமையைப் போலவே அதற்குக் கட்டுப்படுவேன்; அதன் வழி நடப்பேன். அல்லாஹ்வின் புறமே தவிர்த்து வேறு எந்த மார்க்கமும் நமக்கில்லை. அவன் மீதே ஆணையாக நான்

உங்களைத் திருப்தியுறச் செய்வேன். எல்லாவற்றையும் உங்களுக்கு வெளிச்சமாக்குவேன்'' என்று. அத்துடன் கலீஃபா அவர்கள் தம் இல்லம் சென்றார்கள்.

அதன்பின் ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் கலகக்காரர்களோடு உரையாடினார்கள். அவர்களுக்கு அறிவுரைகள் கூறினார்கள். கலீஃபா அவர்களின் சொற்களைச் சுட்டிக்காட்டி விரைவில் அவர்களின் குறைகள் தீர்க்கப்படுமென நம்பிக்கையூட்டி கலைந்து செல்லக் கூறினார்கள். கலகக்காரர்களோ ஆளுநர்களும் அதிகாரிகளும் மாற்றப்பட வேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கென ஒரு காலவரம்பை நிர்ணயிக்கக் கோரி விடாப்பிடியாக நின்றார்கள். கலீஃபா அவர்களோடு கலந்துரையாடித் திரும்பிய அலீ (ரலி) அவர்கள் மூன்று நாட்கள் பொறுத்திருக்கும்படியாக அவர்களுக்குக் கூறி ஒருவாறாக அவர்களைக் கலைந்து செல்லச் செய்தார்கள். ஆனால் மூன்றாம் நாள் நடைபெற்றதென்ன?

★ ★ ★

எந்த உமையாக்களை கலீஃபா அவர்கள் தம் குடும்பத்தவர்கள் என்ற பாசத்தோடு அரவணைத்து, தமக்கு நற்றுணை புரிவார்கள் என்ற நம்பிக்கை கொண்டு பொறுப்புகளளித்து வைத்திருந்தார்களோ அந்த உமையாக்களில் ஒரு சிலரே கலீஃபா அவர்களின் நிம்மதிக்கு உலை வைத்துக் கொண்டிருந்த கொடுமையைத்தான் என்னென்பது!

குழப்பம் வீங்கி வெடிக்கும் என்பதை முன்னறிந்திருந்த கலீஃபா அவர்கள் எந்த விதமாகிலும் அதன் பழியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணி மிகப் பொறுமையோடு செயல்பட்டார்கள்; தங்களுக்கிழைக்கப்பட்ட அவமதிப்புகள் அனைத்தையும் சகித்தார்கள். ஆனால் அவர்களின் செயலராகச் செயல்பட்ட மர்வான் உட்பட உமையாக் குடும்பத்தைச் சார்ந்த அதி

காரிகள் பலரும் கலீஃபா அவர்களிடமிருந்து வெளிப்பட்ட மென்மையையும் சகிப்புத் தன்மையையும் முதுமையின் பலனாக வெளிப்பட்ட தயக்கமாகவும் அச்ச உணர்வாக வுமே கணித்தார்கள். அவர்களின் செயல்முறைகள் கலீஃபா அவர்களின் அணுகுமுறைகளுக்கு நேர்மாறானவையாக இருந்தன. கலீஃபா அவர்களின் கட்டளைகளுக்கு நேர் மாறான நடைமுறைகளை கலீஃபா அவர்களுக்குத் தெரி யாமலே அவர்கள் மேற்கொள்பவர்களாகவும் ஆயினர். அத்தகைய செயல்முறைகள் பல நபிமணித் தோழர் களுக்கே எரிச்சலையூட்டின.

பள்ளியிலிருந்து இல்லம் திரும்பிய கலீஃபா அவர் களை அவர்களின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த சில உமையாக்கள் வந்து சந்தித்தார்கள். கலீஃபா அவர்கள் மிக அதிகமாகவே தம் பலஹீனத்தை வெளிப்படுத்தி விட்டதாகக் குறை கூறினார்கள். கலீஃபா அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் அதனைக் கண்டித்தும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. மூன்று நாட்கள் வரை அவர்களின் இடையூறுகள் நீடித்தே வந்தன. நான்காம் நாள் காலை பள்ளியிலிருந்து வாக்குறுதி பெற்றுச் சென்ற கலகக்காரர்களின் ஒரு கூட்டம் கலீஃபா அவர்களின் இல்லத் தில் வந்து நின்றது—தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்கின் படி என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என அறிவதற்காக.

கலீஃபா அவர்கள் தம் செயலர் மர்வானை அனுப்பி வைத்தார்கள்—அவர்களிடம் உரையாட. ''அவர்களோடு அழகிய முறையில் சமாதானமாக உரையாடும்" என எச் சரித்தும் அனுப்பினார்கள். ஆனால் வெளியில் வந்த மர்வான் அந்த எச்சரிக்கையைக் காற்றோடு பறக்க விட் டார். கலகக்காரர்களுக்கு முன்வந்து நின்ற அவர் ''உங்களுக்கென்ன கேடு வந்தது? ஆட்சியைப் பறிக்கவா எண்ணி வந்தீர்கள்? அது உங்களால் ஆகக் கூடிய காரியமா? எங்களின் வன்மையைக் காட்டினோமானால் அதைத் தாங்க உங்களுக்கு வல்லமை இல்லை. உங்கள் கோரிக்கை

உங்களைத் திருப்தியுறச் செய்வேன். எல்லாவற்றையும் உங்களுக்கு வெளிச்சமாக்குவேன்'' என்று. அத்துடன் கலீஃபா அவர்கள் தம் இல்லம் சென்றார்கள்.

அதன்பின் ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் கலகக்காரர் களோடு உரையாடினார்கள். அவர்களுக்கு அறிவுரைகள் கூறினார்கள். கலீஃபா அவர்களின் சொற்களைச் சுட்டிக் காட்டி விரைவில் அவர்களின் குறைகள் தீர்க்கப்படுமென நம்பிக்கையூட்டி கலைந்து செல்லக் கூறினார்கள். கலகக் காரர்களோ ஆளுநர்களும் அதிகாரிகளும் மாற்றப்பட வேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கென ஒரு காலவரம்பை நிர்ணயிக்கக் கோரி விடாப்பிடியாக நின்றார்கள். கலீஃபா அவர்களோடு கலந்துரையாடித் திரும்பிய அலீ (ரலி) அவர்கள் மூன்று நாட்கள் பொறுத்திருக்கும்படியாக அவர் களுக்குக் கூறி ஒருவாறாக அவர்களைக் கலைந்து செல்லச் செய்தார்கள். ஆனால் மூன்றாம் நாள் நடைபெற்ற தென்ன?

★ ★ ★

எந்த உமையாக்களை கலீஃபா அவர்கள் தம் குடும்பத்தவர்கள் என்ற பாசத்தோடு அரவணைத்து, தமக்கு நற்றுணை புரிவார்கள் என்ற நம்பிக்கை கொண்டு பொறுப்புகளளித்து வைத்திருந்தார்களோ அந்த உமை யாக்களில் ஒரு சிலரே கலீஃபா அவர்களின் நிம்மதிக்கு உலை வைத்துக் கொண்டிருந்த கொடுமையைத்தான் என்னென்பது!

குழப்பம் வீங்கி வெடிக்கும் என்பதை முன்னறிந் திருந்த கலீஃபா அவர்கள் எந்த விதமாகிலும் அதன் பழியிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எண்ணி மிகப் பொறுமையோடு செயல்பட்டார்கள்; தங்களுக் கிழைக்கப்பட்ட அவமதிப்புகள் அனைத்தையும் சகித் தார்கள். ஆனால் அவர்களின் செயலராகச் செயல்பட்ட மர்வான் உட்பட உமையாக் குடும்பத்தைச் சார்ந்த அதி

காரிகள் பலரும் கலீஃபா அவர்களிடமிருந்து வெளிப்பட்ட மென்மையையும் சகிப்புத் தன்மையையும் முதுமையின் பலனாக வெளிப்பட்ட தயக்கமாகவும் அச்ச உணர்வாக வுமே கணித்தார்கள். அவர்களின் செயல்முறைகள் கலீஃபா அவர்களின் அணுகுமுறைகளுக்கு நேர்மாறானவையாக இருந்தன. கலீஃபா அவர்களின் கட்டளைகளுக்கு நேர் மாறான நடைமுறைகளை கலீஃபா அவர்களுக்குத் தெரி யாமலே அவர்கள் மேற்கொள்பவர்களாகவும் ஆயினர். அத்தகைய செயல்முறைகள் பல நபிமணித் தோழர் களுக்கே எரிச்சலையூட்டின.

பள்ளியிலிருந்து இல்லம் திரும்பிய கலீஃபா அவர் களை அவர்களின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்த சில உமையாக்கள் வந்து சந்தித்தார்கள். கலீஃபா அவர்கள் மிக அதிகமாகவே தம் பலஹீனத்தை வெளிப்படுத்தி விட்டதாகக் குறை கூறினார்கள். கலீஃபா அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் அதனைக் கண்டித்தும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. மூன்று நாட்கள் வரை அவர்களின் இடையூறுகள் நீடித்தே வந்தன. நான்காம் நாள் காலை பள்ளியிலிருந்து வாக்குறுதி பெற்றுச் சென்ற கலகக்காரர்களின் ஒரு கூட்டம் கலீஃபா அவர்களின் இல்லத் தில் வந்து நின்றது—தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்கின் படி என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என அறிவதற்காக.

கலீஃபா அவர்கள் தம் செயலர் மர்வானை அனுப்பி வைத்தார்கள்—அவர்களிடம் உரையாட. "அவர்களோடு அழகிய முறையில் சமாதானமாக உரையாடும்" என எச் சரித்தும் அனுப்பினார்கள். ஆனால் வெளியில் வந்த மர்வான் அந்த எச்சரிக்கையைக் காற்றோடு பறக்க விட் டார். கலகக்காரர்களுக்கு முன்வந்து நின்ற அவர் "உங்களுக்கென்ன கேடு வந்தது? ஆட்சியைப் பறிக்கவா எண்ணி வந்தீர்கள்? அது உங்களால் ஆகக் கூடிய காரியமா? எங்களின் வன்மையைக் காட்டினோமானால் அதைத் தாங்க உங்களுக்கு வல்லமை இல்லை. உங்கள் கோரிக்கை

களுக்கு நாங்கள் ஒரு போதும் பணிய முடியாது. உங்கள் உங்கள் நகரங்களுக்குத் திரும்புங்கள்" என்றார்.

கூட்டம் பரபரப்படைந்தது. பெருங்கூச்சலும் ஆரவாரமும் கிளம்பின. செய்தி ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களின் செவிக்கும் எட்டியது. அவர்கள் வியப்படைந்தார்கள். நேற்று கலீஃபா அவர்கள் கூறியதென்ன? இன்று மர்வானின் நடைமுறை என்ன?—எனச் சினமடைந்தவர்களாக அவர்கள் கலீஃபா அவர்களை வந்து சந்தித்தார்கள். மர்வான் விளைவித்துள்ள விஷமத்தனமான சங்கடத்தை விவரித்தார்கள். ''அமீரல் முஉமுனீன்! மூன்று நாட்களுக்கு முன் மாநபியின் மேடையில் நின்று தாங்கள் அளித்த வாக்குறுதி என்ன? இன்று அதற்கு மாறாக மர்வானின் கூற்றுக்கு என்ன நியாயம்? உண்மையில் மர்வான் தங்களின் கண்ணியத்துக்கு உலை வைக்கிறார். இனி கலகக்காரர்களிடையே என் சொற்களுக்கு என்ன மரியாதை கிடைக்கும்'' என வருத்தமுற்றுச் சென்று விட்டார்கள்.

கலீஃபா அவர்களுக்கும் உண்மையில் அச்சம்பவம் மிக்க கவலையையே அளித்தாலும் நடந்து விட்ட தவறுதலால் அவர்கள் களைத்தமரும் தருணமல்ல அது. கலகக்காரர்களுக்கோ இனி எவருடைய கோப தாபத்துக்காகவும் தாங்கள் பின்னடைய வேண்டிய தேவையற்ற துணிவு பிறந்து விட்டது. அவர்களின் முழுப் படையும் மதீனாவினுள் புகுந்து கலீஃபா அவர்களின் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டது.

முற்றுகை ஏறத்தாழ நாற்பது நாட்கள் வரை நீடித்தது. கலகக்காரர்கள் ஆரம்பத்தில் கலீஃபா அவர்களின் நடமாட்டத்துக்கு எந்தத் தடையும் செய்யவில்லை. மக்களின் அத்தலைவரே ஐங்காலமும் பள்ளிக்கு வந்து தொழுகையை நடத்தினார்கள். கலகக்காரர்களும் அவர்களின் பின்னேயே மக்களோடு அணி சேர்ந்து தொழுது கொண்டார்கள். கலீஃபா அவர்களின் குணப்பழக்கத்தில் வெளிப்பட்ட மேன்மையும் முகத் தோற்றத்தில் ஒளிர்ந்த காம்பீரமும் அவர்களை நெருங்க தீயோர்களுக்கும் ஒரு தயக்கத்தைத் தரவே செய்தன. ஆனால் அத்தீயோர் கடை வீதி

களிலும் தெருச் சந்திகளிலும் உலவி மக்களை எங்கும் ஒன்று கூட விடாமல் அச்சுறுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களை எவ்விதத்திலேனும் சமாதானப்படுத்திக் கலைக்க அலீ (ரலி) அவர்கள் போன்றோர் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தொய்வுற்றன.

அப்போதும் கலீஃபா அவர்கள் ஒப்பியிருந்தார்களானால் மதீனா வாழ் தோழர்கள் அனைவரும் திரண்டு நின்று போராடியிருக்க முடியும். ஆணவக்காரர்களின் அடாவடித்தனத்தை ஒழித்து நிலைமையைச் சமாளித்திருக்க முடியும். ஆனால் எந்நிலையிலும் தம் மாநபியின் திருநகரம் மீது இரத்தக் கறை படிந்து விடக் கூடாதென்பதையே குறியாகக் கொண்ட அப்பெருங் கலீஃபா வாளேந்த எவரையும் கண்டிப்பாக அனுமதிக்கவே இல்லை. அவரவர்களும் கையைப் பிசைந்த வண்ணம் தங்கள் இல்லங்களில் காத்திருப்பதே தவிர மாநபித் தோழர்களுக்கு வேறெந்த வழியும் இருக்கவில்லை. ஹழ்ரத் அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்களோ அந்நிலையைப் பொறாது மதீனாவை விட்டே வெளியேறி பாலஸ்தீனம் சென்று விட்டனர்.

அந்நிலையில் கலீஃபா அவர்கள் மாற்று வழியொன்றைக் கண்டார்கள். வெளி மாகாணங்களிலிருந்து படைகள் அதிகமாக மதீனா வந்து சேர்ந்திடில் அச்சுறுத்தலின் மூலம் அவர்களை வெளியேற்றி நகரின் புனிதம் அழியாமல் காத்திடலாம் என முடிவு கொண்டார்கள். அதன்படி ஒவ்வோர் ஆளுநருக்கும் கடிதங்களை எழுதி வெவ்வேறு தூதர்களின் மூலம் அந்தரங்கமாக அனுப்பி வைத்தார்கள்.

''அல்லாஹுத் தஆலா அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களைத் தன் உண்மைத் தூதராய், நன்மாராயம் கூறுபவர்களாய், அச்சமூட்டி எச்சரிப்பவர்களாய் உலகுக்கு அனுப்பி வைத்தான். அவன் கட்டளைகளை அண்ணலார் (ஸல்) அவர்கள் நிரப்பமாக நம்மிடம் எத்தி வைத்தார்கள். அதன் சம்பூரணத்துக்குப் பின்னரே அவர்களின் உலக வாழ்வு நிறைவு பெற்றது. தங்களின் பிரிவின் போது அண்ணலார் (ஸல்) அவர்கள் இறைவனின் திரு

வேதமான குர்ஆனை நம்மிடையே விட்டுச் சென்றார்கள். அதில் இறைவனின் கட்டளைகள், அடியார்களுக்கான அவனின் ஏவல் விலக்கல்கள் முழுமையாகக் காணப்படுகின்றன. அண்ணலார் (ஸல்) அவர்களின் பிரிவையடுத்து ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், ஹழ்ரத் உமர் (ரலி) அவர்களும் கலீஃபாக்களானார்கள். ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் முடிவின்போது நியமித்த ஒரு குழு அடுத்து கிலாஃபத்தின் பொறுப்பை – அதன் எந்தவித வேட்கையும் நான் கொண்டிராத நிலையிலும்—என்னிடம் ஒப்படைத்தது.

''நான் கலீஃபாவாக ஆனது முதல் மக்களுக்கு நன்மையானவற்றையே ஏவி வருகிறேன். சட்டத்துக்குப் புறம்பானவற்றை விட்டும் அவர்களைத் தடுத்து வருகிறேன். என் ஆட்சியின் நடைமுறைகள் அனைத்தும் அதன் குடிமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிந்தவையாகவே இருக்கின்றன. இதுவரை நான் எந்தப் புதுமையான நடைமுறைகளையோ சட்டத்துக்குப் புறம்பான கட்டளைகளையோ மக்கள் மீது திணித்ததில்லை. என் முன்னவர்களின் வழிமுறைகளையே மேற்கொண்டு திருக்குர்ஆனின் கட்டளைகளையே செயல்படுத்தி வருகிறேன்.

''நான் நியமித்த ஆளுநர்களையும் அதிகாரிகளையும் இதுவரை மக்கள் ஏற்றே வந்துள்ளனர். ஆனால் தீயோர் சிலர் எந்தவித முகாந்திரமுமின்றி அவர்கள் பால் குரோதம் கொள்ளத் துவங்கினர். தங்கள் புழுக்கச் சூட்டை வெளிப்படுத்த முனைந்த அவர்கள் என் அதிகாரிகளையும் என்னையும் ஆதாரமற்ற, உண்மைக்குப் புறம்பான பழிகளால் தூற்றினர். மூடத்தனமான அவர்களின் செயல் முறைகளை நெடுநாட்களாகவே கண்டும் நான் அவர்களிடம் பொறுமையையே தொடர்ந்து கடைபிடித்து வந்தேன். ஆனால்,

''இன்று நிலைமை வரை கடந்து விட்டது. எந்தவித தண்டனையும் அளிக்கப் பெறாத அவர்கள் அல்லாஹ்வின் வேதனைக்கும் அஞ்சாதவர்களாகி விட்டார்கள். அவனின் தூதர் பெருமான் (ஸல்) அவர்கள் உறையும் இப்பட்ட

...த்தின் புனிதத்தையும் புறக்கணித்து இங்கேயே பண்ட நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களின் அநீதியை அகற்ற நம்மோடு தோளிணைந்து நிற்க நாடுபவர்கள் இதனையே எம் அழைப்பாக ஏற்றுப் பங்கேற்பார்களாக''

—என்ற கலீஃபா அவர்களின் அழைப்போலைகள் நாடெங்கும் பெருங்கொந்தளிப்பை மூட்டி விட்டன. நல்லோர்கள் தங்களின் சிரமங்கள் அனைத்தையும் புறமொதுக்கிப் புறப்படலானார்கள். ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள், ஹபீப் இப்னு மஸ்லமா ஃபஹ்ரீயின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். எகிப்திலிருந்து அபூ ஸர்ராஹ், முஆவியா இப்னு கதீஜ் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார். கூஃபாவிலிருந்து கஅகா இப்னு அம்ர் அவர்களின் தலைமையிலும், பஸராவிலிருந்து மஜாஷிஇ இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களின் தலைமையிலும் படைகள் புறப்பட்டன. அவர்களில் ஏதேனும் ஒரு படையாகிலும் சில நாட்கள் முன்னதாகவே மதீனாவை அடைந்திருக்குமானால் நிலைமை மாற்றமடைந்திருக்கக் கூடும் என எண்ணலாம். ஆனால் இறைவனால் விதிக்கப்பட்ட எல்லைக் கோட்டை அதற்கென குறிக்கப்பட்ட காலத்துக்கு முன் எவர்தான் தாண்டி வர முடியும். அவர்கள் ஒவ்வொருவருமே இடை வழியிலேயே கலீஃபா அவர்களின் கோர முடிவைப் பற்றிய செய்தியைச் செவியுற்றவர்களாகத் தங்கள் தங்கள் மாகாணங்களுக்குத் திரும்பவே நேர்ந்தது.

வெளி மாகாணங்களிலிருந்து புறப்பட்ட துணைப் படைகள் வந்து சேரும் வரை கலீஃபா அவர்களின் அணுகுமுறைக்கேற்ப அதிகாரங்களில் இருந்த மற்ற உமையாக்களும் தங்கள் நடைமுறைகளில் நிதானத்தைக் காட்டி அமைதி காத்திருப்பார்களானால் ஒரு துர்ப்பேறான விளைவைப் பின்னர் அவர்கள் காணாதிருந்திருக்கலாம். ஆனால் மர்வான், அமீருல் முஉமினீன் அவர்களுக்கு உதவ அண்டை மாகாணங்களிலிருந்து படைகள் திரண்டு வந்து கொண்டிருக்கும் நிலையில் எதிரிகளிடம் எந்தத் தயவான உறவோ உடன்பாடோ அவசியமற்றதென எண்ணினார். அதிகாரக் கிறுகிறுப்பினால் அவரின் நடவடிக்கைகளில்

வெளிப்பட்ட துடிதுடிப்பும் பின்பலனைப் பற்றிய சிந்தனையற்ற அவரின் படபடப்பான பேச்சுக்களும் மாநபித் தோழர்களுக்கே சங்கடத்தையும் எரிச்சலையும் ஊட்டலாயின. வாளேந்த எவரையும் அனுமதியாத கலீஃபா அவர்களை எவ்விதத்திலேனும் அச்சோதனையிலிருந்து விடுவித்திட கலகக்காரர்களோடு சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களையே குழப்பத்தின் காரணகர்த்தாவாகவும் குற்றம் சாட்டிய மர்வானின் குளறுபடிகளை வரலாற்றின் குறிப்புகள் காட்டுகின்றன. ஒரு சமயத்தில் கலீஃபா அவர்களின் முன்னேயே நடந்த தர்க்கத்தில் மனஞ்சலித்த ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களும் இனித் தாம் எந்த நடவடிக்கையிலும் தலையிடுவதில்லை எனக் கூறி ஒதுங்கியிருந்து விட்டார்கள்.

முற்றுகை துவங்கி பதினெட்டாம் நாள் வெளி மகாணங்களிலிருந்து படைகள் திரண்டு புறப்பட்டு விட்ட செய்தி எப்படியோ கலகக்காரர்களை எத்தி விட்டது. தாங்கள் எந்த முன்னேற்பாடுகளையும் செய்திராத நிலையில் நிச்சயம் அவை கலீஃபா அவர்களுக்குத் துணையாக வரும் படைகளே என அவர்கள் எளிதாகவே கணித்துக் கொண்டார்கள். அதன்பின் அவர்கள் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினார்கள். கலீஃபா அவர்களைத் தம் இல்லத்தை விட்டே வெளிவராது தடுத்து நின்றார்கள். தொழுகைக்காகப் பள்ளிக்கும் கலீஃபா அவர்கள் செல்ல முடியவில்லை; ஒவ்வொரு வேளையும் கலீஃபா அவர்களின் இல்ல வாயிலில் 'முஅத்தின்' வந்து நின்று 'அஸ்ஸலாத் யா அமீரல் முஉமினீன்—மக்கள் தலைவரே! தொழுகை' என அழைப்பார். கலீஃபா அவர்கள் தாங்கள் செல்ல இயலாத நிலையில் ஹழ்ரத் அபூஹுரைரா (ரலி), இப்னு அப்பாஸ் (ரலி) போன்ற நபிமணித் தோழர்களை ஏவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சென்று தொழுகைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். பின்னர் கலகக்காரர்கள் முஅத்தினையும் அமீருல் முஉமினீனைக் குறிப்பிட்டு அழைக்கக்கூடாதெனத் தடுத்து விட்டார்கள். மக்களையும் அச்சுறுத்தி எவரையும்

கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் செல்லவும் மக்களின் அத்தலைவரைச் சந்திக்கவும் விடாமல் தடை செய்தார்கள். உணவுப் பொருள்களும் குடிநீரும் கூட கலீஃபா அவர்களைச் சென்றடையாமல் தடுத்து நின்றார்கள்.

உணவுப் பொருள்கள் தீர்ந்து இல்லத்தினுள் இருந்த குடிநீரும் தீர்ந்தபோது கலீஃபா அவர்கள் தங்கள் சிரமத்தை உம்முல் முஉமினீன்களுக்குத் தெரிவித்தனுப்பினார்கள். வீட்டின் மேலேறி நின்று 'எங்களின் குடிநீர்த் தேவையை அலீ (ரலி)யிடம் சென்று தெரிவிப்பார் உங்களில் எவரும் இல்லையா?' எனக் குரல் கொடுத்தார்கள். எப்படியோ அலீ (ரலி) அவர்களுக்குச் செய்தி எட்டியது. கலகக்காரர்களின் குணக் கேடுகளால் கலீஃபா அவர்களுக்கு நேர்ந்துள்ள நிலையை எண்ணி அவர்கள் வடித்த கண்ணீர் தாடியையே நனைத்தது. கலகக்காரர்களிடையே ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் வந்தார்கள்; கலகக்காரர்களைச் சினந்தார்கள்; ''இறை மறுப்பவர்களான பாரஸீக ரோமர்களும் கூட தங்கள் கைதிகளுக்குத் தண்ணீரைத் தடுக்கவில்லை. முஸ்லிம்களாக உங்களைக் கூறிக் கொள்ளும் நீங்கள் எந்த முன்னுதாரணத்தின் மீது கலீஃபாவுக்குக் குடிநீரைத் தடை செய்கிறீர்கள்'' எனச் சாடினார்கள். கலகக்காரர்களோ 'அது ஒரு போதும் நடக்காது' என முரண்டு பிடித்தார்கள். எப்படியோ ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சில நீர்த் துருத்திகள் கலீஃபா அவர்களைச் சென்றடைய ஹாஷிம்—உமையாக் குடும்பங்களைச் சார்ந்த சில அடிமைகள் காயமுறவும் நேர்ந்தது. தாங்கள் ஏற்ற சிரமங்களுக்குச் சான்றாக ஹழ்ரத் அலீ (ரலி) அவர்கள் தங்கள் தலைப்பாகையையே கழற்றி கலீஃபா அவர்களின் சமூகத்துக்கு அனுப்பி வைத்து இல்லம் திரும்பினார்கள்.

கலீஃபா அவர்களின் இறுதி உரை

கலீஃபா அவர்கள் மிகவும் கவலையுற்றார்கள்-தங்கள் முடிவைப் பற்றியல்ல, கிலாஃபத்தை அவர்கள் ஏற்றிருந்த தன் மூலம் அவர்களின் குடிமக்களாகவும், இஸ்லாத்தின் மூலம் அவர்களின் உடன் பிறப்புகளாகவும் இருப்பவர்களே

அவர்களின் உயிர் கொள்ளத் தவிக்கின்ற கோர நிலையைப் பற்றி! வீட்டை விட்டு வெளிவரவே முடியாத நிலையில் வீட்டின் மேலேறி நின்றாவது அவர்களுக்கு நல்லுரை வழங்க நாடினார்கள் கலீஃபா.

மறு நாள் காலை வீட்டின் மேலாகக் கலீஃபா அவர்களின் முகத்தைக் கண்டதுமே கூட்டத்தில் ஒரே ஆரவாரம் எழுந்தது. அதனைப் பொருட்படுத்தாது கலீஃபா அவர்கள் 'ஸலாம்' உரைத்தார்கள். எவருமே பதில் கூறவில்லை.

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

''நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கிறோம், நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம்'' என்ற (2 : 156) திருவசனத்தை ஓதிய கலீஃபா, ''அந்தோ! இஸ்லாத்தினால் பெருமை கொண்டு நிற்கின்ற என் தோழர்களிடமிருந்து என் ஸலாமுக்கு பதில் கிடைக்கவில்லையே'' எனக் கவலையுற்றார்கள்.

''நான் பதில் கூறினேன்—மெதுவாக'' எனக் கேட்டது ஒரு குரல்.

''அதுதானா நபி பெருமான் (ஸல்) அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த வழிமுறை! என் முகமனைச் செவியேற்ற நீங்கள் அதற்குப் பகரமாகக் கூறிய உங்களின் முகமன் என் செவிகளுக்கு எட்ட வேண்டியதும் அவசியமில்லையா?'' என வினவிய கலீஃபா அவர்கள் தொடர்ந்து பேசினார்கள்:

''அருமைச் சகோதரர்களே! என் உயிரைக் கொல்லத் தவித்து நிற்கின்ற நீங்கள் நான் கூறுவதைக் கேளுங்கள். இஸ்லாமிய சட்டம் மூன்று காரணங்களுக்காக ஒருவனைக் கொல்ல உங்களை அனுமதிக்கிறது. (1) ஒரு முஸ்லிமைக் கொன்ற பழிக்குப் பழியாகவேயன்றி அநீதமாக ஒருவன் கொலைப்பட்டால் அவனைக் கொன்றவனை நீங்கள் கொல்லலாம். (2) திருமணமானவன் விபச்சாரஞ் செய்தானேயானால் கல்லாலெறிந்து அவனை நீங்கள் கொல்லலாம். (3) மார்க்கத்தைப் புறக்கணித்து வெளியான ஒரு

'முர்தத்'தை நீங்கள் கொல்லலாம். ஆனால் ஆண்டவனின் மீதாணையாக எந்த ஒரு முஸ்லிமையும் நான் கொலை செய்யவில்லை. மார்க்கத்தைப் புறக்கணித்து நான் வெளிச் சென்றவனுமல்லன். இஸ்லாத்தை ஏற்ற பின்னரும் சரி அதற்கு முன்னரும் சரியே, ஒரு போதும் நான் விபச் சாரஞ் செய்தவனுமல்லன். இந்த நிலையில் என்னைக் கொன்று விட்டு நீங்கள் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் அதற்காக என்ன காரணத்தைக் கூறுவீர்கள்?

—எனக் கேட்ட கலீஃபா அவர்களுக்குக் கூட்டத்தினர் எவரும் எந்தப் பதிலும் கூறவில்லை.

''அன்புடைய தோழர்களே! நீங்கள் யாரைக் கொல்ல காத்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்தீர்களா?

''அல்லாஹ்வுடைய தூதரின் திருக்கரத்தில் என் கரத்தைத் பதித்து என்றைய தினம் பிரமாணம் செய்து இஸ்லாத்தை ஏற்றேனோ அன்று முதல் இன்று வரை எந்த ஒரு முஸ்லிமுக்கும் எதிராக அக்கரத்தை நான் பயன் படுத்தாதது மட்டுமின்றி, உறக்கத்திலும் கூட அக்கரம் என் மறைவிடத்திலும் பட்டுவிடாதவாறு நான் காத்து வந்திருப்பதை நீங்கள் அறிவீர்களா?

''அண்ணலார் (ஸல்) அவர்கள் தங்களின் ஆயிரத்து நானூறு தோழர்களுடன் வந்து ஹுதைபியாவில் தங்கிய நாளில் தங்களின் தூதனாக என்னை மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கிருந்து திரும்பி வர ஏற்பட்ட தாமதத்தால், ஒரு சமயம் கொல்லப்பட்டே விட்டேனா என்றும் ஐயம் பிறந்து விட்டது. அப்படிக் கொல்லப் பட்டிருந்தால் என் கொலைக்குப் பழி தீர்க்க தங்களின் ஆயிரத்து நானூறு தோழர்களிடமும் பிரமாணம் பெற்ற பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதியாக, 'இறைவா! என் இடக்கரமே உதுமானின் வலக்கரம்' எனக் கூறி தாங்களே எனக்காகப் பிரமாணம் செய்தார்கள் என்பதை அறிவீர்களல்லவா?

''அருமை நண்பர்களே! நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்து செய்து இப்புனித நகரில் குடியேறி இஸ்லாம்

வளரத் துவங்கியபோது கூட்டங்கூட்டமாகப் பெருகி விட்ட முஸ்லிம்கள் நின்று இறைவனைத் தொழ இப்பள்ளி யில் இடம் பற்றாதாகி விட்டது. அண்ணலார் (ஸல்) அவர்கள் 'அண்டியுள்ள நிலங்களை வாங்கி அல்லாஹ்வின் பள்ளியோடு சேர்த்து அதற்குப் பகரமாக சுவனத்தை என் கரத்தில் விலையாகப் பெறுபவர் யார்?' என அறை கூவி அழைத்தார்கள். அவர்களின் வேண்டுதலை ஆணை யாக ஏற்று இப்பள்ளியை விசாலப்படுத்தியவன் நானே என்பதை நீங்கள் அறிவீர்களல்லவா? அப்படியிருக்க எந்த நியாயத்தின் பேரில் இப்பள்ளியில் என்னைத் தொழ விடாது தடுத்து நிற்கிறீர்கள்?

''அருமைத் தோழர்களே! பீரெ ரூமாவைத் தவிர மதீனாவில் வேறு குடி நீர்க் கிணறே இல்லாதிருந்தது. இஸ்லாத்தின் மீது அழுக்காறு கொண்ட அதன் உரிமைக் காரன் அதிலிருந்து முஸ்லிம்களுக்கு நன்னீர் தர மறுத் தான். தங்கள் தோழர்களின் தவிப்பைக் கண்டு பொறாத பெருமானார் (ஸல்) அவர்கள் அதனை விலை பேசிப் பெற்று முஸ்லிம்களுக்கு உடைமையாக்கி அதற்குப் பகர மாகத் தங்களிடமிருந்து சுவனத்தை விலையாகப் பெறுப வர் யார்? என அழைத்தார்கள். அச்சமயம் முனைந்து நின்று அதனை விலை பேசிப் பெற்று அல்லாஹ்வுக்காக 'வக்ஃப்' செய்து முஸ்லிம்களின் கருகிய குடல்களையெல்லாம் குளிரச் செய்தவன் நானே என்பதை அறிந்திருந்தும் இன்று அக்குடிநீரை எனக்களிக்க ஏன் தடையாக நிற் கிறீர்கள்?''

கலீஃபா அவர்களின் எந்தக் கேள்விக்குமே விடை தராது—தர இயலாது கூட்டம் திணறி நின்றது.

அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தை ஏற்ற நாள் முதல் அன்று வரை எந்த சமுதாயத்துக்காகத் தங்கள் உடைமைகளை யடையிலாக் கடலாய் தடையின்றிப் பொங்கச் செய்து பொருத்தங் கொண்டார்களோ அதே—தங்கள் திருநபியின்—சமுதா யம் இன்று தம் உயிர் குடிக்கத் தவித்து நின்ற காட்சி கலீஃபா அவர்களின் இதயத்தைப் பிசைந்தது. அவர்கள்

த்ம் கனிமொழியால் வடித்த கண்ணீர்க் காவியம் கற்களை யும் கசிந்துருகச் செய்தது.

ஆனால் கற்களினும் கொடிய வன்னெஞ்சங்களைக் கொண்டிருந்தவர்களுக்கு அது என்ன பயன் தர முடிந்தது? கூட்டத்தின் ஒரு பகுதி தன் குற்றத்தை உணரவே செய்தது. ஆனால், இனி தங்கள் எண்ணங்களில் புரண்டு, கலீஃபா அவர்களுக்கு வாய்ப்பளித்து அவர்கள் திரும்பி விடுவார்களாயின், கலீஃபா அல்லாவிடினும் அவர்களின் குடும்பத்தார்கள்—உமையாக்கள்—அத்துரோகிகளில் ஒவ்வொருவரையாகத் தேடிப் பிடித்துக் கருவறுக்காமல் விடவே மாட்டார்கள் என்ற அச்சத்தை கொடு நெஞ்சம் படைத்திருந்த உஷ்த்தர் உருவாக்கி விட்டதால் மீண்டும் குழம்பினார்கள் கலகக்காரர்கள் அனைவரும்.

கலீஃபா அவர்களின் சிரமமறிந்து அன்னை உம்மு ஹபீபா (ரலி) சிறிது உணவுப் பொருள்களோடு தங்கள் கோவேறு கழுதையின் மீதேறி வந்தார்கள். கலகக்காரர்களில் ஒருவன் அவர்களைத் தடுத்தான். உமையாக் குடும்பத்தைச் சார்ந்த சிலரின் அமானிதங்கள் கலீஃபாவிடம் இருக்கின்றன. ஒருக்கால் விபரீதங்கள் ஏதும் விளைந்து விடுமாயின் அவ்வமானிதங்களுக்குரிய விதவைகள்—அநாதைகள் நட்டமடைந்து விடாதிருக்கவே அவற்றைக் கேட்டுப் பெற தாம் செல்வதாக அன்னையார் கூறினார்கள். 'எந்தக் காரணத்துக்காகவும் அம்மனிதரைச் சந்திக்க உம்மை அனுமதிக்கமாட்டோம்' என கலகக்காரர்கள் தடுத்தார்கள். அதனைப் பொருட்படுத்தாது அன்னையார் தங்கள் வாகனத்தை முன் செலுத்தினார்கள். ஒருவன் பாய்ந்து அதன் கயிற்றை அறுத்து விட்டான். அது மிரண்டு ஓட, கீழே விழவிருந்த அன்னையாரவர்களை சில மதீனாவாசிகள் காத்து இல்லம் சேர்த்தார்கள்.

அன்னை ஆயிஷா நாயகியார் ஹஜ்ஜுக்கெனப் புறப்பட்டார்கள். அப்போதைய சூழ்நிலையில் அவர்களை மதீனாவை விட்டும் செல்ல வேண்டாம் எனச் சில தோழர்கள் தடுத்தனர். பெண்மையின் கண்ணியமறியாக் கயவர்களிடத்தில் அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்

களுக்குக் கிடைத்ததற்கு மாறான எந்த மரியாதையும் தமக்கும் கிடைக்காது எனக் கூறிய அன்னையார், தம் மோடு துணையாக ஹஜ்ஜுக்கு வரும்படி தம் இளவல் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்களையும் அழைத் தார்கள். அப்படியாகிலும் கலீஃபா அவர்களுக்கெதிராக நிற்கும் பாவத்திலிருந்து தம் உடன் பிறப்பைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இப்னு ஸபாவின் சூழ்ச்சி வலையில் சரியாகச் சிக்கி விட்டிருந்த ஹழ்ரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்களின் சிந்தனையில் அது உறைக்கவில்லை. பெருமான் நபி (ஸல்) அவர்களின் எழுத்தர்களில் ஒருவராகப் பணியாற்றிய ஹழ்ரத் ஹன்ளலா (ரலி) அவர்களின் அறிவுரையும் பயனளிக்க வில்லை. அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் மற்றவர் களோடு சேர்ந்து மக்கா சென்றார்கள்.

வழியில் அவர்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. ''இப்னு அப்பாஸ்! அல்லாஹ்வினால் அழகிய சொல்வளம் அருளப் பெற்றுள்ள நீர் அதனைக் கொண்டாவது கலகக்காரர்களை திருத்துவீராக'' எனப் பணித்துச் சென்றார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் வாளணிந்தவர்களாகவே கலீஃபா அவர்களின் இல்லம் விரைந்தார்கள். அவர்களைக் கண்ட கலீஃபா அவர்கள் ஹஜ்ஜுடைய நாள் நெருங்கி விட்டதால் தாம் ஹஜ்ஜுக்குச் செல்ல இயலாத நிலையில் தம் சார்பாக அவர்களையே அரஃபா சென்று ஹஜ்ஜுடைத் தலை மையை ஏற்கக் கோரினார்கள்.

''அமீரல் முஉ்மினீன்! இவ்வாண்டு ஹஜ்ஜு செய்வதையும் விட இவர்களோடு போர் செய்வதையே புனிதமுடையதாக நான் எண்ணுகிறேன்'' எனக் கூறி னார்கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி).

''ஆண்டவனின் மீதாணையாக அவ்வாறு செய்ய உம்மை நான் அனுமதிக்கமாட்டேன்'' எனக் கண்டிப்புடன் மறுத்த கலீஃபா அவர்கள் பலவந்தமாகவே அவர்களை அவ்வாண்டின் ஹஜ்ஜுடைத் தலைவராக்கி அனுப்பி வைத்

தார்கள்—அரஃபாவில் ஹஜ்ஜாஜிகளுக்குப் படித்துக் காட்ட—தம் நிலையை விளக்கி எழுதப்பட்ட ஒரு கடிதத்துடன்.

கலீஃபா அவர்களின் இறுதிக் கடிதம்

''நான் இந்தக் கடிதத்தை எழுதும் இதே நேரம் கிலாஃபத்தின் மீது மோகங் கொண்ட என் தோழர்கள் தங்கள் முயற்சிகளில் துரிதப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னைத் தொழச் செல்லவும் விடாமல் தடுத்து விட்டார்கள். எனக்கும் பள்ளிக்கும் இடையே ஒரு தடையாகி விட்டார்கள். நகரம் கொள்ளை போய்க் கொண்டிருக்கும் நிலையில் நான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

''அவர்கள் என் மீது மூன்று நிபந்தனைகளை விதிக்கிறார்கள். முதலாவதாக அறிந்தோ அறியாமலோ என்னால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் பிணை ஏற்க வேண்டும். இரண்டாவதாக அவர்கள் விரும்பும் எவரையும் கலீஃபாவாக்கிக் கொள்ள இடம் விட்டு நான் பதவி துறக்க வேண்டும். மூன்றாவதாக என் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் விலகி நிற்கும் வகையில் நான் அவர்கள் காட்டும் ஏதேனும் ஒரு பகுதிக்குச் சென்று விட வேண்டும் என்பவையே அவை. முந்திய கலீஃபாக்களின் காலங்களிலும் அவர்கள் அறிந்தோ அறியாமலோ பாதிப்படைந்த மக்கள் இருந்திருக்கின்றனர். அவர்களில் எவரும் அக்கலீஃபாக்களை பழி தீர்க்க அலைந்ததில்லை. ஆனால் இவர்கள் நிச்சயம் என் உயிரின்பால் வேட்கை கொண்டவர்களே என்பதை நான் உணருகின்றேன். இனி கிலாஃபத் என்னும் இத்தலைமை-அல்லாஹ்வுக்காக ஆற்றப்படும் கடன். அதை நான் ஒதுக்குவதை விட வெறி நாய்கள் என்னைக் கடித்துக் குதறி விடுவதையே மேலாக எண்ணுகிறேன். மக்களை என் வழியிலிருந்து ஒதுக்கித் தள்ள நான் அதிகாரம் பெற்றவனல்லன். இதற்கு முன்னரும் என் வழியை ஏற்கும்படி அவர்களை நான் பலவந்தப் படுத்தவில்லை. அவர்கள் தங்களின் நன்மைக்காக தாங்களாகவே விரும்பி என்னுடைய தலைமையை ஏற்றார்கள்.

''உங்களில் இம்மையின் பாக்கியங்களைத் தேடுபவர்களுக்கு அவர்களின் விதியில் இறைவனால் நாடப்பட்டதே அவர்களுக்குக் கிடைக்கும். எவருடைய குறிக்கோள் அல்லாஹ்வையும் மறுமையையும் கொண்டதாக உள்ளதோ-சமூகத்தின் நலனை நாடுகிறதோ-பெருமானார் (ஸல்) அவர்களுடையவும் முந்திய கலீஃபாக்களுடையவும் முன்மாதிரிகளுக்கு இணைந்திருக்கிறதோ அவர்களுக்குரிய கூலியை அவர்களுக்கு அல்லாஹ்வே தருவான். நான் அவர்களுக்கு முழு உலகையும் சுருட்டித் தந்தாலும் அவர்கள் தேடிக் கொண்ட மார்க்கத்துக்கு அது விலையாகாது.

''நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனிடத்தில் உள்ள பாக்கியங்களைப் பற்றி சிந்தியுங்கள். வாக்குறுதியை, பிரமாணத்தை முறிப்பதை நான் ஒருபோதும் நேசிப்பதில்லை. அந்தச் செயல் அல்லாஹ்வுக்கே பொருத்தமற்ற ஒன்று. என் முன்னே மரணத்தையேயன்றி வேறெதையும் நிபந்தனை என்ற பெயரில் நீட்டப்படவில்லை. என்னுடைய இந்தத் தலைமை வேறெவருக்கும் தர முயற்சிக்கப்படுகிறது. ஆண்டவனின் அருட்கொடையை என்னிடமிருந்து பறிக்கப்படுவதாகவே இதனை நான் கருதுகிறேன். கொலையை-நயவஞ்சகத்தை-எந்தத் தீமையையும் நான் ஒப்பவில்லை. அல்லாஹ்வையும் அவன் தந்த மார்க்கத்தையும் உங்கள் முன் நிறுத்தி நான் வேண்டுகிறேன். சத்தியத்தையும் நேர்மையையும் பற்றிப் பிடியுங்கள். இறைவனின் விஷயத்தில் நீங்கள் தந்த வாகுறுதியைப் பேணி ஒழுகுங்கள்.

وَأَوْفُوا بِالْعَهْدِ إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا

''வாக்குறுதியை நீங்கள் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். ஏனென்றால் (மறுமையில்) வாக்குறுதியைப் பற்றி (உங்களிடம் நிச்சயமாகக்) கேட்கப்படும்'' என்ற அல்லாஹ்வின் (17 : 34) எச்சரிக்கையைக் கவனியுங்கள்.

إِنَّ النَّفْسَ لَأَمَّارَةٌ بِالسُّوءِ إِلَّا مَا رَحِمَ رَبِّي إِنَّ رَبِّي غَفُورٌ رَّحِيمٌ ۝

''என் இறைவன் அருள் புரிந்தாலன்றி (மனிதனுடைய) மனம் பாவம் செய்யும்படி தூண்டக் கூடியதாகவே இருக்கிறது. நிச்சயமாக என் இறைவன் மிக்க மன்னிப்போனும் கிருபையுடையோனுமாயிருக்கிறான்." (12:53)

''சிலருக்கு நான் அளித்த தண்டனைகளும் அவர்களுக்கு நன்மையை நாடியேயன்றி மாறான எண்ணம் கொண்டல்ல. இனி நான் பூரணமாக இறைவனின் புறமே பரஞ்சாட்டுகிறேன். அவனிடமே பிழை பொறுக்கத் தேடுகிறேன். அவனைத் தவிர பொறுத்தருள்பவர் எவரும் இல்லை. அனைத்தையும் அவனின் அருளே அடையவளைந்திருக்கின்றது.

مَنْ يَقْنَطُ مِنْ رَحْمَةِ رَبِّهِ إِلَّا الضَّالُّونَ ۝

''வழிகெட்டவர்களைத் தவிர தம் இறைவனின் அருளைப் பற்றி எவர்தான் அவநம்பிக்கை கொள்ளக் கூடும்." (15 : 57)

هُوَ الَّذِي يَقْبَلُ التَّوْبَةَ عَنْ عِبَادِهِ وَيَعْفُوا عَنِ السَّيِّئَاتِ وَيَعْلَمُ مَا تَفْعَلُونَ

''அவன்தான் தன் அடியார்களின் மன்னிப்புக் கோரலை அங்கீகரித்து, குற்றங்களையும் மன்னித்து விடுகிறான். அன்றி நீங்கள் செய்பவற்றையும் அவன் நன்கு அறிவான்." (42 : 25)

கலீஃபா அவர்கள் தம் வாழ்நாளில் இறுதியாக எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியே இது.

கலகக்காரர்களின் குறி கலீஃபா அவர்களின் மீது மட்டுமல்லாமல் கலீஃபாவின் ஆளுநர்களில் குறிப்பாக ஸிரியாவின் ஆளுநராக இருந்த ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்கள் மீதும் பதிந்திருந்ததை கலீஃபா அவர்கள்

அரஃபாவுக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டுகிறார்கள். அதன் காரணம் கூஃபாவிலிருந்து விரட்டப்பட்ட குழப்பக்காரர்களை ஸிரியாவில் தங்கி வாழ விடாமல் ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஜஸீரா வுக்குள் விரட்டிவிட்டதே. ஜஸீராவில் அப்துர் ரஹ்மான் இப்னு காலித் ஸைஃபுல்லாஹ்வின் கடும் நடவடிக்கை களில் தத்தளித்த உஷ்த்தர் உள்ளத்தில் அவர்களின் அப்போதைய துன்பத்துக்கு மூலகர்த்தாவாக ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்களே குடி புகுந்து விட்டார் கள். கலீஃபா அவர்களுக்கு ஒரு கேடு சம்பவித்து விட்டால் அதற்கான பழியில் சிக்க எவரிடமிருந்து தப்பித்தாலும் ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்களிட மிருந்து மட்டும் ஒரு போதும் தப்பிக்கவே முடியாதென் பதை அவர்கள் தம் அனுபவத்தால் உணர்ந்திருந்தார்கள். எனவே அவர்களின் கணை ஹழ்ரத் முஆவியா (ரலி) அவர்களின் மீது மிக அழுத்தமாகவே குத்திட்டு நின்றதை கலீஃபா அவர்களின் அக்கடிதம் உணர்த்துகிறது.

அரசியல் நடத்திய அக்கலீஃபாக்கள் அனைவரிடமும் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் ஆலோசனைகளுக்கு பெரும் மதிப்பிருந்தது. ஒரு சமயத்தில் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களும் அன்னையார் அவர்களை அணுகி அப்போதைய சூழ்நிலையில் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவுரை கூறுமாறு வினவியதைத் தம்முடைய அக்கடிதத்தில் குறிப்பிட்டிருக் கிறார்கள். ''அமீரல் முஉமினீன்! தாங்கள் அவர்கள் கேட் கின்ற சில ஆளுநர்களை மாற்றம் செய்தலே நல்லது. ஆனால் எக்காரணம் கொண்டும் ஹழ்ரத் முஆவியா, அபூ மூஸா (ரலி) ஆகியோரை மாற்றம் செய்யவே வேண்டாம். ஏனெனில் அவர்களை அப்பொறுப்புகளில் தாங்கள் நியமனம் செய்யவில்லை. அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களின் காலத்திலிருந்தே அவர்கள் பொறுப்பளிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். அம்ரிப் னுல் ஆஸ் (ரலி) அவர்களைத் தாங்கள் மீண்டும் எகிப்தின் ஆளுநராக அனுப்புங்கள். அவர் திறன்பட்ட நிர்வாகி,

மக்களும் அவருடைய நியமனத்தை மறுப்பின்றி விரும்பி ஏற்பர்'' என்பன கலீஃபா அவர்களுக்கு ஆயிஷா (ரலி) அவர்கள் எழுதிய சில ஆலோசனைகள். அவ்வாலோசனை களைத் தாங்கள் ஏற்றதாகவே கலீஃபா அவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். ஆனால் அவற்றைச் செயல்படுத்த இனி யொரு வாய்ப்பை அக்கலகக்காரர்கள் கலீஃபா அவர்களுக் குத் தரவே இல்லை. அதுவரை அவர்கள் நெருக்கடிகளை விளைவித்து, கலீஃபா அவர்களை தங்களுக்குப் பணிய வைத்து விடலாம் என்ற கணிப்பிலேயே நடமாடத் தடை விதித்து உணவு—தண்ணீர் பற்றாக்குறைகளால் சங்கடங் களை விளைவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கலீஃபா அவர்கள் தங்கள் நிலையில் கொண்டிருந்த உறுதி, துணைப் படைகள் வரும் செய்தி, ஹஜ்ஜாஜிகள் தங்கள் கடன்களை முடித்து மதீனா திரும்பி விட்டால் ஏற்படக் கூடிய விளைவு, கலீஃபா அவர்களுக்குப் பரிந்து மாநபித் தோழர்கள் மேற்கொண்ட முயற்சிகள், இனி கலீஃபாவை விட்டுத் தப்பி ஓடினாலும் தேடிப் பிடித்துக் கருவறுக்கப் படக் கூடிய பெருங்கண்டத்திலிருந்து தங்களில் ஒருவருமே தப்ப முடியாதென்ற அச்சம் ஆகிய அனைத்தும் ஒன்று கூடி கலீஃபா அவர்களை கொன்றே தீர்க்க வேண்டும் என்ற வைராக்கியத்தை அவர்களுக்கு உண்டாக்கி விட்டன.

அவர்களுக்கிடையே ஒரு சமயம் வந்து நின்ற ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள்,

''மக்களே! இறைவனின் வாளானது உறையினுள் ளிடப்பட்டிருக்கிறது. நபி பெருமான் (ஸல்) அவர்கள் குடி புகுந்த இப்பட்டணத்தை வானவர்கள் தங்கள் உறை விடமாக்கிக் கொண்டுள்ளனர். கலீஃபாவைக் கொல்வதில் நீங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள். அவரை நீங்கள் கொல் வீர்களாயின் உங்களோடு சேர்ந்து வாழும் விண்ணவர்கள் இந்நகரை விட்டும் வெளியேறி விடுவார்கள். உறையுள்ளி ருக்கும் இறைவனின் வாள் உருவப்பட்டு விடும். பின்னர் உலக முடிவு நாள் வரை அது உறையினுள் திரும்பாது, உங்

களுக்கிடையே சுழன்று கொண்டே இருக்கும்'' என எச்சரித்தார்கள். ஆனால் சதிகாரர்களின் செவிகள் அவர்களின் எச்சரிக்கையை ஏற்கவில்லை. ''கலீஃபாவோடு இந்த யூதனையும் கொல்வோம்'' என அவர்கள் கூக்குரலிட்டார்கள்.

''என்னைக் கொல்வதால் நீங்கள் எந்தப் பயனையும் அடையப் போவதில்லை. ஆனால் நபிமார்களைக் கொன்ற சமூகத்தினர் ஒவ்வொரு நபியுடைய உயிருக்கும் பகரமாக எழுபதினாயிரம் பேர்கள் வீதம் பழி தீர்க்கப்பட்டனர். நபியுடைய கலீஃபா கொல்லப்படுவாரானால் அவரின் கொலைக்குப் பகரமாக முப்பத்தையாயிரம் உயிர்கள் பலி கொள்ளப்படும்'' என்றவர்களாகச் சென்று விட்டனர் அத்தோழர்.

ஹழ்ரத் முகீரா இப்னு ஷஅபா (ரலி) அவர்கள் வந்து கலீஃபா அவர்களைச் சந்தித்தார்கள்.

''அமீரல் முஉமினீன்! நிலைமை எவருடைய கட்டுக்கும் அடங்காத வண்ணம் வளர்ந்து கொண்டுள்ளது. வாளேந்த தாங்கள் விதித்துள்ள தடையின் மூலம் தோழர்கள் செயலிழந்து அமர்ந்துள்ளார்கள். நான் உங்களுக்கு மூன்று யோசனைகள் கூறுகின்றேன்.

''ஒன்று நீங்கள் வீட்டை விட்டும் வெளியாகி கலகக்காரர்களுடன் போரிடுங்கள். நீங்கள் குற்றமற்றவர்கள், சத்தியத்தின் மீதிருக்கிறீர்கள் என்பதை மக்கள் திடமாக நம்புகின்றனர். அவர்கள் உங்களோடு நின்று போரிடக் காத்திருக்கின்றனர்.

''அல்லது இரகசிய வாயில் வழியாக வெளியேறி மக்காவுக்குச் சென்று விடுங்கள். புனித எல்லைக்குள் புகுந்து கலகம் விளைவிக்க எவரும் வரமாட்டார்கள்.

''மூன்றாவதாக நான் கூறும் யோசனை, தாங்கள் நேராக ஸிரியாவுக்குச் சென்று விடுங்கள். அங்கே முஆவியா (ரலி) உங்களுக்கு உதவியாகவும் பலத்த பாதுகாப்பாகவும் இருப்பார்'' எனக் கூறினார்கள் ஹழ்லரத் முகீரா (ரலி).

அதனைக் கேட்ட கலீஃபா அவர்கள்,

''வெளியில் சென்று ஒருக்காலும் நான் போரிட மாட்டேன். அகிலங்களுக்கு ஓர் அருட் கொடையாக வந்த அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் திருக்கரங்களைப் பற்றிய இந்த என் கரங்களால் முஸ்லிம்களின் இரத்தத்தையே சிந்த ஒருக்காலும் நான் அனுமதிக்கவே மாட்டேன்.

''இரண்டாவதாக, மக்காவுக்கு நான் செல்ல முடியாது. ஏனெனில், ''குறைஷிகளில் ஒருவன் கஅபாவின் புனிதத் தலத்தில் குழப்பத்தையும் கலகத்தையும் உண்டு பண்ணுவான். உலகத்தின் வேதனைகளில் சரி பாதி அவன் மீது இறங்கும்'' என அண்ணலார் (ஸல்) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த ஒருவனாக நான் இருக்க விரும்பவில்லை.

''மூன்றாவதாக, ஸிரியாவுக்குச் சென்று விடவும் நான் ஒப்பமாட்டேன். அது கோழைத்தனம் மட்டுமல்ல, எந்தக் காரணத்தைக் கொண்டும் என் இருலோக வாழ்வையும் துலங்க வைத்த வேந்தர் அண்ணலார் (ஸல்) அவர்கள் உறையும் இப்பட்டணத்தை விட்டும் வேறெங்குமே செல்ல என்னால் முடியாது'' என மறுத்து விட்டார்கள்.

அன்னை உம்மு ஹபீபா (ரலி) அவர்களுக்கிழைக்கப்பட்ட அவமதிப்பு, அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுக்கேற்பட்ட விரக்தி ஆகியவை கலீஃபா அவர்களின் செவிகளை எத்தி, அவர்களுக்கு பெருந்துயரளித்தன. துரோகிகளின் துடுக்குத்தனமான நடவடிக்கைகள் கலீஃபா அவர்களை மிக வருத்தலாயின. மனைவியார் நாயிலா (ரலி) அவர்கள், சொந்த உமையாக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அத்தனை பேரையும் விட ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்து அருகமர்த்தி ஆலோசனை கேட்பதே கலீஃபா அவர்களுக்குப் பலன் தரத்தக்கது என யோசனை கூறினார்கள். கலீஃபா அவர்களும் இப்போது தம் குடும்பத்தவர்களான உமையாக்களின் கைசேத நிலையைக் கவனிக்கலானார்கள். அவர்களிடமிருந்து ஒரு கடிதம் எப்படியோ ஹழ்ரத் அலீ (ரலி) அவர்களைச் சென்றடைந்தது.

''அபல் ஹஸன்! இளையவர்களின் சில குளறுபடிகள் தங்களைச் சோர்வுறச் செய்து விட்டன. ஆயினும் தங்கள் கடமையை நான் இப்போது நினைவூட்ட விரும்புகிறேன். என்னோடு தங்களுக்குள்ள உறவு மிகப் பாரம்பரியமானது. தாங்கள் எனக்கு இளவல் ஆகிறீர்கள். அனைத்துக்கும் மேலாக பெருமான் நபி (ஸல்) அவர்களின் கரம் பிடித்த நம் மீது அவர்களின் ஒரே அருட்போர்வையே நிழலிட்டு நிற்கிறது. அதற்கும் முந்திய அறியாமைக் காலத்தையே கவனித்தாலும் நாம் இருவரும் அப்து மனாஃபின் குடும்பம் என்பதை எவரும் மறுக்க முடியாது. குழப்ப வெள்ளம் இப்போது தலைக்கு மேலாக ஓடுகிறது. என் உயிரின் வேட்கை இப்போது சிலரைத் தவிக்கச் செய்கிறது. அவர்கள் என்னைக் கொல்லாமல் விடப் போவதில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன் — என்ற கலீஃபா அவர்களின் கடிதம் கிடைத்து ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் விரைந்து வந்தார்கள். வழியில் ஹழ்லரத் தல்ஹா (ரலி) அவர்களின் இல்லத்தின் முன் கலகக்காரர்களின் ஒரு கூட்டம் நிரம்பி நின்றது. அங்கு வந்த அலீ (ரலி) அவர்கள் மிகச் சினமடைந்தவர்களாகத் தோன்றினார்கள். அகத்தின் புகைச்சலை முகத் தோற்றத்தினாலேயே விளங்கிக் கொண்ட ஹழ்லரத் தல்ஹா (ரலி) அவர்கள், ''அபல் ஹஸன்!'' என அவர்களை அழைத்து ''நிலைமை கட்டுப்பாட்டைக் கடந்து விட்டது'' எனக் கூறி அமைதிப்படுத்தினார்கள். கலகக்காரர்களை அங்கிருந்து கலைந்து போகச் செய்த ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள், தம் மற்றொரு மகனார் ஹழ்லரத் ஹுஸைன் (ரலி) அவர்களையும் ஹஸன் (ரலி) அவர்களோடு சேர்ந்து நின்று கலீஃபா அவர்களின் வாயிலைக் காக்க அனுப்பினார்கள். எந்த நிலையிலும் எவரையும் கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் நுழைய விட்டு விடக் கூடாது என எச்சரித்தார்கள்.

கலீஃபா அவர்களின் மரணம்

துல்ஹஜ்ஜுடைய மாதம் பிறந்து புனிதமிக்க பதிமூன்று நாட்களும் உருண்டன. ஒருவாறாக ஹஜ்ஜு

டைய காலம் கழிந்தது. இனி முற்றுகையை நீடிக்கச் செய்வதால் பேராபத்துக்களே விளையும் எனக் கலகக்காரர்கள் சிந்திக்கலாயினர். துணைப் படைகள் வருவது ஒரு புறமிருக்க, திரும்பும் ஹஜ்ஜாஜிகள் நிச்சயம் கலீஃபா அவர்களுக்குதவுபவர்களாகவே இருப்பர். இனி முற்றுகையை நீடித்து நிற்பதும் சரி அல்லது கலீஃபாவை மதீனாவில் விட்டுத் தங்கள் நகரங்களுக்குத் திரும்பி விடுவதும் சரியே, தங்கள் சவக் குழியைத் தாங்களே தோண்டிக் கொண்ட பழியாகவே முடியும் என்பதை உணரத் துவங்கிய அவர்கள் கதவை உடைத்து கலீஃபாவின் இல்லத்தினுள் புகுந்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

கலீஃபா அவர்களின் விசாலமான அந்த வீட்டினுள்ளே முஹாஜிர்களும் அன்ஸார்களுமாக எழுநூறு பேர்கள் இருந்தார்கள். ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு ஜ்ஸுபைர் (ரவி) அவர்களின் தலைமையில் தங்கள் இன்னுயிர்களை ஈந்து கலீஃபா அவர்களின் நல்லுயிர் காக்க அவர்கள் துடிதுடித்து நின்றார்கள். ஆனால், 'எந்த ஒரு மனிதரும் எனக்காகத் தம் இரத்தத்தைச் சிந்த நான் அனுமதிக்கவே மாட்டேன். ஒரு முஸ்லிமுக்கு எதிராக—அவர் எத்தகைய துரோகத்தை எனக்கிழைத்திருந்தாலும் சரியே—வாளேந்த நான் ஒப்பவே மாட்டேன்' எனக் கண்டிப்புடன் அவர்களைத் தடுத்து விட்ட கலீஃபா அவர்கள்,

ٱلَّذِينَ قَالَ لَهُمُ ٱلنَّاسُ إِنَّ ٱلنَّاسَ قَدْ جَمَعُوا۟ لَكُمْ فَٱخْشَوْهُمْ فَزَادَهُمْ إِيمَٰنًا وَقَالُوا۟
حَسْبُنَا ٱللَّهُ وَنِعْمَ ٱلْوَكِيلُ ۝

''அவர்கள் எத்தகையோரென்றால், ஒரு சிலர் அவர்களிடம் (வந்து) 'உங்களுக்கு விரோதமாக (யுத்தம் புரிய) சகல மனிதர்களும் நிச்சயமாக ஒன்று சேர்ந்திருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்குப் பயந்து கொள்ளுங்கள்' என்று கூறிய சமயத்தில் அவர்களுக்கு(ப் பயம் ஏற்படுவதற்குப் பதிலாக) விசுவாசமே அதிகரித்தது. அன்றி 'அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன்; அவன்

சிறந்த பாதுகாவலனாகவும் இருக்கிறான்' என்றும் அவர்கள் கூறினார்கள்'' என்ற (3 : 173) திரு வசனத்தையும் அவர்களுக்கு ஓதிக் காட்டினார்கள்.

அப்படியும், கலீஃபா அவர்களின் அனுமதி இன்றியே ஒரு கூட்டம் வெளியில் போரிடத் துவங்கி விட்டது. கலகக்காரர்கள் ஒரு முடிவெடுத்து கலீஃபா அவர்களின் இல்லத்தின் கதவை உடைக்கத் துணிந்து விட்டதே காரணம். அப்படி முன் சென்ற கலகக்காரர்கள் ஓரிருவர் கொல்லப்பட்டனர். மாநபித் தோழர் ஹழ்ரத் முகீரா இப்னு அக்னஸ் (ரலி) அவர்களும் ஷஹீதானார்கள். அச்செய்தியறிந்து கலீஃபா அவர்கள் தம் வீரர்கள் அனைவரையும் கண்டிப்புடன் உள்ளே வரும்படி அழைத்தார்கள்; தம் காவலர்களில் ஒருவராய் நின்ற மாநபியின் திருப் பேரர் ஹஸன் (ரலி) அவர்களின் பால்முகம் கண்டு கலங்கினார்கள். 'என் உடன் பிறந்தார் மகனே! நீர் இங்கிருக்க வேண்டாம். உம் தந்தையிடம் சென்றிருப்பீராக' எனப் பணித்தார்கள். ஆனால் ஹஸன் (ரலி) அவர்கள் வாயிலை விட்டும் அகல மறுத்து விட்டார்கள்.

يٰقَوْمِ مَا لِيْٓ اَدْعُوْكُمْ اِلَى النَّجٰوةِ وَتَدْعُوْنَنِيْٓ اِلَى النَّارِ

''என்னுடைய ஜனங்களே! எனக்கென்ன (ஆச்சரியமாக இருக்கிறது!) நானோ உங்களை ஈடேற்றத்தின் பால் அழைக்கிறேன். நீங்கள் என்னை நரகத்தின் பால் அழைக்கிறீர்கள்" (40 : 41) என்ற வண்ணமே ஹழ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் வந்தார்கள். கலீஃபா அவர்களோடு உரையாடினார்கள். அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களின் ஓர் அருள்மொழியை எடுத்துரைக்கத் தம்மை அனுமதிக்குமாறு வேண்டினார்கள். அதனைச் செவியுற்றதுமே பேணுதல் உணர்வு கொண்ட கலீஃபா அவர்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். அங்குக் கூடியிருந்தவர்களை விளித்து உரையாற்றத் துவங்கிய ஹழ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்,

''அண்ணலார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தங்களுக்குப் பின் தோன்றப் போகும் பிளவுகளைப் பற்றியும் குழப்பங்களைப் பற்றியும் கூறிக் கொண்டிருந்தார்கள். ஒருவர், 'பெருமானே! அச்சமயம் எங்களுக்குரிய தங்கள் கட்டளை என்ன?' என்று வினவினார். அண்ணலார் (ஸல்) 'நீங்கள் உங்கள் தலைவருக்கும் அவரின் தோழர்களுக்கும் உதவியாக இருங்கள்' என உதுமான் (ரலி) அவர்களைச் சுட்டிக் காட்டிய வண்ணம் கூறினார்கள்" என அறிவித்தார்கள்.

தங்கள் மாநபியின் திருவாய் மொழியைக் கேட்டதுமே தோழர்கள் சிலிர்த்தெழுந்தார்கள். அவர்களனைவரையும் அமர்த்திய கலீஃபா அவர்கள்,

''அபா ஹுரைரா! அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் ஒரு நாள் தாம் ஓர் இரகசியத்தை ஒருவரிடமே கூற நாடுவதாக அறிவித்தார்கள். மக்கள் அபூபக்கர் (ரலி) அவர்களையும் உமர் (ரலி) அவர்களையும் அலீ (ரலி) அவர்களையும் ஒருவர் பின் ஒருவரையாகக் காட்டி நினைவூட்டினார்கள். அண்ணலார் [ஸல்] அவர்கள் தலையசைத்து மறுத்து விட்டார்கள். பின்னர் நான் இருப்பதும் அவர்களுக்கு சுட்டிக் காட்டப்பட்டது. ஏந்தலார் (ஸல்) அவர்கள் என்னைத் தனிமையில் அழைத்துக் கூறினார்கள், 'துரோகிகள் உம்மைக் கொல்ல சூழ்ந்து கொள்ளும் ஒரு நாளில் நீர் பொறுமையை இழந்து விட வேண்டாம்— எம்மை வந்து சந்திக்கும் வரை' என்று. எனவே நான் பொறுமையையே மேற்கொள்வேன்" எனக் கூறித் தடுத்து விட்டார்கள்.

ஹழ்லரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் வந்து கலீஃபா அவர்களுக்கு ஸலாமுரைத்தார்கள். ''அமீரல் முஉமினீன்! அன்ஸார்களின் ஒரு கூட்டம் உங்களுக்கு ஸலாம் உரைக்கிறது. தங்களின் எதிரிகளோடு போராடி மீண்டும் 'அன்ஸாருல்லாஹ்—அல்லாஹ்வின் உதவியாளர்கள்' என்ற அணிமொழியை ஏற்க அவர்கள் தங்கள் அனுமதியை நாடிக் காத்திருக்கிறார்கள்" என்றுரைத்தார்கள்.

''இறைவன் அவர்களின் எண்ணங்களைக் கொண்டே அவற்றுக்கான மேலான வெகுமதிகளை அவர்களுக்கு அருள்வானாக. அவர்களின் உதவி அல்லாஹ் எனக்களித்துள்ள பேரருளாகும். ஆனால் இப்புனித நகரினுள் இரத்தப் படுகொலைகளை நான் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டேன். என் உயிருக்காக மக்களின் உயிர்களும் உடைமைகளும் அழிய வேண்டவே வேண்டாம்'' எனக் கூறி மறுத்து விட்டார்கள் கலீஃபா.

கலீஃபா அவர்களின் வாழ்வின் இறுதி நாள் வெள்ளிக்கிழமையாக இருந்தது. வழமைபோல் அன்றும் அவர்கள் நோன்பிருந்தார்கள். காலைத் தொழுகைக்குப் பின் சற்று ஓய்வு கொண்டு கண் மலர்ந்த அவர்கள் திருமறையை ஓதத் துவங்கினார்கள். அருகே அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் அமர்ந்திருந்தார்கள். அன்புக் கணவரின் நிலையை நினைத்து இரவெல்லாம் இறைவனின் திருமுன் அழுதழுது அவர்களின் கண்களிரண்டும் கொவ்வைக் கனிகளாய்ச் சிவந்திருந்தன. வெளியே கலகக்காரர்களின் ஆரவாரமும் கதவு இடிபடும் ஒலிகளும் கேட்டன.

கலீஃபா அவர்கள் தங்கள் அடிமைகள் அனைவரையும் அழைத்தார்கள். ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்டவர்கள் வாளேந்திய வண்ணம் முன்வந்து அணிவகுத்து நின்றனர்.

''உங்களின் இந்த வாட்களை இடையில் சொருகிக் கொள்பவர்கள் இன்று என்னிடம் உரிமை பெறுவார்கள்'' என அறிவித்தார்கள் கலீஃபா. அவ்வாறே அவர்கள் அனைவரும் அன்று தங்கள் அடிமைத் தளைகள் அறுந்து விடுதலை பெற்றார்கள்.

''அமீரல் முஉமினீன்! தங்களின் உயிர் காக்கக் காத்திருக்கும் தோழர்களுக்கு இந்த நிலையிலும் போர் செய்யத் தாங்கள் அனுமதி வழங்கலாகாதா'' எனக் கெஞ்சினார்கள் நாயிலா அம்மையார்.

கலீஃபா அவர்கள் எவ்விதச் சபலமும் அற்றவர்களாக அமைதியாகப் பேசினார்கள் : "நாயிலா! நீயும் பொறுமையையே மேற்கொள்வாயாக. எம்பெருமான் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் உஹது மலையின் மீது ஒரு நாள் வீற்றிருந்தபோது அம்மலையானது அசைந்தாடியதையும், அச்சமயம் தங்கள் காலால் அம்மலையை எத்திய என் தாயகர் (ஸல்) அவர்கள், 'உஹதே! நீ அமைதி கொள்; உன் மீது ஒரு நபியும் ஒரு ஸித்தீக்கும் இரு ஷுஹதாக்களுமே வீற்றிருக்கிறோம்' எனக் கூற அம்மலை அமைதி கொண்டதையும், அச்சமயம் அண்ணலார் (ஸல்) அவர்களோடு என் முன்னோடிகளான அபூபக்கர், உமர் (ரலி) ஆகியோரைத் தவிர்த்து நான் மட்டுமே இருந்தேன் என்பதையும் நீ அறிவாயல்லவா? அண்ணலார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பும் தவறிப் போகும் என நீ நினைக்கிறாயா? ஆண்டவனின் மீதாணையாக அவர்களின் சொல் அணுவளவும் பொய்க்காது. நான் கொல்லப்பட்டு ஷஹீதாவது உறுதி எனத் தெரிந்த நிலையில் அதற்குத் தடையாக எந்த ஒரு முஸ்லிமின் இரத்தத்தையும் சிந்த ஒரு போதும் நான் அனுமதிக்கவே மாட்டேன்.

"நாயிலா! சற்று முன்புதான் அருமைப் பெருமானார் (ஸல்) அவர்களையும் என் தோழர்கள் அபூபக்கர், உமர் [ரலி] ஆகியோரையும் நான் கண்டேன். அம்மூவரும் "உதுமானே! இன்று உம்முடன் நோன்பு திறக்க நாங்கள் காத்திருப்போம், விரைந்து வாரும்" எனக் கூறி மறைந்தார்கள். எனவே மிஞ்சியிருக்கும் கொஞ்ச நேரத்தில் நான் திருமறையை ஓதிக் கொள்கிறேன்" எனக் கூறிய கலீஃபா திருக்குர்ஆனைத் திறந்து ஓதலானார்கள்.

சற்று நேரத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் ஏதோ கூற வந்தார்கள். அவர்களை நோக்கிப் புன்முறுவல் பூத்த கலீஃபா அவர்கள், "அப்தல்லாஹ் இப்னு ஸலாமே! இரவு நான் நபி பெருமான் (ஸல்) அவர்களைச் சந்தித்தேன். அண்ணலார் (ஸல்) அவர்கள், "உதுமானே! அக்கிரமக்காரர்கள் உமக்குத் தண்ணீரைத் தடுத்து உம்மைத் தாகத்தால் தவிக்கச் செய்து விட்டார்களோ" என்றார்கள்.

''பெருமானே! ஆம்" என்றேன் நான். என் ஏந்தலார் நீர் நிறைந்த ஒரு குடுவையை என் முன் வைத்தார்கள். அதிலிருந்த மதுரமான குளிர்ந்த நீரைக் கொண்டு நான் தாகந்தீர்ந்தேன். அதன் குளுமையை நான் உறக்கத்தி லிருந்து விழித்துக் கொண்ட நிலையிலும் என் நெஞ்சக் குழியில் இப்போதும் நான் உணர்கின்றேன். அதன் பின்னர் அண்ணலார் (ஸல்) அவர்கள், ''உதுமானே! நீர் விரும்பினால் உம்முடைய துரோகிகளுக்கு எதிராக உமக்கு தவ நான் இப்போதும் சித்தமாகவே இருக்கிறேன். அல்லது நீர் இன்று நம்மிடம் வந்து நம்மோடு நோன்பு திறக்க லாம்'' எனக் கூறினார்கள். அப்தல்லாஹ் இப்னு ஸலாமே! அதற்கு மறுமொழியாக நான், ''அல்லாஹ்வின் தூதரவர் களே! தங்களோடு இன்று நோன்பு திறப்பது எனக்கு இவ்வுலக வாழ்வை விட ஆயிரம் மடங்கு மேலானது எனக் கூறி விட்டேன்'' என்றார்கள். ஹழ்லரத் அப்துல் லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் தாங்கள் கூற வந்ததைக் கூறாமலே சென்று விட்டார்கள்.

கலகக்காரர்கள் இனித் தாமதிக்கலாகாது எனக் கிளர்ந்தெழுந்தார்கள். கதவை உடைத்து வாயில் வழி யாகவே கலீஃபா அவர்களின் வீட்டினுள் புக அவர்கள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. கலீஃபா அவர்களின் இல்ல வாயிலில் நின்றிருந்தவர்கள் 'மிகச் சிலரேயாயினும் அவர்கள் தங்கள் முழுத் திறன் கொண்டு எதிரிகளைப் பின் தள்ளினார்கள். ஆத்திரமடைந்த கலகக் காரர்கள் சூழ நின்று கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் அம்பெய்யலானார்கள். அவற்றில் ஒன்று வீட்டினுள் நடமாடிக் கொண்டிருந்த மர்வானின் மீதும் பட்டு விழுந் தது. ஹழ்லரத் முஹம்மத் இப்னு தல்ஹா (ரலி) அவர் களும் காயமுற்றனர். ஹழ்லரத் ஹஸன் (ரலி) அவர்கள் மீதும் ஓர் அம்பு பட்டு இரத்தம் வடியலாயிற்று. இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் முகத்தில் இரத்தம் வழியக் கண்ட ஹழ்லரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர் களைப் புதிய அச்சம் பற்றிக் கொண்டது. தங்கள் எகிப்திய சகாக்களிடம் ''ஹாஷிம் குடும்பத்தார்கள் இந்த இரத் தத்தைக் கண்டார்களானால் அதற்கென நம்மைப் பழி

தீர்க்கத் துவங்கி விடுவார்கள். நம்முடைய திட்டமே நாச மாகி விடும்'' என எச்சரித்தவராக அவர்களில் நால்வரை அழைத்துக் கொண்டு பிரிந்து சென்றார்.

அவர்களனைவரும் பின்புறமாகச் சென்று கலீஃபா அவர்களின் வீட்டை ஒட்டியிருந்த பின் வீட்டின் மீதேறி அங்கிருந்து கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் நுழைந்து விட்டனர். வீட்டின் கீழ்ப் பகுதியில் கலீஃபா அவர்கள் திருமறையை ஓதிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் அருகமர்ந்து செவி யுற்ற வண்ணமிருந்தார். கலீஃபா அவர்களின் பாது காவலர்களாய் இருந்தவர்களனைவரும் வீட்டின் மேல் பகுதியில் முன்புறமாக நின்று ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். பின்புறமாக வீட்டி னுள் நுழைந்தவர்களை அவர்களும் கவனிக்கவில்லை.

கலீஃபா அவர்களின் மனைவியார் அங்கிருந்ததால் ஹழ்ரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்கள், மற்றவர்களை வெளியில் நிறுத்தி தாம் மட்டுமே உள்ளே நுழைந்தனர். 'ஓய் நஅஸல்!*' என்றழைத்தவண்ணம் கலீஃபா அவர்களின் தாடியை எட்டிப் பிடித்தனர்.

''நான் நஅஸல் அல்லன். உதுமான் இப்னு அப்ஃபான் —அமீருல் முஉமினீன்'' என்றவர்களாக ஏறிட்டு நோக்கி னார்கள் கலீஃபா.

''கிழடு தட்டிய இந்த முதுமையிலும் பதவிப் பெரு மையா உமக்கு?'' என விளித்தனர் முஹம்மத் இப்னு அபூ பக்கர் (ரலி).

''என் சகோதரர் மகனே! இன்று உம் தந்தை அபூ பக்கர் (ரலி) உயிரோடு இருந்தால் என் முதுமையை மிகக் கண்ணியப்படுத்துவார். உம்முடைய இச்செயலைக் கண்டு நிச்சயம் நாணமடைவார்'' என்ற கலீஃபா அவர்களின் இத மான சொற்கள் இடிகளாய்த் தாக்கின முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்களின் இதயத்தை

* நீண்ட தாடியுடன் நடமாடிக் கொண்டிருந்த ஓர் எகிப்தியன்.

"பெருமானே! ஆம்" என்றேன் நான். என் ஏந்தலார் நீர் நிறைந்த ஒரு குடுவையை என் முன் வைத்தார்கள். அதிலிருந்த மதுரமான குளிர்ந்த நீரைக் கொண்டு நான் தாகந்தீர்ந்தேன். அதன் குளுமையை நான் உறக்கத்தி லிருந்து விழித்துக் கொண்ட நிலையிலும் என் நெஞ்சக் குழியில் இப்போதும் நான் உணர்கின்றேன். அதன் பின்னர் அண்ணலார் (ஸல்) அவர்கள், "உதுமானே! நீர் விரும்பினால் உம்முடைய துரோகிகளுக்கு எதிராக உமக்கு தவ நான் இப்போதும் சித்தமாகவே இருக்கிறேன். அல்லது நீர் இன்று நம்மிடம் வந்து நம்மோடு நோன்பு திறக்க லாம்" எனக் கூறினார்கள். அப்தல்லாஹ் இப்னு ஸலாமே! அதற்கு மறுமொழியாக நான், "அல்லாஹ்வின் தூதரவர் களே! தங்களோடு இன்று நோன்பு திறப்பது எனக்கு இவ்வுலக வாழ்வை விட ஆயிரம் மடங்கு மேலானது எனக் கூறி விட்டேன்" என்றார்கள். ஹழ்ரத் அப்துல் லாஹ் இப்னு ஸலாம் (ரலி) அவர்கள் தாங்கள் கூற வந்ததைக் கூறாமலே சென்று விட்டார்கள்.

கலகக்காரர்கள் இனித் தாமதிக்கலாகாது எனக் கிளர்ந்தெழுந்தார்கள். கதவை உடைத்து வாயில் வழி யாகவே கலீஃபா அவர்களின் வீட்டினுள் புக அவர்கள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. கலீஃபா அவர்களின் இல்ல வாயிலில் நின்றிருந்தவர்கள் 'மிகச் சிலரேயாயினும் அவர்கள் தங்கள் முழுத் திறன் கொண்டு எதிரிகளைப் பின் தள்ளினார்கள். ஆத்திரமடைந்த கலகக் காரர்கள் சூழ நின்று கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் அம்பெய்யலானார்கள். அவற்றில் ஒன்று வீட்டினுள் நடமாடிக் கொண்டிருந்த மர்வானின் மீதும் பட்டு விழுந் தது. ஹழ்ரத் முஹம்மத் இப்னு தல்ஹா (ரலி) அவர் களும் காயமுற்றனர். ஹழ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் மீதும் ஓர் அம்பு பட்டு இரத்தம் வடியலாயிற்று. இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் முகத்தில் இரத்தம் வழியக் கண்ட ஹழ்ரத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர் களைப் புதிய அச்சம் பற்றிக் கொண்டது. தங்கள் எகிப்திய சகாக்களிடம் "ஹாஷிம் குடும்பத்தார்கள் இந்த இரத் தத்தைக் கண்டார்களானால் அதற்கென நம்மைப் பழி

தீர்க்கத் துவங்கி விடுவார்கள். நம்முடைய திட்டமே நாசமாகி விடும்'' என எச்சரித்தவராக அவர்களில் நால்வரை அழைத்துக் கொண்டு பிரிந்து சென்றார்.

அவர்களனைவரும் பின்புறமாகச் சென்று கலீஃபா அவர்களின் வீட்டை ஒட்டியிருந்த பின் வீட்டின் மீதேறி அங்கிருந்து கலீஃபா அவர்களின் இல்லத்தினுள் நுழைந்து விட்டனர். வீட்டின் கீழ்ப் பகுதியில் கலீஃபா அவர்கள் திருமறையை ஓதிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மனைவியார் நாயிலா அம்மையார் அருகமர்ந்து செவியுற்ற வண்ணமிருந்தார். கலீஃபா அவர்களின் பாது காவலர்களாய் இருந்தவர்களனைவரும் வீட்டின் மேல் பகுதியில் முன்புறமாக நின்று ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். பின்புறமாக வீட்டினுள் நுழைந்தவர்களை அவர்களும் கவனிக்கவில்லை.

கலீஃபா அவர்களின் மனைவியார் அங்கிருந்ததால் ஹழ்ரைத் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்கள், மற்றவர்களை வெளியில் நிறுத்தி தாம் மட்டுமே உள்ளே நுழைந்தனர். 'ஓய் நஅஸல்!*' என்றழைத்தவண்ணம் கலீஃபா அவர்களின் தாடியை எட்டிப் பிடித்தனர்.

''நான் நஅஸல் அல்லன். உதுமான் இப்னு அப்ஃபான் —அமீருல் முஉமினீன்'' என்றவர்களாக ஏறிட்டு நோக்கினார்கள் கலீஃபா.

''கிழடு தட்டிய இந்த முதுமையிலும் பதவிப் பெருமையா உமக்கு?'' என விளித்தனர் முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி).

''என் சகோதரர் மகனே! இன்று உம் தந்தை அபூபக்கர் (ரலி) உயிரோடு இருந்தால் என் முதுமையை மிகக் கண்ணியப்படுத்துவார். உம்முடைய இச்செயலைக் கண்டு நிச்சயம் நாணமடைவார்'' என்ற கலீஃபா அவர்களின் இதமான சொற்கள் இடிகளாய்த் தாக்கின முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்களின் இதயத்தை

---

* நீண்ட தாடியுடன் நடமாடிக் கொண்டிருந்த ஓர் எகிப்தியன்.

உடல் முழுவதும் வியர்த்தொழுக முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) கலீஃபா அவர்களை விட்டும் ஓடி விட்டனர்.

அதனைக் கவனித்துக் கொண்டு வெளியில் நின்றவர்களில் ஒருவன் வாளோடு உள்ளே நுழைந்தான். பதறியெழுந்த கலீஃபா அவர்களின் மனைவியார், அவனைக் கடுமையான சொற்களால் ஏசினார்; கொடுமையைச் சுமப்பதிலிருந்து அவனை விலக அறிவுறுத்தினார். அறிவிழந்து வெறி கொண்டிருந்த அவன் அவ்வம்மையாரின் கன்னத்திலேயே ஓங்கி அறைந்தான். பெண்மையின் பால் காட்டப்பட்ட அவ்வெறிச் செயல் கலீஃபா அவர்களின் மென்மைக்கு விடப்பட்ட இறுதிச் சவாலாகி விட்டது. சினங் கொண்ட கலீஃபா அவர்கள், ''கொடியவனே! இறைவன் உன் இரு கரங்களையும் கால்களையும் அழியச் செய்வானாக. உன் இரு கண்களையும் குருடாக்கி நரகத்தில் நுழையச் செய்வானாக'' எனச் சபித்தார்கள்.

கலீஃபா அவர்களின் தீப்பொறி பறந்த முகத் தீட்சண்யத்தை ஏறிட்டுக் கண்ட அவன் திடுக்கத்தால் அலறியவனாக விரண்டோடினான்.

உள்ளே நுழைந்த மற்றவர்களில் ஒருவன் கலீஃபா அவர்களை நோக்கித் தன் வாளை வீசினான். அதனைத் தடுக்கக் குறுக்கே பாய்ந்த நாயிலா அம்மையாரின் நான்கு விரல்கள் துண்டித்து விழுந்தன. வேகமாக இறங்கிய அவ்வாள் கலீஃபா அவர்களின் சிரசிலும் பட்டுக் குருதி பீறிட்டது. அதன் சில துளிகள் கலீஃபா அவர்கள் ஓதிக் கொண்டிருந்த திருமறையிலும் சிந்தின. திடுக்கிட்டுத் திருமறையை ஏந்தி நோக்கிய கலீஃபா அவர்களின் திரு வதனம் பகலவனாய் ஒளிர்ந்தது.

''ஃபுஸ்த்து பிரப்பில் கஅபா; ஃபுஸ்த்து பிரப்பில் கஅபா.''

''கஅபாவின் இறைவனைக் கொண்டு நான் ஈடேற்றம் பெற்றேன்—'' என இரு முறை கூவினார்கள் கலீஃபா.

''அமீரல் முஉமினீன்! உலுத்தர்கள் உங்கள் உயிருக்கே உலை வைத்து விட்டார்களே! என்ன ஈடேற்றத்தைக் கண் டீர்கள்'' என நாயிலா (ரலி) அரற்றினார்கள்.

''நாயிலா! என் ஏந்தல் பெருமான் [ஸல்] அவர்கள் ஒரு நாள், ''உதுமானே! 'அவர்களைப் பற்றி உங்களுக்கு அல்லாஹ் போதுமானவன் — என்று பொருள் தரும் திரு மறையின் (2 : 137)

فَسَيَكْفِيكَهُمُ اللّٰهُ

என்ற சொல்லை உம் இரத்தம் முத்தமிடும்" என எனக்கறி வித்தார்கள். இதயங்குடி கொண்ட என் அண்ணலாரின் சொல் மிகத் துல்லிதமாக நிறைவேறியுள்ள புதினத்தை இதோ பார்" எனக் கூறிக் கொண்டிருந்தபோதே மற்றோர் ஈனன் தன் ஈட்டியை கலீஃபா அவர்களின் நெஞ்சில் பாய்ச்சி விட்டான். அத்துடன் கலீஃபா அவர்கள், நாற் பத்து ஏழாண்டு காலமாகத் தங்கள் உள்ளத்தில் உரமேற்றி வைத்திருந்த லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூ லுல்லாஹ்— என்ற மூலமந்திரத்தை மொழிந்தவர்களாகத் தரையில் சாய்ந்தார்கள்.

கலீஃபா அவர்களின் சிரசைத் துண்டிக்கவும் ஒருவன் துணிந்தான். நாயிலா அம்மையாரின் அலறல் ஒலி இல்லத் லத்தையே கிடுகிடுக்க வைத்தது. காவலர்கள் ஓடி வரும் ஒலிகளும் கேட்டன. 'விட்டு விடு, அந்தத் தலையால் நமக் காகப் போவது ஒன்றுமில்லை' என ஒருவன் கூற அனை வரும் ஓடி மறைந்தார்கள். காவலர்கள், தோழர்கள் அனை வரும் வந்து நோக்கியபோது கலீஃபா அவர்களின் புனித ஆன்மா பிரிந்து விட்டிருந்தது. கண்ணியமிக்க அவர்களின் பொன்னுடல் மட்டுமே மற்றவர்களின் வரவுக்காக அங்கு காத்திருந்தது.

கலீஃபா அவர்கள் கொல்லப்பட்ட செய்தி கேட்ட துமே அலீ (ரலி) அவர்கள் ''இனி உலக முடிவு நாள் வரை உங்களுக்கு அழிவைத் தவிர வேறொன்றுமே

இல்லையே!" என அவலுற்றார்கள். அவர்களின் உடல் சினத்தால் கொதித்தது. கலீஃபா அவர்களின் இல்லத்தை அடைந்த அலீ (ரலி) அவர்கள் தங்கள் புதல்வர் ஹஸன் (ரலி) அவர்களின் முகத்தில் ஓங்கி அறைந்தார்கள். ஹுஸைன் (ரலி) அவர்களின் நெஞ்சத்திலும் பலமான குத் தொன்று விழுந்தது. ஹழ்லரத் தல்ஹா (ரலி) அவர்கள் இடைமறித்து மாநபியின் பேரர்களை அணைத்தனர். "எதற்காக உங்களைக் காவல் நிறுத்தினேன். பெருமானா ரின் மருகருக்கு இந்த முடிவைத் தருவதற்கா?" எனச் சீறி னார்கள் அலீ (ரலி). துரோகிகள் வாயில் வழியாக நுழைய முயன்று இறுதிவரை முடியாது திருட்டுத்தனமாக பின்புற மிருந்தே சுவறேறி நுழைந்து கலீஃபா அவர்களைக் கொன்ற செய்தி பின்னரே அவர்களுக்கு விளக்கப்பட்டது.

கலீஃபா அவர்களின் உயிர் பிரிந்த உடல் எந்தக் கவலையுமின்றி கிடந்தது அங்கே மூன்று நாட்கள் வரை. அதனை எவரும் நெருங்கவும் துணியாதவாறு வெறியர் களின் பேயாட்டம் மதீனா நகரையே அலைக்கழித்துக் கொண்டிருந்தது. முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர் களைத் தேடிப் பிடித்து விசாரணை நடத்திய அலீ (ரலி) அவர்கள் அங்கிருந்து திரும்பி நாயிலா அம்மையாரைக் கேட்டார்கள்—அருகில்தானே இருந்தீர்கள், கொலை யாளிகள் யார் என்பதைக் கூறுங்கள் என்று. அம்மையார், முஹம்மத் இப்னு அபூபக்கர் (ரலி) அவர்கள் பற்றிய முழு நடப்பையும் விவரித்தார்கள். அவரின் வெளியேற்றத் துக்குப் பின் கலீஃபா அவர்களைத் தாக்கிக் கொன்ற இரு வர் பற்றிய எந்த விபரங்களும் தமக்குத் தெரியாதெனக் கூறி விட்டனர்.

கொலையாளிகள் ஓடிச் சென்று தங்கள் கூட்டத்தோடு கலந்து தங்களை மறைத்துக் கொண்டனர். கலகக்காரர் களின் வெறி கலீஃபா அவர்களைக் கொன்றதோடு தணிந்து விடவில்லை. அவர்களின் இல்லத்தில் இருந்த உடைமை களையும் கொள்ளையிட்டனர். அதனைத் தடுக்கத் துணிந் தவர்களைத் தாக்கினர். கலீஃபா அவர்களோடு அவர்களின் இல்லத்தில் இருந்த ஏறத்தாழ பதினெட்டு பேர்கள்

கொல்லப்பட்டனர். பைத்துல் மாலையும் அவர்கள் சூறை யாடினர். கலீஃபா அவர்களுக்குச் சொந்தமான பேழை யொன்று அவர்களிடம் சிக்கியது. 'அநீதமாக வஞ்சிககப் பட்ட புதையல்' என வர்ணித்தவாறே துரோகிகள் அப் பேழையை உடைத்துத் திறந்தனர். அதன் உள்ளே ஒரு துண்டுக் கடிதம் மட்டுமே இருந்தது. அதில், 'வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர எவனும் இல்லை' என்று சாட்சியம் கூறுகிறேன். அவன் தனித்தவன்; இணை யற்றவன். அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களை அவ னின் அடியார் என்றும் தூதர் என்றும் நான் சாட்சியம் கூறுகிறேன்' என்ற திருமந்திரத்தோடு,

وَأَنَّ السَّاعَةَ آتِيَةٌ لَّا رَيْبَ فِيهَا وَأَنَّ اللَّهَ يَبْعَثُ مَن فِي الْقُبُورِ

''விசாரணைக் காலம் நிச்சயம் வந்தே தீரும். அதில் சந்தேகமே இல்லை. (அந்நாளில்) சமாதிகளில் (புதைந்து) கிடப்போரை நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்" என்ற (22 : 7) திருவசனமும் பொறிக்கப் பட்டிருந்தது.

கொலைகாரர்களின் கொடூரம்

முப்பத்தைந்தாண்டு காலமாக—அதற்குமுன் என் றுமே கண்டிராத—புனிதப் பண்பாடுகளின் நிலைக்கள னாகத் திகழ்ந்த மதீனாத் திருநகரம்-அநாதையின் தலை விரிகோலத்தில் கொள்ளையர்களின் அட்டூழியத்தால் அலைக்கழிந்து கொண்டிருந்தது. ஏழை எளியவர்களின் குடில்களையும் விடவில்லை அந்த வெறியர்கள். மாநபித் தோழர் ஹழ்லரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் குடிலும் சூறையாடப்பட்டவற்றுள் ஒன்றே. அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களால் அத்தோழருக்கு அருளப் பெற்ற-அன்று முதல் இன்று வரை அள்ள அள்ளக் குறை யாது பேரீத்தங்கனிகளை ஈந்து வந்த-வளம் கொழித்த உணவுப் பையும் கொள்ளையினூடே மாயமாய் மறைந்து விட்டது.

"மக்களே! நீங்கள் கலீஃபாவை மட்டுமே இழந்தீர்கள்! நானோ என் கலீஃபாவையும் இழந்தேன். என் ஏந்தல் எனக்கருளிய உணவுக் களஞ்சியத்தையும் இழந்து விட்டேனே! அந்தோ அதிலிருந்து எத்தனை நாட்கள் நான் பசி தீர்ந்தேன். எத்தனையோ பேர்களின் பசியையும் தீர்த்தேனே" என்று அழுதுப் புலம்பி அலைந்தார்கள் அப்பெருந் தோழர்.

மூன்று நாட்களுக்குப் பின் கொள்ளையர்களின் அட்ட காசங்கள் தணிந்தன. நபிமணித் தோழர்கள் ஹல்ரத் ஜுபைர் இப்னு முத்இம் (ரலி), ஹக்கீம் இப்னு ஹிஸாம் [ரலி] ஆகியோர் ஹழ்லரத் அலீ [ரலி] அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள். மூவரும் கலீஃபா அவர்களின் உடலை எடுத்து அடக்கம் செய்திடத் துணிந்தார்கள். எதிரிகளில் ஒரு சிலர் அப்போதும் குறுக்கிட்டனர். அவர்களை ஹழ்லரத் அலீ [ரலி] கடுமையாகச் சாடினார்கள். ஒருவாறாக கலீஃபா அவர்களின் உடல் இரவோடிரவாக எடுத்துச் செல்லப்பட்டது. கிழக்கே காபூலில் இருந்து — மேற்கே மொராக்கோ வரை அகண்ட பெரும் சாம்ராஜ்யத்தைப் பனிரண்டாண்டு காலம் ஆட்சி செய்த—நாயகத்தின்—முது பெருங் கலீஃபா அவர்களின் பொன்னுடல் ஹழ்லரத் தல்ஹா, ஜுபைர், ஜைத் இப்னு ஸாபித், கஅப் இப்னு மாலிக், ஹுவைதிப் இப்னு அப்துல் உஸ்ஸா (ரலி) போன்ற நபிமணி தோழர்கள் உட்பட பதினேழே பேர்கள் சூழ சுமந்து செல்லப்பட்டு—நீராட்டவும் படாமல் அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளோடேயே—'ஜன்னத்துல் பக்கீ' இல் அடக்கினாலும் துரோகிகள் தோண்டி எடுத்து உடலைச் சிதைத்து விடுவார்களோ என்ற அச்சத்தோடு அதனைந் தாண்டியிருந்த—அதற்கு முன் யூதர்களில் இறந்தவர்களை அடக்கம் செய்துக் கொண்டிருந்த இடத்தில் அடக்கப் பெற்றது. பிற்காலத்தில் ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களின் ஆட்சியின் போதே 'ஜன்னத்துல் பக்கீ' இன் சுவர் தகர்க்கப்பட்டு இப்பகுதியும் உள்ளே இணைக்கப் பட்டது.

நாயிலா அம்மையார் கலீஃபா அவர்களின் இரத்தக் கறை படிந்த மேலாடையோடு வெட்டுண்ட தங்களின்

நான்கு விரல்களையும் ஸிரியாவுக்கு ஹழ்லரத் முஆவியா (ரலி) அவர்களிடம் அனுப்பி விட்டார்கள். பள்ளியின் மேடையேறி அவற்றை மக்களுக்கு காட்டிய ஹழ்லரத் முஆவியா (ரலி) கண்ணீர் மழையினூடே கலீஃபா அவர்களின் கொலைக்குப் பழி வாங்கப்பட்டே தீரும் எனச் சபதமேற்றார்கள்.

குணச் சிறப்புகள்

مَنْ تَبَرَّأَ مِنْ دِيْنِ عُثْمَانَ فَقَدْ تَبَرَّأَ مِنَ الْإِيْمَانِ

''உதுமானுடைய வழியை விட்டும் ஒதுங்கியவன் இறை நம்பிக்கையை விட்டும் ஒதுங்கி விட்டான்'' என்று ஹழ்லரத் அலீ (ரலி) அவர்கள் உரைத்தார்கள்.

''அவர் கொல்லப்பட்டாரானால் அவருக்கிணையானவரை பின்னர் பெறவே முடியா"தென்றார்கள் மாநபித் தோழர் ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள்.

''உதுமான் (ரலி) அவர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்குக்குப் பகரமாக உஹது மலை பெயர்ந்து சாய்ந்தாலும் தகுமானதே" என்றார்கள் சுவனப் பெருந்தோழர் ஹழ்லரத் ஸஈத் இப்னு ஜ்ஸைத் (ரலி).

''மக்கள் அனைவருமே இக்கொலையில் ஒன்றுபட்டிருப்பார்களானால் லூத் நபியின் சமூகத்தாரின் பேரில் நடந்தது போல் இவர்கள் மீதும் விண்ணிலிருந்து கல்மாரி பொழிந்திருக்கும்'' என்று ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) கூறினார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) ''கருணை மிகக் கொண்டவரை, தம் இறைவனுக்கு அஞ்சியவரை அவர்கள் கொன்று விட்டார்களே'' எனக் கலங்கினார்கள்.

"மக்கள் குழப்பத்தின் வாசலையே திறந்து விட்டார்கள். இனி மறுமை நாள் வரை அது அடைபடப் போவதில்லை" என்றார்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி).

ஒரு பள்ளியில் உரையாற்றிக் கொண்டிருந்த ஹழ்ரத் ஸமாமா இப்னு அதீ (ரலி) அவர்களிடம் அச்செய்தி எத்தி வைக்கப்பட்டபோது கதறியழுத அந்நபிமணித் தோழர், "நாயகத்தின் கிலாஃபத் முடிந்தே போகும். இனி முடியாட்சி பிறக்கும்" என அறிவித்தார்கள்.

மாமறையை ஒருமுறைப் படுத்திய மாநபியின் மருகர்—'காமிலுல் ஹயா இ வல் ஈமான்' எனப் புவனமும் சுவனமும் புகழ்ந்தேத்தும் சுந்தரர்—அமீருல் முஉமினீன்—இமாமுல் அஃப்ழலீன்—ஸையிதினா வ மவ்லானா உதுமான்—கனீ—துன்னூரைன் (ரலி) அவர்கள் துரோகிகளால் கொல்லப்பட்டார்கள்.

போரையும் பஞ்சத்தையும் முஸ்லிம்கள் சந்தித்த காலங்களிலெல்லாம் தம் செல்வத்தை அள்ளிப் பாய்ச்சி அவர்களின் பசி தீர்த்த சீமான் பல நாட்கள் பசித்திருந்த நிலையிலேயே — முஸ்லிம்களாலேயே — கொல்லப்பட்டார்கள்.

தவித்த வாய்களுக்குத் தண்ணீரின்றி முஸ்லிம்கள் தத்தளித்தபோது தம் பொருளால் விலை பேசி நன்னீர்க் கிணற்றையே அவர்களுக்குச் சொந்தமாக்கித் தந்த கோமானை அவர்கள் தாகத்தால் தவிக்க விட்டே கொன்றார்கள்.

அருள்மறையைச் சீர்படுத்தி சகல பேதங்களை விட்டும் அதனைப் பாதுகாத்த பூமான், அவ்வருள் மறையில் தம் குரல் பதித்து லயித்திருந்த நிலையிலேயே கொல்லப்பட்டார்கள்.

ஹிஜ்ரி முப்பத்து ஐந்தாம் ஆண்டின் துல்ஹஜ்ஜ மாதத்தில் 18-ம் நாள் ஒரு வெள்ளிக் கிழமை பரிதி சாயும் நேரத் தொழுகைக்கு முன் நிகழ்ந்து விட்டது அப்பரிதாப கரச் சம்பவம்.

فَسَيَكْفِيكَهُمُ اللَّهُ

என்ற அருள் வாக்கை கலீஃபா அவர்களின் இரத்தம் முத்தமிட்ட அவ்வருள்மறை திருக்குர்ஆனின் பிரதி இன்றும் 'தாஷ்கண்ட்' நகரில் பாதுகாப்போடு இருந்து வருகிறது.

பொறுமை, ஈகை, வாய்மை, தியாகம், நேர்மை, நாணம், பற்றறுத்த எளிமை போன்ற பண்புகளால் சூழப் பெற்ற கலீஃபாவின் மாண்புகளை உலகம் என்றும் மறக்கவே முடியாது.

'களத்தில் எதிரியைச் சாய்த்தவனல்லன் ஆண்மையாளன்; பொறுமையால் தன் சினத்தை மாய்த்தவனே ஆண்மையாளன்' எனத் தாஹா ரஸூல் நபிகளார் தந்த தத்துவத்துக்கு இலக்கணம் வகுத்தவர்கள் ஹழ்ரத் உதுமான் (ரலி).

குணச் சிறப்பாய் அவர்களிடத்தில் குடி கொண்டிருந்த மென்மை கோலோச்சத் தகுதி படைத்ததல்ல எனக் குறை காண்பதை விட பொறுமையை இறுதி வரை இழக்கத் துணியாத அவர்களின் உறுதி படைத்த மனச் சிறப்பைப் போற்றலே தகும்.

கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் கொண்டிருந்த நாண உணர்வு வர்ணணைகளுக்கு அப்பாற்பட்டதாகும். அந்நாண உணர்வை அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்களே எவ்வளவு போற்றி மதித்தார்கள் என்பதற்குச் சான்றாக அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தை விவரிக்கிறார்கள்:

''அண்ணலார் (ஸல்) அவர்கள் ஒரு நாள் என் இல்லத்தில் படுத்திருந்தார்கள். அவர்களின் கீழாடை சற்றே விலகிக் கெண்டைக் கால்கள் வெளித் தெரிந்த வண்ணமிருந்தன. வெளியிலிருந்து ஹழ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் குரல் உள்ளே வர அனுமதி கேட்டு ஒலித்தது.

அண்ணலார் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் படுத்திருந்த நிலையிலேயே இருந்தார்கள்; உரையாடலானார்கள். பின்னர் உமர் (ரலி) அவர்கள் வந்து அனுமதி விழைந்தார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களும் அனுமதி வழங்கினார்கள். ஆனால் அவர்கள் இருந்த நிலையிலேயே இருந்தார்கள். உமர் (ரலி) அவர்களும் உரையாடலானார்கள். அடுத்து உதுமான் (ரலி) அவர்களின் குரல் ஒலித்தது. அண்ணலார் (ஸல்) அவர்கள் எழுந்தமர்ந்து கொண்டார்கள். தங்கள் ஆடையைச் சரிபடுத்திக் கொண்டார்கள். பின்னரே உதுமான் (ரலி) அவர்களுக்கு உள்ளே வர அனுமதி வழங்கினார்கள். உரையாடல் முடிந்து அம் மூவரும் பிரிந்து சென்றபின் நான் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் அதற்கான காரணம் கேட்டேன். அண்ணலார் (ஸல்) அவர்கள் ''விண்ணவரும் நாணமுறும் அவரிடத்தில் நான் நாணமுற வேண்டாமா?'' என்றார்கள்.

''உதுமான் நாணமிகு மனிதர். நான் இருந்த நிலையிலேயே அவரை வர அனுமதித்திருந்தால் என்னைக் காணும் அவர் நாணத்தால் தாம் கூற வந்ததைக் கூறாமலே திரும்பி விடுவாரோ என நான் அஞ்சினேன்'' என அண்ணலார் (ஸல்) அவர்கள் அறிவித்ததாகவும் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''ஒரு முறை உதுமான் நம்மைக் கடந்து சென்றபோது என் அருகிலிருந்த விண்ணவர் ஒருவர் 'தம் சமூகத்தாராலேயே கொல்லப்படப் போகும் உயிர்த் தியாகி இவர். இவரைக் கொண்டு விண்ணவர்களாகிய நாங்கள் நாணங் கொள்கிறோம் எனக் கூறியதைச் செவியுற்றேன்" என பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹழ்ரத் ஜைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள் அறிவித்திருப்பதை இப்னு அஸாக்கிர் (ரஹ்) சுட்டிக் காட்டுகிறார்கள்.

''அல்லாஹ்வையும் அவனின் தூதரையும் விண்ணவர்கள் எவ்வாறு சங்கைப்படுத்துகிறார்களோ அவ்வாறே அவர்கள் உதுமானுடைய மாண்பையும் பேணுகிறார்கள்" என அண்ணலார் (ஸல்) அவர்கள் அருளியதாக ஹழ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நான்கு சுவர்களுக்கு நடுவே நீராட தனித்தமரும் தருணத்திலும் தம் மேலாடையைக் களைய நாணமுற்ற அம்மாண்பாளரிடத்தில் அதிகாரத்துக்குடைய லட்சண மாக வல்மத்தை எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்?

மென்மையும் பொறுமையும் நாணம் மிகுந்தவர்களிடமிருந்து எந்நிலையிலும் பிரிக்கவே முடியாத இரு பெரும் பண்புகளாகும். தம்மைச் சூழ பின்னப்பட்ட வஞ்சக வலையை நன்கு புரிந்தும் வன்கரம் கொண்டு கலீஃபா அவர்கள் அதனைப் பிய்த்தெறியத் துணியாத மர்மமும் அதுவே. கிலாஃபத்தைச் சுமந்த அவர்களின் பெருமைக்குச் சவாலான எத்தனையோ இடைப்பட்ட தருணங்களிலும் கலீஃபா அவர்கள் தம் பொறுமையை — மென்மையழகைக் கை நழுவ விட்டதே இல்லை.

ஒரு ஜும்ஆப் பேருரையை அவர்கள் ஆற்றிக் கொண்டிருந்த சமயம், ''உதுமானே! அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக! பிழை பொறுக்கத் தேடுவீராக" என்ற ஒரு குரல் கூட்டத்திலிருந்து கேட்டது. குரலுக்கு உடையவர் யார் என்ற கவலை சிறிதும் கொள்ளாத கலீஃபா மறுகணமே தங்கள் இரு கரங்களையும் ஏந்தி ''இறைவா! உன்னிடம் பிழை பொறுக்கத் தேட வேண்டிய பாவிகளில் நானே முதலானவனாக நிற்கிறேன்'' என வழுத்தினார்கள்.

கலீஃபா அவர்களோடு ஒரு சமயம் உரையாடிக் கொண்டிருந்த ஹழ்ரத் அம்ர் இப்னுல் ஆஸ் (ரலி) அவர்கள் கலீஃபா அவர்களின் தந்தை அப்ஃபானின் குணக் கேடுகளை நினைவூட்டிப் பேசினார்கள். அவற்றைக் கேட்டு சற்றும் சினமடையாத கலீஃபா அவர்கள் ''ஓ அம்ரே! நீரென்ன, இஸ்லாத்தை ஏற்ற பின்னரும் அறியாமைக் கால நிகழ்ச்சிகளை நினைவு கொள்கிறீர்!'' என இதமாகவே எடுத்துரைத்தார்கள்.

வாழ்க்கையில் அவர்கள் தமக்கெனப் 'பொருந்திக் கொண்ட' முடிவு எத்தகையதாக இருந்தபோதிலும் தம் முன்னவர்களால் எழுப்பப்பட்ட அரசியல் மாளிகையை கலகப் புயலினூடே கலகலத்து விடாமல் பனிரண்

டாண்டு காலம் கட்டிக் காத்த் அவர்களின் ஆட்சியின் மாட்சி அவர்களின் மென்மையால் கறைபட்டு விடாது.

அவர்களின் அக அழகின் பிரதிபலிப்பாய் புற அழகும் மிளிர்ந்தது. அன்றாடம் நீராடித் தங்கள் உடலையும் உடையையும் எப்போதும் தூய்மையுடனேயே வைத்திருப்பார்கள். வளமிக்க ஒரு குடும்பத்தில் பிறந்து செல்வச் செழிப்பிலேயே வளர்ந்த அவர்கள் வாழ்க்கையின் முற்பகுதியிலும் சரி முதுமை தழுவிய பிற்பகுதியிலும் சரியே, தங்கள் உடற்கூறுக்கிசைந்த அளவு தரமான உணவுகளையே மேற்கொண்டார்கள். வாழ்க்கையின் தேவைகளை முற்றாகப் புறமொதுக்கி சமுதாயப் பணியில் தங்களை வருத்தெடுத்த முந்தைய கலீஃபாக்களைப் போன்று முரட்டுத் துணிகளை உடுத்தவும் நாசூக்கான உணவுகளை ஒதுக்கவும் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்கமைந்திருந்த உடல் நிலை இடந்தராத போதிலும் தங்கள் வளர்ப்பிலே வாலாயப் பட்டு விட்ட வரம்புகளைக் கடந்து ஆடம்பரத்தை அவர்கள் மேற்கொள்ளவில்லை. 'ஹலாலன் தையிபன்'— எனத் திருக்குர்ஆன் கூறிக் காட்டுகிறபடி அனுமதிக்கப்பட்டவற்றில் நல்லவற்றையே அவர்கள் உணவிலும் உடையிலும் அமைத்துக் கொண்டார்களேயன்றி பெருமையும் படாடோபமும் அவற்றில் காணப்பட்டதில்லை.

''ஒருசமயம் கலீஃபா அவர்களுக்கு முன்னே சுவைமிக்க உணவு வகைகள் பரிமாறப்பட்டன. கலீஃபா அவர்கள் காடியையும் ரொட்டியையும் தாங்கள் எடுத்துக் கொண்டு மற்றவற்றைத் தங்கள் தோழர்கள் உண்ணச் செய்யக் கண்டேன்'' என ஹழ்லரத் ஷத்தாத் இப்னுல் ஹாத் (ரலி) அறிவிக்கின்றனர். சாதாரணமாக அரபு நாட்டின் சீமான்கள் தங்கள் பெருமையைக் காட்ட அக்காலத்தில் அணிந்து வந்த ஒருவித ரோம நாட்டு ஆடையை அவர்கள் தாங்களும் அணிந்ததில்லை, தங்கள் மனைவியர்களுக்கும் அனுமதித்ததேயில்லை. 'பாய்ஜாமா' எனப்படும் கால் சட்டையை வாழ்க்கையில் எப்போதுமே அணிந்திராத கலீஃபா உதுமான் (ரலி) அவர்கள் தாம் கொல்லப்பட்ட இறுதி நாளன்று மட்டும் அதையே அணிந்திருந்ததை வர

லாற்றாசிரியர் இப்னு ஸஅத் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். மரணத்தின் வாசலிலும் மானத்தோடேயே நுழையத் துணிந்த கலீஃபா அவர்களின் நாணத்தின் மாண்பை விளக்க இன்னும் என்னதான் உதாரணத்தைத் தேடுவது?

மஸ்ஜிதுன் னபவியின் பின்புறம் கட்டப்பட்ட கலீஃபா அவர்களின் இல்லமே அக்காலத்தில் மதீனா நகரின் மிகப் பெரும் இல்லமாகும். இன்றும் அது 'மஷ்ஹதே உதுமான் கனீ' (ரலி) என்ற பெயரோடு மிகப் பெரும் நூலகமாக விளங்குகிறது.

நாயகத் திருமகளார் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் மரணத்தை அடுத்து ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் பல மனைவியரை மணந்தார்கள்; அநேக மக்களைப் பெற்றெடுத்தார்கள். ஆனால் அவர்களில் ஹழ்ரத் அபான் (ரலி) அவர்களே பிந்திய உமையாக்களின் காலத்தில் சிறப்புறக் காணப்படுகின்றனர்.

அநேக நிலபுலன்களை கலீஃபா அவர்கள் பெற்றிருந்தும், அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டதே இல்லை. நிலங்களைப் பிறருக்கே உழக் கொடுத்து விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியை மட்டும் தாங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள். இரண்டு பகுதிகளை உழைத்தவர்களுக்கே அளித்து விடுவார்கள்.

மனிதர்களிடத்தில் நாண உணர்வு மிகக் கொண்ட அப் புனிதர் தம் இறைவனிடத்தில் எத்தகைய நாண உணர்வு கொண்டிலங்க வேண்டும். அதனாலேயே அவர்கள் தீமையைக் காணவே நாணினார்கள்; பாவங்களை எண்ணிப் பதறினார்கள். மரணத்துக்குப் பிந்திய மறுமையின் திடுக்கம் அவர்களைப் பதறவே வைத்தது. மரித்தவர்களின் பிரேதங்கள் எடுத்துச் செல்லப்படக் காணின் உடனே எழுந்து நின்று கண்ணீர் உகுப்பார்கள்; மண்ணறைகளைக் கடந்து செல்ல நேரிடும்போதெல்லாம் அவற்றின் அருகே நின்று ஆழ்ந்த சிந்தனை வயப்படுவார்கள்; அழுது கலங்குவார்கள்.

''அமீரல் மூஉமினீன்! நரகத்தின் பயங்கரங்களைப் பற்றிச் செவியுறும் போதும் காணப்படாத கலக்கம் மண்ணறைகளைக் காணும்போது மட்டும் தங்களிடம் காணப் படுவதேன்?'' எனத் தோழர்கள் கேட்டார்கள்.

''மறுமைப் பயணத்தின் முதல் வாயில் மண்ணறையே என அண்ணல் எம்பெருமான் [ஸல்] அவர்கள் எனக்கு அறிவித்திருக்கிறார்கள். அதனாலேயே நான் மண்ணறைகளைக் காணும்போது கலங்கி விடுகிறேன். அங்கு சோதனையில் நான் தப்பி விட்டேனானால் மற்ற வாயில்களைக் கடக்க எனக்கு சிரமமிரது'' என்றார்கள் கலீஃபா.

இறையச்சத்தின் காரணமாக அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து பிழை பொறுக்கத் தேடுவார்கள். கிலாஃபத்தை அவர்கள் ஏற்றிருந்த காலத்திலும் அதன் பணிகளைப் பகலோடு ஒதுக்கி இரவு காலங்களில் நின்று வணங்குவார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களின் காலத்திலேயே திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்த ஹாபிழ்லான அவர்கள் ஒவ்வோர் இரவிலும் தொழுகையிலேயே திருமறையை ஒரு முறை முழுமையாக ஓதி தங்கள் தொழுகையை நிறைவுபடுத்துவார்கள். இரண்டிரண்டு நாட்களுக்கிடையே ஒரு நாள் விட்டு பல மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பிருப்பார்கள்.

கிலாஃபத்தை ஏற்ற ஆரம்ப ஆண்டில் தமக்கு முன்னவர்களின் உதாரணங்களைப் பேணி, தாம் மதீனாவில் தங்கி ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களின் தலைமையில் மக்களை ஹஜ்ஜுக்கு அனுப்பி வைத்தார்கள். கிலாஃபத்தின் இறுதி ஆண்டில் துரோகிகளால் தம் இல்லம் சூழப்பட்ட நிலையில் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களை ஹஜ்ஜுடைத் தலைவராக அனுப்பி வைத்தார்கள். மற்ற எந்த ஆண்டிலும் கலீஃபா அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றத் தவறியதில்லை. ஹழ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத்தை ஏற்ற ஆரம்ப ஆண்டிலும் ஹழ்ரத் உதுமான் (ரலி)

அவர்களே ஹஜ்ஜுடைத் தலைவராக இருந்தார்கள். அவர்கள் செய்த உம்ராக்களோ கணக்கில்லாதவை. ஒரு முறை உம்ராவை நிறைவேற்றி மதீனா திரும்புவார்கள்; தங்கள் காலணிகளைக் கழற்றி விட்டு நின்ற வண்ணமே உரையாடுவார்கள். அவர்களின் மூட்டை முடிச்சுகளும் அவிழ்க்கப்பட்டிருக்கா. திடுமெனக் கஅபாவைக் காண ஆவலுற்று உம்ராவுக்கெனப் புறப்பட்டுச் சென்று விடுவார்கள் கலீஃபா. இவ்வாறான பல சந்தர்ப்பங்களை மக்கள் கண்டிருக்கிறார்கள்.

ஹஜ்ஜுடைய காலங்களில் கலீஃபா அவர்கள் தமக்கெனத் தனியாகக் கூடாரம் அமைக்கச் செய்தார்கள். அதையும் ஒரு குற்றமாகக் கூறப்பட்டு கலீஃபா அவர்கள் தூற்றப்பட்டார்கள். குறை காணவே பிறப்பெடுத்த கண்கள் ஒவ்வோர் அசைவிலும் குறைகளைக் காண்பனவே தவிர, செயல்களுக்கு அடிப்படையான எண்ணங்களின் நிறைவை அவை காண்பதெங்ஙனம்? முந்திய கலீஃபாக்கள் அவ்வாறு தங்களுக்கென தனி கூடாரங்களை அமைத்துக் கொள்ளவில்லை என்பது உண்மையே. ஆனால் அரஃபாவின் ஹஜ்ஜாஜிகள் அத்தனைவரும் தம் விருந்தை உண்டு முடிக்காதவரை கூடாரத்துள் ஒதுங்காத வாலாயங் கொண்ட அப்பெருங் கலீஃபா தம் சொந்த உடைமைகளைக் கொணர்ந்து வைத்து அள்ளி வழங்க அத்தகைய தனியிடம் அவசியமேயல்லவா?

ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் இஸ்லாத்துக்கு முந்திய அறியாமைக் காலத்திலேயே எழுதப் படிக்கத் தெரிந்த மிகச் சிலரில் ஒருவராக இருந்தார்கள். இஸ்லாத்துக்குப் பின்னரும் அறிவையும் ஞானத்தையும் தெள்ளித் தெரிவதிலும் பிறருக்கு அள்ளித் தருவதிலும் சிறந்தார்கள். அவர்களின் எழுத்தாற்றலை விளக்க பதவியேற்ற காலத்தில் அவர்களால் எழுதப்பட்ட கடிதங்களே சான்றுகளாக விளங்குகின்றன. அரபு இலக்கிய நயத்தை மொழி பெயர்ப்புகளில் நம்மால் சுவைக்க முடியாவிடினும் பொருட் செறிவு கொண்டு படிப்பினைகளைத் தர அவை தவறவில்லை.

அவர்களின் நாவுரைகளோ மிகச் சுருக்கமானவை யாக—ஆனால் கருத்தாழம் மிகுந்தவையாக உள்ளன. காலத்தின் மாறுதலே அதற்குக் காரணம் என்பதை மேடையேறிய ஒரு சமயம் அவர்கள், ''மக்களே! சொல்லாற்றல் மிக்கவனை விட செயலாற்றும் தலைவனே உங்களுக்குத் தேவை. நான் சொல்லாற்றல் படைத்தவனல்லன். அல்லாஹ் நாடினால் என் அந்தரங்கம் உங்களுக்கு வெளியாகியே தீரும்'' என்பதோடு இறங்கி விட்ட சம்பவமே உணர்த்துகிறது.

அவர்களிடம் காணப் பெற்ற அறிவு ஞானத்தையும் எழுத்தாற்றலையும் கண்டே அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் வஹியாக இறங்கிக் கொண்டிருந்த வேத வசனங்களை அவ்வப்போது பதியும் எழுத்தர்களில் ஒருவராக அவர்களையும் அமர்த்தினார்கள். அப்பெரும் பேற்றால் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் திருக் குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் இறங்கிய காலம்—இடம்—இறக்கப்பட்ட காரணம் போன்றவற்றைப் பூரணமாக அறிந்திருந்தார்கள். அல்லாஹ்வின் அவ்வருள் மறையை வாயார ஓதுவதிலும் பிறரை ஓதப் பழக்குவதிலும் ஹல்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கண்ட இன்பமே அலாதி. திருக் குர்ஆனை ஓதத் திறக்கும் ஒவ்வொரு தருணத்திலும் 'ஹாதா கலாமு ரப்பீ—ஹாதா கலாமு ரப்பீ—இது என் இறைவனின் அருள் மொழி' எனப் புகழொலித்து அவர்களின் முகம் மலரும்.

திருமறையை ஒரு முறையாய்ப் பிரதிகள் எடுக்கச் செய்ததோடு மட்டுமின்றி ஒரு குழுவை அமைத்து தாங்களே அதனை அண்ணலார் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டபடி ஓதிக் காட்டினார்கள். 'கிராஅத்' என்னும் ஓது முறையை மக்கள் நன்கு விளங்க வேண்டுமென்பதற்காகவே தொழுகையில் பெரும்பாலும் நீண்ட அத்தியாயங்களையே அவர்கள் ஓதுபவர்களாக இருந்தார்கள். ''கலீஃபா அவர்கள் அதிகாலைத் தொழுகையில் அதிகமாக 'யூஸுஃப்' என்னும் அத்தியாயத்தையே ஓதக் கேட்டு நானும் அவர்களைப் போல் ஓதக் கற்றேன்'' என்று குராஃப்ழா இப்னு உமைர் அல்ஹனஃபீ அவர்கள் அறிவிக்கின்றனர். யூஸுஃப் நபி

யின் அழகிய பொறுமையால் தம்மைப் பண்படுத்த கலீஃபா அவர்கள் மேற்கொண்ட பயிற்சியோ அது!

மரணத்தின் மடியேறி நின்ற இறுதித் தருணத்திலும் அவர்கள் திருக்குர்ஆனை ஓதியபடி இருந்ததே அதன் பால் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு நல்ல அளவு கோலாகும்.

அருள் மறை வசனங்களைப் போலவே அண்ணல் எம் பெருமான் (ஸல்) அவர்களின் அறவுரைகளையும் நினைவில் ஏற்று நிலையில் பேணி ஒழுகினார்களாயினும் அவற்றை வெளியிடுவதற்கு அவர்களுக்கு அப்பேணுதலே ஒரு தடையாக விளங்கியது. தாம் கூறாத ஒன்றைத் தம் கூற்றாக அறிவிப்பவர் அவரின் இருப்பிடத்தை நரகத்தில் பெற்றுக் கொள்வாராக என்ற அண்ணலாரின் எச்சரிக்கை தோழர்கள் ஒவ்வொருவரையுமே அச்சவயப்படுத்தி வைத்தது.

"ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களைப் போன்று எந்தச் செய்தியையும் பூரணமாக விளக்கிச் சொல்பவர்கள் இருக்கவில்லை. எனினும் ஹதீதுகளைச் சொல்வதற்கு அவர்கள் மிகவும் அஞ்சினார்கள். அண்ணலார் (ஸல்) அவர்களின் 146 அருள் மொழிகளை உலகுக்களித்த ஹழ்ரத் உதுமான் [ரலி] அவர்களே அவற்றை ஒரு சொல்லும் விடுபடாமல் முழுமையாக—நிதானமாக விளக்கக் கூடியவர்களாக இருந்தார்கள்" என அப்துர் ரஹ்மான் இப்னு ஹாத்திப் (ரலி) அறிவிக்கிறார்கள்.

ஹதீதுகளை வெளிப்படுத்தத் தயங்கினாலும் அவற்றின் தத்துவார்த்தங்களை மிக நளினமாக உணர்த்தி மக்களின் வாழ்க்கையைச் சீர்படுத்துவார்கள். ஹஜ்ஜுக்காக வந்திருந்த ஒரு முறை கலீஃபா அவர்கள் கஅபாவின் வளாகத்தில் அமர்ந்திருந்தார்கள். அச்சமயம் கஅபாவைத் தவாஃப் செய்பவர்களிடையே—ஒரு பேழையைத் தம் தலை மீது சுமந்தவராகவே நடந்த ஓர் இளைஞரின் மீது கலீஃபா அவர்களின் பார்வை விழுந்தது. தவாஃபை முடித்த அவரை அழைத்து வரச் செய்து, 'அப்பேழையை

சுமந்தவாறே அவர் சிரமப்படத் தேவையென்ன? ஒரு புறம் வைத்து விட்டு தவாஃபை முடித்த பின் அதனை எடுத்துக் கொண்டால் என்ன? என்ன அற்புதப் பொருளை அப் பேழையினுள் அவர் வைத்திருக்கிறார்' என்றெல்லாம் விசாரணை நடத்தினார்கள்.

''அமீரல் முஉமினீன்! நான் ஸிரியாவிலிருந்து ஹஜ்ஜு செய்ய வந்துள்ளேன். என் தாய் முதுமையால் மிகத் தளர்ந்தவர்; நடமாடச் சக்தியற்றவர். இறை யில்லத்தை அவரும் ஹஜ்ஜு செய்ய நாடினார். இறப்பின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவரின் ஆவலை நிரப்பமாக்கிட நினைத்து, அவரை அப்பேழையில் வைத்து ஸிரியாவிலிருந்தே என் தலை மீது சுமந்து வந்தேன். அவ்வாறே அவரை என் தலையில் சுமந்தே மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகிய இடங்களுக்கெல் லாம் சென்று அவரின் ஹஜ்ஜின் கிரியைகளனைத்தையும் நிறைவுபடுத்தினேன். இப்போது இறையில்லத்திலிருந்து விடைபெறும் நான் 'தவாஃபுஸ்—ஸியாரஹ்' என்னும் ஹஜ்ஜின் இறுதிக் கடமையை அவருக்கும் சேர்ந்தே நிரப்ப மாக்க நாடி அவரை என் தலை மீது சுமந்து சுற்றினேன்' என்றார் அவ்விளைஞர்.

'மாதாவின் பாதத்தடியில் மைந்தனின் சுவனம்' இருப்பதாக மாநபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளிய திருவாக்கைத் தம் வாழ்வின் கருவாக்கி வந்த தம் குடி மகனைக் கண்டு கலீஃபா அவர்கள் சிந்தை குளிர்ந்தார்கள்.

''அமீரல் முஉமினீன்! நான் தாய்க்குப்பட்டிருந்த நன்றிக் கடனை இதன் மூலம் நிரப்பமாக்கி விட் டேனல்லவா?" என அவ்விளைஞர் கனிந்து கேட்டபோது கலீஃபா அவர்களின் கண்கள் கசிந்தன.

''அருமை மைந்தனே! சதைப் பிண்டமாக மிதந்த உன்னை உன் தாய் தன் கர்ப்பத்தில் சுமந்து திரிந்த பருவத்தில் உள்ளிருந்த நீ விட்ட உதைகள் எத்தனை என்பதை நீ அறிய மாட்டாய். அவற்றால் எழுந்த வேதனைகளை அந்தத் தாய் சகித்துச் சுகித்தபோது அவளின் மனம் பெற்ற பெருமிதங்களையும் நீ அறிய

மாட்டாய். அந்த ஒன்றுக்குரிய நன்றிக் கடனே இன்னும் தீரவில்லை'' என உணர்த்தினார்கள் நாயகத்தின் கலீஃபா.

வாணிபப் பெருக்கத்தால் பொருளீட்டி வரையாது வழங்குவதில் இன்பம் கண்ட ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் சட்டங்களை ஆய்ந்து உருவாக்க மற்ற மூன்று கலீஃபாக்களைப் போன்று அதிகமான வாய்ப்புகளை ஏற்காவிடினும் சட்ட ஞானம் பெற்ற மாபெரும் முஜ்த ஹிதாகவே அவர்களும் இருந்தார்கள். முந்திய இரு கலீஃபாக்களும் தத்தம் காலத்தில் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை அழைத்து ஐயம் தெளிபவர்களாக இருந் திருக்கிறார்கள். ஹஜ்ஜுடைய சட்டங்களை அதிகமாக அறிவித்துள்ள ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களையும் விட ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர் களுக்கே ஹஜ்ஜைப் பற்றிய சட்ட ஞானம் அதிகம் இருந்தது.

தம் பெரும் வாணிபத்தின் பலனாகவே ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கணிதத் திறன் படைத்தவர் களாகவும் விளங்கினார்கள். பாகப் பங்கீடுகள் பற்றிய பிணக்குகள் ஏற்பட்ட பல தருணங்களில் அவற்றைத் தீர்க்க ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுடையவும் ஹழ்லரத் ஜைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களுடைய வும் தலையீடுகளே பெரிதும் உதவின.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் வணிக மன்ன ராகவும் விளங்கினார்கள். அரபுகளில் அவர்களுக்கு நிக ரான சீமான்களே இல்லை. அதன் காரணமாக அவர்கள் தமக்காக தம் வாழ்நாளில் மக்களின் உடைமைகளில் ஒரு சல்லிக் காசையும் ஏற்கவே நேரவில்லை.

கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத் தின்போது மக்களின் உடைமைகளிலிருந்து பதினாறா யிரம் திர்ஹங்கள் பெற்றிருந்தார்கள். ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின்போது ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் திர்ஹங்கள் ஊதியமாகப் பெற்றார்கள். ஆயினும் அவ்விரு சீலர்களுமே ஆண்டவனின் சந்நிதானத்

சுமந்தவாறே அவர் சிரமப்படத் தேவையென்ன? ஒரு புறம் வைத்து விட்டு தவாஃபை முடித்த பின் அதனை எடுத்துக் கொண்டால் என்ன? என்ன அற்புதப் பொருளை அப் பேழையினுள் அவர் வைத்திருக்கிறார்' என்றெல்லாம் விசாரணை நடத்தினார்கள்.

''அமீரல் முஉமினீன்! நான் ஸிரியாவிலிருந்து ஹஜ்ஜு செய்ய வந்துள்ளேன். என் தாய் முதுமையால் மிகத் தளர்ந்தவர்; நடமாடச் சக்தியற்றவர். இறை யில்லத்தை அவரும் ஹஜ்ஜு செய்ய நாடினார். இறப்பின் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவரின் ஆவலை நிரப்பமாக்கிட நினைத்து, அவரை அப்பேழையில் வைத்து ஸிரியாவிலிருந்தே என் தலை மீது சுமந்து வந்தேன். அவ்வாறே அவரை என் தலையில் சுமந்தே மினா, அரஃபா, முஸ்தலிஃபா ஆகிய இடங்களுக்கெல் லாம் சென்று அவரின் ஹஜ்ஜின் கிரியைகளனைத்தையும் நிறைவுபடுத்தினேன். இப்போது இறையில்லத்திலிருந்து விடைபெறும் நான் 'தவாஃபுல்—ஸியாரஹ்' என்னும் ஹஜ்ஜின் இறுதிக் கடமையை அவருக்கும் சேர்ந்தே நிரப்ப மாக்க நாடி அவரை என் தலை மீது சுமந்து சுற்றினேன்' என்றார் அவ்விளைஞர்.

'மாதாவின் பாதத்தடியில் மைந்தனின் சுவனம்' இருப்பதாக மாநபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளிய திருவாக்கைத் தம் வாழ்வின் கருவாக்கி வந்த தம் குடி மகனைக் கண்டு கலீஃபா அவர்கள் சிந்தை குளிர்ந்தார்கள்.

''அமீரல் முஉமினீன்! நான் தாய்க்குப்பட்டிருந்த நன்றிக் கடனை இதன் மூலம் நிரப்பமாக்கி விட் டேனல்லவா?" என அவ்விளைஞர் கனிந்து கேட்டபோது கலீஃபா அவர்களின் கண்கள் கசிந்தன.

''அருமை மைந்தனே! சதைப் பிண்டமாக மிதந்த உன்னை உன் தாய் தன் கர்ப்பத்தில் சுமந்து திரிந்த பருவத்தில் உள்ளிருந்த நீ விட்ட உதைகள் எத்தனை என்பதை நீ அறிய மாட்டாய். அவற்றால் எழுந்த வேதனைகளை அந்தத் தாய் சகித்துச் சுகித்தபோது அவளின் மனம் பெற்ற பெருமிதங்களையும் நீ அறிய

மாட்டாய். அந்த ஒன்றுக்குரிய நன்றிக் கடனே இன்னும் தீரவில்லை'' என உணர்த்தினார்கள் நாயகத்தின் கலீஃபா.

வாணிபப் பெருக்கத்தால் பொருளீட்டி வரையாது வழங்குவதில் இன்பம் கண்ட ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் சட்டங்களை ஆய்ந்து உருவாக்க மற்ற மூன்று கலீஃபாக்களைப் போன்று அதிகமான வாய்ப்புகளை ஏற்காவிடினும் சட்ட ஞானம் பெற்ற மாபெரும் முஜ்த ஹிதாகவே அவர்களும் இருந்தார்கள். முந்திய இரு கலீஃபாக்களும் தத்தம் காலத்தில் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை அழைத்து ஐயம் தெளிபவர்களாக இருந் திருக்கிறார்கள். ஹஜ்ஜுடைய சட்டங்களை அதிகமாக அறிவித்துள்ள ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களையும் விட ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர் களுக்கே ஹஜ்ஜைப் பற்றிய சட்ட ஞானம் அதிகம் இருந்தது.

தம் பெரும் வாணிபத்தின் பலனாகவே ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் கணிதத் திறன் படைத்தவர் களாகவும் விளங்கினார்கள். பாகப் பங்கீடுகள் பற்றிய பிணக்குகள் ஏற்பட்ட பல தருணங்களில் அவற்றைத் தீர்க்க ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுடையவும் ஹழ்லரத் ஜ்ஸைத் இப்னு ஸாபித் (ரலி) அவர்களுடைய வும் தலையீடுகளே பெரிதும் உதவின.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் வணிக மன்ன ராகவும் விளங்கினார்கள். அரபுகளில் அவர்களுக்கு நிக ரான சீமான்களே இல்லை. அதன் காரணமாக அவர்கள் தமக்காக தம் வாழ்நாளில் மக்களின் உடைமைகளில் ஒரு சல்லிக் காசையும் ஏற்கவே நேரவில்லை.

கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத் தின்போது மக்களின் உடைமைகளிலிருந்து பதினாறா யிரம் திர்ஹங்கள் பெற்றிருந்தார்கள். ஹழ்லரத் உமர் (ரலி) அவர்கள் தம் கிலாஃபத்தின்போது ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் திர்ஹங்கள் ஊதியமாகப் பெற்றார்கள். ஆயினும் அவ்விரு சீலர்களுமே ஆண்டவனின் சந்நிதானத்

தில் தீர்க்கப்பட வேண்டிய கணக்குகளுக்கு அஞ்சி தாங்கள் பெற்றவற்றைத் தத்தம் மரண காலத்தில் திருப்பித் தந்து விடப் பணித்துச் சென்றார்கள். ஆனால் கலீஃபா உதுமான் (ரலி) அவர்களுக்கிருந்த செல்வப் பெருக்கால் அவ்வாறு கடனாகவும் கூட மக்கள் உடைமைகளைக் கேட்டுப் பெற அவர்களுக்கு தேவையே ஏற்படவில்லை. முந்திய கலீஃபா அவர்களால் ஊதியமென நிர்ணயிக்கப்பட்டு விட்டபடி கிலாஃபத் நடத்திய பனிரண்டாண்டு காலத்தில் ஆண்டொன்றுக்கு ஐயாயிரம் திர்ஹங்கள் வீதம் தங்களுக்குச் சேர வேண்டிய அறுபதினாயிரம் திர்ஹங்களையும் அவர்கள் மக்களுக்கெனவே அர்ப்பணித்து விட்டார்கள்.

பணப் பெருக்கத்தைப் போலவே அவர்களுக்கு மனப் பெருக்கமும் இருந்தது. அவர்களின் வாசலில் தேவையுற்று வந்தவர்கள் ஒவ்வொருவரும் மனம் நிறைந்தவர்களாகவே திரும்பச் சென்றார்கள். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் செல்வத்தால் சமுதாயம் அடைந்த பலனுக்கு நிகராக வேறு எவருடைய செல்வத்தைக் கொண்டும் பயன் அடைந்ததில்லை.

அல்லாஹ்வின் பெயரால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கலீஃபா அவர்கள் ஓர் அடிமையை விடுதலை செய்து வந்தார்கள். ஏதேனுமொரு காரணத்தால் ஒரு வெள்ளிக்கிழமை தவறி விடுமாயின் மறு வெள்ளிக்கிழமை இரண்டு அடிமைகளையாக விடுதலை செய்வார்கள். விதவைகள் அநாதைகளின் துன்பங் கண்டு அவர்களின் மனம் துடித்தெழும். அவ்வப்போது அவர்களின் தேவைகளையறிந்து அவர்களின் இல்லம் சேர்ப்பிப்பார்கள்.

ஒரு போரின்போது உணவுப் பொருள் முற்றாகத் தீர்ந்து பசியின் களைப்பால் முஸ்லிம்களின் முகங்கள் வாடிச் சோர்ந்து விட்டன. அந்நிலையில் நயவஞ்சகர்களின் முகங்களோ முஸ்லிம்களின் நலிவைக் கண்டு புளகாங்கிதங் கொண்டன. வாடிய தங்கள் தோழர்களைக் கண்டு நாயகத் திருமேனி (ஸல்) அவர்கள் 'அவலுறாதீர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக பரிதி சாயு முன் அவன் உங்கள் பசியைத் தீர்த்து வைப்பான்' என உறுதி கூறினார்கள். சற்று நேரத்தில் அவர்களின் முன் பதினான்கு ஒட்டகைகள் உண

வும் பொதிகளோடு வந்து நின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள், அவை யாருடையவை என்று கேட்க, அவர்களி டம் ''ஹல்ரத் உதுமான் (ரலி) அவர்கள் தங்கள் சமூகத் துக்கு அவற்றைத் தம் அன்பளிப்பாக அனுப்பியுள்ளார்கள்" எனக் கூறப்பட்டது. அதனைக் கேட்டு முகமலர்ந்த மாநபி களார் [ஸல்] அவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர் களுக்காக அதற்கு முன்போ பின்போ எப்போதும் இல்லாத அளவுக்கு இறைஞ்சினார்கள். அவ்விறைஞ்சுதலின்போது அவர்களின் கட்கத்தின் வெண்மையை நான் காணுமளவு அண்ணலார் (ஸல்) தங்கள் கரங்களை விண்ணின் பால் ஏந்தி நின்றார்கள்—என அபூ மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறி விக்கிறார்கள்.

ஹழ்லரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் போது ஒரு சமயம் மதீனாவில் கொடும் பஞ்சம் நிலவியது. உணவுத் தானியங்களுக்காக மக்கள் பரிதவித்தனர். ஒரு நாள் மாலை பள்ளியில் மக்களின் வாட்டமுற்ற முகங் களைக் கண்டு மனம் பொறாத கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்கள் 'அல்லாஹ் விரைவில் உங்கள் அவலம் போக்கப் போதுமானவன்' என ஆறுதல் கூறி வீடு சென்றார்கள். அவர்களின் வாக்கை மெய்ப்பித்தாற்போல் மறு நாள் காலை ஸிரியாவிலிருந்து கோதுமைப் பொதிகளோடு ஓரா யிரம் ஒட்டகைகளின் கூட்டம் வந்து கொண்டிருக்கும் செய்தி வந்தது. அவை முழுதும் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களுக்குச் சொந்தமானவையே என்ற தகவலும் கிடைத்தது. மதீனாவிலிருந்த சிறு வணிகர்கள் ஒன்று கூடி னார்கள். கோதுமையின் ஒரு மணியும் நகரில் கிடைக்காத நிலையில் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களுக்கு வரும் கோதுமையை மொத்தமாக விலை பேசி வாங்கி, தாங்கள் சில்லரையில் விற்று நல்ல லாபமடையலாம் எனத் திட்ட மிட்டார்கள்.

அவர்களனைவரும் கூடிச் சென்று ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களிடம் பேரம் பேசலானார்கள். பத்தில் ஒரு பங்கு லாபம் தருவதாக ஆரம்பித்த பேரம் பத்தில் ஐந்து பங் குகள் (50 சதவீதம்) வரை உயர்ந்தது. ஹழ்லரத் உதுமான் (ரலி) இன்னும் அதிகமான லாபம் தமக்குக் கிடைக்கும் என்

நார்கள். வந்த வியாபாரிகள் 'இதனையும் விட அதிக லாபம் தரக் கூடியவர்கள் மதீனாவில் வேறு யார் தாம் இருக்கின்றனர். நாம் வாங்காமல் சென்று விட்டாலும் மறு நாள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் நம்மையே அழைத்து மீண்டும் பேரம் பேசுவார்கள். நாம் அப்போது இதைவிட குறைந்த லாபம் தந்தே வாங்கலாம்' எனக் கூடிப் பேசித் திரும்பி விட்டார்கள். மறுநாள் காலை மஸ்ஜிதுன் னபவீயின் அருகே பெரும் ஆரவாரம் கேட்டது! ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் இல்லத்தின் முன் குவியலாய் கோதுமை குவிக்கப்பட்டு அளந்து அளந்து கொட்டப்பட, மக்கள் சாரி சாரியாக அதனைத் தங்கள் பாத்திரங்களிலும் பைகளிலும் பெற்றுச் சென்ற வண்ணம் இருந்தனர். அக்காட்சியைக் கண்ட சில்லரை வியாபாரிகள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களை அணுகி, பத்தில் ஐந்து பங்கு லாபம் தரத் தாங்கள் சம்மதித்தும் தங்களுக்காக விற்பனை செய்யாமல் இன்னும் அதிக லாபம் தமக்குக் கிடைக்கும் எனக் கூறி விட்டு இப்போது கோதுமையை தர்மமாகவே பங்கிடக் காரணம் என்னவென வினனார்கள். அதற்கு விடையாக ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள்,

مَثَلُ الَّذِينَ يُنفِقُونَ أَمْوَالَهُمْ فِي سَبِيلِ اللَّهِ كَمَثَلِ حَبَّةٍ أَنبَتَتْ سَبْعَ سَنَابِلَ
فِي كُلِّ سُنبُلَةٍ مِّائَةُ حَبَّةٍ ۗ وَاللَّهُ يُضَاعِفُ لِمَن يَشَاءُ ۗ وَاللَّهُ وَاسِعٌ عَلِيمٌ

''அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய பொருள்களைச் செலவு செய்பவர்களுடைய (பொருளின்) உதாரணம், ஒரு வித்தின் உதாரணத்தை ஒத்திருக்கிறது. அ(ந்த வித்)து ஏழு கதிர்களைத் தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள்! (ஆக எழு நூறு வித்துக்கள் அந்த ஒரு வித்திலிருந்து உண்டாயின.) அல்லாஹ், தான் விரும்பியவர்களுக்கு (இதைப் பின்னும்) இரட்டிப்பாக்குகிறான். ஏனெனில், அல்லாஹ் (கொடையில்) மிக விசாலமானவனும் அறிபவனுமாக இருக்

கிறான்" என்ற (2:261) இறை வசனத்தை அவர்களுக்கு ஓதிக் காட்டினார்கள்.

அத்தகைய வள்ளன்மையின் பலனாக ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் பெற்ற பேற்றைத்தான் என்னென்பது! அன்றைய இரவு தமக்கேற்பட்ட அனுபவத்தை ஹழ்லரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

''அண்ணல் எம்பெருமான் (ஸல்) அவர்கள் செந்நிறப் புரவி மீது அமர்ந்து சென்று கொண்டிருந்ததை நான் கனவில் கண்டேன். அவர்களின் கைத்தடியும் பொன்னிறமாய் ஒளிர்ந்தது. அவர்களின் காலணிகளிரண்டின் வார்ப் பட்டைகளும் ஒளி வீசின. நான் முந்திச் சென்று அவர்களின் முன் நின்று, 'பெருமானே! எங்கே விரைகிறீர்கள்? என் தந்தையும் தாயும் தங்களுக்கர்ப்பணம். வெகு நாட்களாகத் தங்களைக் காண நான் தவித்திருந்தேனே' என்றேன். என்னோடு உரையாடிய ஏந்தலார் (ஸல்) அவர்கள் ''சுவனத்தில் நடைபெறும் உதுமானின் மண விழாவில் பங்கேற்கவே செல்கின்றேன். உதுமான் இன்று வழங்கிய ஓராயிரம் ஒட்டகைப் பொதிகள் தர்மத்தையும் அல்லாஹ் அங்கீகரித்துக் கொண்டான். அதற்குப் பகரமாக அவருக்கு சுவனத்தில் ஒரு கண்ணழகியைத் திருமணம் செய்விக்கப்படுகிறது" எனக் கூறினார்கள்.

உற்றார் உறவினர்களிடத்தில் அவர்கள் பேரன்பு காட்டினார்கள். நலிந்திருந்த தம் குடும்பத்தவர்களையெல்லாம் உயர்வடையச் செய்தார்கள். ஆனால் அதையும் அவர்கள் அல்லாஹ்வுடையவும் அல்லாஹ்வின் தூதருடையவும் ஏவலின்படியே-அவர்களின் பொருத்தங்களை நாடிச் செய்தார்கள்; மற்றவர்களையும் அவர்கள் புறக்கணிக்கவில்லை.

ஒரு சமயம் ஹழ்லரத் தல்ஹா (ரலி) அவர்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களிடம் ஐம்பதினாயிரம் திர்ஹம்

கள் கடனாகக் கேட்டுப் பெற்றார்கள். வாணிபம் செய்து திரும்பி அம்முதலைத் தாம் திரும்பத் தந்து விடுவதாகவும் முதலை மட்டுமேயன்றி கிடைக்கும் லாபத்தின் பங்காகத் தம்மால் ஏதும் தர இயலாதெனவும் கூறிச் சென்றார்கள். ஸிரியா சென்று திரும்பிய ஹழ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் தாம் கூறியபடி அப்பணத்தை திரும்பக் கொணர்ந்து தர வந்தனர். அவர்களை நோக்கி முகம் மலர்ந்த ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் 'என் உடன் பிறப்பே! உமக்கதனை நான் அன்பளிப்பாகவேயன்றி கடனாக எண்ணங் கொண்டு தரவில்லையே!' எனக் கூறி ஏற்க மறுத்து விட்டார்கள்.

வற்றாச் சுனையாக அல்லாஹ் அவர்களுக்களித்திருந்த செல்வக் கருவூலத்தை ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் அள்ளித் தந்து மகிழ்ந்தார்களேயன்றி அதைக் கொண்டு வாழ்க்கையில் டாம்பீகத்தை அவர்கள் மேற்கொண்டதில்லை. இருபதுக்கும் மேற்பட்டவர்களாகவே அடிமைகள் எக்காலமும் அருகிருந்தும் தங்கள் பணிகளைத் தாங்களாகவே செய்துக் கொள்வார்கள். இரவு காலங்களில் தொழுகைக்கு விழிக்கும் போதும் எவருடைய உறக்கமும் கலைந்து விடக்கூடாதென்ற எச்சரிக்கையுடன் அமைதியாக நடமாடி 'உழூ' செய்வதற்கான நீரையும் தாங்களே தேடிக் கொள்வார்கள்.

கிலாஃபத்தை ஏற்றிருந்த காலத்திலும் பதவிக்கான பெருமையையோ படாடோபத்தையோ அவர்களிடம் காண முடிந்ததில்லை. மற்ற எவரையும் தம்மை விட மேலானவராக அவர்கள் ஒருபோதும் எண்ணியதே இல்லை. ''அமீருல் முஉமுனீன் அவர்களை ஒரு போர்வையைத் தலைக்கடியில் வைத்துப் படுத்திருக்க — ஒரு நாள் கண்டேன். மக்கள் சிலர் அடிக்கடி மாறி மாறி வந்து அவர்களிடம் உரையாடிச் சென்றனர். அவர்களில் ஒவ்வொருவரும் வரும்போதும் கலீஃபா அவர்கள் எழுந்தமர்வதும், தம் போர்வையை விரித்து அதன் மீது வந்தவரை அமர்த்தி உரையாடுவதும், அவர் சென்றதும் மீண்டும்

படுத்துக் கொள்வதும், அடுத்தவர் வரும்போது மீண்டும் எழுந்தமர்வதும் உரையாடுவதுமாகவே இருந்தார்கள்'' என ஹழ்லரத் ஹஸன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

''அவர்களின் போர்வை மெல்லியதாக இருந்தது. அவர்கள் அணிந்திருந்த மேல்சட்டை முரடாகவே இருந்தது. அவற்றின் விலை ஒவ்வொன்றும் எட்டு திர்ஹங்களுக்கு அதிகமிரா. அவர்களின் காலணிகளோ மெல்லிய வார்ப் பட்டையுடன் இருந்தன. அவற்றுள் ஒன்று நடுவே பிய்ந்தும் இருந்தது'' என ஹஸன் (ரலி) அவர்களே அறிவிக்கிறார்கள்.

''ஒரு முறை தங்கள் அடிமை ஒருவரின் காதைப் பிடித்துத் திருகி விட்ட அவர்கள் பின்னர் தவறுணர்ந்து அதற்குப் பகரமாக அவ்வடிமையைத் தம் காதை பிடித்துத் திருகப் பணித்தார்கள். அவ்வடிமையும் கலீஃபா அவர்களின் காதைப் பிடித்துத் திருகினார். எஜமானரின் மரியாதையைப் பேணி சற்று மெதுவாகவே திருகிய அவ்வடிமையை 'அழுத்தமாகத் திருகு. ஏனெனில் இம்மையின் வேதனை மறுமையின் மானக் கேட்டை விட எளிதானதே' என கலீஃபா அவர்கள் ஏவக் கேட்டேன்'' என்று அபுல் ஃபுராத் அறிவிக்கின்றனர்.

தீர்மத்தில் தாராள மனங்கொண்ட ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் தம் பொருளை விரையமாகாது காப்பதில் கண்டிப்பானவர்களாக விளங்கினார்கள். முடைப்பட்ட ஒருவர் மாநபி (ஸல்) அவர்களின் சமுகத்தில் முறையிட்டுக் கொண்டபோது அவர்கள் 'உதுமானைச் சென்று சந்தியும், அவர் உம் குறை களைவார்'' எனக் கூறி அனுப்பி வைத்தார்கள். அவ்வாறே அவர் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் இல்லத்தை அருகியபோது உள்ளே ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கோபத்தோடு பேசும் குரல் கேட்டது. பேச்சு முடிந்து அவர்கள் திரும்பட்டும் எனக் காத்து நின்ற அவருக்கு அங்கே நடந்த சம்பவமும் புரியலாயிற்று. ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் இல்லத்தில் அன்று இரவெல்லாம் விளக்கொன்று அணைக்கப்படாமலே எரிந்து கொண்டிருந்தது. அதன் காரணமாகக்

குறைந்து போயிருக்கக் கூடிய எண்ணைக்காக ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் தம் மனைவியாரைக் கடிந்து கொண்டிருந்தார்கள். வந்தவரின் சிந்தனை குழம்பலாயிற்று.

விளக்கு அணைக்கப்படாமல் எரிந்து கொண்டிருந்ததால் குறைந்து போயிருக்கக் கூடிய எண்ணைக்குக் கணக்குப் பார்க்கும் சீமானிடத்தில் நம் குறை தீர்க்க என்ன கிடைத்து விடப் போகிறது என சபலமுற்றவராக அவர் திரும்பலானார். அதே சமயம் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களும் திரும்பி அவரைக் கவனித்து விட்டார்கள். மீண்டும் அவரை அழைத்து அவர் வந்த காரணத்தை வினவினார்கள். அம்மனிதரும் தயக்கத்தோடேயே தம் குறையை விளக்கி பெருமான் நபி (ஸல்) அவர்களின் கட்டளைப்படியே அவர்களின் இல்லம் நாடித் தாம் வந்ததாகத் தெரிவித்தார். ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் எந்த மறுப்பும் கூறாமல் உள்ளே சென்று ஒரு பை நிறைய நாணயங்களைக் கட்டிக் கொணர்ந்து அவருக்கு வழங்கி அதனைக் கொண்டு தேவையைக் கவனிக்குமாறும் பற்றாக் குறை பட்டால் மீண்டும் தம்மிடம் தயக்கமின்றி வந்து பெற்றுச் செல்லுமாறும் கூறினார்கள்.

தாம் எண்ணியதற்கு மாறாக ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களின் செயல் அவரை பெரும் வியப்பிலாழ்த்தியது! தவறான தம் கணிப்பை அவர் ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்களிடமே கூறி வருத்தமுறலானார். அவருக்கு ஆறுதல் கூறிய ஹழ்ரத் உதுமான் (ரலி) "தோழரே! இப்போது நான் உமக்கு தந்திருப்பது தர்மத்தைச் சார்ந்தது. அல்லாஹ்வுக்காகத் தரப்பட்ட அத்தர்மத்திற்கு கணக்கு கேட்கப்படமாட்டாது. ஆனால் இரவெல்லாம் அணைக்கப்படாமல், தேவையின்றி எரிந்த விளக்கில் குறைந்த எண்ணை விரையம் செய்யப்பட்டது. "நிச்சயமாக (அல்லாஹ்வாகிய) அவன் விரையம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல்குர்ஆன் 6 : 141)

—அதனைப் பற்றி மறுமை நாளில் என்னிடம் கேட்கப்படும். குற்றம் செய்தவர் என் மனைவியோ அல்லது அடி

மையோ ஆயினும் அதனைக் கண்டிக்காவிடில் நானே குற்ற வாளியாவேன்'' என விளக்கினார்கள்.

மாநபி பெருமான் (ஸல்) அவர்கள் பால் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் கொண்டிருந்த அன்பு அணை கடந்த தாயிருந்தது. இரு கண்ணின் ஒளிகளைத் தந்து தம் இல் வாழ்வைத் துலங்கச் செய்த மாதுலராக மட்டுமின்றி இறை தூதை எத்தி வைத்துத் தம் இக வாழ்வையும் பரவாழ்வை யும் விளங்கச் செய்த ஏந்தலராய் அவர்களை ஏற்றி, அவர் கள்பால் பேரன்பையும் பேணுதலையும் மிகக் கொண்டார் கள். பஞ்சமும் படைக் களமும் நெருக்கிய தருணங்களிலெல் லாம் தம் கருவூலத்தைப் பெருகச் செய்து ஹழ்லரத் உது மான் (ரலி) அவர்கள் அண்ணலரின் உளங் குளிரச் செய்த வரலாறுகள் இருக்க, மற்ற நேரங்களில்தான் அம்மாநபியின் குடும்பத்தாரிடத்தில் என்ன இருந்தது! பசியும் பட்டினியும் பல நாட்கள் வதைத்த அப்புனித குடும்பங்களின் நிலைமை களை அவ்வப்போதறிந்து உணவுப் பொருள்களை அனுப் பிய வண்ணம் இருந்தார்கள் ஹழ்லரத் உதுமான் (ரலி).

பூதலம் புரக்க வந்த பூமான் நபி (ஸல்) அவர்களின் இல்லத்தில் நான்கு நாட்கள் தொடர்படியாக அடுப்பெரி யாத ஒரு நிலையை அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் விளக்குகிறார்கள் :

அண்ணல் எம்பெருமான் (ஸல்) வந்தார்கள். ''ஆயிஷா! உனக்கேதும் உண்ணக் கிடைத்ததா?'' எனக் கேட்டார்கள்.

''பெருமானே! இல்லை" என்றேன். பின்னர் என் நாய கர் 'உழூ'ச் செய்து முடித்து, தொழுவதற்காகப் பள்ளிக் குச் சென்று விட்டார்கள்.

சில நிமிடங்களில் வாயிலில் உதுமான் (ரலி) வந்து நின்று உள்ளே வர அனுமதி கேட்பது ஒலித்தது. அப் போதைய சூழ்நிலையில் அவருக்கு அனுமதி தரா திருக்கவே விரும்பினேன். பின்னரும் 'உதுமான் (ரலி)

கண்ணியமிக்கத் தோழர்களில் ஒருவர். அல்லாஹ் தன் அருளை ஒருக்கால் அவர் மூலமாகவும் எங்களுக்கு எத்தி வைக்கலாம்' என்று எண்ணியவளாக அனுமதியளித்தேன்.

உதுமான் (ரலி) எங்களின் நிலையைப் பற்றி வினவினார். ''செல்வப் புதல்வரே! உம் பெருமானின் குடும்பத்தார் நான்கு நாட்களாக ஏதும் உண்ணாமலே பொழுதைக் கழித்தோம்'' என்றேன் நான். அதனைக் கேட்டதும் கண்ணீர் கலங்கிய உதுமான் (ரலி) உலகத்தின் கேட்டை இகழ்ந்தார்.

''அன்னையே! இந்தச் சிரமம் உங்கள் மீது கழிய என்னிடமோ, அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃபிடமோ, ஸாபித் இப்னு கைஸிடமோ சொல்லி அனுப்பவும் உங்களுக்குத் தடையேற்பட்டுள்ளதா'' எனக் கேட்டுப் பிரிந்த 'துன்னூரைன்' சற்றைய நேரத்திற்கெல்லாம் ஈத்தங்கனிகளையும், மாவையும், பதப்படுத்தப்பட்ட ஒரு முழு ஆட்டையும் பொதிகளாக ஒட்டகையிலேற்றிக் கொணர்ந்து முந்நூறு திர்ஹங்களைக் கொண்ட ஒரு பையுடன் என்னிடம் அளித்து, 'இதனைத் தாங்கள் சமைக்கக் தாமதமாகும். இதோ வருகிறேன்' என விரைந்தார். மீண்டும் ரொட்டிகளையும் பொரித்த இறைச்சியையும் கொணர்ந்து சேர்ப்பித்த அவர், 'தாங்களும் உண்ணுங்கள். பெருமானார் (ஸல்) அவர்களையும் உண்ணச் செய்யுங்கள். ஆண்டவனின் மீதாதணையாக இனி ஒருபோதும் இவ்வாறாக நீங்கள் எங்களுக்கறிவிக்காது பட்டினி கிடக்கலாகாது'' எனக் கூறிப் பிரிந்தார்.

பின்னர் நபி பெருமான் [ஸல்] அவர்கள் வந்தார்கள். ''ஆயிஷா! நான் சென்ற பின் ஏதேனும் உனக்குக் கிடைத்ததா?" என வினவினார்கள்.

''பெருமானே! ஏந்தப்பட்ட தங்கள் கரங்களை அல்லாஹ் எந்நாளும் புறக்கணித்ததில்லையே'' என்றேன் நான். எம்பெருமான் (ஸல்) அவர்கள், ''என்ன கிடைத்தது'' எனக் கேட்டார்கள். நான் விபரப்பட உரைத்தேன். உதுமான் (ரலி) கூறிச் சென்ற செய்திகளைக் கேட்ட அண்ணலார் (ஸல்) அவர்கள் தங்கள் இரு கரங்களையும்

ஏந்தி, ''இறைவா! உதுமானைக் கொண்டு நான் மிகப் பொருத்தங் கொண்டேன். நீயும் அவரைப் பொருந்திக் கொள்வாயாக'' என இரு முறை வழுத்தினார்கள்.

பா:த்திமா நாயகியாரை மணமுடிக்க விரும்பி வந்த அலீ [ரலி] அவர்களை அண்ணலார் [ஸல்] அவர்கள் 'பெண்ணுக்கு மஹராக என்ன கொடுப்பீர்?' என வினவினார்கள். அச்சமயம் அலீ [ரலி] அவர்களின் உடைமைகளாய் ஒரு வாள், ஒரு புரவி, ஒரு போர் அங்கி மட்டுமே இருந்தன. போர் அங்கியை விற்று பெண்ணுக்கு மஹர் செலுத்திட மாநபிகளார், அலீ [ரலி] அவர்களைப் பணித்தார்கள். அங்கியை விற்கப் புறப்பட்ட ஹழ்லரத் பிலால் [ரலி] அவர்களை மறித்து ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களே அப்போர் அங்கியை 470 திர்ஹங்கள் விலை கொடுத்துப் பெற்றார்கள். பாரம்பரிய உறவால் அலீ [ரலி] அவர்கள் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களுக்கு இளவலாவார்கள். ஆனால் இனியோ அவர்கள் அண்ணலவர்களின் மருகரன்றோ! வாணிபம் முடித்த உதுமான் [ரலி] அவர்கள் அம் மேலங்கியோடேயே வந்து பெருமான் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்தார்கள். அலீ [ரலி] அவர்களின் போர் அங்கியைத் தாம் விலை கொடுத்துப் பெற்றுள்ளதை அறிவித்து இனி அதனைத் தம் விருப்பப்படி பயன்படுத்தலாமல்லவா என வினவினார்கள், அண்ணலார் [ஸல்] அவர்கள் ''ஆம்'' என அறிவித்தபோது அதனை அலீ [ரலி] அவர்களுக்கே மணப் பரிசிலாகத் தந்து மகிழ்வித்தார்கள் ஹழ்லரத் உதுமான் [ரலி].

அண்ணலார் [ஸல்] அவர்களை ஒரு சமயம் ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் தம் இல்லத்தில் விருந்துண்ண அழைத்தார்கள். பெருமானார் [ஸல்] அவர்களும் இணங்கிப் புறப்பட்டார்கள். நபிகளார் நடந்து முன்னே செல்ல, பின் தொடர்ந்த ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள் அண்ணலார் [ஸல்] அவர்கள் எடுத்து வைத்த ஒவ்வோர் அடியையும் எண்ணிய வண்ணம் நடந்தார்கள். அதனைக் கவனித்து விட்ட அண்ணலார் [ஸல்] அவர்கள் 'உதுமானே! என்ன கணக்கிடுகிறீர்?' என வினவினார்

கள். 'எம்மானே! என் இல்லத்தை எட்டும் வரை எத்தனை அடிகள் தாங்கள் எடுத்து வைக்கிறீர்களோ அத்தனை அடிமைகளை அல்லாஹ்வுக்காக உரிமை விட நாட்டம் கொண்டுள்ளேன்' என்றார்கள் அப்பெருந் தோழர்.

ஒரு முறை தம்மிடம் குறைபட்டு நின்ற ஒரு தோழரை ஹஸ்ரத் உதுமான் [ரலி] அவர்களிடம் சென்று தெரிவிக்குமாறு நபி பெருமான் (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்தார்கள். ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களைச் சந்தித்த அம் மனிதர் தம் தேவையைத் தெரிவித்து அல்லாஹ்வுக்காகத் தமக்கு உதவ வேண்டினார். ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களும் ஒரு தொகையை அவருக்கு வழங்கி அனுப்பி வைத்தார்கள். ஆனால் அத்தொகையோ அவருக்குப் போதாததாக இருந்தது. மீண்டும் நபி பெருமான் (ஸல்) அவர்களை வந்து சந்தித்த அவர் தம் குறையை நபி பெருமான் (ஸல்) அவர்களிடமே தெரிவித்தார். அண்ணலார் [ஸல்] அவர்களோ மறுபடியும் சென்று ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களையே சந்திக்குமாறு பணித்து அவரை அனுப்பி வைத்தார்கள். இம்முறை ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களைச் சந்தித்த அத்தோழர் அல்லாஹ்வின் தூதர் பொருட்டு தமக்கு மேலும் உதவுமாறு அவர்களை வேண்டினார். அதனைக் கேட்டதும் தாமதியாது எழுந்த ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் தம் பேழையிலிருந்த முழுத் தொகையையுமே மூட்டையாகக் கட்டி அவருக்குத் தந்தனுப்பியதோடு மீண்டும் தேவைப்படினும் பின்னர் தம்மிடம் வந்து தெரிவிக்குமாறு கூறி அனுப்பி வைத்தார்கள்.

வந்தவருக்கோ தம் வியப்பை அடக்கவே முடியவில்லை. பெருமானார் (ஸல்) அவர்களிடமே சென்று நடப்புகளை விவரித்த அவர், 'நாயகமே! அல்லாஹ்வின் பெயரால் கேட்டபோது எண்ணிக் கொடுத்த உதுமான் (ரலி) தங்கள் பெயர் கேட்டுக் கொட்டிக் கொடுக்க காரணமென்ன?' என வினவினார். 'அதனை என் தோழர் உதுமானிடமே கேளும்' எனப் பணித்தார்கள் அண்ண

லார் (ஸல்) அவர்கள். அதற்குள் அங்கு வந்துற்ற உதுமான் (ரலி) அவர்கள் ''பெருமானே! தாங்களே அல்லவோ அல்லாஹ்வைப் பற்றியும் எங்களுக்கு அறிவித்தீர்கள். தங்கள் பெயர் கூறப்பட்ட பின் எண்ணித் தாமதிக்க எனக்குத் துணிவேது?" எனக் காரணம் விளக்கினார்கள்.

இத்தகைய பேரன்பின் காரணமாக அத்தோழரின் பால் பெருமானார் (ஸல்) அவர்களின் பேருள்ளம் கனிந்த தருணங்கள் பல. ''ஓர் இரவு அண்ணலார் (ஸல்) அவர்களின் அருகில் இருந்த நான் அன்று பொழுது உதயமாகும் வரை உதுமான் (ரலி) அவர்களுக்காக இறைஞ்சியவர்களாகவே இருக்க அவர்களைக் கண்டேன்'' என ஹஸ்ரத் அபூ ஸஈத்—அல் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஒரு நாள் உரையாற்றிக் கொண்டிருந்த அண்ணலார் (ஸல்) அவர்கள், ''உதுமானே! அல்லாஹ் உம்முடைய முந்திய, பிந்திய, மறைவான, வெளியான பாவங்களனைத்தையும் மறுமை நாள் வரையிலும் மன்னித்து விட்டான்" என வாழ்த்தக் கேட்டேன்—என்று ஜாபிர் இப்னு உத்பா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர்.

அண்ணலார் (ஸல்) அவர்களின் கரம் பிடித்து இஸ்லாத்தை ஏற்ற நாள் முதல் அவ்வருட்கரம் தொட்ட தம் கரத்தை எந்த அருவருப்பையும் தொட்டு விடாமல் காத்துக் கொண்டார்கள் ஹழ்ரத் உதுமான் (ரலி); உறக்கத்திலும் அது தம் மறைவிடத்தில் பட்டு விடக் கூடாதென்பதற்காக அதனையே தம் சிரசின் கீழ் வைத்து உறங்குபவர்களாயிருந்தார்கள் அப்பெருந்தகை. பெருமானார் (ஸல்) அவர்களின் வழி முறையை அணுவளவும் பிசகாது பேணுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். ஒரு சமயம் உளூச் செய்து முடித்து ஹழ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். எதற்காக இப்புன்முறுவல்? எனக் கேட்கப்பட்டபோது என் ஏந்தலார் உளூச் செய்து முடித்து அவ்விதமே முறுவலிக்க நான் கண்டேன் எனப் பதில் கூறினார்கள்.

மா நபியின் மாண்பைப் பேணிய அக்கலீஃபாவை மாமறையும் போற்றும் பல இடங்களை அதன் விரிவுரையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மறையளித்த பெரியோன் இறைவனின் திருமுன் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்கள் பெற்றுள்ள சிறப்பை விளக்க ஹழ்லரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு சம்பவம் உரை கல்லாகக் கிடைக்கிறது.

ஒரு நாள் இறந்த ஒரு மனிதனின் 'ஜனாஸா' பள்ளியினுள் கொண்டு வரப்பட்டது. அண்ணலார் (ஸல்) அவர்கள், 'நீங்களே எவரேனும் தொழுவித்து அவரை அடக்கம் செய்து விடுங்கள்' எனக் கூறி வெளியேறினார்கள். அவர்கள் தொழுவிக்காத காரணம் பற்றி அவர்களைக் கேட்டபோது 'இவர் உதுமானிடம் குரோதம் கொண்டவர். அல்லாஹ்வும் இவரிடம் குரோதம் கொண்டுள்ளான்' என பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களின் திரு உடல் அடக்கப் பெற்றபோது, 'இப்னு அப்ஃபானுக்கு நன்மாராயம் கூறுவீர்களாக. இறைவனின் பொருத்தத்தைக் கொண்டும் மணமிக்க சுவனத்தைக் கொண்டும் சோபனங் கூறுவீர்களாக' என உருத்தோற்றமற்று ஒலிக்க தாம் கேட்டதாக நபிமணித் தோழர் அதீ இப்னு ஹாத்திம் [ரலி] அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்களின் ஆன்மீக வலிமைக்குச் சான்றாக பல சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

ஒரு முறை, தம் வழி நடையில் அன்னியப் பெண் ஒருத்தியை பல முறை கூர்ந்து நோக்கிய வண்ணம் வந்து கொண்டிருந்த ஒரு மனிதர் ஹழ்லரத் உதுமான் (ரலி) அவர்களிடம் வந்து நின்றார். அவரின் முகத்தைப் பார்த்ததுமே கலீஃபா அவர்கள், ''விபச்சாரத்தின் சாயலை உம் கண்களில் சுமந்த வண்ணமே என்னைக் காண வந்தீரா?'' எனச் சிடுசிடுத்தார்கள். வந்த மனிதர் குற்றம் குறுகுறுக்க பாவனையாக ''எம் பெருமான் (ஸல்) அவர்களுக்குப் பின் உங்கள் மீதும் 'வஹீ'

இறங்கத் துவங்கி விட்டதா?'' என வினவினர்ர். ஹழ்லரத் உதுமான் [ரலி] அவர்கள், ''அண்ணலார் [ஸல்] அவர்களுக்குப் பின் இனி எவர் மீதும் வஹீ இறங்கப் போவதில்லை. ஆயினும் அல்லாஹ் என் பார்வையில் அருளியுள்ள ஓர் ஒளியினால் இப்போதும் உம் கண்களில் விபச்சாரத்தின் சாயல் படிந்திருக்கக் காண்கிறேன்'' என்றார்கள்.

'அன்னியப் பெண்களை தடையின்றி பார்ப்பது கண்களின் விபச்சாரம்' என அண்ணலார் (ஸல்) அவர்கள் அருளிய நியதியில் தவறிய மனிதரை அவரின் கண்களே காட்டித் தந்தன. ''அவர்கள் செய்த தீவினையே அவர்களின் இருதயங்களில் துருவாகப் படிந்து விட்டது" எனக் கூறுகிறது திருக்குர்ஆன் [83 : 14]. ''ஒரு மனிதன் ஒரு தவறான காரியத்தைச் செய்வானாயின் உடனே அவன் இருதயத்தின் மீது ஒரு கரும் புள்ளி விழுந்து விடுகிறது" என்று பெருமானார் [ஸல்] அவர்கள் அறிவித்துள்ளார்கள். இருதயத்தின் நிலையையே செயலோடு தொடர்புடைய உடலுறுப்பு பிரதிபலிக்கிறது. தங்கள் பார்வையில் அல்லாஹ்வினால் தனியோர் ஒளி அருளப் பெற்ற நல்லடியார்களுக்கே அதனைக் காணக் கூடிய ஆற்றல் உண்டு. அத்தகைய ஆற்றல் அருளப் பெற்றவர்களைப் பற்றியே அண்ணலார் (ஸல்) அவர்களும், 'நம்பிக்கை கொண்ட முஉமினானவர் ஆண்டவனின் ஒளியைக் கொண்டு நோக்குகிறார்' என்றருளிப் போந்தார்கள்.

ஒரு சமயம் கலீஃபா அவர்களோடு அவர்களின் ஒரு தோட்டத்தில் தங்கியிருந்த—அவர்களால் உரிமை விடப்பட்ட அடிமை—மிஹ்ஜன் என்பவர், அப்போது நடைபெற்ற ஒரு சம்பவத்தை அறிவிக்கிறார்: தலை விரி கோலத்தில் அங்கு வந்த பெண்ணொருத்தி, ''அமீரல் முஉமினீன்! நான் விபச்சாரம் செய்து விட்டேன். எனக்குத் தண்டனை வழங்குங்கள்" எனக் கூறினாள். அவளைத் திரும்பிப் பார்த்த கலீஃபா, அவளை வெளியில் விரட்டுமாறு என்னிடம் கூறினார்கள். நான் விரட்டினேன். அவள் மீண்டும் உள்ளே வந்து ''அமீரல் முஉமினின்! நான் விபச்

சாரக் குற்றமிழைத்தவள். என்னைத் தண்டியுங்கள்" என்றாள். என் எஜமானர் அவளை விரட்டி விடும்படி மீண்டும் என்னிடம் கூறினார்கள். நான் அவளை விரட்டி விட்டேன். அவள் மூன்றாம் முறையாகவும் கலீஃபா அவர்களின் முன் வந்து தான் விபச்சாரம் செய்ததாகவும் தன்னைத் தண்டிக்கும்படியும் கோரி நின்றாள். ''அமீரல் முஉமினீன்! அவள் ஒருமுறைக்கு மும்முறை தன் குற்றத்தைக் கூறியதன் மூலம் தனக்குத் தானே சாட்சியத்தையும் தேடிக் கொண்டாள். இனி அவளுக்குத் தண்டனை தரப்படுமா?'' எனக் கேட்டேன்.

''ஓ அறியாதவனே—மிஹ்ஜன்!'' என விளித்த என் எஜமானர், ''அவள் சோதனை வயப்பட்டிருக்கிறாள். அச்சோதனையே அவளைத் தீமையின் பால் விரட்டுகிறது. அவளை நீ அழைத்துச் சென்று வயிறார உணவும் உடையும் வழங்கு'' எனப் பணித்தார்கள். அவ்வாறே நான் அவளை அழைத்துச் சென்று உணவும் உடைகளும் தந்து இருக்கச் செய்தேன். சில நாட்கள் தங்கியிருந்த அவள் புலம்பலிலிருந்து விடுபட்டு நிதானமடைந்தாள்.

அவளின் நிலைமை பற்றி தினமும் விசாரித்த வண்ணமிருந்த கலீஃபா அவர்கள் அவள் நிதானமடைந்த செய்தியறிந்து, ''ஒரு கழுதையின் மீது அது சுமக்குமளவு மாவையும், ஈத்தம், திராட்சைக் கனிகளையும் பொதிகளாய் ஏற்றி அவளையும் அழைத்துச் சென்று பயணக் கூட்டத்தார்களோடு சேர்த்து, அவள் குடும்பத்தாரளவில் அனுப்பி வையும்'' என ஏவினார்கள். அவ்வாறே அவளை அழைத்துச் சென்ற நான் வழியில், ''அமீருல் முஉமினீன் அவர்களிடம் கூறியது போல் நீ விபச்சாரம் செய்தனையா?'' எனக் கேட்வுடன். ''இல்லை, ஒருக்காலும் நான் விபச்சாரம் செய்யவில்லை'' என மறுத்த அவள், ''வறுமையின் கொடுமையை என்னால் தாள முடியவில்லை. விபச்சாரக் குற்றத்தைச் சுமந்து கல்லாலடி பட்டுக் கொல்லப்பட்டேனும் வறுமையின் கோரப் பிடியிலிருந்து விடுபடத் துணிந்தே நான் அவ்வாறு கூறினேன். கலீஃபா அவர்களோ என் வறுமையை விரட்டி விட்டார்கள்" என வாழ்த்தினாளவள்.

கலீஃபா உதுமான் (ரலி) அவர்களை 'ஜன்னத்துல் பக்கீ' எனப்படும் மதீனாவின் பொதுவான அடக்கவிடத்தி லும் அடக்கப்பட முடியாமல் எங்கே அடக்கினார்களோ அதே—யூதர்களின் அடக்கத் தலமும் 'ஜன்னத்துல் பக்கீ' ஐ ஒட்டியே உள்ளது. ஒரு நாள் தங்கள் தோழர்களோடு 'ஜன்னத்துல் பக்கீ' உக்கு வந்திருந்த கலீஃபா அவர்கள் அதன் உள்ளே எல்லைச் சுவரோரம் நின்றிருந்து சுவரைத் தாண்டியுள்ள அந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருந் தார்கள். யூதர்கள் அடக்கப்பட்டு வந்த அந்த இடத்தை கலீஃபா அவர்கள் ஏன் பார்க்கிறார்கள் என அப்போது எவ ருக்கும் புரியவில்லை. ஏனெனில் யூதர்கள் அனைவரும் மதீ னாவை விட்டு வெளியேற்றப்பட்டு விட்டதால் அங்கு எவ ரையும் அப்போது அடக்கம் செய்யவும் நேர்வதில்லை. அங்கு ஓர் இடத்தைக் காட்டி கலீஃபா அவர்கள் கூறினார் கள், ''வெகு விரைவில் ஒரு நல்லடியார் இங்கு அடக்கப்படு வார்'' என்று. அந்த நல்லடியார் அமீருல் முஃமினீன் அவர் களே என்பதை அன்றைய தினம் எவருமே எண்ணியும் பார்க்கவே இல்லை.

கலீஃபா அவர்களின் கொலையோடு சம்பந்தப்பட்ட வர்கள் எவருமே அதற்குப் பின் கோரப் பழிக்குத் தப்பவே முடியவில்லை. பள்ளியின் மேடையில் அவர்கள் உரையாற் றிக் கொண்டிருந்த ஒரு சமயம் ஜஹ்ஜாஹ் கிப்ஃபாரீ என்ப வன் பாய்ந்து அவர்களின் கைத்தடியைப் பறித்து தன் முழங்காலில் வைத்து முறித்து வீசியெறிந்தான். கலீஃபா அவர்களோ தம் கண்ணியத்திற்கிழைக்கப்பட்ட அவ்வவ மதிப்பைச் சற்றும் பொருட்படுத்தவே இல்லை. ஆயினும் இறைவனின் சினத் தீயில் சிக்கிய அவ்வீணன் ஓராண்டுக்குள் ளாகவே கையில் புற்று நோய் கண்டு கைகள் அழுகிச் செத் தான்.

ஸிரியாவின் வீதியில் 'நான் நகரவாதியே' எனப் புலம்பிக் கிடந்த ஒருவனைக் கண்ட அபூ கிலாபா (ரலி) அவர்கள் விவரிக்கிறார்கள்: அவனருகே சென்று கண்ட போது இரண்டு கைகளும் இரண்டு கால்களும் வெட்டப் பட்டு, பார்வையிழந்து அவன் கிடந்த காட்சி பரிதாபத்துக்

குரியதாயிருந்தது. அவனுடைய புலம்பல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. ''நீ ஏன் உன்னை நரகவாதி என நினைக்கிறாய்?" எனக் கேட்கப்பட்டபோது அவன் கூறினான், ''அதை ஏன் நீ கேட்கிறாய். உதுமான் [ரலி] அவர்களைக் கொல்லச் சென்ற கேடு கெட்டவர்களில் ஒருவனே நான். அவர்களின் மனைவியாரின் கன்னத்தில் அறைந்தேன். கலீஃபா அவர்கள் சபித்தார்கள். (பக்கம்—236) அவர்களின் சாபக்கேட்டின்படியே என் கரங்கள் அழிந்தன; என் கால்கள் அழிந்தன; என் பார்வை அழிந்தது. இவை அனைத்துமே அவர்களின் கூற்றுப்படியே நடந்தேறின. நான்காவதாக அவர்கள், ''அல்லாஹ் உன்னை நரகத்தில் நுழைவிப்பானாக'' எனச் சபித்தார்கள். நான் நரகவாதியே; நரகவாதியே'' என அவன் தொடர்ந்து புலம்பலானான்.

கலகக் கொடி தூக்கியவர்கள் அனைவருமே ஹழ்ரத் அலீ, முஆவியா [ரலி] ஆகியோரின் ஆட்சி காலங்களில் தங்களின் வாட்களாலேயே தங்கள் கழுத்துக்களை அறுத்து கொண்ட கோர வரலாற்றை உலகம் கண்டது.

மாசுகளை அறுத்து, பேதங்களை ஒறுத்து மனிதம் பெற்ற ஒரு சமூகத்தின் புனித கலீஃபா கொல்லப்பட்டார்கள்.

பெருமான் நபி (ஸல்) அவர்களின் பிறப்பினால் ஒன்றுபட்டு உயர்ந்த இஸ்லாமியப் பெருவல்லமையைப் பிளந்திடச் சூழ்ந்த பேய்களின் இரத்தப் பசியினால் கொல்லப் பெற்றார்கள் அம்மாபெருங் கலீஃபா.

பிந்திய ஆறாண்டு காலம் அச்சதிகேடர்களைப் பெற்றிராதிருக்குமானால் முந்திய இரு சித்தர்களுக்கிணையான ஒரு வித்தகரையே நிச்சயம் வரலாறு கண்டிருக்கும் 'உதுமான்—துன்னூரைன்' என்ற பெயரால்!

ஈனத்திலேயே இணக்கங் கண்ட ஓர் இனம் இறைவனின் சாபக் கேட்டைத் தனக்கென நிரந்தரமாய்த் தக்க

வைத்துக் கொள்வதில் கலீஃபா அவர்களைக் கொன்றதன் மூலம் வெற்றியே கண்டது.

இஸ்லாம்—என்ற இறைவனின் பருங்கயிற்றால் இணைக்கப் பெற்றிருந்த ஒரு பெரும் வல்லமை 'ஷீஆ' 'காரிஜீ' என ஒன்றன் பின் ஒன்றாய் எழுபதுக்கும் மேற்பட்ட சிதறல்களாய்த் தெறித்து விழ வழி திறக்கப்பட்டது கலீஃபா உதுமான் [ரலி] அவர்களின் கொலையினாலேயே என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் வஞ்சகம் தான் பறித்த குழியினுள்ளேயே விழாமல் தன்னைக் காத்துக் கொள்ள ஒரு போதும் முடியாத தர்ம நியதியை உலகம் காண வெகுநாட்கள் ஆகவில்லை. குழப்பங்களை வளர்க்க எந்தப் புனிதரின் திருப்பெயரை அத்தீயோர்கள் தந்திரமாகப் பயன்படுத்தினார்களோ—மாநபியின் அம்மருகரின் திருக் கரத்தாலேயே அவர்களனைவரும் கொல்லப்பட்டார்கள் — நஹ்ரவான் போர்க்களத்தில். இறைவனின் கற்பனையில் அவர்களுக்கென வகுக்கப்பட்ட அவர்களின் விதி தன் எல்லைக்கோட்டினுள் அவர்களை இழுத்து வந்து நிறுத்திய விளையாட்டை இஸ்லாத்தின் நான்காம் கலீஃபா ஸையிதினா அலீ (ரலி) அவர்களின் வரலாற்றில் காணலாம்.



உறவுக்குக் குரல் கொடுத்து
உரிமைக்கு விடை கொடுத்த வீரர் !

அரிமா எனச் சிலிர்த்து
சரிநீதி கண்ட சீலர் !

மாநபியின் மருகர் !

ஃபாத்திஹுல் கைபர் !

'ஞானத்தின் தலைவாயில்' எனப்பட்ட
நாயகத்தின் நான்காம் கலீஃபா

ஹைதரே கர்ரார்
ஸாஹிபே துல்ஃபிகார்

ஸையிதினா அலீ

அல்-ஹைதர் (ரலி)

அவர்களின் வரலாற்றினைத் தொடர்ந்து காண்போம்.